வரு.74 இல. 19 ★

www.vaaramanjari.lk

/Thinakaran.lk /ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

தினகரன்

# வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

தினகரன் வாரமஞ்சரி

2022 மே 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

May 08 Sunday, 2022

24 பக்கங்கள்

80/-






03 பிரச்சினைக்கு தனிக்கட்சியால் தீர்வு காண முடியாது



05 "பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதே முக்கியம்



12 மத்திய வங்கிக்கு மாற்றாக நாணயசபை



24 டொலர் செலுத்த வழியில்லை; பயிற்சியாளர்கள் விலகல்!

## எரிபொருள் விநியோகத்தில் வரையறுக்கப்பட்ட நிலை

### டுவிட்டர் பக்கத்தில் கஞ்சன விஜேசேக்கர பதிவு



தினமும் 04 ஆயிரம் மெற்றி தொன் டீசல் மற்றும் 02 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் 92 ரக பெற்றோல் விநியோகிக்கப்படுமென மின் வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்துள்ளார்.

தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள அறிவிப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். நுரைச்சோலை நிலக்கரி அனல் மின் நிலையத்தின் மின் உற்பத்திகள்

04

### நாட்டை மீட்டெடுக்கும் சக்தி உங்களிடமே;

## பிரதமர் பதவியிலிருந்து விலகிவிட வேண்டாம்

### சர்வ மதத் தலைவர்கள் பிரதமரிடம் கோரிக்கை



பிரதமர் பதவியில் தாங்களே தொடர்ந்தும் நிலைத்திருக்க வேண்டுமென்றும் தங்களால் மட்டுமே நாட்டில் நிலவுகின்ற பொருளாதாரப் பிரச்சினைக்கு தீர்வைக் காண முடியுமென்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்த சர்வமதத் தலைவர்கள்

04

## பொருளாதாரம் தொடர்பில் தீர்மானங்களை எடுப்பது யார்?

### அரசியல்வாதிகளால் எடுக்கவே முடியாது
- நாமல் ராஜபக்ஷ எம்.பி



பொருளாதாரம் தொடர்பில் அரசியல்வாதிகளால் தீர்மானங்களை எடுக்க முடியாதென பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். பி.பி.சியிக்கு வழங்கிய பேட்டியொன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். பி.பி.சியிக்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

04

### நாளை முதல் 23 ஆம் திகதி வரை

## IMF - இலங்கைக் குழு இணைய வழியில் பேச்சு

சர்வதேச நாணய நிதியத்தின் குழு, இலங்கையுடன் நாளை 09 ஆம் திகதி முதல் எதிர்வரும் 23 ஆம் திகதிவரை இணையவழியூடாக பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது.

இலங்கை தொடர்பான தமது புதுப்பிக்கப்பட்ட அறிவித்தலை வெளியிட்டு சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை பிரதானி மசாயிரோ நொஸாகி அறிவித்துள்ளார்.

04

### பல நாட்களாக நாடு முழுவதும் ஆவேசமான போராட்டங்கள்

# மக்களின் பாதுகாப்புக்கு கடும் அச்சுறுத்தல் நிலை

### அரசியல் ஸ்திரத்தன்மை, மக்களின் இயல்பு வாழ்க்கையை உறுதிப்படுத்தவே அவசரகால நிலை பிரகடனம்

அவசரகால நிலை அறிவிப்பு குறித்து அரசாங்கம் விளக்கம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின் தற்போதைய பொருளாதார, சமூக நெருக்கடி நிலையை வெற்றி கொள்ளும் வகையில் மேற்கொள்ளவேண்டிய மறுசீரமைப்புக்கு தேவைப்படும் அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்குரிய மக்களின் இயல்பு வாழ்க்கையை தடையில்லாமல் முன்னெடுத்துச் செல்வதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

**பொருளாதார அச்சுறுத்தலுக்கு மத்தியில் மக்களை மேலுமொரு அச்சுறுத்தல் நிலைக்கு தள்ளிவிட ஒருபோதும் அனுமதிக்க முடியாது**

குறுகிய மற்றும் நீண்டகால செயற்பாடுகளின் பிரதிபலனாகவே இலங்கை சுதந்திரத்துக்கு பின்னர் இத்தகைய பாரிய பொருளாதார மற்றும் சமூக நெருக்கடியுடன் அரசியல் நெருக்கடியையும் சந்தித்துள்ளது. இந்த நிலையிலிருந்து நாட்டை கட்டியெழுப்பும் வகையில் எமது அரசியல், பொருளாதார, சமூக மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட வேண்டும்.

அதன்படி, குறுகிய காலத்தில் எமது வெளிநாட்டு கையிருப்பை முகாமைத்துவம் செய்தல், பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதை

04



அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதில் தப்பில்லை. அது மக்களின் ஜனநாயக உரிமையாகும். ஆனால் அத்துமீறல்களும் அநாகரிகமான செயற்பாடுகளும் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு மட்டுமல்ல நாட்டின் சட்ட திட்டங்களுக்கும் பாதிப்பு ஏற்படுத்துவதாலேயே அவசரகால சட்டங்களை அமுல்படுத்த நேரிடுகிறது. அமைதிவழி போராட்டங்கள் ஆரோக்கியமானதாகும்...



## காலி முகத்திடல் போராட்டம்; பொது மக்களுக்கு அசௌகரியம் 04

பொலிஸார் முறைப்பாடு, 10 ஆம் திகதி பரிசீலனை

வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி

## எங்கள் கருத்து...

### பாராளுமன்றத்துக்கு தவறானவர்களை மக்கள் தெரிவு செய்யலாகாது

ஜனநாயகத்தின் அதிஉயர் பீடமாக மதிக்கப்படும் இடமே பாராளுமன்றம். நாட்டின் ஒவ்வொரு பிரதேச மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களே மக்கள் பிரதிநிதிகள். அவர்களின் பெரும்பான்மையானவர்கள் குழுவாக, கட்சியாக நாட்டை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்கிறார்கள். நாடு சிறப்பாகவும், பொருளாதாரவளம் கொண்டதாகவும், பாதுகாப்பானதாகவும் விளங்குவதை பாராளுமன்றம் உறுதிப்படுத்துகிறது. எனவே சட்டம் அறிந்தவர்கள், கல்விப்புலமை கொண்டவர்கள், மக்கள் அபிமானம் கொண்டவர்கள், விஷயம் அறிந்தவர்கள் மக்கள் பிரதிநிதிகளாக பாராளுமன்றத்தில் வீற்றிருந்தார்கள். சபையும் கண்ணியம் கொண்டதாக காணப்பட்டது.

அச்சபையில் பேச்சுகள் கண்ணியம் கொண்டவையாக விளங்கின என்பதால் தான் கண்ணியக்குறைவான வார்த்தைப் பிரயோகங்களை unparlimentary words என ஆங்கிலத்தில் அழைக்கும் வழக்கம் உள்ளது.

ஆனால் சமீபகாலமாக பாராளுமன்றத்துக்கு குறிப்பாக 1977 இன் பின்னர் பொருத்தமற்றவர்களின் வருகை படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கியது. தனிநபர் துதி, தனிநபர் இழிவுபடுத்தல், மிகவும் தரக்குறைவான வார்த்தைகளை மிகச் சாதாரணமாக பாவித்தல்,

04

## எனது வீட்டில் சந்திப்பா? அசிங்கப்படுத்த வேண்டாம்

### தொழிலதிபர் திருக்குமார் நடேசன் கவலை



பிரதி சபாநாயகர் வாக்கெடுப்பு தொடர்பில் அரசாங்கத்தின் பலமான ஒருவருக்கும் எதிர்க்கட்சித் தலைவரின் தாயாருக்குமிடையில் தனது வீட்டில் கலந்துரையாடல் நடைபெற்றதாக முன்வைக்கும் குற்றச்சாட்டு முற்றிலும் பொய்யானதென

04

## அவசரகால நிலையை இரத்துச் செய்யவும்

### சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

சமகால நிலைமைக்கு அவசரகால நிலை தீர்வாகாதென இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

கருத்துச் சுதந்திரம் மற்றும் அமைதியான முறையில் ஒன்றுகூடுதல் என்பன

04

### ஆதரவாகவும் எதிராகவும் இரு குழுக்கள்

## ரணில் வீட்டின் முன்பாக மக்கள் ஆர்ப்பாட்டத்தில்



முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டுக்கு முன்னால் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

04

## நடுவானில் பறந்த விமானத்தில் பயணிகள் இருவர் கைகலப்பில்

நடுவானில் பறந்த விமானத்தில் பயணிகளிடையே ஒருவரையொருவர் தாக்கிக்கொண்ட காணொளி இணையத்தில் வேகமாக பரவி வருகிறது.

நெதர்லாந்து நோக்கி பறந்து கொண்டிருந்த விமானத்தில் நிறவெறியை தூண்டும் கருத்து தெரிவித்ததாக இருவரிடையே சண்டை மூண்டது. நடுவானில் பறந்த விமானத்தில் ஒருவரை ஒருவர் கட்டி சண்டையிட்டுக் கொண்டனர். விமானத்தின் கெப்டன்

04

### அனுமதி அட்டைகள் கிடைக்கவில்லையா?

## பரீட்சார்த்திகளுக்கு முக்கிய அறிவித்தல்

### திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளவும்

2021 ஆம் கல்வி ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை அனுமதி அட்டைகள், எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்காத பரீட்சார்த்திகள், பரீட்சைகள் திணைக்களத்தை தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.


இம்மாதம் மே 23ஆம் திகதி முதல் ஜூன் மாதம் முதலாம் திகதி வரை

04

## ஆற்றில் நீராடச் சென்ற இரு சிறார்கள் மரணம்

### ஒரே குடும்பத்தைச் சேர்ந்தர்களே பலி

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**



அக்கரைப்பற்றைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகள் நீரில் மூழ்கி அகால மரணமான துயரச் சம்பவம் வெள்ளிக்கிழமை (06) நண்பகல் வேளையில் இறக்காமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட

04

## அவசரகால நிலை; USA தூதுவர் கவலை

### டுவிட்டர் பதிவில் பகிர்வு



இலங்கையில் மீண்டும் அவசரகால நிலை அமுல்படுத்தப்பட்டமை கவலையளிப்பதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் தெரிவித்துள்ளார்.

அமைதியாக வாழும் மக்களின் குரல் கேட்கப்பட வேண்டும், இலங்கையர் எதிர்கொள்ளும் உண்மை யான


04

FUN BLASTER இடமிருந்து

மாதம் முழுவதும் Fun ஆக இருக்க மிகச்சிறந்த UNLIMITED பக்கேஜ்

Facebook WhatsApp மற்றும் YouTube

உடன் மேலதிக டேட்டா*



ரூ.347/- மட்டுமே

மேலதிக வரிகள் இல்லை

செயற்படுத்தல் ரீலோட், MyDialog App அல்லது #678# மூலம்

* 1GB Anytime Data மற்றும் 1GB Free Night Bonus உள்ளடக்கப்பட்டுள்ளது

TRC/D/PRO/20/10

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது

SD (360p) Video தரத்தினை வழங்குகின்றது

4G SIM அட்டையுடன் 4G ஊஅயசவிழஅந அவசியமாகும்

Dialog

எதிர்காலம் இன்றே.

# தேர்தல் விரைவில் வரவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு



**உடனடி மாற்றத்திற்கு குற்றப்பிரேரணை பொருத்தமற்றது. ஆகையினால், நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிறைவேற்றி, ஜனநாயக அழுத்தத்தை கொடுக்கலாம் என்கின்றார் எம்.ஏ.சுமந்திரன். தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் வாரமஞ்சரிக்கு வழங்கிய செவ்வி பின்வருமாறு:**

சுமித்தி தங்கராசா

**கேள்வி:- ஜனாதிபதிக்கெதிரான குற்றவியல் பிரேரணை கொண்டு வரவுள்ளீர்களா?**

இரண்டு நம்பிக்கையில்லாப் பிரேரணையையும் ஒரே நேரத்தில் கொண்டு வரச்சொல்லியிருக்கின்றேன். மக்களுக்கு அரசியல்வாதிகள்ள மீது நம்பிக்கையில்லாமல் இருப்பது நியாயமானது. அரசாங்கத்திற்கெதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. தமிழ் தேசிய கூட்டமைப்பு இந்தப் பிரேரணையைக் கொண்டு வரவில்லை. பிரதான எதிர்க்கட்சிதான் பிரேரணையைக் கொண்டு வர வேண்டும். ஆகையால் பிரதான எதிர்க்கட்சி அந்தப் பிரேரணையைக் கொண்டுவரும்.

அடுப்பில் இருந்து நெருப்புக்குள் பாய்ந்த கதை போன்று எமது கதை மாறிவிடக்கூடாது. அதற்காக சில சமயோசித நடவடிக்கைகளை எடுப்போம். இந்த நடவடிக்கைகளை எடுக்கிற போது தமிழ் மக்கள் சந்தேக கண்கொண்டு பார்க்கக்கூடாது. நாங்கள் என்னத்தைச் செய்கின்றோம் என்பதில் மக்களுக்குத் தெளிவு இருக்க வேண்டும். மக்களுக்கு தெளிவுபடுத்துவதற்காகத் தான் இந்த விடயங்களைச் சொல்கின்றேன்.

சில சந்தர்ப்பங்களில் சில பிரேரணைகளைக் கொண்டு வருவது எமது நிலை மோசமாகிவிடக்கூடாதென்பதற்காக மாத்திரமேயன்றி யாரையும் காப்பாற்றுவதற்கான நகர்வு அல்ல. எங்களையும் காப்பாற்றுவதற்கான நடவடிக்கை தான்.

அடிப்படையில் நம்பிக்கையில்லாப் பிரேரணைகளுக்கு ஆதரவாகத் தான் வாக்களிக்க வேண்டும். கட்சியாக இன்னும் முடிவெடுக்காவிட்டாலும், அதைவிட வேறு எந்த முடிவையும் நாங்கள் எடுப்போம் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அதனுடன் இணைந்ததாக தமிழ் மக்களுக்கான விடிவையும் எவ்வாறு கொண்டு வரலாம் என்பது குறித்தும் நாங்கள் சிந்திக்க வேண்டும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ஒழிக்கப்படுவது மிகவும் முக்கியமான ஒரு விடயம். பிரதான எதிர்க்கட்சி தலைவரின் பெயரில் தனிநபர் சட்டமூலம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதைச் செய்கின்ற போது அதிகாரப் பகிர்வு என்கின்ற விடயத்தில் சில சில நன்மைகள் எங்கள் சார்பாகவும் வரும். ஆனால் முழுமையான அரசியல் தீர்வைக் கொண்டு வருவதற்கான நகர்வுகளையும், நாங்கள் தற்போது முன்னெடுக்கின்றோம். அது உரிய காலத்தில் சரியான சந்தர்ப்பத்தில், மாற்றம் நிகழ்கின்ற வேளையில், நிலைமாறுகால ஆட்சி ஒன்று இருக்க வேண்டுமென்று சொன்னால், இந்த முற்போக்கான காலத்தில் அதிகாரப் பகிர்விற்கான மாற்றங்கள் இந்த விதமாக கொண்டு வரப்படலாம். அனைவரும் ஏற்றுக்கொள்ளும் முறையில் இது செயற்படுத்தப்படலாம் என்பது குறித்து நாங்கள் ஆழமாக சிந்திக்கின்றோம். மற்றவர்களுடன் இணங்கி, இணைந்து இந்த முன்னெடுப்புக்களை செய்கின்றோம். சிங்கள இளைஞர்களின் கைகளைப் பற்றிக்கொண்டு, உங்களுடன் இந்தப் பயணத்தில் சேர்ந்து பயணிக்க நாங்களும் தயாராக இருக்கின்றோம்.

**கேள்வி:- தேசிய அரசாங்கம் தொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன?**

தேசிய அரசாங்கம் என்பது இதே தலைமையின் கீழ் செயற்படுத்தப்படுமாக இருந்தால், அதில் இணையவும் மாட்டோம், அதற்கு எங்களுடைய ஆதரவும் இருக்காது. வெறுமனவே மக்களை ஏமாற்றுகின்ற செயலாகத்தான் இருக்கப் போகின்றது. ஆனால், உண்மையான மாற்றம் ஒன்று ஏற்பட்டு, அதற்குப் பிறகு அமைக்கப்படுகிற ஆட்சி, அது எப்படியான ஆட்சியாக இருக்கிறதென்பதை பார்த்து நாங்கள் உத்தேசிப்போம்.

**கேள்வி:- பிரதமரை மாற்றி, புதிய அரசாங்கத்தை அமைப்பதை விரும்புகின்றீர்களா? அல்லது தேர்தல் நடாத்த வேண்டுமென்று விரும்புகின்றீர்களா?**

தேர்தல் ஒன்று விரைவில் வர வேண்டுமென்பது எமது எதிர்பார்ப்பு, ஏனெனில் இந்தக் குழப்பத்தின் பின்னர் மக்களின் ஆணை ஒன்று புதிதாகப் பெறப்பட வேண்டும். அதற்கான கால சூழல் தற்போது கிடையாது என சிலர் சொல்கின்றார்கள். நான் அப்படி நினைக்கவில்லை எவ்வளவு விரைவாக தேர்தலை நடாத்தலாமோ, அவ்வளவுக்கு அது சிறப்பாக இருக்கும். பண விடயத்திலும் கூட, இன்று தேர்தல் வைப்பதை விட நாளைக்குத் தேர்தல் வைப்பது இலகுவானது. ஏனெனில், நிலைமையும் மிக மோசமாக போகப்போகின்றது. ஆகையினால், தேர்தல் ஒன்றுக்குச் செல்வது மிகவும் நல்ல விடயம். அப்போது தான் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கின்ற எழுச்சி, சரியான சட்ட வரையறைக்குள்ளே, நாட்டிலே உண்மையான மாற்றத்தைக் கொண்டு வர முடியும்.

**கேள்வி:- 21திருத்தத்தை கொண்டு வந்து ஆட்சி செய்ய வேண்டுமென்ற கருத்தை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்கள்?**

21வது சட்டத் திருத்தம் என்பது நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை முற்றாக ஒழிப்பதற்கான ஒரு முன்மொழிவு. அதற்கு எங்களுடைய ஆதரவு இருக்கும். வெறுமனவே சில அதிகாரங்களைக் குறைத்து, 20வது திருத்தத்தை விலக்கி, 19வது திருத்தத்தை திரும்பவும் ஏற்படுத்தி, அந்த முறையில் ஆட்சியை ஏற்படுத்துவதாக இருந்தால், அதைக் குறித்து நாங்கள் சிந்திக்க வேண்டும். அது போதுமானதாக இருக்காது.

**கேள்வி:- தமிழ் தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன?**

தமிழ் தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாடு ஒன்று தான். எமது நிலைப்பாடு உறுதியானது. அதில் மாற்றமில்லை. உடனடி மாற்றத்திற்கு குற்றப்பிரேரணை பொருத்தமற்றது. ஆகையினால், நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிறைவேற்றி, ஜனநாயக அழுத்தத்தை கொடுக்கலாம் என உத்தேசித்துள்ளோம்.

**கேள்வி: தென்னிலங்கையில் முன்னெடுக்கப்படும் போராட்டத்திற்கு சார்பாக, வேறு ஏதாவது முயற்சிகள் உங்களால் முன்னெடுக்கப்படுகின்றதா?**

எமது இளைஞர்கள், தென்னிலங்கையில் போராட்டத்தில் ஈடுபடுபவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றார்கள். வயது மட்டத்தில் அரசியல் அறிவுடைய இளைஞர்களை உற்சாகப்படுத்தியிருக்கின்றோம். அவர்களுடன் உறவாடச் சொல்லி, அரசியல்வாதிகள் அங்கு வரக்கூடாது எனறு அவர்கள் சொல்வதில் நியாயம் இருக்கின்றது. அதனால் நாங்கள் அங்கு செல்லவில்லை. இந்தப் போராட்டத்தை முழுமையான போராட்டமாக, பொருளாதார சிக்கலினால் எழுந்த போராட்டமாக இருந்தாலும், ஊழலுக்கு எதிரான போராட்டமாகவும் இப்பொழுது முன்னெடுக்கப்படுகின்றது. அரசியல் பழிவாங்கலுக்கு எதிரான போராட்டமாகவும் முன்னெடுக்கப்படுகின்றது.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சிவராமின் கொலைக்கான நீதியைக் கோரியுள்ளதுடன், அஞ்சலியும் செலுத்தியுள்ளார்கள். கொஞ்சம் கொஞ்சமாக பரிணாமம் அடைந்து வருகின்றது.

நாங்கள் கேட்கக் கூடாத கேள்விகளைக் கேட்டு அவர்களின் போராட்டத்தை மழுங்கடிக்கக் கூடாது.

அவர்களுடன் சேர்ந்து பயணித்து, தமிழ் தேசிய பிரச்சினை என்கின்ற விடயத்தை, அவர்களுடன் சுமூகமாக சம்பாசித்து, முன்னெடுப்பதற்கான நடவடிக்கையில் தான் ஈடுபட்டிருக்கின்றோமே தவிர, தேவையற்றவற்றைப் பேசி, அவர்களை எங்களுடைய விரோதிகளாக ஆக்குகின்ற முட்டாள்தனமான செயலில் நாங்கள் ஈடுபடப்போவதில்லை.







# நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பிரச்சினைக்கு தனியொரு கட்சியினால் தீர்வு காண முடியாது!

## வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி நாளக கொடஹேவ அளித்த பேட்டி

**'நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள பிரச்சினைக்கு ஒரு கட்சியினால் மாத்திரம் தீர்வு காண முடியாது. அனைத்துத் தரப்பினரும் இணைந்து செயற்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது' என வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி நாளக கொடஹேவ தெரிவித்தார். நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து எம்மிடம் கருத்துகளைப் பகிர்ந்து கொண்ட அவர் இவ்வாறு தெரிவித்தார்.**



**கே: பிரதமரின் முன்மொழிவுக்கு அமைய அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில்: தற்பொழுது தயாரிக்கப்பட்டிருப்பது 21 ஆவது திருத்தச் சட்டத்துக்கான வரைபு அல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். பாராளுமன்றத்தில் ஏற்கனவே இரண்டு திருத்தங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷவினால் ஒரு அரசியலமைப்புத் திருத்த யோசனையும், ஐக்கிய மக்கள் கட்சியினால் மற்றுமொரு அரசியலமைப்புத் திருத்த யோசனையும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு திருத்தங்களையும் 21 ஆவது திருத்தங்கள் என அழைக்கலாம். இவ்வாறான நிலையில் 19 ஆவது மற்றும் 20 ஆவது திருத்தம் ஆகிய இரண்டையும் கருத்தில் கொண்டு தற்போதைய அரசியலமைப்பில் ஏற்படுத்தக் கூடிய மாற்றங்களை அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்பது குறித்து அமைச்சரவை கலந்துரையாடி இணக்கப்பாடொன்றுக்கு வந்தது. இந்தத் திருத்தங்களில் சில நல்ல விடயங்களும் சில குழப்பமான விடயங்களும் உள்ளன. எனவே 21 ஆவது திருத்தத்தைக் கொண்டு வருவதன் மூலம் தற்போதுள்ள அரசியலமைப்பை மேம்படுத்த முடியுமா என்பதை ஆராய அமைச்சரவை தீர்மானித்தது மற்றும் தேவையான முன்மொழிவுகளை முன்வைக்க அமைச்சரவை உபகுழு நியமிக்கப்பட்டது.

**கே: அமைச்சுப் பதவிகளை ஏற்றுக் கொண்டு நாட்டை தற்போதைய நிலையில் இருந்து விடுவிப்பதில் உதவுமாறு கோரியதற்கு எந்தவொரு கட்சியும் சாதகமாகப் பதில் வழங்கவில்லையென மகாசங்கத்தின் உயர்பீடாதிபதிகளுக்கு அனுப்பிய பதில் கடிதத்தில் ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார். இதனை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில்: அதில் உண்மை உள்ளது. சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைக்க வேண்டும் என அவர்கள் கூறினாலும், ஆட்சியமைக்க வருமாறு அழைத்தால் அதிலிருந்து விலகிச் செல்கின்றனர். கடந்த வாரம் கூட ஜனாதிபதி சர்வகட்சிகளுக்கும் அழைப்பு விடுத்த போதும், முக்கிய எதிர்க்கட்சிகள் இடைக்கால அரசாங்கத்தில் பங்கெடுக்கப் போவதில்லையெனக் கூறியிருந்தன. இது சரியான போக்கு என நான் கருதவில்லை. சிறுசிறு அரசியல் இலாபங்களை மறந்து நாட்டின் நலனுக்காக அனைவரும் ஒன்றிணைய வேண்டும். எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் ஒன்றாக இணைந்து கைகோர்க்கத் தயாராக இல்லாத போதும், ஜனாதிபதி அவர்களைத் தொடர்ந்தும் வருமாறு அழைப்பு விடுத்து வருகின்றார்.

**கே: பாராளுமன்றத்தில் சுயேச்சையாக மாறிய பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு ஐக்கிய மக்கள் சக்தியின் அனுசரணையுடன் வழங்கப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவை வழங்க தீர்மானித்துள்ளது. இது பற்றிக் கருத்து தெரிவிக்க விரும்புகிறீர்களா?**

பதில்: ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் எண்ணிக்கையைப் பார்த்தால், அவர்கள் அனைவரும் ஒன்றிணைந்தாலும் பாராளுமன்றத்தில் 65 ஆசனங்கள் மாத்திரமே உள்ளன. சுயேச்சைக் குழுவும் ஆதரவளித்தால் வெறும் 100 ஆசனங்களே கிடைக்கும். ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ள ஏனைய 10 ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் இதற்கு ஆதரவு வழங்குவார்களா இல்லையா என்பதைப் பொறுத்தே சில மாற்றங்கள் ஏற்படலாம்.

**கே: தகுதியற்ற சிலர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டமையே நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைக்குக் காரணம் என பாராளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்ஷன யாப்பா கடந்த வாரம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். இதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா?**

பதில்: திறைசேரி மற்றும் மத்திய வங்கியில் இருந்த சில சிரேஷ்ட அதிகாரிகளால் இந்த நெருக்கடியை தடுக்க முடியவில்லை என்பது ஒரு வகையில் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும். எனினும், நெருக்கடியானது அவர்களால் உருவாக்கப்படவில்லை. இருந்தாலும் அவர்களுக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் விரைந்து செயற்பட்டிருந்தால் இந்த நிலைமையைத் தடுத்திருக்க முடியும். அவர்கள் அதைச் செய்யவில்லை. வரிகளைக் குறைப்பதையும், தொடர்ச்சியாக பணம் அச்சிடப்படுவதையும் நிறுத்த அவர்கள் விரும்பவில்லை.

இதனால் எரிபொருள் நெருக்கடி போன்றவை நிலைமையை மேலும் சிக்கலாக்கியிருந்தன. எனவே, பாராளுமன்ற உறுப்பினர் அனுர பிரிய தர்ஷ யாப்பா கூறுவது உண்மையே. இன்று நாம் எதிர்நோக்கியிருக்கும் நிலைக்கு இந்த அதிகாரிகளும் பொறுப்பேற்க வேண்டும். உண்மையில், இது ஒன்று அல்லது இரண்டு நபர்கள் மட்டுமல்ல, நான் இங்கு பெயர் குறிப்பிடவிரும்பாத குறைந்த பட்சம் ஐந்து சிரேஷ்ட அதிகாரிகளாவது இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும்.

**கே: நாடு எதிர்நோக்கும் சவால்களை வெற்றி கொள்வதற்கு சர்வகட்சி அரசாங்கத்தை அமைத்து பிரதமர் தலைமையிலான அமைச்சரவை இராஜினாமா செய்ய வேண்டுமென முன்னாள் வெகுசன ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார். இதனை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில்: நானும் அவருடைய கடிதத்தைப் பார்த்தேன். இருப்பினும், அவர் தனது சொந்தக் கருத்தை வெளிப்படுத்தியதால் அது பற்றி என்னால் கருத்துக் கூற முடியாது. ஏனைய தரப்பினரையும் உள்ளடக்கி அரசாங்கத்தை உருவாக்க வேண்டும் எனக் கூறப்படுகிறது.

உதாரணமாக அந்த 40 சுயேச்சைக் குழுவில் நான்கு வெவ்வேறு குழுக்கள் உள்ளன. அனைவரையும் ஒன்றிணைத்து தேசிய அரசாங்கத்தை அமைக்க முடிந்தால், தற்போதைய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள நாம் மிகவும் வலுவான நிலையில் இருப்போம்.

இந்தக் கட்டத்தில் நாம் எடுக்க வேண்டிய சில முடிவுகளுக்கு பொதுவான ஒப்புதல் தேவை. சில கடினமான முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கும். அந்தக் கொள்கைகளுக்குப் பாராளுமன்றத்தில் பொதுவான ஒப்பந்தம் இருந்தால், அது மிகவும் எளிதாக இருக்கும்.

அதனால்தான் முன்னாள் அமைச்சர் அழகப்பெரும முழு அமைச்சரவையையும் இராஜினாமா செய்யுமாறும், ஜனாதிபதி அனைத்துக் கட்சிகளையும் சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைக்க அழைக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஒரு வகையில் நானும் அதே கருத்தை பகிர்ந்து கொள்கிறேன். தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வு காண அனைத்து தரப்பினரும் ஒன்றிணைவதற்கு ஒரு வாய்ப்பை வழங்க வேண்டும் என்பதே நாங்கள் கூறுவது. அதற்காக தற்போதைய அமைச்சரவை இராஜினாமா செய்ய வேண்டியிருக்கும், சில சமயங்களில் அவர்கள் மீண்டும் நியமிக்கப்படலாம். உதாரணமாக, பெரும்பான்மையினரின் விருப்பமாக இருந்தால், பிரதமர் உட்பட அனைவரும் மீண்டும் நியமிக்கப்படலாம். அந்த வாய்ப்பை ஜனாதிபதிக்கு வழங்க வேண்டும் என முன்னாள் அமைச்சர் அழகப்பெரும கருத்து முன்வைத்துள்ளார் என நினைக்கிறேன்.

**கே: பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் குழுவுடனான சந்திப்பின் போது, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது பதவியிலிருந்து விலகப் போவதில்லை என திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். இது பற்றி?**

பதில்: இதனை நான் செய்திகளில் பார்த்தேன். இந்தக் கட்டத்தில் அது சரியான பேச்சுத்தானா என்று கூறத் தெரியவில்லை.

**கே: ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்றத்தில் எந்தக் கட்சி 113 ஆசனங்களைப் பெற்றாலும் இன்று நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது என்பதே அடிப்படை யதார்த்தம் என அண்மையில் தெரிவித்தார். உங்கள் பார்வைகள் எவ்வாறு உள்ளன?**

பதில்: பாராளுமன்றத்திற்குள் 113 ஆசனங்களைக் காண்பிப்பதில் மாத்திரம் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட முடியாது. எல்லா விதமான கருத்துகளையும் ஒருங்கிணைக்கும் விடயங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். இவ்வாறான சூழ்நிலையில் ஒரு கட்சி ஆட்சி அமைப்பதை விட அனைவரையும் உள்ளடக்கிய ஆட்சி அமைப்பதே மிகவும் பொருத்தமானது.

**கே: தற்போது எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாடு, தொடர்ந்து மின்வெட்டு மற்றும் மருந்துகள் மற்றும் உணவுப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது. மக்களுக்கான அடிப்படை வசதிகளை அரசால் வழங்க முடியவில்லை என்று சிலர் கூறுகின்றனர். இதைப் பற்றி நீங்கள் என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?**

பதில்: பற்றாக்குறைகள் இருந்தன, அவற்றில் சில பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு விட்டன. மருந்துகள் தொடர்பாகவும் தீர்வுகள் காணப்பட்டு வருகின்றன. இந்த நெருக்கடிக்கு தற்போதைய அரசாங்கம் மட்டும் பொறுப்பேற்க வேண்டியதில்லை. ஏனெனில் வெளிநாட்டு நாணயப் பிரச்சினை பல ஆண்டுகளாக நீடித்தது. இந்நிலைமைக்கு முன்னைய அரசாங்கங்களும் தற்போதைய அரசாங்கமும் காரணமாகும்.

**" மாற்றம் வேண்டுமென இளைஞர்கள் கோருவதை நான் ஆதரிக்கின்றேன்**




# ஆர்ப்பாட்டங்களை தூண்டி விட்டு, கூச்சலிடும் அரசியலால் நாட்டை ஆட்சி செய்ய முடியாது!

மக்கள் சக்தி ஆச்சரியமானது. வெற்றி அடைந்ததற்கு சமமாக பறிக்கப்படுதலுக்கும் உள்ளாகின்றது. மிகவும் குறுகிய காலத்தில் பெரும் மரியாதையுடன் ஏற்றுக் கொண்டு உயரத்தில் வைக்கப்பட்ட அரசியல் தலைவர்கள் இன்று நிராகரிக்கப்பட்டுள்ளார்கள். விரைவாக இணைவது போன்று, வேண்டாம் என்ற நிலைமை ஏற்படவும் நீண்ட காலம் எடுப்பதில்லை. அண்மைக் கால சமூக மற்றும் கலாசார சூழ்நிலைக்கு அமைய உயர்வு தாழ்வை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏற்றுக் கொள்ளப்படவும் மற்றும் நிராகரிக்கப்படவும் தயாராக செயல்படுவது அவசியமாகும்.

2015ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் வேண்டாம் என்ற நிலையை அடைவதற்கு நீண்ட காலம் எடுக்கவில்லை. பிரதான இரண்டு கட்சிகள் இணைந்து நாட்டை புதிய யுகம் ஒன்றுக்கு எடுத்துச் செல்லும் என மக்கள் அன்று எதிர்பார்ப்புடன் காணப்பட்டார்கள். பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் பாராளுமன்றத்திற்கு வெளியேயும் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக தேர்தல் குறிப்பிட்ட காலத்துக்கு முன்னரே நடத்தப்பட்டது.

கூட்டு அரசாங்கம் மக்களுக்கு வேண்டாம் என்ற நிலைமைக்கு வந்ததோடு 2020 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தல் மூலம் தற்போதுள்ள அரசாங்கம் ஆட்சிக்கு தெரிவு செய்யப்பட்டது. அந்த தேர்தல் முடிவுகளின் படி இலட்சக்கணக்காக பெருமளவு விருப்பு வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்துக்கு தெரிவான மக்கள் பிரதிநிகள், இன்று பெருமளவில் மக்களின்அதிருப்திக்கு உள்ளாகியுள்ளார்கள். பெரும் மரியாதையோடு அழைத்து வந்த தங்களுடைய பொதுமக்களின் பிரதிநிதிகளை வேண்டாம் என்று கூச்சலிட்டு விரட்டி விடும் அளவுக்கு மக்கள் வந்துள்ளது ஆச்சரியமாகும்.

மக்களின் எதிர்ப்புக்குக் காரணம் என்ன? பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. வாழ்க்கைச் செலவு தாங்க முடியாத அளவுக்கு அதிகரித்துள்ளது. மின்சாரம்,எரிவாயு ,எரிபொருள் தட்டுப்பாடு பெரும் பிரச்சினையாகும். பொருளாதாரச் சிக்கலை தீர்த்துக் கொள்ள முடியும். மக்கள் பிரதிநிகள் சிலர் பிரச்சினைக்கு முகம் கொடுக்க முடியாமல் பின்வாங்குவது இன்னுமொரு ஆச்சரியம்.

வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டிருந்தாலும், மக்களுக்கு விரைவிலேயே வேண்டாம் என்ற நிலைமை ஏற்பட்டு, அழுத்தம் பிரயோகிக்கப்படும் போது உறுப்பினர்களும் அமைச்சர்களும் அரசாங்கத்தை கைவிடத் தயாராவது கவனத்திற்கு எடுக்க வேண்டிய விடயமாகும். ஜனநாயகம் முகம் கொடுத்துள்ள நிலைமையை இந்த இரண்டு பக்கங்களும் எமக்கு நன்றாக எடுத்துக் காட்டுகின்றன. அடுத்து ஆட்சிக்கு வரத் தயாராகும் அரசியல்வாதிகள் இந்த சிக்கலான கட்டமைப்பை புரிந்து கொள்ள வேண்டும்.

"வீட்டோடு மாப்பிள்ளை" என்ற உவமானம் எமது நாடோடி கதைகளில் உண்டு. தீப்பந்தம் மற்றும் பனையோலையை தயாராக வைத்துக் கொண்டு மணப்பெண்ணின் வீட்டில் வீட்டோடு மாப்பிள்ளையாக இருக்க சம்மதம் அளிக்க வேண்டும். அவமானங்களை சகிக்க முடியாமல் எந்தவொரு இரவிலும், கொட்டும் மழையிலும் பாதையில் இறங்க வேண்டி நேரிடும். தற்காலிக பலன்களை அடிப்படையாகக் கொண்டு ஆட்சிக்கு வரத் தயாராகும் அரசியல் கட்சிகள் தற்போது காணப்படும் கருத்துக்கள் மூலம் பாடங்களைக் கற்க வேண்டும்.

ஆர்ப்பாட்டங்களைத் தூண்டி விட்டு,கூச்சலிட்டு விரட்டியடிக்கும் அரசியலால் நாட்டை ஆள முடியாது. அரசாங்கத்தை தெரிவு செய்யவும், வெளியேற்றவும் முறைகள் உள்ளன. அரசியலமைப்பொன்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பு பொருந்தாது என பெரும்பான்மையினர் முடிவு செய்யும் சந்தர்ப்பத்தில் புதிய அரசியலமைப்பொன்று அங்கீகரிக்கப்பட முடியும். தற்போதுள்ள பிரச்சினை அரசியலமைப்பால் ஏற்பட்டதல்ல. வருமானம் மற்றும் செலவுக்கு இடையே ஏற்பட்ட மோதலாகும். ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கு இடையேயான பொருத்தமற்ற தன்மையாகும்.

அரச வருமானம் மோசமாக வீழ்ச்சியடைந்துள்ளது. வருமானம் கிடைக்கும் வழிகள் தடைப்பட்டுள்ளன. வருமானம் கிடைக்கக் கூடிய கைத்தொழில் மற்றும் வர்த்தக சந்தர்ப்பங்கள் நலிவடைந்துள்ளன. மக்கள் இந்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளதோடு, பொருளாதாரத்தை சீர்திருத்தி அதனை கட்டியெழுப்புவது மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பாகும். எங்களுக்குத் தெரியாத போதும் அதிகாரத்தை பிரிப்பது தொடர்பில் தீர்க்கப்படாத பிரச்சினைகள் உள்ளன. இந்த சிக்கலான கட்டமைப்பை அரசின் மீது சுமத்தி தப்பிக் கொள்ளும் எதிர்க்கட்சி அரசியல் கட்சிகளுக்கு முகம்கொடுக்க நேரிடும் சவால் இன்றையை விட நாளை மிகவும் மோசமாக இருக்கும் என்பதை இங்கு ஞாபகப்படுத்த வேண்டும்.

வெளியில் இறங்கி கூச்சலிடும் இளைஞர்கள் உள்ளிட்ட பொதுமக்களுக்கு பிரச்சினைகள் உள்ளன. அவற்றை தீர்ப்பதற்கு முறைகள் உள்ளன. இவ்வாறான பிரச்சினைகள் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தைக் கவிழ்த்து தலைவர்களை விரட்டிய சம்பவங்கள் அண்மைக் காலங்களில் பல நாடுகளில் இடம் பெற்றுள்ளன. புதிய தலைமையை கண்டுபிடிப்பது பொருளாதாரம் மற்றும் சமூக பிரச்சினைகளுக்கு சரியான தீர்வை கண்டுபிடிப்பதற்கு பிரயோசனமாகும்.

வேறுபுறத்திலிருந்து பதிலைக் கண்டு பிடிக்கும் வழிவகைகளும் காணப்படலாம். புதிதாக வரும் தலைமைத்துவம் குறித்த நம்பிக்கை, ஒப்புதல், மற்றும் அர்ப்பணிப்பு எமக்கு இருக்க வேண்டும். ஆறு மாதத்தில்,ஒரு வருடத்தில் நாட்டை வளர்ச்சி அடைய செய்யும் மந்திர தீர்வை எதிர்பார்ப்பது மீண்டும் வழிதவறி செல்லும் முயற்சியாகும்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

# நாட்டை மேலும் நெருக்கடிக்குள் தள்ள வேண்டாம்

## அரசிடம் இ.தொ.கா தலைவர் வலியுறுத்து

நாட்டின் பொருளாதாரம் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள சூழலிலும் அதிலிருந்து மீள்வதற்கான உதவிகளை சர்வதேச நாடுகளிடம் இலங்கை கோரிக்கொண்டிருக்கும் தருணத்தில் அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்படுவதானது நாட்டில் ஒரு சரியான சட்ட ஒழுங்கு இல்லை என்பதை அரசு வெளிப்படுத்துகிறது என இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் வலியுறுத்தியுள்ளதாவது,

நாட்டில் யுத்தம் முடிவுக்கு வந்த பிறகு பல சர்வதேச நாடுகளால் அவசரக்கால சட்டம் இலங்கையில் தொடரக் கூடாது என்றும்,அது ஜனநாயகத்துக்கு எதிரானது என்றும் வலியுறுத்தப்பட்டு வந்தது. அதன் காரணமாக கடந்தக் காலங்களில் அவை சர்வதேசத்தின் அழுத்தம் காரணமாக மீளப்பெறப்பட்டது.

எமது நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. நாட்டு மக்கள் வரிசையில் இருந்து எரிபொருள், அத்தியாவசியப் பொருட்கள், கேஸ் உட்பட ஏனைய தேவைகளை நிவர்த்தி செய்துக்கொள்ள முடியாத யுகமொன்றே உருவாகியுள்ளது.

எதிர்வரும் சில மாதங்களில் இந்த நெருக்கடிகள் மேலும் அதிகரிக்குமென பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இத்தருணத்தில் உலக வங்கி உட்பட பல சர்வதேச நாடுகளிடம் பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுப்படுவதற்கான தீர்வுகளை இலங்கை உதவி கோரிவரும் இந்த இக்கட்டான சூழ்நிலையில் ஜனாதிபதி அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தியுள்ளமையால் நாட்டின் மீது உள்ள அபிப்பிராயத்தை சர்வதேச நாடுகளுக்கு மத்தியில் இழக்க நேரிடும். இதனால் எமது நாட்டுக்கு சர்வதேச ரீதியாக கிடைக்கும் அனைத்து உதவிகளும் தாமதமாகும் அபாயமும் எழுந்துள்ளது.



இந்த அவசரக்கால பிரகடனத்தினால் இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் வருகை முற்றிலும் குறைவடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது இதனால் டொலர் தட்டுப்பாடு மேலும் அதிகரிக்கும்.

எனவே அவசரக்கால சட்டத்தை உடனடியாக மீள்பரிசீலனை செய்ய வேண்டுமெனவும் இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான் வலியுறுத்தியுள்ளார்.

# காலி முகத்திடல் போராட்டம்; பொது மக்களுக்கு அசௌகரியம்

## பொலிஸார் முறைப்பாடு, 10 ஆம் திகதி பரிசீலனை

கொழும்பு காலி முகத்திடலுக்கு முன்பாக நடத்தப்பட்டு வரும் போராட்டம் காரணமாக, பொது மக்களுக்கு அசௌகரியம் ஏற்படுத்தப்படுவதாக கூறி பொலிஸார் முன் சமர்ப்பித்த முறைப்பாடு எதிர்வரும் 10 ஆம் திகதி கொழும்பு பிரதான நீதிவான் முன்னிலையில் ஆராயப்படவுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை (06) இந்த முறைப்பாட்டை பரிசீலிக்க கொழும்பு மேலதிக நீதிவான்களான ஹர்ஷ கெக்குனவல மற்றும் ஷிலினி பெரேரா ஆகியோர் விரும்பாததால் நீதிவான் ஷிலினி பெரேராவால் இவ்வாறு 10 ஆம் திகதிக்கு இவ்விடயம் பிரதான நீதிவான் முன்னிலையில் பரிசீலிக்கப்படுமென அறிவிக்கப்பட்டது.

நேற்று முதல், காலி முகத்திடல் போராட்டத்துக்கு எதிராக உத்தரவொன்றைப் பெற கோட்டை பொலிஸார் அரச சட்டத்தரணி சமீந்திர விக்கிரமவுடன் மேலதிக நீதிவான் ஹர்ஷ கெக்குனவல முன்னிலையில் ஆஜராகினர்.

இதன்போது நீதிமன்றத்தில் விடயங்களை முன்வைத்த அரச சட்டத்தரணி, காலி முகத்திடல் ஆர்ப்பாட்டம் தொடர்பில் இரு மனுக்கள் நீதிமன்றம் முன்னிலையில் நிலுவையிலுள்ளதால், அதில் ஒன்றை பரிசீலனைக்கு எடுக்க நீதவான் விரும்பினால் தான் தனது கோரிக்கையை முன்வைப்பதாக கூறினார்.

எனினும் இதன்போது நீதிமன்றத்தில் சட்டத்தரணிகள் குழாம் ஒன்றுடன் ஆஜரான இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், காலி முகத்திடல் போராட்டம் தொடர்பில் பொலிசார் ஏதும் உத்தரவுகளைப் பெற முயன்றால், உத்தரவுகளை வழங்க முன்னர் ஏனைய தரப்பின் நியாயங்களுக்கும் நீதிமன்றம் செவிசாய்க்க வேண்டுமென அவர் கோரினார்.

பொலிசார் ஒரு தலைபட்சமாக உத்தரவுகளைப் பெற முயல்வது அவதானிக்கப்படுவதால் அவ்வாறு கோருவதாக அவர் குறிப்பிட்டார்.

இதனையடுத்து, இந்த விவகாரத்தை தான் பரிசீலிக்க விரும்பவில்லையென அறிவித்த மேலதிக நீதிவான் ஹர்ஷ கெக்குனவல, நேற்று முன்தினம் பிரதான நீதிவானாக பதில் கடமைகளை பொறுப்பேற்ற நீதிவான் ஷிலனி பெரேராவுக்கு மனுவை மாற்றினார்.

இந்த மனு நீதிவான் ஷிலனி பெரேரா முன்னிலையில் பரிசீலனைக்கு வந்தது.

இதன்போது மனுவை பரிசீலிக்க விரும்பாத மேலதிக நீதிவான் ஷிலனி பெரேராவும், இரு தரப்பின் ஒப்புதலுடன் பிரதான நீதிவான் முன்னிலையில் மனுவை பரிசீலிப்பதற்காக விசாரணைகளை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

### அவசரகால நிலையை இரத்துச்...

பொதுமக்களின் அடிப்படை உரிமைகளாகும்.

இந் நிலையில், தன்னிச்சையான கைதுகள் மற்றும் தடுத்து வைத்தல் என்பனவற்றுக்கு அவசரகால நிலையை பயன்படுத்தக்கூடாதென்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனவே அவசரகால நிலை பிரகடனத்தை இரத்துச் செய்யுமாறு சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

### எரிபொருள் விநியோகத்தில்...

மீள ஆரம்பிக்கப்படும் வரை வரையறுக்கப்பட்ட வகையில் இவ்வாறு எரிபொருள் விநியோகிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கை வந்துள்ள கப்பல்களிலிருந்து மேலும் 40 ஆயிரம் மெற்றி தொன் பெற்றோல் மற்றும் மசகு எண்ணெய் நாளை திங்கட்கிழமை இறக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சவளக்கடையில் வை.எம்.எம்.ஏ கிளை அங்குரார்ப்பணம்




**கல்முனை மத்திய தினகரன் நிருபர்**

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் அம்பாரை மாவட்ட சவளக்கடை புதிய கிளையின் அங்குரார்ப்பணம் பேரவையின் மாவட்ட பணிப்பாளர் றியாஸ் இஸ்மாயிலின் ஏற்பாட்டில் சவளக்கடை அல் தாஜூன் பாடசாலை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதில் புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவராக ஊடகவியலாளர் எம்.எம்.ஜபீர், செயலாளராக ஏ.எம்.அஸ்மீர், பொருளாளராக எம். ஜஹான், உப தலைவராக ஏ.எம். ஜெஸார், உப செயலாளராக எச். அஸ்ரிக், ஆலோசகராக ஊடகவியலாளர் ஏ.ஆர்.பரீத் ஆகியோருடன் நிர்வாக சபை உறுப்பினர்களாக 08 பேர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் தேசிய உப தலைவர் எஸ். தஸ்தகீர், கௌரவ அதிதிகளாக பேரவையின் திட்ட தவிசாளர் கே.எல். சுபைர், பாலமுனை வை.எம்.எம்.ஏ. தலைவர் ஐ.ஏ.சிராஜ் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

### IMF இலங்கைக் குழு ...

சர்வதேச நாணய நிதியம் தமது கொள்கை எல்லைக்குள் இலங்கைக்கு தொடர்ந்தும் ஆதரவளிக்குமென்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நடுவானில் பறந்த...

மற்றும் ஊழியர்கள் தலையிட்டு கைகலப்பை சரி செய்தனர்.

சம்பவம் தொடர்பாக 06 பிரிட்டன் பயணிகளை கைது செய்து நெதர்லாந்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### அவசரகால நிலை; ...

சவால்களிலிருந்து நாட்டை வழமைக்கு கொண்டுவர வேண்டும். எனவே இதற்காக தீர்வை நோக்கிய பயணத்தை மேற்கொள்ள வேண்டுமென தெரிவித்த அவர், அதனூடாக இலங்கையருக்கு ஒரு நீண்டகால தீர்வு அவசியமெனவும் அமெரிக்க தூதுவர் ஜலி சுங் குறிப்பிட்டார்.

### ரணில் வீட்டின் முன்பாக...

ரணில் விக்கிரமசிங்கவின் கொழும்பிலமைந்துள்ள வீட்டுக்கு முன்னாலேயே இவ்வாறு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்தும் அவரின் ஆதரவாளர்கள் இப் பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் இப்பகுதியில் சற்று அமைதியின்மை ஏற்பட்டதுடன் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ரணில் விக்கிரமசிங்க தன்னை சந்திக்க வருமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து ரணில் விக்கிரமசிங்க தெரிவிக்கையில்,

எனது வீட்டுக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் விரும்பினால் சிறிகொத்தாவில் நாளை திங்களன்று என்னை சந்திக்கலாமென தெரிவித்துள்ளார்.இதனையடுத்து இப் பகுதியில் ஆரப்பாட்டத்தில் ஈடுபட்ட இரு தரப்பினரும் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

# எங்கள் கருத்து...

## பாராளுமன்றத்துக்கு தவறானவர்களை மக்கள் தெரிவு செய்யலாகாது...

பாராளுமன் றத்தில் அடிதடிகளில் ஈடுபடுவது, செங்கோலை தூக்கிக் கொண்டு ஓடுவது என பாராளுமன்றத்தின் மாண்பை அதன் உறுப்பினர்களே சந்தி சிரிக்கச் செய்திருக்கிறார்கள். ஒருவர் ஒரு பதவியில் இருந்து இராஜிநாமா செய்வதும் பின்னர் அதே பதவிக்கு போட்டியிட்டு வெற்றி பெறுவதும் 24 மணித்தியாலங்களில் அப் பதவியைத் துறப்பதும் மக்கள் மனதில் பாராளுமன்றம் தொடர்பான மனநிலையை எதிர்திசையில் நிறுத்தியிருக்கிறது.

பாராளுமன்றத்திலும் வெளியிலும் ஒரு உறுப்பினர் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கு பிரிட்டனில் சட்டம் இயற்றப்பட்டு நடைமுறையில் இருப்பதாகவும் அதன் கீழ் மாண்பு தவறி நடந்து கொள்ளும் உறுப்பினர்கள் தண்டிக்கப்பட முடியும் என்றும் இன்றைய வாரமஞ்சரியில் வெளியாகியுள்ள நேர்காணலில் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டிருப்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இலங்கைப் பாராளுமன்றத்திலும் இக் கண்ணியக்குறைவான மற்றும் தரம் தாழ்ந்த பேச்சுகளும் நடத்தைகளும் இம் மன்றம் தொடர்பான மக்கள் அபிப்பிராயத்தை வெகுவாக மாற்றி வைத்துள்ளது என்பதற்கு, பாராளுமன்றம் செல்லும் பாதையை மறித்தபடி நடைபெறும் போராட்டங்களை உதாரணமாகச் சுட்டலாம். ஒரு முறை சபாநாயகரே சபையினரைப் பார்த்து, கலரியில் பாடசாலை மாணவர்கள் இருப்பதால் கண்ணியமாக நடந்து கொள்ளுங்கள் என எச்சரிக்கை விடுத்த சம்பவத்தையும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்று கிராமத்து தேனீர்க் கடைகளிலும் பேசுபொருளாக மாறி இருக்கிறார்கள். முன்னரைப்போல செய்திகளை பத்திரிகையில் வாசித்துத்தான் தெரிந்து கொள்ளவேண்டிய அவசியம் இன்றில்லை. அனைத்தும் உடனுக்குடன் விடியோக்களாகவே கிடைக்கின்றன. கிராமத்தில் குடிவெறியில் கூச்சலிட்டு சண்டை போடுபவருக்கும் இவர்களுக்கும் இடையே என்ன வித்தியாசம் என அவர்கள் கேட்கிறார்கள். கணவனும் மனைவியும் தமது பிள்ளைகளுக்கு எதிரே சண்டை போடக் கூடாது என்பார்கள். பெற்றோர் என்ற மரியாதையை குழந்தைகள் இழந்துவிடலாம் என்பதே காரணம். அவ்வாறானால், நாட்டு மக்கள் முன்னிலையில் அவர்களது பிரதிநிதிகள் குஸ்தியில் ஈடுபடுவதை அவர்கள் எப்படி எடுத்துக் கொள்வார்கள் என்பது குறித்து பாராளுமன்ற உறுப்பினர்கள் சிந்தித்து பார்க்க வேண்டும்.

தற்போது புதிய அரசியல் கலாசாரத்துக்கான மக்கள் குரல் உரக்கவே எழுந்திருக்கிறது. பாராளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகளில், நடத்தையில், அவர்களின் வரப்பிரசாதங்கள் குறித்தும் கேள்விகளை எழுப்புகிறார்கள். ஒருநாள் அமர்வுக்கு மில்லியன்கள் செலவு செய்யப்படுகின்றன. உறுப்பினர்கள் பல வரப்பிரசாதங்களை அனுபவிக்கிறார்கள். எனவே மக்களால் கேள்வி எழுப்பப்பட முடியும்.

இதே சமயம் மக்களுக்கும் ஒரு பொறுப்பு உள்ளது. மிகச் சரியான நபர்களைத் தேர்ந்தெடுத்து, இன, மத உணர்வுகளுக்கு அப்பால், அவர்கள் சாதிக்கக்கூடியவர்களா என்பதை மட்டும் பார்த்து பாராளுமன்றத்துக்கு அவர்களை அனுப்பி வைக்க வேண்டும். இன்று யாரையெல்லாம் மோசம் எனக் குறிப்பிடுகிறார்களோ அவர்கள் அனைவரையும் அனுப்பி வைத்தவர்கள் மக்களே! அடுத்த முறை மக்கள் தங்கள் கடமையை ஒழுங்காகச் செய்ய வேண்டும்.

### பரீட்சார்த்திகளுக்கு...

சாதாரணதரப் பரீட்சைகள் நடைபெறுமென கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி பரீட்சார்த்திகளின் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் மற்றும் பரீட்சை அட்டவணைகள் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கும், தனிநபர் பரீட்சார்த்திகளின் பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் தத்தமது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அதனைத் தொடர்ந்து, இம்மாதம் 12ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை அனுமதி அட்டைகள் கிடைக்காத பாடசாலைகள் மற்றும் தனிநபர் பரீட்சார்த்திகள், பரீட்சை திணைக்களத்தின் தொலைபேசி இலக்கங்களுக்கு அறிவிக்குமாறு பரீட்சைகள் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

அத்துடன், பரீட்சைக்கான நேர அட்டவணை இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் www.donets.lk இல் வெளியிடப்பட்டுள்ளது.

தேர்வு சிக்கல்கள் மற்றும் பிற பிரச்சினைகளுள்ள மாணவர்கள் கீழே தரப்பட்டுள்ள இலக்கங்களுக்கு அழைப்பை ஏற்படுத்துவதன் மூலம் மேலதிக தகவல்களைப் பெறலாம்.

0112784208, 011278453, 0113188350 மற்றும் 0113140314 அல்லது 1911 என்ற இலக்கங்களை தொடர்புகொண்டு மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாமென்றும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

### பிரதமர் பதவியிலிருந்து விலகிவிட...

தெரிவித்துள்ளனர்.

இந்துமத விவகாரங்களுக்கான பிரதமரின் இணைப்புச் செயலாளர் கலாநிதி இராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா மற்றும் முஸ்லிம் சமய விவகாரங்களுக்கான பிரதமரின் இணைப்புச் செயலாளர் கலாநிதி ஹசன் மௌலானா உள்ளிட்ட சர்வமதத் தலைவர்கள் நேற்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்த போதே இவ்வாறு தெரிவித்தனர்.

நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு இந்த அரசாங்கம் மட்டுமே காரணமல்ல. கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் பல தூர நோக்கற்ற செயற்பாடுகளும் பிரதான காரணமாக இருந்தன. அத்துடன் கொரோனா அச்சுறுத்தல் மற்றும் ரஷ்ய உக்ரைன் யுத்தம் போன்ற காரணங்களினால் முழு உலகுமே இன்று பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியிருக்கிறது. இலங்கையைப் பொறுத்தவரை சற்று மோசமான நிலை காணப்பட்டாலும் அதனை மீட்டெடுத்து நாட்டை மீண்டும் வழமைக்கு கொண்டுவரும் திறமை இன்றைய அரசாங்கத்திடமும் குறிப்பாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடமே இருக்கிறதென்றும் சர்வமதத் தலைவர்கள் பிரதமரிடம் நேரடியாக தெரிவித்துள்ளனர். எக்காரணம் கொண்டும் எவர் என்ன கூறினாலும் பதவியிலிருந்து விலக வேண்டாமென்றும் சர்வமத தலைவர்கள் பிரதமரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

### மக்களின் பாதுகாப்புக்கு...

இயல்பு நிலைக்கு கொண்டுவருதல் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டியுள்ளது.

மகாநாயக்க தேரர்கள் உள்ளிட்ட மதத்தலைவர்கள், பொருளாதார விற்பன்னர்கள், வர்த்தக சமூகத்தினர், சட்டத்தரணிகள் மற்றும் டாக்டர்கள் உள்ளிட்ட பல தரப்பினரும் நெருக்கடிகளை வெற்றி கொள்வதற்கு மறு சீரமைப்பின் அவசியத்தை இக்காலங்களில் தெரிவித்து வருகின்றனர். இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கடந்த ஏப்ரல் 23 ஆம் திகதி வெளியிட்டுள்ள அறிக்கையில் மறுசீரமைப்புக்கான பல்வேறு ஆலோசனைகள் அறிமுகப்படுத்தியுள்ளது.

பொருளாதாரம் மற்றும் கடன் நெருக்கடியை குறுகிய காலத்துக்குள் முகாமைத்துவம் செய்ய வேண்டியது நாட்டில் தற்போது நிலவும் பெரும் சவாலாகும். மறுசீரமைப்புக்கான நடவடிக்கைகளை ஆரம்பித்து அதனை முன்னெடுத்துச் செல்வதற்கு பலமான, அதேவேளை ஸ்திரமான அரசாங்கம் இருக்க வேண்டியது முக்கியமாகுமென சட்டத்தரணிகள் சங்கம் அதன் மூலம் தெரிவித்துள்ளது.

நிதி, நிவாரணங்களை பெற்றுக் கொள்வதற்காக சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் மற்றும் நட்பு நாடுகளுடனும் தற்போது பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்கு சாதகமான பிரதி பலன்கள் கிடைத்துள்ளன.

அந்த சாத்தியப்பாட்டுக்கிணங்க தேவையான பலம் மற்றும் நம்பிக்கையை கட்டியெழுப்புவது, அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் அமைதி நிலை முக்கிய நிபந்தனைகளாகும்.

கடந்த சில தினங்களாக தலைநகர் உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆத்திரமூட்டும் ஆவேசமான எதிர்ப்புப் போராட்டங்கள் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும் பாதுகாப்புக்கும் பெரும் அச்சுறுத்தலாகியுள்ளன.

எரிபொருள் விநியோகம் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளுக்கு தடை ஏற்பட்டுள்ளன. ரயில் போக்குவரத்து உள்ளிட்ட பொதுப் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்பத்திரிகளில் வழமையான நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன் நோயாளிகள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஆடைத் தொழில் உட்பட உற்பத்தித்துறை செயற்பாடுகள் அவ்வப்போது தடை ஏற்படுத்தப்படுகின்றன. பிள்ளைகள் பாடசாலைக்கு போகமுடியாத நிலை, அரச, தனியார் இரு தரப்பினரும் நிறுவனங்களுக்கு கடமைக்காக சமுகமளிப்பதில் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு பாதிப்புகளை ஏற்படுத்துவது மட்டுமன்றி பொருளாதார நெருக்கடியை மேலும் அதிகரிக்கவே வழிவகுத்துள்ளன.

இத்தகைய நிலையில் மக்களின் பாதுகாப்பு மற்றும் இயல்பு வாழ்க்கையை கட்டியெழுப்புதல், அத்தியாவசிய சேவை, விநியோகங்கள் மற்றும் சேவைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லுதல், பொதுமக்கள் சுதந்திரமாக தமது பயணங்களை மேற்கொள்வதை உறுதிப்படுத்தும் நோக்கிலேயே பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்களை பயன்படுத்தி அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

என்று தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் மொஹான் சமரநாயக்க நேற்று இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.(ஸ)

### பொருளாதாரம் தொடர்பில்...

போதிய வருமானமின்றி வரிச்சலுகை வழங்கும் அரசின் முடிவு சரியல்ல என்றும் அவர் கூறினார். உள்ளூர் வர்த்தக நிறுவனங்கள் பொருளாதாரத்தில் பணத்தை மீள முதலீடு செய்யுமென்ற நம்பிக்கையில் ஜனாதிபதி இந்த தீர்மானத்தை எடுத்துள்ளார். எவ்வாறாயினும், ஜனாதிபதி நம்பியவாறு அது நடக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்திற்குச் சென்று ரூபாயை மிதக்கவிடுமாறு பொருளாதார நிபுணர்கள் வழங்கிய ஆலோசனையை அரசாங்கம் ஏன் பின்பற்றவில்லையென ஊடகவியலாளர் நாமல் ராஜபக்ஷவிடம் கேள்வி எழுப்பினார.

இதற்குப் பதிலளித்த நாமல்,

அதற்கு முடிவெடுப்பவர்களும் பொறுப்பென்று கூறினார். அரசியல்வாதிகள் பொருளாதாரம் தொடர்பான தீர்மானங்களை எடுக்க முடியாத நிலையே இதற்கு காரணமென அவர் தெரிவித்தார். அதிகாரிகள் தவறான அறிவுறுத்தல்களை வழங்கியதை தற்போதைய நிதியமைச்சர் அலி சப்ரியும் ஒப்புக்கொண்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

### ஆற்றில் நீராடச் சென்ற...

வாங்காமம் பிரதேசத்தில் இடம்பெற்றது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

அக்கரைப்பற்றிலிருந்து வாங்காமம் பிரதேசத்திற்கு விடுமுறையை கழிப்பதற்காக குடுபத்தினருடன் சென்ற 08 வயதான பெண் பிள்ளை மற்றும் 06 வயதுடைய ஆண் பிள்ளை இருவரும் அப்பிரதேசத்திலுள்ள நீரோடையில் குளிப்பதற்காக சென்ற சமயம், அளவுக்கதிகமாக நீர் வந்ததனால் இவர்கள் இருவரும் நீரில் அடித்து செல்லப்பட்டு காணாமல் போயுள்ளனர்.

அதன்பின்னர் அப்பிரதேச மக்களின் உதவியுடன் நீரில் மூழ்கிய பெண் பிள்ளை உடனடியாக காப்பாற்றப்பட்டு வைத்தியசாலைக்கு செல்லும் வழியில் உயிரிழந்ததோடு, ஆண் பிள்ளை உயிரிழந்த நிலையில் நீரோடையில் இருந்து மீட்கப்பட்டுள்ளார்.

இருவரினதும் சடலம் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு, பிரேத பரிசோதனையின் பின்னர் நல்லடக்கத்திற்காக சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் இறக்காமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

### எனது வீட்டில் சந்திப்பா? ....

பிரபல தொழிலதிபர் திருக்குமார் நடேசன் தெரிவித்துள்ளார்.

“திருமதி ஹேமா பிரேமதாச என்பவர் நான் மதிக்கும் ஒரு பெண்மணி. கடந்த 10 வருடங்களாக நான் அவரை சந்திக்கவில்லை. மேலும், ஒரு வாரத்துக்கு மேலாக நான் இலங்கையில் இருக்கவில்லை. தொழில் விடயமாக வெளிநாடு சென்றிருந்தேன்.

நீங்கள் கூறுவது போல் ஹேமா பிரேமதாசவோ அல்லது அரசாங்கத்தின் பலமானவர்களோ அல்லது எவரேனும் இந்த நாட்களில் எனது வீட்டுக்கு வரவில்லை. எனது வீட்டில் அவ்வாறான அரசியல் கலந்துரையாடல் எதுவும் நடைபெறவில்லை. அந்த விடயம் முற்றிலும் பொய்யான ஒன்றாகும்.

அரசியல்வாதிகள் என்ன செய்தாலும், வயது முதிர்ந்த பெண்ணாக உள்ள முன்னாள் முதல் பெண்மணி தொடர்பில் இதுபோன்ற பொய்ப் பிரசாரங்களில் ஈடுபடுவது அசிங்கமானது. அதை செய்ய வேண்டாம்.

குற்றச்சாட்டு முன் வைப்பவர்கள் முடிந்தால் என் வீட்டில் அப்படி ஒரு விவாதம் நடந்ததை நிரூபித்துக் காட்டலாம். நான் அரசியல் செய்யவில்லை.

நான் அரசியலில் பணம் சம்பாதிக்கவில்லை. என்னை ஈடுபடுத்த வேண்டாம்” என திருக்குமார் நடேசன் சிங்கள ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

பிரதி சபாநாயகர் வாக்கெடுப்பு தொடர்பில் திருக்குமார் நடேசனின் தலைமீட்டில் கலந்துரையாடல் நடைபெற்றதாக முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச மற்றும் அவரது தரப்பினர் குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# "பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதே முக்கியம் அரசியல் நெருக்கடியை பின்னர் பார்க்கலாம்!"

## முன்னாள் பிரதமரும் ஐ.தே.கவின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவுடனான நேர்காணல்

நேர்கண்டவர்:- **அருள் சத்தியநாதன்**

**இலங்கை அரசியலில் பல தோல்விகளைச் சந்தித்தவர் இவர். வெள்ளைக்காரரரைபோல நடந்து கொள்பவர்; மேட்டுக்குடித் தன்மையை கிராம மக்களிடம் வெளிப்படுத்துபவர்: இடத்துக்கு தகுந்த மாதிரி பேசத் தெரியாதவர் அப்புறம் ஒரு விடாக்கொண்டன் என்றெல்லாம் இவர் மீது குற்றச்சாட்டுகள் ஒருபுறம் என்றால் பாராளுமன்ற ஜனநாயகத்தை துறைபோகத் தெரிந்து வைத்திருக்கும் இவர் பொருளாதார அறிவு மிக்கவர். நிறைய விஷயங்களோடு கேட்பவருக்கு புரியும் வகையில் பேசக் கூடியவர்; தூர நோக்குக் கொள்கை கொண்டவர் என்று புகழப்படுபவரும் கூட. இன்றைய பொருளாதார வீழ்ச்சி மற்றும் அரசியல் நெருக்கடியான காலக் கட்டத்தில் இவரை நினைவு கூருபவர்கள் பலர். அதேசமயம் பலம் பொருந்திய ஐக்கிய தேசியக் கட்சி கடந்த தேர்தலில் ஒரு ஆசனத்தைக் கூடப் பெற முடியாமற் போனமைக்கு இவரே பொறுப்பாளி என்ற பெயரை இவர் ஏற்க வேண்டியதாயிற்று. தேசிய பட்டியல் வாயிலாக அக் கட்சியின் ஒரே ஒரு உறுப்பினராக பாராளுமன்றத்தில் உள்ளவர்.**

**எனினும் கிழடானானாலும் சிங்கம் சிங்கம்தான் என்பதுபோல இன்றைக்கும் பிரமிப்பூட்டும் தேசியத் தலைவராக, உலகம் அறிந்த அரசியல்வாதியாக, பொறுப்புகளை ஏற்று நடத்தக் கூடியவராக விளங்குபவரே முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. இன்றைய திகதியில் அதிகம் பேசப்படுபவர். இவரைக் கடந்த புதனன்று சிறிகொத்தா ஐ.தே.க தலைமையகத்தில் சந்தித்தோம். அது ஒரு பரபரப்பான பாராளுமன்ற தினம் என்பதால் அவருக்காகக் காத்திருக்க வேண்டியதாயிற்று. எம்மைக் கண்டதும் வழியெல்லாம் வாகன நெரிசல், பாராளுமன்றத்தில் இருந்து இங்கு வருவதற்கு 40 நிமிடங்களானது எனக் கூறி அலுத்துக் கொண்டார். பின்னர் எம்முடன் உரையாடினார். கேட்ட கேள்விக்களுக்கு எல்லாம் சடசடவென பதில்கள் வந்தன. அறிவும் அனுபவமும் செயல்திறனும் கொண்ட ஒருவரைத் தப்பாக இம்மக்கள் புரிந்து கொண்டு அவரைப் பயன்படுத்தாமல் விட்டிருக்கிறார்களோ என்ற கேள்வி அவருடன் பேசியபோது எழத்தான் செய்தது.**

**இப்போது தேர்தல் நடத்துவது பொருத்தம் அல்ல அதற்கு பெருமளவு பணம் தேவைப்படும்**

**இது பணவீக்கத்தின் ஆரம்ப நிலை, தீவிர பணவீக்கம் இனித்தான் வரப்போகிறது**



அன்றைய தினம்தான் நிதி, நீதியமைச்சர் அலிசப்ரி நாட்டின் பொருளாதாரம் மற்றும் நிதி நிலை தொடர்பான முக்கியமான ஒரு உரையை பாராளுமன்றத்தில் நிகழ்த்திருந்தார். அந்த உரையை முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராட்டினார்.

"20ம் திருத்தத்துக்கு நான் முற்றிலும் எதிரானவன். எனவே 21ம் திருத்தம் கொண்டு வரப்படுவதன் மூலம் ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்படத்தான் வேண்டும். அத்திருத்தம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதில் இப்போது பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. ஆனால் ஜனாதிபதியின் பதவி அதிகாரங்களைக் குறைப்பதால் நாட்டின் இன்றைய பிரச்சினைகளுக்கு முடிவு வந்துவிடப் போவதில்லை. இன்று மிகவும் அவசரமாக செய்யப்பட வேண்டியது பொருளாதார அபிவிருத்தி பொருளாதார மறுசீரமைப்பு. மக்களை பட்டினியில் இருந்து காப்பாற்றுவது என்பதே. எனவே அதற்குத்தான் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். பொருளாதார நெருக்கடியா அல்லது அரசியல் நெருக்கடியா என்றால் பொருளாதார நெருக்கடியே முதல் காரியமாக தீர்க்கப்பட வேண்டியது. ஏனெனில் இப் பொருளாதார நெருக்கடி மேலும் உக்கிரமடையப் போகிறது" என்றார் ரணில் விக்கிரமசிங்க.

**வாழ்க்கைச் செலவு அதிகரித்துச் செல்கிறதே?**

இது ஆரம்ப நிலைதான். அடுத்துவரும் மாதங்களில் பணவீக்கம் மேலும் அதிகரிக்கும். அதற்கு முன் தடுத்து நிறுத்த ஏதேனும் செய்தாக வேண்டும். இந் நிலை நீடிக்குமானால் எமது நாட்டு பொருளாதாரம் நொருங்க ஆரம்பிக்கும். தீவிர பணவீக்கம் இனிமேல்தான் வரப்போகிறது. அது மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். ஏராளமானோர் தொழில்கள் இழப்பர். நிறுவனங்கள் திவாலாகும். பட்டினி நிலைதோன்றும், மரணங்களும் நிகழும், அது ஒரு மோசமான காலக் கட்டம். எனவே அரசியல் நெருக்கடியை ஒருபக்கம் வைத்துவிட்டு பொருளாதாரத்தை மீளவும் இயக்குவதற்கு நாம் முன்னுரிமை வழங்க வேண்டும். நிதியமைச்சர் நல்லதொரு உரையை பாராளுமன்றத்தில் நிகழ்த்தினார். அரசின் தவறுகளை ஒப்புக் கொண்டார். 500 மில்லியன் அமெரிக்க டொலருக்கு குறைவான வெளிநாட்டு நிதியே கைவசம் உள்ளது. எனவே அரசியல் நெருக்கடியை பின்னர் பார்த்துக் கொள்ளலாம். மக்களின் வயிற்றுப் பாட்டுக்கு முதலில் வழி செய்ய வேண்டும்.



**நீங்கள் நாட்டின் தலைவராக இருந்திருந்தால் என்ன செய்திருப்பீர்கள்?**

என்ன செய்திருப்பேனா? இப்படி ஒரு கூட்டம் காலிமுகத்திடலில் கூடியே இருக்காது. முன்னெசசரிக்கை நடவடிக்கைகளை எடுத்திருப்பேன். 2020 21 காலப்பகுதிக்கு ஏழு பில்லியன் டொலர் இதற்காகத் தேவைப்பட்டிருக்கும். சர்வதேச நாணய சபையிடம் மூன்று பில்லியன் கடன் பெற்றிருப்பேன். சர்வதேச நாணய சபையிடம் செல்ல வேண்டும். என்பதை முன்கூட்டியே சொன்னவன் நான்தான். நாங்கள் 2015இல் பதவிக்கு வந்தபோது அரசஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கியது தவறு என்பதுபோல் சொல்லப்படுகிறது. நாட்டில் ஏற்படப்போகும் பணவீக்கத்தை அல்லது விலை உயர்வை சமாளிப்பதற்காகத்தான் அப் பணம் முன்கூட்டியே வழங்கப்பட்டது. தனியார்த்துறை ஊழியர்களுக்கும் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டிருக்க வேண்டும்தான். நாங்கள் திட்டமிட்டே வேலை செய்தோம்.

**காலிமுகத்திடல் போராட்டம் பற்றி உங்கள் கருத்து?**

மக்களின் மனநிலையை எதிரொலிக்கும் சின்னமாகவே அதைப் பார்க்கிறேன். அது மட்டுமல்ல; நாட்டின் வேறு பகுதிகளிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன. துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் இறந்தும் போனார். அமைதியான போராட்டங்களில் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டிருக்கக் கூடாது. இப் போராட்டங்களை பொலிசார் சிவில் பாதுகாப்புக்கு உரியவர்கள் என்ற வகையில் வன்முறையின்றியே கையாள வேண்டும். கட்டுப்பாடுகளை மீறிக் செல்கையிலேயே ஒரு கட்டத்தில் பொலிசார் தமக்கு உதவும் வகையில் இராணுவத்தை அழைக்கலாமே தவிர இராணுவம் இத்தகைய போராட்டங்களை கட்டுப்படுத்த அனுமதிக்கக்கூடாது, இராணுவம் யுத்தத்துக்கானது. இம் மக்கள் போராசட்டங்களை பொருளாதாரத்தை வேகப்படுத்துவது, மாற்றி அமைப்பது, புதிய முதலீடுகளை கொண்டு வருவது, புதிய அரசியல் கலாசாரத்தை அறிமுகம் செய்வது எண்ணவற்றின் மூலமே நிறுத்த முடியும்.

ஏனெனில் எமது பொருளாதார நிலை மேலும் மோசமாகி வருகிறது. அரசாங்கம் இந்தியாவிடம் 500 மில்லியன் அமெரிக்க டொலர்களைக் கடனாகக் கேட்டுள்ளது. ஆனால் என்ன, 500 மில்லியனுக்கு 12 கப்பல் எண்ணெய் மட்டுமே கொள்வனவு செய்ய முடியும். மேலும் ஒரு பில்லியன் டொலர்களை இந்தியாவிடம் கேட்டுள்ளோம். இந்த நிதியில் இருந்து எல்லாவகையான பொருட்களையும் இந்தியாவில் இருந்து பெற்றுக் கொள்ள முடியாது. மருந்துகள் போன்றவற்றை வேறுநாடுகளில் இருந்தும் பெற்றுக் கொள்ள வேண்டியிருக்கும், எவ்வாறாயினும் இந்தியக் கடன் உதவி மூலம் ஜூன் நடுப்பகுதிவரை சமாளிக்கலாம். எனவே பொருளாதாரத்தை ரீ ஸ்டார்ட் செய்தாக வேண்டும்.

**விரிவாகச் சொல்வீர்களா?**

ஆம். அரசியலையும் பொருளாதாரத்தையும் குழப்பிக் கொள்ளக்கூடாது. இப்போது பொருளாதாரம் தான் முக்கியம், நிதியமைச்சருடன் நாம் விரிவாகப்பேசி எவ்வாறான ஒத்துழைப்புகளை வழங்கலாம் என்பதை பாராளுமன்றம் முடிவு செய்ய வேண்டும். அதனால்தான் பாராளுமன்றத்துக்கு நிதி அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்று கூறி வருகிறேன். பொது நிதியை கையாளும் அதிகாரம் பாராளுமன்ற குழுவிடம் விடப்படுவதே சரியான நிதி நிர்வாகத்துக்கு வழிவகுக்கும். ஏனெனில் நிதியை அமைச்சர்களிடம் வழங்குவதன் மூலம் விரயத்துக்கும், ஒதுக்கி வைத்துக் கொள்ளப்படுவதற்கும் அது ஆளாகி சரியான பயன்பாட்டுக்குவராமல் போய் விடலாம். மேலும் வங்கிகள் காப்பாற்றப்படுவதும் முக்கியமானது. நாம் உலக நாடுகளிடம் உதவி பெற வேண்டும். முதலீடுகளை கொண்டுவர முயற்சிக்க வேண்டும். உதவி வழங்கும் நாடுகளை அழைத்து இலங்கையில் ஒரு மாநாட்டை நடந்த முயற்சிக்க வேண்டும். நிதியமைச்சர் நிலைமைகளை சீர்செய்ய இரண்டாண்டு காலமெடுக்கும் என்கிறார். ஆனால் ஐந்தாண்டுகளும் எடுக்கலாம். எனவே தாமதம் செய்யாமல் உடனடியாக செயல்பட வேண்டும்.

**ஜனாதிபதி, பிரதமர் இருவரும் பதவி விலக வேண்டும், இடைக்கால அரசு அமைய வேண்டும், புதிய தேர்தலுக்கு செல்ல வேண்டும் என்ற பல உபாயங்கள் பற்றி பேசப்படுகின்றன. உங்கள் கருத்து என்ன?**

பல வியூகங்கள் உள்ளன. ஜனாதிபதியும் பிரதமரும் இருவருமே பதவி விலக வேண்டும் என்பது ஒன்று ஜனாதிபதி இருக்க பிரதமர் பதவி விலக வேண்டும் என்பது இரண்டாவது. இருவருமே பதவியில் நீடிக்க வேண்டும் என்பது மூன்றாவது. பிரதமர் பதவியில் நீடிக்க ஜனாதிபதி விலக வேண்டும் என்பது நான்காவது. இதில் எது பொருத்தமானது என்பதை அரசே தீர்மானிக்க வேண்டும். மேலும் இடைக்கால அரசு அமைக்க அரசியலமைப்பில் இடமில்லை. பல கட்சி பிரதிநிதிகளைக் கொண்ட அரசையே அமைக்க முடியும். இவ்விடயத்தில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் யோசனைகளை முன் வைத்துள்ளது. சட்டத்தரணிகள் அமைப்பும் யோசனைகளை முன் வைத்துள்ளது. இவை தொடர்பாக ஆராய்ந்து ஒரு பொது நிலைப்பாட்டுக்கு வரலாம் என்பது என் அபிப்பிராயம். பொருளாதார நெருக்கடியைப் போலவே அரசியல் நெருக்கடிக்கும் தீர்வு காணப்பட வேண்டும். அரசியலையும் பொருளாதாரத்தையும் தனித்தனியாகப் பார்க்க வேண்டும்.

பொருளாதாரத்தை எடுத்துக் கொண்டால் நீண்ட கால, மத்திய கால, குறுகியகால திட்டங்களை வகுத்துக் கொள்ள வேண்டும். வங்கிகள் வலிமை கொண்டவையாக மாற்றப்பட்டு கடன்களை நிறுவனங்கள் பெற்றுக்கொள்ளவழி செய்யப்பட வேண்டும். முதலீடுகள் ஊக்குவிக்கப்பட வேண்டும். ஒரு இரும்பு சட்டம் (Iron frame) அமைக்கப்பட்டு ஒரு இருபது ஆண்டுகால பொருளாதார இலக்கை அமைத்துக் கொள்ள வேண்டும். மேலும் வெளிநாடுகளுடன் தொடர்ந்து பேசிவர வேண்டியது அவசியம். ஸாம்பியா பொருளாதார நெருக்கடியில் இருந்து ஐந்து மாதங்களில் வெளிவந்ததை நாம் உதாரணமாகக் கொள்ளலாம்.

இப் பிரச்சினையின் முடிச்சுகளை மெதுவாக அவிழ்க்கவும் முடியும்; கத்தியால் வெட்டவும் முடியும். கத்தியால் வெட்டுவதானால் சகல கட்சிகளும் ஒன்றிணைய வேண்டியது அவசியம்.

**ஜனாதிபதியின் பதவி அதிகாரங்களைக் குறைப்பதால் நாட்டின் இன்றைய பிரச்சினைகளுக்கு முடிவு வந்துவிப் போவதில்லை. இன்று மிகவும் அவசரமாக செய்யப்பட வேண்டியது பொருளாதார அபிவிருத்தி பொருளாதார மறுசீரமைப்பு. மக்களை பட்டினியில் இருந்து காப்பாற்றுவது என்பதே. எனவே அதற்குத்தான் முக்கியத்–துவம் அளிக்கப்பட வேண்டும். பொருளாதார நெருக்கடியா அல்லது அரசியல் நெருக்கடியா என்றால் பொருளாதார நெருக்கடியே முதல் காரியமாக தீர்க்கப்பட வேண்டியது. ஏனெனில் இப் பொருளாதார நெருக்கடி மேலும் உக்கிரமடையப் போகிறது"**



தேர்தல் ஒன்றுக்கு போவது இப்போது உசிதமானதல்ல. ஒரு தேர்தலை நடத்த 20முதல் 25 பில்லியன் ரூபா செலவாகும். ஒரு வேட்பாளர் குறைந்த பட்சம் 25மில்லியன் ரூபாவை செலவிட வேண்டியிருக்கும். இதைவிட அதிகமாக செலவிடும் வேட்பாளர்களும் உள்ளனர். எனவே ஒரு பொதுத்தேர்தலை நடத்தி முடிக்க 65 பில்லியன் ரூபா செலவாகும். எனவே இவ்வளவு பணத்தை செலவிடுவது இன்றைய நிலையில் சாத்தியமாகுமா? பொதுத் தேர்தலைத் தவிர்த்து வேறு வகையான ஆட்சியை அமைப்பதே சரியானது.

புதிய வரவு செலவு திட்டமொன்றைப் பற்றி நிதியமைச்சர் பேசியிருக்கிறார். அது அபிவிருத்தி வரவு செலவு திட்டமாக அமைய வேண்டியது முக்கியம். அவசியமற்ற எல்லா செலவுகளும் நிறுத்தப்பட வேண்டும். அபிவிருத்தி திட்டங்கள் நிறுத்தப்பட வேண்டும். அந்நிதியை நிவாரணம் வழங்குவதற்கு பயன்படுத்த வேண்டும். மக்களின் கஷ்டங்களைக் குறைப்பதே இப்போது முக்கியம்.

**பாராளுமன்றத்தில் அங்கத்தவர்கள் சிறு பிள்ளைகள் போல செயல்படுகிறார்களே!**

ஆமாம். இந்த பாராளுமன்ற கலாசாரத்தை மாற்றியாக வேண்டும். இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் என நானும் கூறியிருக்கிறேன். இப் பாராளுமன்ற ஒழுக்கம் பிரிட்டனில் கைகொள்ளப்படுகிறது. பாராளுமன்றத்திலும் வெளியிலும் கண்ணியமாக நடந்து கொள்ளும்படி அங்கு கேட்கப்பட்டுள்ளது. மீறுவோருக்கு அங்கு தண்டனை வழங்கப்படுகிறது. பாராளுமன்றத்தில் ஒழுக்கம் பேணப்படாவிட்டால் மக்கள் 225 பேரையும் வெளியே போ என்றுதான் சொல்வார்கள்.

இவ்வாறு கேள்விகளுக்கு தயக்கமில்லாமல் பதில் அளித்த முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தற்போது நாட்டுக்கு வெளிநாட்டு முதலீடுகள் மிகமிக அவசியப்படுவதாகவும் ஆனால் தான் அதை செய்ய முயன்றபோது கடுமையான எதிர்ப்புகளை சந்தித்தாகவும் குறிப்பிட்டார்.

இந்தியாவுக்கு எண்ணெய்விற்கும் உரிமையை வழங்க வேண்டாம் என்றார்கள். இப்போது பாருங்கள், ஐ.ஓ.சி.தான் எமக்கு உதவிக்கு வருகிறது. சிங்கப்பூருடன் வர்த்தக ஒப்பந்தம் அமெரிக்காவுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்ய முயன்ற போதெல்லாம் தடுத்தார்கள்.

அவை நடைமுறையில் இருந்திருந்தால் இன்று எமக்கு உதவுவதாக அமைந்திருக்கும். இன்று எமக்கு அவசியப்படுவது பொருளாதார சுதந்திரம். அதை நோக்கி பயணிப்பதே இன்றைய முக்கியத் தேவை.

# எதிர்க்கட்சிக்குள் நாளுக்கு நாள் வலுவடையும் உட்கட்சிப் பூசல்!

**எரிபொருள் தட்டுப்பாடு, விலைவாசி அதிகரிப்பு, மின்சாரத் துண்டிப்பு எனப் பல்வேறு அன்றாடப் பிரச்சினைகளுக்கு மக்கள் முகங்கொடுத்து வரும் இன்றைய நிலையில், பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் அரசியல் ரீதியான தலையீடு போதுமானதாக இல்லையென்ற சாதாரண கோபம் பொதுமக்கள் மத்தியில் காணப்படுகிறது.**

மக்கள் வீதியில் இறங்கி ஆரம்பித்துள்ள போராட்டங்கள் ஒரு மாதத்தையும் கடந்துள்ள போதும், அரசியல்வாதிகள் நிலையான தீர்வொன்றை முன்வைக்கத் தவறியிருப்பது கண்கூடு. அரசாங்கம் என்ற ரீதியில் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்க கடுமையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதும், எதிர்க்கட்சி தரப்பில் குறிப்பாக பிரதான எதிர்க்கட்சி ஆக்கபூர்வமான முயற்சிகளை முன்னெடுப்பதாகத் தெரியவில்லை.

அரசாங்கம் மக்கள் பிரச்சினையைத் தீர்க்கத் தவறி விட்டது என எதிர்க்கட்சி குற்றஞ்சாட்டுவதாயின், அந்தத் தவறுகளைத் திருத்தக் கூடிய மாற்று யோசனைகள் முன்வைக்கப்பட்டிருக்க வேண்டும். இதுவரை அவ்வாறு ஆக்கபூர்வமான முயற்சிகள் எதனையும் எதிர்க்கட்சி எடுத்ததாகத் தெரியவில்லை.

ஆரம்பம் முதலே எதிர்க்கட்சியின் செயற்பாடுகள் வெறுமனே அரசாங்கத்தைக் குறைகூறுவதை மாத்திரமே இலக்காகக் கொண்டவையாகவே காணப்படுகின்றன. குறிப்பாக கொவிட்19 தொற்று ஆரம்பித்த காலத்திலிருந்து எடுத்ததற்கு எல்லாம் குறை கூறுவதையும், குற்றங் கண்டுபிடிப்பதிலுமே எதிர்க்கட்சி காலத்தைக் கடத்தி வருகிறது.

அது மாத்திரமன்றி ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள் மற்றும் தேவையற்ற கருத்துக்களால் மக்கள் மத்தியில் வீண் குழப்பங்களே ஏற்படுத்தப்பட்டுள்ளன. சிறந்த உதாரணமாக கொவிட்19 தொற்றுநோய்க்கு எதிரான தடுப்பூசி ஏற்றுவது தொடர்பில் எதிர்க்கட்சியினர் தெரிவித்த கருத்துக்கள் மக்களுக்கிடையில் தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்தின. இதனால் பலர் தடுப்பூசி ஏற்றிக் கொள்வதற்கு விருப்பம் தெரிவிக்காத நிலை காணப்பட்டது.

இது போன்று பல்வேறு விடயங்களில் வீணாக அவர்கள் மக்களைக் குழப்பியிருப்பதுடன், இன்னமும் குழப்பங்களை இருக்கின்றனர்.

மறுபக்கத்தில், பிரதான எதிர்க்கட்சியாகவுள்ள ஐக்கிய மக்கள் சக்தி கட்சிக்குள் பல்வேறு கட்சிகள் பங்காளியாக இணைந்துள்ளன. இந்தப் பங்காளிக் கட்சியின் தலைவர்களுக்கிடையில் பாரியளவு ஒற்றுமை இருப்பதாகத் தெரியவில்லை. எதிர்க்கட்சிக் கூட்டணியில் அடுத்த தலைவருக்கான உட்பூசல் அதிகரித்துள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்னர் பிரதான எதிர்க்கட்சி அரசாங்கத்தைக் கண்டித்து கண்டியிலிருந்து கொழும்பு வரை பேரணியொன்றை நடத்தியிருந்தது.

இதன் இறுதிநாள் நிகழ்வு மேதினத்திலன்று கொழும்பில் நடைபெற்றது. இதில் நிகழ்வுகளை ஒருங்கிணைத்திருந்த பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோவும், சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினரான சரத் பொன்சேகாவும் பொதுவெளியில் சண்டையிட்டுக் கொண்டமை ஊடகங்களில் அறிக்கையிடப்பட்டிருந்தது.

நிகழ்வில் உரையாற்றுவதற்கு தனக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் எனக் கோரியே பொன்சேகா முரண்பட்டுள்ளார். இச்சம்பவம் குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்திருந்த பொன்சேகா, ஒரு சிலர் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்களைக் கொண்டு செய்படுகின்றமையை கட்சிக்குள் அவதானிக்க முடிவதாகவும், சிரேஷ்ட தலைவர் என்ற ரீதியில் தனக்கு உரையாற்றும் சந்தர்ப்பத்தை வழங்குமாறு கோரியதாகவும் குறிப்பிட்டிருந்தார். கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு வழங்கப்பட வேண்டிய இடம் தொடர்பில் சிலர் புரிந்து நடக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்திருந்தார். ஐ.ம.ச சிரேஷ்ட தலைவர்களுக்கிடையில் இவ்வாறான குழப்பங்கள் இடம்பெற்றமை இது முதற்தடவையல்ல.

இதற்கு முன்னரும் ஐக்கிய மக்கள் சக்தியினர் கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த மக்கள் பேரணியில் உரையாற்றுவதற்கு சிரேஷ்ட தலைவர்கள் சிலர் தயாராக இருந்தபோதும் எதிர்க்கட்சித் தலைவர் தவிர வேறு யாரும் அங்கு உரையாற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் சிரேஷ்ட தலைவர்கள் தமது அதிருப்தியை வெளியிட்டிருந்தனர்.

ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள சிலர் தமது தனிப்பட்ட பிம்பத்தை பிரபல்யமாக்கும் நோக்குடனேயே செயற்பட்டு வருவதாக பொன்சேகா விமர்சித்திருந்தார். எதிர்வரும் காலத்தில் நடக்கக் கூடிய பொதுத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து எதிர்க்கட்சியில் உள்ள தலைவர்கள் காய்களை நகர்த்தி வருவதால் ஒருவருக்கு ஒருவர் போட்டிபோடும் நிலை காணப்படுவதாக அரசியல் விமர்சகர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

நாடு தற்பொழுது எதிர்கொண்டிருக்கும் ஸ்திரமற்ற சூழ்நிலையில் பிரதான எதிர்க்கட்சி ஆக்கபூர்வமாக செயற்படவில்லையென்ற விமர்சனம் பொதுமக்கள் மத்தியில் காணப்படுகிறது. கடந்த வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்துக்கு அருகில் ஆர்ப்பாட்டத்தில் மக்கள் ஈடுபட்டிருந்தனர். இதன் போது ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஆர்ப்பாட்டக்காரர்கள் காணப்பட்ட பகுதிக்குச் சென்று அவர்களுடன் கதைக்க முற்பட்ட போது, ஆர்ப்பாட்டக்காரர்களுடன் முரண்பாடு ஏற்பட்டது.

"அரசியல்வாதிகள் அனைவரும் சேர்ந்து நாடகம் ஆடி வருகின்றீர்கள். நீங்கள் அனைவரும் ஒரே மாதிரியானவர்கள், நீங்கள் இங்க வர வேண்டாம்" எனக் கூறிய ஆர்ப்பாட்டக்காரர்கள், கூக்குரல் எழுப்பி தமது எதிர்ப்பை வெளியிட்டனர். ஒட்டுமொத்த அரசியல் முறைமைக்கு எதிராகவும் மக்கள் தமது எதிர்ப்பினை வெளியிட்டு வரும் நிலையில், போராட்டங்களை தமக்கு சாதகமாகப் பயன்படுத்த அவர்கள் எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்திருப்பதையே இச்சம்பவம் எடுத்துக் காட்டியிருந்தது.

எனவே, மக்களின் நியாயமான போராட்டங்களைத் தமது சொந்த அரசியல் நோக்கங்களுக்குப் பயன்படுத்த எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் முயற்சிக்கக் கூடாது. இதனை விடுத்து அரசாங்கத்தின் பிழைகளைச் சுட்டிக்காட்டி நாட்டை இந்தக் குழப்பத்திலிருந்து மீட்டெடுப்பதற்கு ஆக்கபூர்வமான முயற்சிகளை எடுக்க வேண்டும்.

நாட்டின் மீது உண்மையான அக்கறை கொண்டவர்களாயின் தற்பொழுது காணப்படும் குழப்பத்தை தீர்க்க இடைக்கால சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இல்லாவிட்டால் அரசாங்கத்தை முழுமையாகப் பொறுப்பெடுப்பதற்கான தங்களது பலத்தை நிரூபிக்க வேண்டும். அவர்களால் பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்க முடியாது.

இவற்றில் எந்தவொரு தெரிவையும் மேற்கொள்ளாமல் எதிர்க்கட்சி என்ற ஒரே காரணத்துக்காக அனைத்தையும் விமர்சித்துக் கொண்டு மக்கள் மேலும் துன்பங்களுக்கு ஆளாவதற்கு இடமளிக்கக் கூடாது.

சுதந்திரத்துக்குப் பின்னர் ஆட்சிசெய்த அனைவரும் தம்மை ஏமாற்றியிருப்பதாக மக்கள் கூறி வருவதால் சரியான அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதில் அரசாங்கத்துக்கு மாத்திரமன்றி, எதிர்க்கட்சிக்கும் பொறுப்பு உள்ளது என்பதை அவர்கள் மறந்து விடக் கூடாது.

**மக்களின் சுமைகளை மறந்த நிலையில் அரசியல் அதிகாரத்துக்கான போட்டி!**



**ஐக்கிய மக்கள் சக்தியின் பங்காளிக் கட்சிகளிடையே தலைமைத்துவப் போட்டி! ஒருவரையொருவர் பகிரங்கமாகவே விமர்சிக்கும் வகையில் முரண்பாடுகள்!**

**பி.ஹர்ஷன்...**

---

# இந்திய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு அடித்தளமிட்டுள்ள மோடியின் ஐரோப்பிய விஜயம்

**கொரோனாவின் தாக்கம் குறைந்துள்ள நிலையில், பல்வேறு நாடுகளுடன் வர்த்தக உறவுகளை மேம்படுத்த இந்தியா முயற்சி மேற்கொண்டு வருகிறது. உக்ரைன்–ரஷ்ய போர் காரணமாக ஐரோப்பிய பொருளாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. இந்த நிலையில் பிரதமர் நரேந்திர மோடி ஐரோப்பாவுக்கு பயணம் மேற்கொண்டு திரும்பியுள்ளார்.**



இவ்விஜயத்தின் போது முதலில் அவர் ஜெர்மனி தலைநகர் பெர்லின் சென்றார். அங்கு அவர் அந்த நாட்டின் பிரதமர் ஒலாப் ஸ்கோல்ஸை சந்தித்து இரு தரப்பு பேச்சுவார்த்தை நடத்தினார். பின்னர் ஜெர்மனி பயணத்தை முடித்து கொண்ட பிரதமர் மோடி டென்மார்க் சென்றார்.

டென்மார்க்கில் இரண்டாவது, இந்தியா நோர்டிக் மாநாட்டில் மோடி பங்கேற்றார். இந்த மாநாட்டில் இந்தியப் பிரதமர் மோடியுடன் டென்மார்க், ஐஸ்லாந்து, பின்லாந்து, சுவீடன் மற்றும் நோர்வே ஆகிய நாடுகளின் பிரதமர்களும் பங்கேற்றனர்.

ஐரோப்பிய நாடுகளுக்கு மோடி சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த வேளையில், பிரதமர் நரேந்திர மோடி ஜெர்மனியில் சுமார் 30 வருடங்களுக்கு முன்னர் எடுத்துக் கொண்டு புகைப்படம் ஒன்று இணையத்தில் வைரலாகியது.

இந்தப் புகைப்படம் 1993 ஆம் ஆண்டு நரேந்திர மோடி அமெரிக்காவுக்குப் பயணம் செய்துவிட்டுத் திரும்பிய போது ஜெர்மனியின் பிராங்பேர்ட்டில் தங்கியிருந்தபோது எடுக்கப்பட்டதாகும்.

ஐரோப்பிய நாடுகளுடன் இந்தியாவின் நட்பு மேலும் வலுப்படுத்தப்படும் என்றும், கூடுதல் ஒத்துழைப்புத் திட்டங்களில் கவனம் செலுத்தப்படும் என்றும் பிரதமர் மோடி கூறியுள்ளார்.

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜெர்மன் சான்சலர் *Olaf Scholz* உடன் மோடி நடத்திய பேச்சுக்கள் மிகவும் பயனுள்ளதாக அமைந்ததாக இந்திய செய்திகள் தெரிவித்தன. இந்தியா – ஜெர்மனி இடையேயான கூட்டுக்குழு ஆலோசனைக் கூட்டம் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதில், ஜெர்மனியின் புதிய சான்சலர் *Olaf Scholz* பங்கேற்றார்.

ஜெர்மனி பயணத்தை முடித்துக் கொண்டு மோடி டென்மார்க் தலைநகர் கோபன்ஹேகனுக்கு சென்றார். அங்கு, அவர் அந்நாட்டுப் பிரதமர் *Mette Frederiksen* ஐ சந்தித்தார். முதல் முறையாக டென்மார்க் சென்ற நரேந்திர மோடி, இருதரப்பு ஆலோசனை மேற்கொண்டார். அங்கு நடைபெற்ற வர்த்தக தொழில் அதிபர்கள் கூட்டத்திலும், இந்திய வம்சாவளியினர் கலந்து கொண்ட கூட்டத்திலும் அவர் பங்கேற்றார்.

பேர்லினுக்கான மோடியின் பயணம், பிரதமர் ஸ்கோல்சுடன் விரிவான இருதரப்பு விவாதம் நடத்துவதற்கான வாய்ப்பாக அமைந்துள்ளது. இந்தியாவின் வெளிநாட்டு வர்த்தக ஒத்துழைப்பைப் பொறுத்தவரை இது முக்கிய சந்திப்பாகும். இந்தியா தனது பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்து கொள்வதற்கு மோடியின் இவ்விஜயம் பெரிதும் பயனளிக்குமென்பது நிட்சயம்.

2021 இல் இந்தியாவும், ஜேர்மனியும் தூதரக உறவுகள் அமைந்ததன் 70 ஆவது ஆண்டைக் கொண்டாடின. 2000 ஆம் ஆண்டு முதல் இருநாடுகளும் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேற்கொண்டுள்ளன. ஜெர்மனி பிரதமருடன் இரு தரப்புக்கும் பயன் விளைக்கும் பாதுகாப்பு, பிராந்திய மற்றும் உலக நிகழ்வுகள் பற்றி மோடி கருத்துகளைப் பரிமாறிக் கொண்டார்.

இந்தியா ஜெர்மனி இடையிலான பாதுகாப்பு கூட்டாண்மையின் முக்கிய தூண்களில் நீண்டகால வர்த்தக உறவுகள் ஒன்றாகும். இரு நாடுகளிலும், கொவிட் பெருந்தொற்றுக்கு பிந்திய பொருளாதார மீட்டுருவாக்க நடவடிக்கைகளுக்கு இவ்விஜயம் பெரிதும் வலுவூட்டுவதாக அமையும் என்கிறார்கள் பொருளாதார நிபுணர்கள்.

ஐரோப்பிய கண்டத்தில் 10 இலட்சத்துக்கும் அதிகமான இந்திய வம்சாவளியினர் வசித்து வருகின்றனர். ஜெர்மனியிலும் கணிசமான அளவு இந்தியர்கள் உள்ளனர். ஐரோப்பாவுடனான இந்திய உறவுகளுக்கு இந்திய வம்சாவளியினர் உறுதியான பங்களிப்பு வழங்கி வருகின்றனர். எனவே இந்தப் பயணத்தின் வாயிலாக ஐரோப்பாவுடனான உறவுக்கு மேலும் உரமூட்டியுள்ளார் மோடி.

பிரதமர் மோடி தனது ஐரோப்பிய பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பும்போது, பாரிசில் ஜனாதிபதி மக்ரோனை சந்தித்துப் பேசினார். ஜனாதிபதி மக்ரோன் மிக அண்மையில் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். முடிவுகள் அறிவிக்கப்பட்டு பத்து நாட்களுக்குள் மோடி தனது வாழ்த்தை நேரில் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய பிராந்தியம் பல சவால்கள் மற்றும் நெருக்கடிகளைச் சந்தித்து வரும் சமயத்தில் மோடியின் விஜயம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தியாவின் பொருளாதார அபிவிருத்தியில் அவரது இப்பயணம் மிகுந்த பலன் தருமென்பதே பொருளாதார வல்லுநர்களின் நம்பிக்கையாகும். இந்தியா தனது பங்கேற்பு நிகழ்ச்சிகள் மூலம், அமைதி மற்றும் முன்னேற்றத்துக்கான தனது இலட்சியத்துக்கு முக்கிய நண்பர்களாக ஐரோப்பிய நட்பு நாடுகளுடன் ஒத்துழைப்பை வலுப்படுத்திக் கொண்டு வருகின்றது.

இதேவேளை பிரதமர் மோடி தனது விஜயத்தின் பின்னர் ஜேர்மனியின் அரச தலைவருக்கு இதயப்பூர்வ நன்றியைத் தெரிவித்துக் கொண்டுள்ளார். இந்த ஆண்டில் மோடியின் முதல் வெளிநாட்டுப் பயணம், ஜெர்மனியில் இருந்து தான் தொடங்கியுள்ளது. இந்த ஆண்டில் வெளிநாட்டுத் தலைவருடனான அவரது முதல் தொலைபேசி உரையாடலும் ஜேர்மனிய அரச தலைவருடன் தான் நடைபெற்றது. இதுபோன்ற அனைத்து முதல் நடவடிக்கைகளும், இந்தியாவும் ஜெர்மனியும், முக்கியமான இந்த நட்புறவுக்கு எந்தளவு முக்கியத்துவம் அளிக்கின்றன என்பதையே எடுத்துக் காட்டுகின்றன.


ஜனநாயக நாடுகள் என்ற முறையில், இந்தியாவும் ஜேர்மனியும், பல்வேறு பொதுவான நற்பண்புகளைப் பகிர்ந்து கொண்டுள்ளன. இந்த நற்பண்புகள் மற்றும் பகிர்ந்து கொள்ளப்பட்ட நலன் அடிப்படையில், கடந்த பல ஆண்டுகளில் இரு நாடுகளுக்கிடையேயான இருதரப்பு நட்புறவு குறிப்பிடத்தக்க அளவு வளர்ச்சி அடைந்துள்ளது.

கொரோனாவுக்கு பிந்திய உலகில், மற்ற வளரும் பொருளாதார நாடுகளுடன் ஒப்பிடுகையில், இந்தியா வேகமான வளர்ச்சியை அடைந்து வருகிறது. உலகளாவிய மீட்பு நடவடிக்கைகளில் இந்தியா முக்கிய தூணாக திகழ்கிறது. அண்மையில், ஐக்கிய அரபு எமிரேட் மற்றும் அவுஸ்திரேலியாவுடன், குறுகிய காலத்தில் வர்த்தக ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்துடனும் இந்தியா தடையற்ற வர்த்தக வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக விரைவில் முன்னேற்றத்தை எட்ட உறுதி பூண்டுள்ளது. இந்தியாவின் திறன் பயிற்சி பெற்ற தொழிலாளர் மற்றும் வல்லுநர்கள், பல்வேறு நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பாற்றியுள்ளனர். இந்தியா – ஜெர்மனி இடையிலான விரிவான புலம்பெயர்தல் மற்றும் போக்குவரத்து ஒத்துழைப்பு ஒப்பந்தம், இரு நாடுகளுக்கும் இடையேயான செயல்பாடுகளுக்கு வகை செய்யும் என நம்பப்படுகின்றது.



ஜேர்மனியின் அரச தலைவருடன் பிரதமர் மோடி

**ஜேர்மனியின் அரச தலைவருடன் முக்கிய இருதரப்பு சந்திப்பு; இந்தியாவின் வர்த்தகத்துறை அபிவிருத்திக்கு அதிக வாய்ப்புகள்**



முப்பது வருடங்களுக்கு முன்னர் ஜேர்மனியில் மோடி எடுத்துக் கொண்ட புகைப்படம்.

**ஐரோப்பிய கண்டத்தில் 10 இலட்சத்துக்கும் அதிகமான இந்திய வம்சாவளியினர் வசித்து வருகின்றனர். ஜெர்மனியிலும் கணிசமான அளவு இந்தியர்கள் உள்ளனர். ஐரோப்பாவுடனான இந்திய உறவுகளுக்கு இந்திய வம்சாவளியினர் உறுதியான பங்களிப்பு வழங்கி வருகின்றனர்.**

**சாரங்கன்...**

**ஒன்பதாவது பாராளுமன்றத்தின் புதிய பிரதி சபாநாயகராக ரஞ்சித் சியம்பலாபிட்டிய மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். இதற்காக நடத்தப்பட்ட இரகசிய வாக்கெடுப்பில் அவருக்கு ஆதரவாக 148 வாக்குகள் பதிவு செய்யப்பட்டன.**



# அரசின் பெரும்பான்மைப் பலத்தை மீண்டும் உறுதிப்படுத்திய பிரதி சபாநாயகர் தெரிவு!

இதற்கமைய அவருக்கு எதிராகப் போட்டியிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிநிதி இம்தியாஸ் பாக்கீர் மாக்காரை விட 83 மேலதிக வாக்குகளைப் பெற்று பிரதி சபாநாயகரின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டது. இதன் மூலம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்கும் நிலையில் காணப்படுகிறது என்பது மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஆளும் பொதுஜன பெரமுனவின் பங்காளிக் கட்சியாகவிருந்த ஶ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட 11 கட்சிகள் அரசிலிருந்து வெளியேறி சுயாதீனமாகக் குழுவாகச் செயற்படத் தீர்மானித்திருந்தன. இத்தீர்மானத்துக்கு அமைய ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் வகித்த அனைத்துப் பதவிகளும் இராஜினாமா செய்யப்பட்டன.

இந்த அடிப்படையில் பிரதி சபாநாயகர் பதவியை வகித்த ரஞ்சித் சியம்



பலாபிட்டியவும் தனது பதவியை இராஜினாமா செய்திருந்தார்.

தனது இராஜினாமா குறித்த அறிவிப்பை எழுத்து மூலம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அவர் அனுப்பி வைத்திருந்தார். இருந்த போதும் ஜனாதிபதி அதனை ஆரம்பத்தில் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஜனாதிபதியின் கோரிக்கைக்கு அமைய ஏப்ரல் 30 ஆம் திகதி வரை குறித்த பதவியில் தான் தொடர்வதாகவும், மே 4 ஆம் திகதி புதியவரைத் தெரிவு செய்யுமாறும் ரஞ்சித் சியம்பலாபிட்டிய சபையில் அறிவித்திருந்தார்.

இந்த நிலையில், புதிய பிரதி சபாநாயகர் தெரிவு குறித்து மீண்டும் கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தில் கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றது. ஜனாதிபதியின் நிலைப்பாடு சபாநாயகருக்கு அறிவிக்கப்படவில்லையென ஆரம்பத்தில் கூறப்பட்ட போதும், தனது கடிதத்தை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டார் என்பதற்கான பதில் கிடைத்துள்ளது என ரஞ்சித் சியம்பலாபிட்டிய புதன்கிழமை பிற்பகலே சபைக்கு அறிவித்து விட்டார்.

இதற்கமைய கடந்த வியாழக்கிழமை பிரதி சபாநாயகரைத் தெரிவு செய்வதற்கான அழைப்பை சபாநாயகர் சபையில் விடுத்தார். இதன் போது எதிர்க்கட்சியில் உள்ள சுயாதீனக் குழுவினர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவின் பெயரை மீண்டும் பிரதி சபாநாயகர் பதவிக்கு முன்மொழிந்தனர்.

நிமல் சிறிபால டி.சில்வா இதனை முன்மொழிய, கலாநிதி சுசில் பிரேமஜயந்த வழிமொழிந்தார். இதற்கு பொதுஜன பெரமுன ஆதரவு வழங்குவதாக அரசாங்கம் சார்பில் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அறிவித்தார்.

எனினும், மறுபக்கத்தில் பிரதி சபாநாயகர் பதவிக்கு தமது வேட்பாளரை நிறுத்துவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார அறிவித்தார். இம்தியாஸ் பாக்கீர் மாக்காரின் பெரை அவர் முன்மொழிய, லக்ஷ்மன் கிரியல்ல அதனை வழிமொழிந்தார்.

பிரதி சபாநாயகர் தெரிவுக்கு இரு வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டமையால் இரகசிய வாக்கெடுப்பை நடத்துவதற்கு சபாநாயகர் பணித்தார். இதற்கமைய நடத்தப்பட்ட இரகசிய வாக்கெடுப்பில் ரஞ்சித் சியம்பலாபிட்டியவுக்கு ஆதரவாக 148 வாக்குகளும், இம்தியாஸ் பாக்கீர் மாக்காருக்கு ஆதரவாக 65 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

மூன்று வாக்குகள் செல்லுபடியற்றவையாக அமைந்ததுடன், 8 பேர் வாக்கெடுப்பின் போது சபையில் சமுமகளித்திருக்கவில்லை. இதற்கமைய ரஞ்சித் சியம்பலாபிட்டிய மீண்டும் பிரதி சபாநாயகர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்த வாக்கெடுப்பின் மூலம் அரசாங்கம் பாராளுமன்றத்தில் மீண்டும் பலமான நிலையில் காணப்படுகிறது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சியினர் தமது பலத்தைக் காண்பிப்பதற்கு பிரயத்தனங்களை மேற்கொண்டிருந்தாலும் இது பலன் தராமலேயே போய் விட்டது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி பிரதி சபாநாயகர் தெரிவில் ரஞ்சித் சியம்பலாபிட்டியவுக்கு ஆதரவு வழங்குவதாக உறுதியளித்த போதும், இறுதி நேரத்தில் தமது வேட்பாளரை நிறுத்தியதால் அவர்கள் ஏற்கனவே வழங்கிய உறுதிமொழியை மீறியிருப்பதாக சுயாதீனக் குழுவின் சார்பில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் விமல் வீரவன்ச குற்றஞ்சாட்டினார்.

அதேநேரம், அரசாங்கத்திலிருந்து விலகி சகல பதவிகளையும் இராஜினாமா செய்வது என்ற கட்சியின் முடிவுக்கு அமையவே பிரதி சபாநாயகர் பதவியிலிருந்து விலகிக் கொள்ள தான் தீர்மானித்ததாக மீண்டும் தெரிவு செய்யப்பட்ட பின்னர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

அது மாத்திரமன்றி எதிரணி சார்பில் தன்னைத் தெரிவு செய்தமை குறித்து மகிழ்ச்சியடைவதாகவும் அவர் கூறினார்.

## வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

## அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை இலகுவாகவே தோற்கடிக்கப்பட்டு விடுமென்பது உறுதி!



இது ஒருபுறமிருக்கையில் நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் ரீதியான குழப்பங்களுக்குத் தீர்வு காணும் நோக்கில் சர்வகட்சி அரசாங்கமொன்று அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், அரசாங்கத்துக்குப் பெரும்பான்மை உள்ளது என்பதால், தாமே தொடர்ந்தும் அரசை முன்னெடுத்துச் செல்வோம் எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறியிருந்தார்.

இவ்வாறான பின்னணியில் சுயாதீனமாகச் செயற்படுவதாகக் கூறும் குழுவினரின் ஆதரவுடன் அரசாங்கம் பெரும்பான்மையை நிரூபித்துள்ளமை உறுதியாகியுள்ளது. பாராளுமன்றத்தில் எந்தத் தரப்பினராவது 113 இற்கும் அதிகமான ஆதரவைக் காண்பித்தால் பதவி விலகத் தயார் எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறியிருந்த நிலையில், அரசாங்கமே தற்பொழுது பெரும்பான்மையை நிரூபித்துள்ளது.

மறுபக்கத்தில், பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கியதாக சர்வ கட்சி அரசாங்கமொன்றை அமைப்பதற்குத் தயார் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறியிருந்தார். இது தொடர்பில் கலந்துரையாடுவதற்கு கடந்த வாரத்திலும் ஜனாதிபதி அனைத்துக் கட்சிக்கும் அழைப்பு விடுத்திருந்த போதிலும், சுதந்திரக் கட்சி, தேசிய சுதந்திர முன்னணி மற்றும் பிவித்துர ஹெல உறுமய உள்ளிட்ட சுயாதீனமாகச் செயற்படும் 10 கட்சிகளின் பிரதிநிதிகள் மாத்திரமே இக்கூட்டத்துக்குச் சென்றிருந்தனர்.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஏனைய தரப்பினரையும் இதில் இணைப்பதற்கான பேச்சக்களை நடத்தும் பொறுப்பு உதய கம்மன்பில உள்ளிட்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இருந்த போதும் பிரதான எதிர்க் கட்சியோ அல்லது தேசிய மக்கள் கட்சியோ எவரும் சர்வகட்சி அரசாங்கத்துக்குத் தயாராகவில்லை. அது மாத்திரமன்றி தற்பொழுது நாடு எதிர்கொண்டிருக்கும் பிரச்சினைக்குத் தீர்வு காணக் கூடிய எவ்வித விட்டுக்கொடுப்புக்கும் எதிர்க்கட்சி தயாராகவில்லையென்பது இதன் மூலம் தெளிவாகிறது.

இது இவ்விதமிருக்க அரசாங்கத்தின் மீதும், ஜனாதிபதி மீதும் நம்பிக்கையில்லையெனக் கூறி இருவேறு நம்பிக்கையில்லா தீர்மானங்களை பிரதான எதிர்க்கட்சி சபாநாயகரிடம் கையளித்துள்ளது. இதில் ஏறத்தாழ 50 உறுப்பினர்களே கையொப்பமிட்டுள்ளனர்.

## “ பாராளுமன்றத்தில் தமக்கு பலமுள்ளதென நிரூபிப்பதற்கு எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மேற்கொண்ட முயற்சிகள் ஒரே நாளில் படுதோல்வி! ”

விடயத்தில் எதிர்க்கட்சிக்குள் இருக்கும் தரப்பினருக்கிடையில் மாற்றுக் கருத்துக்கள் நிலவுவதாகவே தெரியவருகிறது. அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை விரைவில் ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக சபாநாயகர் கூறியிருந்தார். இருந்தபோதும் ஜனாதிபதிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையைக் கோரியிருப்பதாகவும் சபாநாயகர், கட்சிகளின் தலைவர்களுக்குத் தெரிவித்தர்ர.



பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளுக்கு அமைய ஜனாதிபதிக்கு எதிராக விசேட பிரேரணையொன்றையே கொண்டு வர முடியும் அல்லது அவருக்கு எதிராக குற்றப்பிரேரணை (இம்பீச்மென்ட்) கொண்டு வர முடியும்.

இருந்தாலும் இதற்கு குறிப்பிடப்பட்ட காரணிகள் காணப்பட வேண்டும் என அரசியலமைப்புக் குறிப்பிடுகிறது. இவ்வாறான நிலையில் ஜனாதிபதிக்கு எதிராக விசேட பிரேரணையொன்றைக் கொண்டு வருவதாகவும், இதில் ஜனாதிபதி மீது பாராளுமன்றத்துக்கு நம்பிக்கை இல்லாமல் போயுள்ளது என்ற விடயத்தைக் கூறியிருப்பதாகவும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியிருந்தனர்.

இருந்தபோதும் இது விடயத்தில் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்று உரிய நடவடிக்கை எடுப்பேன் என்ற உறுதிமொழியை சபாநாயகர் எதிர்க்கட்சியினருக்கு வழங்கியுள்ளார்.

பிரதி சபாநாயகர் தெரிவு விடயத்தில் அரசாங்கத்துக்குக் காணப்படும் பெரும்பான்மை மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டிருப்பதால் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை இலகுவில் தோற்கடிக்கப்பட்டு விடும் என அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

எதுவாக இருந்தாலும் மக்கள் எதிர்கொள்ளும் அன்றாடப் பிரச்சினைக்கு அரசியல்வாதிகள் தீர்வு வழங்க வேண்டும் என்பதே பலருடைய வேண்டுகோளாக உள்ளது. பாராளுமன்றத்தில் உள்ள அரசியல்வாதிகள் தமது பலத்தை நிரூபிப்பதற்கு எடுக்கும் முற்சிகளைக் கைவிட்டு மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். இது இவ்விதமிருக்க, நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாண அரசாங்கம் முழுமையான முயற்சிகளை மேற்கொண்டிருப்பதாக நிதி அமைச்சர் அலி சப்ரி பாராளுமன்றத்தில் தெரிவித்தார். தான் உள்ளிட்ட அரசாங்கப் பிரதிநிதிகள் சர்வதேச நாணய நிதியத்துடன் நடத்தியுள்ள பேச்சுவார்த்தைகள், அவற்றின் முன்னேற்றம் தொடர்பில் அமைச்சர் பாராளுமன்றத்துக்கு விளக்கமாகக் கூறியிருந்தார். அமைச்சரின் விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டு கடந்த மூன்று நாட்கள் பாராளுமன்றத்தில் விவாதம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

**பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி பிரதி சபாநாயகர் தெரிவில் ரஞ்சித் சியம்பலாபிட்டியவுக்கு ஆதரவு வழங்குவதாக ஏற்கனவே உறுதியளித்திருந்தது. ஆனால் இறுதி நேரத்தில் தமது வேட்பாளரை (இம்தியாஸ் பாக்கீர் மாக்கார்) நிறுத்தியதால், அவர்கள் ஏற்கனவே வழங்கிய உறுதிமொழியை மீறிவிட்டதாக குற்றச்சாட்டு!**

ஓர் அலசல் பார்வை:

# பெருந்தோட்டப் பாதை அபிவிருத்தி அன்றும் இன்றும்

பெருந்தோட்டப் பகுதிகளின் அபிவிருத்திக்காக பல்வேறு தரப்புகளிடம் இருந்து கிடைக்கும் நிதி முறையாகவோ முழுமையாகவோ பயன்படுத்துவது கிடையாது என்ற குற்றச்சாட்டு நெடுநாளாகவே இருக்கிறது.

குறிப்பாக பெருந்தோட்டப் பகுதிகளுக்குச் செல்லும் பாதைகளைச் சீரமைப்பதில் இடம்பெறும் குளறுபடிகள் ஏராளம். வழமையாக தோட்டப் பாதைகளை தோட்ட நிர்வாகங்கள்தான் பராமரிக்கும். இது ஆங்கிலேயர் காலத்திலிருந்து நிலவிவரும் சங்கதி.

இதன் பின்னர் மத்திய மலைநாட்டில் கோப்பிப் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் நோக்கத்தில் இரும்புப் பாதைகளை அமைக்கும் எண்ணமும் அவர்களுக்கு வந்தது. இதற்காக வேண்டியே 1820களில் தென் இந்தியாவிலிருந்து இந்திய வம்சாவளித் தமிழர்களை இங்கு கொண்டு வரவேண்டி நேர்ந்தது.

இதேநேரம் ஒல்லாந்தர் காலத்திலேயே இந்திய தமிழர்கள் இங்கு பணியாற்ற அழைத்துவரப்பட்டிருக்கலாம் என்றும் நம்பப்படுகின்றது. வாசனைத் திரவிய வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த ஒல்லாந்தருக்கு இவர்கள் ஒத்தாசைப் புரிந்திருக்கலாம் என்ற கருதுகோளும் இருக்கவே செய்கின்றது. எது எப்படியாயினும் பெருந்தொகையிலான இந்திய வம்சாவளித் தமிழர்கள் இங்கு வரவும் நாடளாவிய ரீதியில் போக்குவரத்து வசதிகள் செய்யப்படவும் காரணமாக இருந்தவர்கள் பிரித்தானியரே என்பதில் ஐயம் இல்லை. ஆங்கிலேயர் ஏறக்குறைய 3000 அடிக்கு மேலுள்ள மலைப் பிரதேசங்களில் தேயிலைப் பயிர்ச் செய்கையை ஆரம்பிக்கக் காரணமாக இருந்தவர்கள் இந்திய வம்சாவளித் தமிழர்களே.

பெருங்காடுகளாகவும் கொடிய மிருகங்கள் வசிக்கும் பிரதேசங்களாவும் காணப்பட்ட மலைநாட்டை வளம் கொழிக்கும் பூமியாக மாற்றி அந்நியச் செலாவணியை அள்ளித்தரும் பொருளாதார தோட்டமாக உருவாக்கிய அவர்களே.

காலக்கிரமத்தில் தோட்டத் தொழிற்சாலை, தோட்ட அதிகாரிகளின் வசிப்பிடங்கள் வரை தார்ப்பாதை போடப்பட்டன. ஆனாலும் பெரும்பாலான தோட்டப் பாதைகள் பிரதான பாதைகள் இணைப்பு வரை மண்பாதை அடிக்கடி பழுதுப்பார்க்கப்பட்டும் செப்பனிடப்பட்டும் வந்ததால் பொதுவாக அது போக்குவரத்துக்கு உகந்ததாகவே அமைந்தன. இதற்காக பெருந்தொகை பணம் செலவிடப்பட்டது.

ஆனால் ஆங்கிலேய நிர்வாகத்துக்கு எதிரான முழக்கங்கள் சுதந்திரத்துக்கு பின் அதிகரிக்கப்பட்டது. ஆங்கிலேய நிர்வாகம் சிறுகச்சிறுக தோட்ட அபிவிருத்தியில் தமது கவனத்தை குறைக்க ஆரம்பித்தது. 1970களில் தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டன. எனினும் தோட்டப் பாதை அபிவிருத்திக் குறித்துப் பெரிதும் கவனம் செலுத்தவில்லை. 1992இல் மீண்டும் பெருந்தோட்டங்கள் தனியார் கம்பனிகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டது. ஆனால் ஒருசில தோட்ட நிர்வாகங்களைத் தவிர அநேகமானவை தோட்டப் பாதைகள் பற்றி கவனம் செலுத்தவில்லை. சில தோட்ட நிர்வாகங்கள் தோட்டப் பாதைகளைச் சிறப்பாக சீரமைத்துள்ளதுடன் அதனூடாக பிரவேசிக்கும் தனியார் வாகனங்களுக்கு கட்டணம் அறவிடுவதும் குறிப்பிடத்தக்கது.





தற்போது பெருந்தோட்டப் பாதைகளின் பொதுவான நிலை பற்றிய ஆய்வு என்ன சொல்கிறதாம். பல தோட்டங்களின் பாதைகள் பழுதடைந்து காணப்படுகின்றன. பல தோட்டங்களுக்கு வாகனங்கள் செல்ல போக்குவரத்து வசதிகளே இல்லை. குன்றும் குழியுமாக சிதிலடைந்து காணப்படும் தோட்டப்பாதைகளில் தனியார் வாகனங்களைக் கூலிக்கு அமர்த்துவதற்காக பெருமளவு பணம் செலவிட வேண்டியுள்ளது.

போக்குவரத்து வசதிகள் இல்லாத காரணத்தால் இன்றும் கூட பல தோட்டங்களில் மக்கள் தலைச்சுமையோடு கால் நடையாக செல்ல வேண்டியுள்ளது.

2006ஆம் ஆண்டு பெருந்தோட்ட மக்கள் சமூக அபிவிருத்திக்காக தேசிய நடவடிக்கை திட்டத் தயாரிப்பிற்கான ஆய்வின்போது பெருந்தோட்டப் பிரதேசங்களில் 8000 கிலோமீட்டர் பாதைகளும் 2000 கிலோமீட்டர் தோட்ட இணைப்புப் பாதைகளும் புனரமைக்கப்பட வேண்டியுள்ளதாக இனம் காணப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அண்மைக்காலங்களில் மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகளுக்கூடாக சில இடங்களில் தோட்டப் பாதைகளின் சீரமைப்பு இடம் பெற்றுள்ளது. ஆனால் இங்கும் ஏகப்பட்ட குளறுபடிகள் இடம் பெறுவதாக தெரிகின்றது. ஒதுக்கப்பட்ட பணம் செலவழிக்கப்பட்டும் பூர்த்தியாகாத பாதைகள், தரக்குறைவான பாதை நிர்மாணிப்புகள், சீர்செய்யப்பட்டு சில

அதிகமாக பயன் படுத்தாத பாதைகளைக்கூட புனரமைத்துக் கைவரிசை காட்டப்பட்டுள்ளதாக ஊடகச் செய்திகள் உறுதிப்படுத்துகின்றன.

இன்று கொங்கிறீட் பாதைகள் அமைக்கப்படுவதே ஒரு முறைமை ஆகிவிட்டது. தோட்டப் பகுதிகளிலும் இம்முறைமையே உள்வாங்கப் படுகின்றது.





மாதங்களுக்குள்ளேயே பழையபடி குன்றும் குழியுமாக விழிபிதுங்கும் பாதைகள் என்று குறைபாடுகள். தோட்டப் பாதைகளை புனரமைப்புச் செய்வதில் பல்வேறு மோசடிகள் இடம்பெறுவதாகவே மக்கள் விசன ப்படுகின்றார்கள். சில தோட்டங்களில் மக்கள் நெடுஞ்சாலை அமைப்பதில் கூட மோசடிகள் இடம் பெறுவதும் அவை கண்டுக் கொள்ளப்படாமலே விடப்படுவதும் சாதாரணம். இனி பெருந்தோட்டப் பகுதிகளைப் பற்றிச் சொல்லவா வேண்டும். தோட்ட மக்கள் இது பற்றிக் கவனம் செலுத்துமளவுக்கு கரிசனை கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. அதை ஆராயக்கூடிய அறிவும் நேரமும் அவர்களுக்கு இல்லை. பாதை வசதி இல்லாவிட்டால் பலமாக கோஷமிடுவார்கள். பாதைகள் அமைக்கப்படும் போது அவதானம் செலுத்த நினைப்பது இல்லை. மீண்டும் குறுகிய காலத்தில் பழுதாகிப் போனால் திரும்பவும் குறைகூறுவார்கள். இடைக்காலத்தில் எதனையும் கண்டு கொள்வதில்லை.

இதுவரை காலமும் தோட்டக் கட்டமைப்புக்குள் இருந்த பாதை புனரமைப்பு பணி இனி பிரதேச சபைகளின் முழு பங்களிப்புடன் இடம் பெற கடந்த ஆட்சியின்போது பிரதேசசபை சட்ட மூலத்தில் திருத்தம் ஒன்று கொண்டுவரப் பட்டது. இதன் மூலம் பிரதேச சபைக்கூடான வரப்பிரசாதங்கள் பெருந்தோட்ட பகுதிகளை சென்றடைவதில் காணப்பட்ட சட்டரீதியிலான தடைகள் நீக்கப்பட்டுள்ளன.

எனவே இனியும் தோட்ட நிர்வாகங்களை குறைக்கூறிக் கொண்டு இருக்க முடியாது. தேசிய ரீதியில் விரைவு நெடுஞ்சாலைகள் அமைக்கப்படுவது அவசியமானதே. அதேபோன்று பெருந்தோட்டப் பகுதி அபிவிருத்திக்காக தோட்டப் பாதைகளை சீரமைப்பதும் முக்கியமானதாகும்.

பன். பாலா ...

# உணவுக்காக காட்டுயிர்களை வேட்டையாட அனுமதி வேண்டும்!

மலையக பகுதிகளில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் காடுகளை அழித்து பாதைகளை அமைக்கும் போது ஓடைகளுக்கு குறுக்காக சிறிய பாலங்களை அமைத்தனர். இவற்றை போக்குகள் என அழைத்தனர் இவற்றுக்கு பயன்படுத்தப்பட்டுள்ள கருங்கற் பாறைகளை யானைகளால் கூட தூக்கமுடியாத அளவு அளவில் பெருத்தவை.

இன்றும் மலையக பெருந்தோட்ட பாதைகளில் இந்த போக்குகள் உள்ளன இவற்றில் பஸ்சேவைகளும் நடைபெறுகின்றன. அந்த அளவு உறுதி மிக்கது. இயந்திரங்கள் இன்றி இவ்வளவு பெரிய பாறைகளை எவ்வாறு தூக்கினர்? பூதங்களின் துணையுடன் அமைத்தார்களா? ஆச்சரியம் தான்!

இவற்றை அமைத்தவர்கள் இந்திய வம்சாவளித் தமிழர்கள். இவர்கள் நல்ல பலசாலிகளாக இருந்துள்ளனர். வெள்ளைக்கார துரைமார்களின் குதிரைகள் கட்டுப்பாடை இழந்து ஓடியபோது குறுக்கே மறித்து தனது கைகளால் நிறுத்தியுள்ளனர்.

இப்படி அசுர பலம்படைத்தவர்களாக இவர்கள் இருந்துள்ளனர். ஒரு மூட்டை சீமை உரத்தை மலை உச்சிக்கு தலையில் சுமந்து சென்றுள்ளனர்.



அவர்களின் வாரிசுகளுக்கு இந்த உடல் உரம் இல்லாதுபோனது ஏன் என்ற கேள்வி எழுகிறது அல்லவா? எமது உணவு முறைதான் காரணம் என்று சொல்லலாம். அன்று அவர்கள் உண்ட உணவு வகைகளும் அளவும் இன்று நாம் உண்ணும் உணவிலிருந்து முற்றிலும் மாறுப்பட்டவை.

அன்று குரக்கன், மொச்சை, மாசி, பருப்பு வகைகள், கருவாடு, முட்டை என்பன தினசரி அவர்கள் உணவில் இருந்துள்ளது. ஒரு கொத்து அரிசி சோறும் ஒரு கோழியும் சாப்பிட்டவர்களும் இருந்துள்ளனர்.

வீடுகள் தோறும் கோழி வளர்த்தனர். ஆடுகளையும் வளர்த்தனர். இவை வியாபார நோக்கதுடன் அல்ல. தினமும் மாமிச உணவுகளையும் உண்டு வந்தனர். இன்று நாம் உண்ணும் உணவு தரத்திலும் அளவிலும் குறைவானது. சத்து குறைவானது. சத்தான உணவு செலவு மிக்கது. அன்று போதை பழக்கம் இருக்கவில்லை.

கள்ளு, சாராயம் இருந்தாலும் வியாதி அளவில் காணப்படவில்லை. உணவுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. ஆங்கிலேயர் ஆட்சிக்கு பிற்பட்ட காலப்பகுதியில் மலையக நகர் பகுதிகளில் மதுக் கடைகள் வந்தன. எம்மவர்கள் அரசியலுக்கு வந்ததும் தோட்டப் பகுதிகளில் தோட்ட குடியிருப்புகளுக்கு மத்தியிலும் மதுக் கடைகள் வந்தன. மதுபாவனை உணவு முறையில் மாற்றங்களை ஏற்படுத்தியது.

வீட்டுக்கு ஒரு ஆட்டை அடித்து சமைத்த மீதியை உப்பிட்டு அடுப்புக்கு மேல் கட்டி தொங்கவிட்டு விடுவர். தேவைப்படும் போதுஅதில்தேவையான அளவு எடுத்து சமைப்பர். ஆட்டுக்கால் சூப்பு, ஆட்டு இரத்த பொரியல், ஆட்டு குடல் பால்கறி என எத்தனையோ விதமான இறைச்சி சமையல் முறைகள் வழக்கில் இருந்தன.

ஆட்டு இரத்தத்தில் சின்ன வெங்காயம், குண்டு கொச்சிக்காய் போட்டு பொரித்து எடுத்து சோற்றுடன் சிறு பராயத்தில் சாப்பிட்டிருக்கிறேன். ஆடு வெட்ட அன்று அனுமதி தேவையில்லை. வெள்ளைக்காரர் நிர்வாகம் கண்டு கொள்வதில்லை.

ஆடுகள் மட்டும் அல்ல; மாடுகளை அறுத்தும் பங்கிட்டு உண்டு வந்தனர். மாடுகளை வெட்டும் இடங்கள் மாடுவெட்டு பள்ளம் என அழைக்கப்பட்டது.

இன்றும் மலையகத்த்தில் பல தோட்டங்களில் மாடு வெட்டு பள்ளங்கள் உள்ளன. கண்டி, கலஹா குறூப் அப்பர் கலஹாவில் ஓரிடம் பழைய மாடு வெட்டு பள்ளம் என அழைக்கப்படுகின்றது. இவற்றுக்கு மேலாக காட்டு விலங்குகளை வேட்டையாடி உண்டனர். வீடுகள் தோறும் வேட்டை நாய்கள் வளர்த்தனர்.

தோட்டங்கள் தோறும் வேட்டைக்காரர்கள் இருந்தனர். வேட்டை இறைச்சியை தமது தேவைபோக குறைந்த விலைக்கு விற்றனர்.

மான், மரை, முயல், முள்ளம்பன்றி, பன்றி, அழுங்கு போன்ற காட்டு விலங்குகளை வேட்டையாடி தனது இறைச்சித் தேவையை பூர்த்தி செய்தனர். இவை பயிர்களை அழிப்பதால் தோட்ட நிர்வாகங்கள் வேட்டையாடுவதை கண்டு கொள்வதில்லை.



எனவே தொழிலாளர்கள் அனுமதி பெற்ற துப்பாக்கிகளை வைத்திருந்தனர். குறைந்தபட்சம் 30 குடும்பங்களில் ஒருவரிடம் துப்பாக்கி இருந்தது.

1970, 1971 ஜே.வி.பி. கிளர்ச்சி காலப்பகுதியில் இத் துப்பாக்கிகளை அரசு மீளப்பெற்றது. எனவே வேட்டை நாய்களை துணையாகக் கொன்டு விலங்கு வேட்டையில் ஈடுபட்டனர். எனினும் வேட்டையாடுவது படிப்படியாக குறைந்து வந்தது.

வேட்டையாடும் காட்டு விலங்குகளின் மாமிசத்தை நோய்களுக்கான இயற்கை மருந்தாக பயன்படுத்தினர். முள்ளம் பன்றியின் குடல் பாகங்களை வெயிலில் காயவைத்து தீராத வயிற்று வலிக்கு சீரகத்துடன் சேர்த்து அவித்து, அந்த அவித்த நீரை குடித்தனர். காட்டுப் பன்றிகளின் மாமிசத்தை வெளி மற்றும் உள் மூல நோய்களுக்கான மருந்தாகவும் பயன் படுத்தினர்.



வெளவால் இறைச்சியை தீராத சளி மற்றும் காச நோய்களுக்கு மருந்தாகவும் உண்டனர். முள்ளம் பன்றி ஒரு நாளில் விடிய முன் 108 வகையான மரவேர்களை உண்பதாகவும் அது மருத்துவ குணம் உடையதாகவும் கருதினர்.

காய்ச்சல் என்றால் நண்டு இரசம், வெடக்கோழி இரசம். இப்படி மாமிசத்தை மருந்தாக பயன்படுத்தி மாமிச பிரியர்களாக நல்ல கட்டு மஸ்தான உடலோடு ஆரோக்கியமாக வாழ்ந்தனர்.

மரை மற்றும் மாட்டு இறைச்சியை வெள்ளைப் பூண்டுடன் சேர்த்து சமைத்து தேன் கலந்து சாடிகளில் இட்டு உணவுடன் சேர்த்து உண்டு வந்தனர்.

இவ்வாறு தொடர்ந்து உண்டு வந்தால் ஆஸ்மா குணமடையும் என்பது இவர்களின் நப்பிக்கையாக இருந்தது. எம்மவர் இறைச்சி வகைகளை அதிகமாக விரும்பி உண்ண ஆங்கிலேயர் ஊக்குவித்தனர்.

தோட்டங்கள் தோறும் பன்றிகளை வளர்த்தனர். இந்தப் பன்றிகளுக்கு உணவாக வற்றாளைக் கிழங்குகளை பயிர்செய்தனர். ஞாயிற்றுக் கிழமைகளில் பன்றிகளை அறுத்து ஒரு வீட்டுக்கு 5 இறாத்தல் வீதம் கொடுப்பர். இப்படி பெற்ற இறைச்சியை அடுத்த வாரம் வரை பயன்படுத்த அடுப்புக்கு மேலாக கட்டி உலர்த்தி பழுதடையாது பார்த்துக் கொள்வது அன்றைய வழக்கம். ஏனெனில் அப்போது பிரிட்ஜ் கிடையாது!

கண்டி, புப்புரஸ்ச டெல்டா தோட்டப் பகுதிகளில் மாமிசத்தை உலர்த்தி பக்குவப்படுத்துவது சுகந்திரத்திக்கு பின்பும் வழக்கில் இருந்துள்ளது. இன்றும் எம்மவர் இறைச்சி வகைகளை விரும்பி உண்டு வந்தாலும் மாமிச வகைகள் முன்னரைப் போல் தாராளமாகக் கிடைப்பதில்லை.

தற்போது காட்டு விலங்குகளை வேட்டையாட முடியாது தடை உள்ளது. இச் சட்டங்கள் எமது நாட்டில் உருவாக்கப்பட்டவை அல்ல. இவ்விலங்கு வதை சட்டம் எந்த வகையிலும் எமக்கு பொருந்தாது. காட்டு விலங்குகளை வேட்டையாடுவதை தடை செய்த பின் இந்த இயற்கை சமநிலை மாறி காட்டு விலங்குகளின் பெருக்க அசுர வேகத்தில் உயர்கிறது. போதிய உணவு கிடைக்காததால் மக்கள் வாழும் பகுதிகளுக்கு வந்து விவசாய பயிர்களை நாசம் செய்து வருகின்றன.

இதனால் விவசாயிகள் பாதிப்படைகின்றனர். பல தோட்டப் பகுதிகளில் இரவுவேளை மட்டுமல்லாமலும் பகலில் கூட நடமாட அச்சமாக உள்ளது. காட்டுப் பன்றிகள் கூட்டம் கூட்டமாக வீட்டு வளவுக்குள் வருகின்றன.

விவசாயத்தை நாசம் செய்யும் இந்த காட்டு விலங்குகளை ஒருவர் வேட்டையாடி அவற்றின் தோலை உரிக்கு முன்னரேயே அக்கம்பக்கத்தவர் பொலிசுக்குத் தகவல்கொடுத்து இதை செய்யும் இந் நபர்கள் கசிப்பு காச்சுபவரையும் கள்ளசாராயம் விற்பவரையும் காட்டி கொடுக்க முன்வருவதில்லை.

காட்டு விலங்குகளை வேடையாடி உண்ண அரசு அனுமதிக்க வேண்டும். காட்டு விலங்குகளை வேட்டையாடி உடலுக்கு தேவையான புரதசத்தை இலகுவாக பெற்றுக்கொள்ள முடியும். தற்போது கோழி ஒரு கிலோ 900/= ரூபா, ஆட்டிறச்சி 2500/=, மாட்டிறச்சி 1500/=, முட்டை 30/= பருப்புவகை எல்லாம் 600/= அதிகம்.

இன்றைய சூழலில் விவசாயத்தை நாசம் செய்து மனிதனுக்கு அச்சுறுத்தலாக விளங்கும் மிருகங்களை வேட்டையாடி உணவாகக் கொள்ளும் வகையில் அரசு தன் அலுங்குப் பிடியைத் தளர்த்த வேண்டும். உணவுப் பஞ்சம் ஒன்றையும் போஷாக்கு குறைபாட்டையும் நாடு எதிர்கொண்டிருக்கிறது. இதன் அர்த்தம் சிறுத்தைகளை வேட்டையாட வேண்டும் என்பதல்ல. ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்கு மாத்திரம் தளர்வை அனுமதிக்கலாம். தொழிலாளர்கள் ஊட்டத்துடன் இருந்தால் தான் அவர்களால் ஊக்கமுடன் தொழில் செய்ய முடியும். உணவுக்காக காட்டுயிர்களை வேட்டையாட அனுமதி வேண்டும்!

தெல்தோட்ட ஆர். நவராஜா ...

# கட்சி, இன பேதங்களுக்கு அப்பாலான அரசியல் கலாசாரமே இன்றைய தேவை

கருணாகரன் ...

"போரிலும் தேர்தலிலும் வெற்றியைப் பெற்றவர்கள் ஆட்சியில் நெருக்கடியைச் சந்திக்க வேண்டியிருப்பது ஏன்?" என்று கேட்கிறார் நண்பர் ஒருவர். இந்தக் கேள்விதான் இன்று பலரிடத்திலும் எழுந்திருக்கிறது. இதற்கான பதிலைக் காண்பதாக இருந்தால், "எங்கே தவறு நடந்திருக்கிறது? என்னென்ன தவறுகள் நடந்துள்ளன" என்று பார்க்க வேண்டும்.

நடந்த, நடந்து கொண்டிருக்கும் தவறுகளைப் பற்றியும் அவற்றுக்குக் காரணமான, பொறுப்பானவர்களைப் பற்றியும் பலரும் பல்வேறு விதமான வியாக்கியானங்களைச் சொல்கிறார்கள். அவற்றில் சரியும் உண்டு. தவறும் உண்டு. இது ஒரு பக்கம் என்றால் அடுத்த பக்கம், இந்தத் தவறுகளைத் திருத்த முடியாதா? இவற்றுக்குப் பரிகாரம் காண முடியாதா? ஏற்பட்டிருக்கும் நெருக்கடிக்குத் தீர்வென்ன? அதை எப்படிக் காண்பது? எப்போது காண்பது? என்ற விடயங்கள்.

இந்த இரண்டாவது பக்கத்தையே இன்று பலரும் எதிர்நோக்குகின்றனர்.

ஏனென்றால் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி என்பது நேரடியாகவே வாழ்க்கையைப் பாதிக்கிறது. அது வயிற்றுப் பிரச்சினையாயிருக்கிறது. எதிர்காலத்தைக் குறித்த பிரச்சினையாக உள்ளது.

பொருளாதாரம் சரிந்து விட்டால், முழு அடியாதாரமும் சரிந்து விடும். என்பதால்தான் எல்லாவற்றுக்கும் ஆதாரமான பொருளாதாரத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்கிறார்கள். தனி மனிதரில் இருந்து நாடுகள் வரையில் முதற் கவனம் கொள்வது பொருளாதாரத்திலலேயே. பொருளாதாரத்தில் கவனக் குறைவாக இருக்கும் நபர்களிலிருந்து நாடுகள் வரையில் மிகப் பெரிய நெருக்கடியை – துயரத்தை – அவலத்தையே சந்திக்க வேண்டும். இன்று இலங்கையில் ஏற்பட்டிருப்பது அப்படியான ஒரு கவனப் பிழையான சங்கதியே. இந்தக் கவனப் பிழை என்பது சாதாரணமானதல்ல. மிகப் பாரதூரமானது. அதுவே நாட்டை மோசமாகப் பாதித்திருக்கிறது.

இப்போதுள்ள நெருக்கடியை விட மிகக் கடினமான – அதிகமான நெருக்கடி எதிர்வரும் நாட்களில் ஏற்படவுள்ளது.

ஆகவே தவறுகள் எந்தளவுக்குப் பாரதூரமானதாக இருக்கிறதோ அதற்குப் பரிகாரம் காண்பதாக இருந்தாலும் அந்தளவுக்கு ஆழமானதாக, உச்சநிலை முயற்சி எடுத்தே பரிகாரம் காண வேண்டும். இதில் காய்தல் உவத்தல் இருக்க முடியாது. யாருடைய முகத்தையும் பார்க்காமல் தீர்மானங்கள் எடுக்க வேண்டும்.

மக்களின் மனதில் கொந்தளிப்பும் என் நடக்கப் போகிறது என்ற புதிரும் எழுந்துள்ளது. இதுவும் வரவரக் கூடும். இந்தக் கொதிப்பை பிற சக்திகள் தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தவும் விளையும். அப்படியென்றால் நாடு இன்னும் மோசமான கட்டத்துக்குத் தள்ளப்படும்.

இப்பொழுது ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிக்கான காரணங்களைப் பலரும் பட்டியலிட்டுள்ளனர். அதைப்போல இதிலிருந்து மீள்வதற்கான வழிமுறைகள், உபாயங்களையும் பலரும் பட்டியற்படுத்தியிருக்கிறார்கள்.

அப்படியென்றால் அதைச் செய்வதற்குத் தாமதமென்ன? எதையாவது செய்து நெருக்கடியைத் தணிக்க வேண்டியதுதானே என்ற கேள்வி எழுகிறது.

இங்கேதான் பிரச்சினை.

எதையும் நடைமுறைப்படுத்துவதற்குச் சரியான, பலமான ஒரு கட்டமைப்பு வேண்டும். அந்தக் கட்டமைப்பானது பொருத்தமான வழிமுறைகளைக் கண்டறிந்து, உரிய பொறிமுறைகளை வகுத்து, அதை நடைமுறைப்படுத்துவதற்கான செயற்றிட்டங்களை உருவாக்கி, அவற்றை நடைமுறைப்படுத்தி, அந்த நடைமுறையிலுள்ள வெற்றி தோல்விகள், தாமதங்கள் போன்றவற்றைக் கவனமெடுத்துச் செயற்பட வேண்டும். இதற்கு சரியான – வலுவான அரசாங்கம் தேவை.

அந்த அரசாங்கம் நிலைமையின் தாற்பரியத்தைப் புரிந்து கொண்டு அதற்குரிய வகையில் மிகத்தீவிரமாக வேலை செய்ய வேண்டும். இன்றைய இலங்கைச் சூழல் அல்லது இலங்கையின் நிலைமை என்பது நாளாந்தம் மோசமடைந்து கொண்டிருக்கும் ஒரு நோயாளியின் உடல் நிலையைப் போன்றிருக்கிறது. ஏறக்குறைய பரலைஸ் (முடக்க) நிலைக்குச் சென்று கொண்டிருக்கிறது. இந்த நிலையை எப்படிக் கட்டுப்படுத்துவது? இதிலிருந்து எப்படி மீள்வது என்பதே இன்றைய பெரும் சவால். இது யுத்தத்தை வெற்றி கொள்வதையும் விடக் கடினமானது.

ஆகவே இந்தக் கடினமான நிலையைக் கடக்க வேண்டும் என்றால், இதை வெற்றி கொள்ள வேண்டும் என்றால், அதற்குக் கடினமாக வேலை செய்ய வேண்டும். முழுமையாக வேலை செய்ய வேண்டும். இந்த வேலை என்பது நாட்டிலுள்ள அனைத்துத் தரப்பும் (மக்களும்தான்) இணைந்த வேலையாக இருக்க வேண்டும்.

அதாவது இது ஒரு தேசிய இடர் என்ற அடிப்படையில், அந்த உணர்வுடன் இதைப் புரிந்து கொண்டு வேலை செய்ய வேணும். அதற்கு தேசிய ஒருமைப்பாட்டுணர்வை உருவாக்கக் கூடிய ஏதுநிலைகளை அரசாங்கம் உருவாக்குவது அவசியம். கட்சிகளாக, இனங்களாக, சமூகங்களாக, பிரதேசங்களாக பிரிந்து நின்று, கூறுபட்டு நின்று தேசிய இடரைக் கடக்க முடியாது. ஒன்றிணைந்து வேலை செய்யவும் முடியாது.

ஆகவே இந்த இடர்கால நெருக்கடியை தனியே பொருளாதார நெருக்கடி என மட்டுறுத்திக் கொள்ளாமல் இது உருவாகக் காரணமான இனவாதத்தையும் முடிவுக்குக் கொண்டு வர வேண்டும். இனவாதத்தினால் உருவான அரசியல் நெருக்கடியே பொருளாதாரத்தைத் தின்றது என்பதையும் புரிந்து கொள்வது அவசியம். அப்படிச் செய்தாலும் அதற்குப் பின் அல்லது அதைத் தொடர்ந்து சில வேலைகளைச்செய்ய வேண்டும்.

ஒன்று, இங்கே நாட்டிலுள்ள மனித வளம், இயற்கை வளம் உள்ளிட்ட அனைத்து வளங்களையும் பயன்படுத்தி, அவற்றின் மூலம் குறுகிய காலத்தில் பயன் பெறுவதற்கான திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

இரண்டாவது, வெளிநாட்டுக் கடன் மற்றும் முதலீடுகளின் வழியாக நிலையான வருவாயைப் பெறத்தக்க உபாயங்கள், செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மூன்றாவது, மக்கள் அனைவரும் இடர்கால நிலையை எதிர்கொள்வதற்கான தயார்ப்படுத்தலுக்குள்ளாக்கப்பட வேண்டும். கூடவே இந்த நெருக்கடியை ஒரு இடர்காலமாகக் கருதி, இதிலிருந்து மீள்வதற்கு அனைவரும் கடுமையாக உழைக்க வேண்டும். அவரவர் தத்தம் தரப்பில், துறைகளில் இந்தப் பங்களிப்பைச் செய்ய வேண்டும். இதற்கான உளத்தூண்டலையும் சமூகச் சூழல், நிர்வாகச் சூழலையும் உருவாக்க வேண்டும். துறைசார் நிபுணர்கள், வல்லுநர்கள், செயற்பாட்டாளர்களை ஒருங்கிணைத்து பொருத்தமான திட்டங்களையும் பொறிமுறைகளையும் உருவாக்க வேண்டும்.

இதற்கெல்லாம் முதல் நிலைப் பாத்திரத்தை வகிக்க வேண்டியது அரசாங்கமாகும்.

ஆனால் அரசாங்கத்தில் நாட்டில் இப்பொழுது குழப்ப நிலையே உருவாகியுள்ளது.

இந்தக் குழப்பநிலையில் எதைத்தான் செய்ய முடியும்?

அரசாங்கம் மட்டுமல்ல, நாடே குழம்பியுள்ளது.

மக்களிடமும் தெரிவுகளில்லை. தெரிவுகளில்லை என்று சொல்வதை விட என்ன வகையான தெரிவுகளை மேற்கொள்ள முடியும் என்று வழிகாட்டத்தக்க தரப்புகள் எதுவுமில்லை. இதுதான் மிகப் பெரிய துயர நிலை.

எல்லோரும் எங்காவது கடன் பட்டு நிலைமையைச் சமாளித்துக் கொள்வோம் என்றே சிந்திக்கிறார்கள். இதில் மக்களும் அரசும் ஒன்றாகவே உள்ளமை வேதனைக்குரியது. முடிவற்ற தொடர் கடனால் ஏற்பட்ட இந்த நிலையையும் இது மேலும் உண்டாக்கக் கூடிய பாதகமான சூழலையும் பற்றி யாரும் கணக்கிற் கொள்ளவில்லை. அதாவது, இந்தக் கடன் படுதலுக்கு எல்லை என்ன என்று யாரும் சிந்திப்பதாகத் தெரியவில்லை. மட்டுமல்ல, கடன் படுதலின் மூலம் நிலைமையைச் சீராக்கி, நாட்டை மீட்கலாமா என்பதிலும் இவர்களுக்குத் தெளிவில்லை.

அப்படியென்றால் என்ன செய்வது?

இப்போதுள்ள நிலையில் துணிகரமான – திறனுடைய ஒரு அணி மீட்புப் படையாகச் செயற்பட வேண்டும். அது காட்டும் வழியில், அதன் செயலாக்கத் திட்டத்தில்தான் நாடு நெருக்கடியிலிருந்து விடுபடும்.

இந்த அணி இன்னும் உருவாகவும் இல்லை. உருவாக்கப்படவும் இல்லை. சிவில் செயற்பாட்டாளர்கள் என்று சொல்லப்படுவோரும் மந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அல்லது குழப்ப நிலையில் உள்ளனர்.

பெரும்பாலானோருடைய கவனமும் அரசாங்கத்தை மாற்றுவது அல்லது அதிலுள்ள தலைகளை மாற்றுவது என்றவாறாகவே உள்ளது. மக்கள் எழுச்சி என நடக்கின்ற போராட்டங்களிலும் இதுவே தொனிப்பொருள். ஆனால், தலைகளை மாற்றுவதுடன் பிரச்சினை தீர்ந்து விடுமா? என்ற கேள்விக்குப் பதில் இல்லை. இதுதான் பிரச்சினையே.

எதிரணிகளில் யார் அடுத்த கட்டத் தலைமைக்குப் பொருத்தனமாவர் என்றால் அதுவும் கேள்வியே. அப்படித்தான் ஒரு தலைமையைக் காட்டினாலும் அதன் வழிமுறைகள் என்ன? திட்டங்கள் என்ன? செயற்பாடுகள் என்ன? உபாயங்கள் என்ன என்று யாருமே சொல்லக் காணோம்.

உண்மையில் இன்றைய சூழலில் எதிர்த்தரப்புகள் நாட்டுக்கு வழி காட்ட வேண்டும். அந்தப் பொறுப்பு அவர்களுக்கும் உண்டு. எரிகின்ற வீட்டை எட்ட நின்று வேடிக்கை பார்க்க முடியாது. அதற்குள் சிக்குண்ட மக்களையும் அவர்களுடைய உடமைகளையும் காப்பாற்ற வேண்டும் தீயை அணைக்கவும் வேண்டும். அத்தகைய ஒரு நிலையே இலங்கை என்ற இந்தத் தீவைக் காப்பாற்றும்.

இதற்கு ஒரு புதிய அரசியற் கலாசாரம் கட்டியெழுப்பப்பட வேண்டும். கட்சி பேதங்கள், இனபேதங்களுக்கு அப்பால் தேசிய உணர்வுடன் அது உருவாக்கப்பட வேண்டும்.இதையெல்லாம் செய்வது யார்? அது எப்போது? அது எப்படி நிகழும்?






## முதுசமொன்று முந்திக்கொண்டது

செந்நெல் செழிக்கும்
பொன்னிற மருதமாம்
சம்மாந்துறையூரின்
சங்கையான வம்சத்தில்
வந்துதித்த வரலாற்றாளன்

உயர்தர குணங்களால்
உலகளந்த உத்தமன்
சாந்தமான பண்பாளன்
சாதுவான பக்தியாளன்
கண்டதெல்லாம் படித்தே

பண்டிதரானார் இந்த
இரங்கலை வாசிக்க
தன் சுவாசத்தை மீட்காமல்
அவர் நிரந்தரமாய்
நிறுத்தி விட்டார்

புகழ் பொழியும் முகம்மதலி
தபாலதிபரின் முத்துக்களிலொன்றாய்
சீர் பெற்ற சீனி விதானையின்
சிறப்புமிகு சொத்தானாய்
செல்லுமிடமெங்கும்

நற்குணம் வீசும்
சந்தனக் காற்றானாய்
தவிக்கின்றோம் நாமிங்கு
பரிதவிக்கின்றோம் இன்று
தலைவனின்றி அநாதரவாய்
தூய்மையுடன் ஆசிரியப் பணியில்
ஆற்றல்மிக்க ஏணியாக
அர்ப்பணிப்புடன் சேவை செய்தாய்
பன்முக ஆளுமை அதிபரானாய்
அன்பால் நிருவாகம் புரிந்து

தெரிந்திருக்க தெளிவூட்டினாய்
அறிந்திருக்க அறிவூட்டினாய்
பாசமுடன் மாணவரின்
இதயத்தில் இடம் பிடித்தாய்
பட்டியெங்கும் பலநூறு

பட்டதாரிகள் உருவாக்கி
யுக புருஷராய் அதிசயங்கள்
அவாவுடன் அதிகம் புரிந்தாய்
கறைகளற்ற உன் கரங்கள்
துறையூரின் வரையற்ற வரங்கள்

'சேர்மன்' எனும் பதவியும்
உன்னால் தான் கௌரவமானது
புனிதமான சேவைகளால்
சத்தமின்றி சமூக மாற்றம் செய்தாய்
மும்மொழிப் பேச்சுக்களில் செறிவு

அறிஞர் அவைகள் வியந்து
வாய் பிளக்கும் ஆழமான அறிவு
நாலுமறிந்த நடமாடும் நூலகமாய்
புண்ணியங்கள் செய்தாய்
காலவோட்டத்தில்

கண்ணியமான கல்விமானானாய்
சமாதானப் புறாவாக
பிரஜைகள் பிரதிநிதியாய்
இந்திய ஒப்பந்த காலத்தில்
வலம் வந்தீர்

சமாதான நீதவானாகவே
வாழ்ந்த சாமானியன் நீங்கள்
ஆயுத குழுக்களின்
போராயுதங்கள் கூட அன்று
அமைதியடைந்து போயின

உந்தன் நேர்மை கண்டு
பிறருக்காக வாழ்ந்து
சமுகத்திற்கு வழிகாட்டியதால்
தேசமானிய விருதும்
உன்னைத்தேடியே வந்தது

பாரிற்கும் துறையூருக்கும்
முகவரி தந்த பூமரமொன்று
வாழ தன் வளவையே
விட்டுக் கொடுத்த வள்ளல்
அந்த பூமரமே இல்லாத ஊரில்

இனி இருந்தென்ன என்று
புறப்பட்டு விட்டாயோ இன்று ?
பூமிக்கும் வலிக்காத
உன் வழித்தடங்களை
எண்ணி எண்ணி விம்மலுடன்

மண்ணோடு விண்ணும் அழுகிறது
உங்களை
மரணம் நெருங்கிய வேளை
அதைக் கூறாமல் நான்
மறைத்துக் கொண்டதை
அறிந்திருந்தும்

உங்களைச் சுற்றியிருந்தவர்ளை
தைரியப்படுத்தியவாறே
உங்கள் இதயத்தின்
இறுதித் துடிப்பும் நின்று போனது
இருந்தும் ஈற்றில்

உள்ளம் ஏற்க மறுக்கிறது
உதிரம் கொதிக்கிறது
இமாலய இரங்கலால்
இதயம் வெடிக்கிறது
விழிநீரும் கூட
அழுது வடிக்கிறது

நிம்மதியாக சிரித்த முகத்துடன்
நிதானமாக கண்களை மூடிக்கொண்டீர்
உங்களின் அந்த
கடைசி மூச்சின் உஷ்ணம் இன்னும்
என் கைகளில் சூடாகவிருக்கிறது

அந்த இறவாத நினைவுகள்
இன்னும் ஈரமாயிருக்கிறது

அஸாத்
எம் ஹனிபா



விளையாட்டு விஞ்ஞான திணைக்களம்
பிரயோக விஞ்ஞானங்கள் பீடம்
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

**விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவத்தில் உயர்தர டிப்ளோமா**

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞானங்கள் பீட விளையாட்டு விஞ்ஞான திணைக்களத்தினால் முன்வைக்கப்படும் விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவத்தில் உயர்தர டிப்ளோமாவிற்கான 2 ஆம் உட்சேர்ப்பிற்காக விண்ணப்பங்கள் இப்போது அழைக்கப்படுகின்றன.

**யாருக்காக?**

- விளையாட்டுக்களில் அவர்களின் பிரயோக மற்றும் கொள்கைரீதியிலான அறிவை மேம்படுத்துவதற்காக கல்வி அமைச்சின் அங்கீகாரத்திற்கமைவாக அரசாங்க பாடசாலைகளில் புதிதாக ஆட்சேர்க்கப்பட்டுள்ள விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களுக்கானது.
- குறிப்பிட்ட துறையில் அவர்களின் தொழில்ரீதியிலான செயன்முறையை மேம்படுத்துவதற்காக விளையாட்டு அலுவலர்கள்/ போதனாசிரியர்கள் / பயிற்றுவிப்பாளர்கள் / உடற்கல்வி பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் வேறேதாவது விளையாட்டு ஆர்வலர்கள்.

**கற்கைநெறி தகவல்:**

| | |
|---|---|
| Qualification | : **SLQF Level IV** |
| Duration | : **02 years** |
| Medium | : English/Sinhala |
| Mode of Study | : Part-time (Weekends 8.00 a.m. to 5.00 p.m.) |
| Mode of Delivery | : Lectures (Physical and Online ) and Practical (Physical at USJ) |
| Course Fee | : **Rs.150,000/-** (can be paid in 2 instalments) |
| Registration Fee | : **Rs.5000/-** |

**Entry Qualification:**

1. க.பொ.த. (உயர் தரம்) அல்லது நிகரானதொரு தகைமையில் சித்தி அல்லது completion of NVQF level 5 followed by a corresponding cognitive bridging program.
2. க.பொ.த. சாதாரண தரம் மற்றும் மாகாணரீதியில், தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டு சாதனைகள் அல்லது விளையாட்டு விஞ்ஞான திணைக்களத்தினால் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு விளையாட்டுத் துறையில் ஐந்து (5) வருட அனுபவம்.

**விண்ணப்பிக்கும் முறைமை:**


Applicants should apply online via the given link at the university website **(www.sjp.ac.lk)** and should upload a scanned copy of the bank slip for the payment of **Rs.1500/-** in favour of "University of Sri Jayawardenepura" to the account number **097-1-001-7-001-4075 at People's Bank, Gangodawila.**

ஒன்-லைன் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியானது 2022 மே 30 ஆம் திகதியாகும்.

மேலதிக தகவலுக்காக பின்வருபவருடன் தொடர்பு கொள்ளவும்.
ஒருங்கிணைப்பாளர்,
விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவத்தில் உயர் தர டிப்ளோமா,
விளையாட்டு விஞ்ஞான திணைக்களம், பிரயோக விஞ்ஞானங்கள் பீடம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், கங்கொடவில, நுகேகொட.
தொலைபேசி: 0112881530/1, 0760010997
மின்னஞ்சல்: **adssm@sjp.ac.lk**

குறிப்பு: பல்கலைக்கழகத்தின் சார்பாக மேற்கொள்ளப்படும் பணக்கொடுப்பனவுகள் எந்தவொரு சூழ்நிலையிலும் மீளளிக்கப்படாதவைகளும் மாற்றக்கூடியதாகவுமல்லவையாகும்.

**பதிவாளர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்.**




## மேஷம்

மேஷத்தில் புதன் வக்ரமடைந்துள்ளார். அங்கு உச்ச ம்பெற்ற சூரியனோடு இணைந்து புத ஆதித்ய யோகத்தை உருவாக்குகிறார். சூரியனும் சுக்ரனும் உச்சம்பெற்றிருக்கின்றனர். குரு சனி ஆகிய இரண்டு கிரகங்களும் சொந்த வீட்டில் சஞ்சரிக்கின்றன.நான்கு கிரகங்கள் பலம்பெற்றிருக்கும் இந்த நேரத்தில் நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும்.சில மாற்றங் களை சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சுயதொழில் தொடங்க முயற்சிப்பீர்கள்.பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் கைகூடும்.

## ரிஷபம்

மேஷத்தில் புதன் வக்ரமடைந்துள்ளார். அங்கு உச்சம்பெற்ற சூரியனோடு இனைந்து புத ஆதித்ய யோகத்தை உருவாக்குகிறார். அவரோடு ராகுவும் இணைந்திருப்பதால் விரய ஸ்தானம் பலம்பெற்றிருக் கிறது. அதே நேரத்தில் சனி, குரு ஆகிய இரண்டு கிர கங்களும் சொந்த வீட்டில் சஞ்சரிக்கின்றன. சூரியன் சுக்ரன் ஆகிய இரண்டு கிரகங்களும் உச்சம் பெற்றிருக் கின்றார்கள். இப்படி நவகிரகங்களில் நான்கு கிரகங்கள் பலம் பெற்றிருக்கின்றன. எனவே எதிர்பாராத நல்ல வாய்ப்புக்கள் வந்து சேரலாம். உத்தியோகத்தில் உள்ள வர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கலாம்.தொழில் புரிப வர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும்.

## மிதுனம்

மேஷத்தில் புதன் வக்ரமடைந்துள்ளார். அங்கு உச் சம்பெற்ற சூரியனோடு இணைவது ஒரு பொற்காலமா கும். புத ஆதித்ய யோகம் செயற்படும் இந்த நேரத்தில் பொருளாதார பிரச்சினை அகலும். அதே நேரத்தில் குரு சனி இரண்டும் சொந்த வீட்டில் சஞ்சரிக்கிறார்கள். சுக்ரன் சூரியன் உச்சத்தில் உள்ளனர். நவக்கிரகங்களில் நான்கு கிரகங்கள் நல்ல முறையில் இருக்கும் இந்த நேரத்தில் தொட்ட காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைக்கும்.தொழில் வளம் சிறப்பாக இருக்கும்.திற மைக்குரிய அங்கீகாரம் கிடைக்கும்.

## கடகம்

மேஷத்தில் புதன் வக்ரமடைந்துள்ளார். உங்கள் ராசிக்கு 3,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரம் தொழில் வளர்ச்சி கூடும் .சூரியனோடு புதன் இணைந்து புத ஆதித்ய யோகத்தை உருவாக்குவதால் அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். அதே நேரத்தில் சுக்ரன், சூரியன் இரண்டும் உச்சம் பெற்றிருக்கிறார்கள். குரு, சனி ஆகிய இரண்டு கிர கங்களும் தன் சொந்த வீட்டில் பலம்பெற்று சஞ்சரிக் கிறார்கள். நவகிரகங்களில் நான்கு கிரகங்கள் வலி மையோடு சஞ்சரிக்கும் இந்த நேரத்தில், உற்சாகம் அதிகரிக்கும்.

## சிம்மம்

மேஷத்தில் புதன் வக்ரமடைந்துள்ளார். அங்கு உச்சம் பெற்ற சூரியனோடு இணைந்து புத ஆதித்ய யோகத்தை உருவாக்குகிறார்.இக் காலம் ஒரு பொற்காலமாகும். குரு, சனி ஆகிய இரண்டு கிரகங்களும் சொந்த வீட்டில் பலம்பெற்று சஞ்சரிக்கின்றன. சூரியன், சுக்ரன் ஆகிய இரண்டு கிரகங்களும் உச்சம்பெற்றிருக்கின்றன. அட் டமத்தில் குரு சஞ்சரித்தாலும் அதன் பார்வை குடும்ப ஸ்தானத்தில் பதிவதால் குடும்பத்தில் மங்கல ஓசை கேட்கும்.தொழில் ஸ்தானாதிபதி சுக்ரன் உச்சம்பெற் றிருப்பதால் தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். இடையூறு சக்திகள் விலகும்.

## கன்னி

மேஷத்தில் புதன் வக்ரமடைந்துள்ளார். அங்கு உச்சம் பெற்ற சூரியனோடு இணைந்து புத ஆதித்ய யோகத்தை உருவாக்குகிறார். எனவே கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும்.இடமாற்றம் இனிமை தரும்.உங்கள் ராசிக்கு 2ம் இடத்திற்கு அதிபதியான சுக்ரன் உச்சம் பெற்றிருக்கிறார். குரு, சனி ஆகிய இரண்டு கிரகங்க ளும் சொந்த வீட்டில் சஞ்சரிக்கின்றன. எனவே சிந்த னையும் செயலும் ஒருங்கே அமையும்.

## துலாம்

மேஷத்தில் புதன் வக்கிரமடைந்துள்ளார். அங்கு உச்சம்பெற்ற சூரியனோடு இணைந்து புத ஆதித்ய யோகத்தை உருவாக்குகிறார். எனவே கல்வி சம்பந்த மாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.தொழில் போட்டிகள் அகலும். வாடகை கட்டிடத்தில் நடை பெற்ற தொழிலை சொந்த கட்டிடத்திற்கு மாற்றும் முயற்சி கைகூடும். சுக்கிரன் சூரியன் உச்சம்பெற்றும் குருவும் சனியும் சொந்த வீட்டில் பலம்பெற்றும் சஞ் சரிக்கும் இந்த நேரத்தில் தடைப்பட்ட காரியங்கள் ஒவ்வொன்றும் தானாக நடைபெறும். படிப்பிற்கேற்ற வேலை கிடைக்கும்.

## விருச்சிகம்

மேஷத்தில் புதன் வக்ரமடைந்துள்ளார். அங்கு உச்சம் பெற்ற சூரியனோடு இணைந்து புத ஆதித்ய யோகத்தை உருவாக்குகிறார். அதே நேரத்தில் மீனத்தில் சுக்கிரனும் உச்சம்பெற்றிருக்கிறார். குரு,சனி ஆகிய இருவரும் தன் சொந்த வீட்டில் பலம்பெற்றுள்ளனர்.இப்படி நவ கிரகங்களில் நான்கு கிரகங்கள் நல்ல நிலையில் இருக் கின்றன.இக்காலத்தில் நல்ல தகவல்கள் இல்லம் தேடி வரும்.நல்ல காரியங்கள் பல இல்லத்தில் நடைபெறும். சொத்தை விற்பதன் மூலம் கிடைக்கும் தொகையில் தொழிலை விரிவு செய்வீர்கள்.பிள்ளைகளின் முன் னேற்றம் திருப்தி தரும்.

## தனுசு

மேஷத்தில் புதன் வக்கிரமடைந்துள்ளார். அங்கு உச்சம்பெற்ற சூரியனோடு இணைந்து புத ஆதித்ய யோகத்தை உருவாக்குகிறார். பஞ்சம ஸ்தானத்தில் புதன் உலா வரும்பொழுது பூர்வபுண்ணிய ஸ்தானம் வலுவடைகிறது.எனவே பாக பிரிவினை சுமுகமாக முடியும். சூரியன், சுக்கிரன் உச்சமும் குரு மற்றும் சனி சொந்த வீட்டில் பலம்பெற்று சஞ்சரிக்கும் நிலை போன்ற காரணங்களால் வருமானம் திருப்திகரமாக இருக்கும். வசதிகள் பெருகும். சுய தொழில் தொடங் கும் முயற்சியில் ஆர்வம் கூடும்.மாற்று மருத்துவத் தால் உடல் நலத்தை சீராக்கிக் கொள்வீர்கள்.

## மகரம்

மேஷத்தில் புதன் வக்கிரமடைந்துள்ளார். அங்கு உச்சம்பெற்ற சூரியனோடு இணைந்து புத ஆதித்ய யோகத்தை உருவாக்குகிறார். கல்வி ஸ்தானத்தில் புதனும் சூரியனும் இணைவதால் கல்வி வளம் சிறப்பாக இருக்கும்.மேற்படிப்பிற்கான முயற்சிகள் செய்தால் அதில் வெற்றி கிடைக்கும். தாய் வழி ஆதரவு உண்டு. சூரியன், சுக்கிரன் உச்சம் குரு மற்றும் சனியின் பலம் ஆகியவற்றால் எடுத்த முயற்சிகள் அனைத்தும் வெற்றியாகும்.

## கும்பம்

மேஷத்தில் புதன் வக்கிரமடைந்துள்ளார். அங்கு உச்சம்பெற்ற சூரியனோடு இணைந்து புத ஆதித்ய யோகத்தை உருவாக்குகிறார். உங்கள் ராசிப்படி பஞ்ச மாதிபதியும், சப்தமாதிபதியும் சேருவது யோகம்தான். அவரோடு ராகு இருப்பது அவ்வளவு நல்லதல்ல. சகோதர வழியில் மனக்கசப்பு உருவாகும். அதே நேரம் சுக்கிரன் உச்சம் பெறுவதால் பணப்புழக்கம் அதிகமா கும். தனாதிபதி குரு தன ஸ்தானத்திலும் விரயாதிபதி சனி விரய ஸ்தானத்திலும் இருப்பதால் பணம் வந்த மறு நிமிடமே செலவாகிவிடலாம்.

## மீனம்

மேஷத்தில் புதன் வக்ரமடைந்துள்ளார். அங்கு உச்சம் பெற்ற சூரியனோடு இணைந்து புத ஆதித்ய யோகத்தை உருவாக்குகிறார். எனவே கொடுத்த வாக்கை காப்பாற் றுவீர்கள்.கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள். நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். அதே நேரத்தில் குரு உங்கள் ராசியிலே பலம் பெற்றுள்ளார். எனவே புதிய முயற்சிகள் வெற்றியாகும். படிப்பிற் கேற்ற வேலை கிடைக்கும். பொதுவாழ்வில் இருப்ப வருக்கு பொறுப்புக்கள் மாற்றப்படலாம். விரயங்கள் அதிகரிக்கும் நேரம் இது.




# இன்னிசைக்கும் பொழுதுபோக்குக்கும் பெயர் பெற்றிருந்த விக்டோரியா பூங்கா

கொழும்பு 7 இல் பிரமாண்டமான கொழும்பு மாநகரசபைக் கட்டிடத்தின் முன்னால் அமைந்துள்ள அழகிய விகாரமகாதேவி பூங்கா கொழும்பு நகரின் பெரிய பூங்காவாகும். இது மிகப் பழமையான வரலாற்றையும் கொண்டது. சகல வயதினரும் வந்து அமர்ந்து, விளையாடி, ஆறுதல் பெறுவதற்கும், ஒன்று கூடுவதற்கும், இளைப்பாறுவதற்கும் பயன்பட்டு வருகிற இந்த பசுமைப் பூங்காவை தரிசிக்காத இலங்கையர்கள் குறைவென்றே கூற வேண்டும்.

இப்போது கறுவாத் தோட்டம் என்று அழைக்கப்படும் பகுதியும் விஹாரமகாதேவி பூங்கா, கேம்பல் பூங்கா, காலிமுகத்திடலை அண்டிய பகுதிகள் எல்லாமே முன்னர் கறுவாக் காடுகளாகத் தான் இருந்தன.

இலங்கையில் பூங்காவை முதன்முதலில் 1810 இல் ஆங்கிலேயர் அமைத்தபோது அதை ஸ்லேவ் ஐலன்ட், கொம்பனி வீதி பகுதியில் ஏழு ஏக்கர் நிலத்தில் "கியூ பூங்கா" என்கிற பெயரில் அமைத்தார்கள். அதன் அருகே செல்லும் வீதிக்கும் கியூ வீதி என்று பெயரிட்டார்கள். இன்று அந்த வீதியைக் காணலாம். ஆனால் அங்கே அப்படியொரு பூங்கா இல்லை. அது ஒரு தாவரவியல் பூங்காவாக இருந்தது. ஆனால் அப்பூங்காவை அங்கிருந்து அகற்றி களுத்துறையில் உக்கல்கொடவில் அமைத்தார்கள். பின்னர் அது பொருத்தமற்ற பகுதி என அறிந்ததும் இலங்கையில் அப்படியொரு பூங்காவை என்று பெயரை மாற்றவேண்டும் என்று விமாகரமகாதேவி நினைவேந்தல் குழு கோரிக்கை விடுத்தது. அதன் விளைவாக இப்பூங்காவின் பெயர்விகாரமகாதேவி பூங்கா என்று 1958 ஆம் ஆண்டு யூலை 18 ஆம் திகதி மாற்றப்பட்டது.ஆனாலும் இன்றும் பலர் "விக்டோரியா பார்க்" என்று அழைப்பதையும் நாம் காணமுடியும்.

இன்னொரு எல்லையில் கொழும்பு நூதனசாலை, புதிய நகர மண்டபம், கலாபவனம், ஜோன் டி சில்வா ஞாபகார்த்த அரங்கம் மற்றும் மாநகர விளையாட்டுக் கழகம், இப்போதைய நெலும் பொக்குன மண்டப வளாகம் ஆகியவையும் இந்த வட்டத்துக்குள் அடங்கியிருந்தன. நடுவில் அதன் குறுக்காக வீதி அமைத்து பூங்கா இரண்டாக பிரிக்கப்பட்டிருக்கிறது. அப்படி குறுக்காக பிரிக்கப்பட்ட வீதியின் இன்றைய பெயர் ஆனந்த குமாரசுவாமி மாவத்தை. இது வட்டமாக அப்பகுதி இருந்ததற்கான ஆதாரத்தை வரைபடத்தின் உதவியுடன் இப்போதும் நீங்கள் காணலாம்.

பூங்காவின் இன்னொரு மூலையில் கொழும்பு பெரிய பொது நூலகமும், அதனருகில் உலகபோரின் நினைவிடமும் அமைந்துள்ளது.

1900 களின் முற்பகுதியில் விக்டோரியா பூங்கா, நூறு ஏக்கர் பரப்பளவில் புல்வெளிகள், தோட்டங்கள், பனைகள் பல வண்ண மலர்களைக் கொண்ட ஒரு பூங்காவாக இருந்தது. தாமரை மலர்களால் மூடப்பட்ட ஒரு குளமும் இருந்தது. கொழும்பின் மேற்தட்டு மக்களால் விஸ்தீனப்படுத்துவதற்காக 329 ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. அன்றைய காலத்தில் இது ஒரு பெருந்தொகை. அப்படிப்பார்க்கையில் இப்பூங்காவின் இருப்புக்காக அரசு மிகக் கவனம் செலுத்தி வந்திருப்பதைக் உணர்ந்துகொள்ள முடியும் 1900களின் ஆரம்பம் வரை பொலிஸ் இசைக்குழு மாலை நேரங்களில் வட்டமாக அமர்ந்து இசை நிகழ்ச்சிகளை நடத்துவார்கள். இந்த இசைக் கச்சேரிகளைப் பற்றிய குறிப்புகள் பல நூல்களிலும் காணக் கிடைக்கின்றன, அதை கேட்பதற்காக அங்கே பலர் கூடுவார்கள். ஆனால் இரண்டாம் உலகப் போர் தொடங்கியதும் அந்தப் பாரம்பரியம் நின்று போனது. போர் நடவடிக்கை திணைக்களத்தின் கட்டுபாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட இப்பூங்கா, இராணுவ முகமாக இரண்டாம் உலகப் போர் காலத்தில் பயன்படுத்தப்பட்டது.

இரண்டாம் உலகப்போரின் பின்னர் இலங்கையும் 1948இல் சுதந்திரமடைந்தது. ஆனாலும் இப்பூங்கா போது மக்களுக்காக திறக்கப்படவில்லை. சுதந்திர இலங்கையின் அப்போதைய கொழும்பு மாநரசபை மேயராக இருந்த எஸ்.செல்லமுத்து 1951 இல் மீண்டும் இதை புனரமைத்து திறந்து வைத்தார். இப்பூங்காவின் இயக்கம் களைகட்டியது. அதன் பின்னர் பல சர்வதேச கண்காட்சிகள் கூட இங்கே நடத்தப்பட்டன.

முதலாம் உலகப்போரில் மாண்டவர்களுக்காக காலிமுகத்திடலில் எழுப்பப்பட்ட நினைவுத் தூபி அங்கிருந்து அகற்றப்பட்டு இப்பூங்காவின்மேற்கு மூலையில் நிறுவப் றுப் பாலம் இருந்தது. இப்போது அதன் தோற்றம் வேறு வடிவம் பெற்றுவிட்டது. இப் பூங்காவில் உள்ள பெரிய மரங்களிலிருந்து தொங்கிக்கொண்டு இருக்கும் வவ்வால் களைக் காண முடியும். காதலர்கள் சந்தித்துக் கொள்கின்ற பிரபலமான பூங்காவாக இது இருந்த காலமும் இருந்தது. அவர்களைக் கண்காணிக்கவே காவலர்களை கடமைக்கு அமர்த்தப்பட்டிருந்த காலமும் இருந்தது. தினமும் ஆயிரக்கணக்கானோர்இங்கு வந்து இயற்கைக் காற்றை ஆசுவாசமாக சுவாசித்து ஓய்வாக மரநிழலில் அமர்ந்து



அமைக்க இடத்தைத் தேடினார்கள். அதன் விளைவாகத் தான் பேராதனையில் ரோயல் கார்டனில் மிகப் பெரிய பூங்காவை அமைத்தார்கள். பின்னர் தான் விக்டோரியா பூங்கா உருவானது

1865 ஆம் ஆண்டு கொழும்பில் இப் பூங்கா 120 ஏக்கரில் தொடக்கப்பட்டது செர்கியூலர் பார்க் (Circular Park வட்டப்பூங்கா). வட்ட வடிவில் அமைக்கப்பட்டிருந்ததால் அது ஒன்றரை நூற்றாண்டுக்கு முன் வட்டப் பூங்கா என்று அழைக்கப்பட்டது. 1887 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் ராணியின் பொன் விழாவை நினைவுகூரும்



வகையில் விக்டோரியா பூங்கா என்று மறுபெயரிடப்பட்டது. 1956 ஆம் ஆண்டு பண்டாரநாயக்க ஆட்சியமைத்த போது அதே ஆண்டு புத்த ஜயந்தி கொண்டாடப்பட்டது. அதனோடு இணைந்த பல சிங்கள பௌத்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதன் ஒரு அங்கமாக 2000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த இலங்கையின் மகாவம்ச நாயகனான துட்டகைமுனுவின் தாயாரான விஹார மகா தேவியின் நினைவாக விஹார மகாதேவி அப்போது அதிகம் பயன்படுத்தப்பட்ட இடம்.

ஆர்னோல்ட் ரைட் இருபதாம் நூற்றாண்டு இம்ப்ரெஷன்ஸ் ஆஃப் சிலோன் (1907) இல் கூறுகிறார்: "விக்டோரியா பூங்கா என்பது 100 ஏக்கர் பரப்பளவில், நீள் வட்ட வடிவத்தில், திறந்த, பரந்த நிலையில், மரங்கள் தனியாகவும், தொகுதிகளாகவும் பரவிக் கிடைக்கின்றது. அதே நேரத்தில் அது கறுவாத் தோட்டம் என்று நெடுங்காலமாக அழைக்கப்படுகிற குடியிருப்புப் பகுதியால் சூழப்பட்டுள்ளது, இப்போது ஒரு சில கறுவாப்பட்டை புதர்கள் மட்டுமே அக்கம்பக்கத்தில் காணப்படுகின்றன". என்று குறிப்பிடும் அவர், "இலங்கை விவசாய சங்கத்தின் வருடாந்த நிகழ்ச்சிகள் விக்டோரியாபூங்காவின்,நூதனசாலையின் பின்புறத்தில் நடத்தப்பட்டு வருகின்றன" என்கிறார்.

விக்டோரியா பூங்காவைப் பற்றிய பல விபரங்களை எழுதிய பழைய முக்கிய நூல்களில் ஒன்றாக ஹென்றி கேவ் எழுதிய நூலைக் குறிப்பிடமுடியும்.

"விக்டோரியா பூங்கா என்று இப்போது அறியப்படும் பகுதியில் பனை மரங்கள் மற்றும் அத்திப்பழங்களின் நிழலில் அலைந்து திரியலாம், அல்லது மிகவும் வசீகரிக்கும் வகையிலான மலர்கள் மற்றும் வாசனை திரவியங்களால் சூழப்பட்ட அழகிய மூங்கில் குவியல்களுக்கு அடியில் ஓய்வெடுக்கலாம். மேலும் புத்துணர்ச்சியைத் தரும் அழகான மலர்கள், ஓர்க்கிட்கள், பிரகாசமான இலைகளைக் கொண்ட கலாடியம்களும், பிற வெப்பமண்டல தாவரங்களின் கூட்டமும் இங்கே எங்கும் செழித்து பெருகுகின்றன".

1901 ஆம் ஆண்டின் இலங்கை நிர்வாக அறிக்கையின் படி இப்பூங்காவின் மரநடுகைகளுக்காக 3584 ரூபா செலவிடப்பட்டிருக்கிறது. அதே ஆண்டு அதன் நிலத்தை மேலும் பட்டிருக்கிறது.

1920இல் வெளியான The handbook Colombo என்கிற நூலில் இப்பூங்காவைப் பற்றி இப்படிக் குறிப்பிடப்படுகிறது "விக்டோரியா பூங்காவானது, இசைக்கும் பொழுதுபோக்குக்கும் பேர்பெற்ற மையமாகும், இது கொழும்பிற்கு தெற்கே சிறிது தூரத்தில் உள்ளது. இசைக் குழு கச்சேரிகள், நடைபாதைகள், பெண்களுக்கான கோல்ஃப் திடல், டென்னிஸ் மைதானங்கள் என்பன இங்கே வரும் மக்களுக்கு சிறந்த பொழுதுபோக்கை வழங்குகின்றன. விக்டோரியா பூங்காவில் உள்ள ஈர்ப்புகளில் ஒன்றான கொழும்பு நூதனசாலை. அரிய சேகரிப்புகளைக் கொண்டிருக்கிறது. ஆலமரம் இப்பூங்காவில் உள்ள வசீகரிக்கும் அம்சங்களில் ஒன்றாக இருக்கிறது. ஆலமரம், அத்தி மரத்தின் ஒரு இனமாகும் அதன் கிளைகள் தொங்கி, மண்ணில் வேரூன்றி, ஒரு புதிய மரமாக வளர்கின்றன, இந்த செயல்முறை ஒற்றை மரம் ஒரு தோப்பாக மாறும் வரை பெருகிக்கொண்டே இருக்கும்". உண்மையில், இங்கே குறிப்பிடப்பட்டுள்ள ஆலமரம் அருங்காட்சியக வளாகத்தில் இன்றும் காணப்படும் மிகப் பெரிய மரமா என்று எண்ணத் தோன்றுகிறது.

விக்டோரியா பூங்கா கண்காட்சிகள் மற்றும் கண்காட்சிகளுக்கான இடமாகவும் செயல்பட்டது. இலங்கை மற்றும் கொழும்புக் கண்காட்சி, ஆளுநர் நாயகம் சோல்பரி பிரபுவினால் திறந்து வைக்கப்பட்டது. பிப்ரவரி முதல் மார்ச் 1952ஆம் ஆண்டு பெப்ரவரி மார்ச் மாதங்களில் பிரித்தானிய பொதுநலவாய நாடுகளின் வர்த்தகக் கண்காட்சி இங்கே தான் பெரும் திருவிழாவைப் போல நடத்தப்பட்டது. அதை அப்போதைய ஆளுநர் சோல்பரி பிரபு திறந்து வைத்தார். 1980 களில் ஆங்காங்கே ஊஞ்சல்கள் இருந்ததைப் பார்த்திருக்கிறேன். ஒரு உயரமான கோபுரம் போன்ற கொன்கிரீட் பாய்மரம் இருந்தது. கொன்கிரீட்டால் செய்யப்பட்ட ஒரு பிரம்மாண்டமான ஆமை இருந்தது, அதன் முதுகில் சிறுவர்கள் ஏறி விளையாடுவார்கள். மரத்தால் கட்டப்பட்ட ஒரு மர வீடு இருந்தது. ஒரு கயிற் சிற்றுண்டியும் கொறித்து இன்புற்றுச் செல்கிறார்கள் தர்மபாலமாவத்தை அமைந்துள்ள பூங்காவின் மேற்குத்திசையில் "சத்துட்டு உயன" (மகிழ்ச்சிப் பூங்கா) என்கிற சிறுவர் பூங்கா நிரந்தரமான ஒன்றாக இயங்கி வருகிறது. 70 களில் இந்தப் பூங்காவுக்குள் அழகான சிறிய விளையாட்டு இரயில் சேவை தொடக்கப்பட்டது. சிறிய அழகிய அந்த இரயிலில் பயணிப்பதற்கு பல சிறுவர்கள் ஆர்வம் கொள்வார்கள். இரண்டு தசாப்தங்களாக அது இயங்கியது. இப்போது இயந்திரக் கார்களும் வேறு விளையாட்டுகளும் அங்கே உள்ளன. குதிரைச் சவாரியும் செய்யலாம். பூங்காவின் உள்ளே ஒரு தண்ணீர்க் குளமும் உண்டு. இப்பூங்காவின் பிரதான வாயிலில் காணப்படும் பெரிய புத்தர் சிலையானது கொழும்பு மாநகர சபையின் நூற்றாண்டு கொண்டாட்டங்களின் போது அதன் நினைவாக அடிக்கல் நாட்டப்பட்டது. பின்னர் அது வில்லியம் கொபல்லாவவால் திறக்கப்பட்டது.

இலங்கையில் சிவில் யுத்தம் முடிந்ததும் கோட்டாபாய ராஜபக்ஷ கொழும்பு நகர அபிவிருத்திச் சபையை பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வந்ததும் இந்தப் பூங்காவை அந்த சபையின் அனுசரணையுடன் பல மாற்றங்களை செய்து மறு சீரமைத்தார்.

100 ஏக்கர் பரப்பளவைக் கொண்டிருந்த அந்தப் பூங்கா இன்று 40 எக்கர்களுக்குள் சுருங்கிவிட்டாலும் இன்றும் அது பரபரப்பான கொழும்பில் பலராலும் அனுபவிக்கப்படும் ஒரு மகிழ்ச்சிப் பசுமைப் பூங்கா என்றே கூற வேண்டும். ஒன்றரை நூற்றாண்டு பழமையை தாங்கி நிற்கும் பூங்கா இது.

# ஊடகவியலாளர் மோகனதாஸ் விட்டுச் சென்ற அழியாச் செல்வம்

## ஆளுமையாளர்களின் அனுபவப் பகிர்வுகள்





**வ.சக்திவேல்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்பால் அமைந்துள்ள துறைநீலாவணை கிராமத்தைச் சேர்ந்த ஆசிரியரும், ஊடகவியலாளரும், கலைஞரும், இளம்எழுத்தாளருமான வயது34 வயதுடைய பாக்கியராஜா மோகனதாஸ் 23.05.2022 அன்று சுமார் 8.30 மணிக்கு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிசிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவர் பாக்கியராசா சிவராணி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்ராவார். ஒரு சகோதரனும், இரண்டு சகோதரிகளுடனும் வாழ்ந்து வந்தார். இவர் துறைநீலாவணை தேசிய பாடசாலையில் உயர்தரக்கல்வி கற்று கிழக்கு பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கை நிறுவகத்தின் நுண்கலைத்துறை (நாடகமும் அரங்கியலும்) பட்டத்தை பூர்த்தி செய்துள்ளார். மூன்று வருடங்களுக்கு முன்னர் ஆசிரியர் நியமனம் பெற்று அம்பாறை மாவட்டத்தின் கமு.சம்மாந்துறை மத்திய கல்லூரியில்(தேசிய பாடசாலையில்) கல்வி கற்பித்து வந்ததோடு, தலைநகரிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளுக்கும் பிராந்திய செய்தியாளராகக் கடமையாற்றி வந்தார். குறிப்பாக தினகரன் பத்திரிகைக்கு மண்டூர் குறுப் செய்தியாளராகவும் திறம்பட பணியாற்றிவந்தார்.

நாளிதழ்களில் வாராந்தம் கட்டுரைகள், மக்கள் பிரதிநிதிகளின் நேர்காணல்கள், கலைஞர்களின் படைப்புக்கள், என பல்வேறு விடயங்களை பிரசுரிக்க அவர் பின்னிற்கவில்லை. கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தினால் இவர் 'கிழக்கு மாகாண இளம் கலைஞர் விருது" வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தார்.

சிறிய வயதிலேயே மோகனதாஸிடம் பெரிய இலட்சியங்கள் இருந்தன. சாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டிருந்தார். இலக்கியத்திலும், ஊடகத்துறையிலும், இன்னுமின்னும் வளர்ச்சிபெற வேண்டும் என்ற குறிக்கோளையும் கொண்டிருந்தார். அவரது இழப்பு நிரப்பமுடியாததொரு வெற்றிடமாகும்.

துறைநீலாவணை கிராமத்தில் உள்ள சுப்பர்கிங்ஸ் இளைஞர் கழக முன்னாள் தலைவராகவும், துறைநீலாவணை வடக்கிற்கான கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளராகவும் நல்ல சமூப் பணிகளை முன்னெடுத்து வந்தார்.

ஊடகவியலாளர் பாக்கியராசா மோகனதாஸின் இறப்புச் செய்தி துறைநீலாவணை கிராமத்தை மாத்திரமின்றி இங்கை முழுவதிலுமுள்ள தமிழ் பேசும், ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், நண்பர்கள், உள்ளிட்ட அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

ஈழத்துஇலக்கியவரலாற்றில்அதிகஆளுமையாளர்களின்அனுபவங்களைபேசும்முதல்நேர்காணல்நூல் "படைப்பாக்கஆளுமைகள்".

ஈழத்து கலை இலக்கிய ஆவண தொல்லியல் ஆய்வகப் பரப்பில் கவிதை, புனைகதை, நாவல், நாடகப் பனுவல், திறனாய்வு என பல்வேறு இலக்கிய படைப்புகள் அவ்வப்போது வெளிவந்தாலும் பல்வேறு துறைசார் படைப்பாக்க ஆளுமையாளர்களின் அனுபவப் பகிர்வுகள் நூல்கள் வாயிலாக பகிரப்பட்டது மிகக் குறைவு எனலாம்.

இந்நிலையில் படைப்பாக்க ஆளுமைகள் எனும் நேர்காணல் தொகுப்பு நூலின் தேவை இலக்கியவுலகில் மிக அவசியமாக பகிரப் பட வேண்டிய தேவை ஏற்பட்டது. இதன் விளைவாகவே, ஒரே பார்வையில் 73 எழுத்திலக்கிய ஆளுமைகளின் உள்ளக்குமுறல்களை நேர்காணல் ஊடாக வாசகர்களுக்கு அளிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன் எனப் பல்துறைப் படைப்பாளியான ஊடகவியலாளர் பாக்கியராஜா மோகனதாஸ் தெரிவித்திருந்தார்.

இவருடைய இந்த படைப்பாக்க ஆளுமைகள் என்ற நூலின் வெளியீட்டு விழா நீங்களும் எமுதலாம் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் 05.03.2022 திருகோணமலை சர்வோதய மண்டபத்தில் இடம்பெற்றிருந்தது.

ஆளுமையாளர்களின் படைப்புகள் உலகளாவிய ரீதியில் பெரிதாகப் பேசப்படுவதுபோல படைப்பாளிகள் அறியப்படுவது பெருங்குறையாக சிந்தையில் தென்பட்டதன் விழைவாகவே புலம்பெயர் மற்றும் ஈழத்திலுள்ள ஆளுமையாளர்களின் உட்கிடக்கைகளை பகிரவேண்டும் என்ற ஒரு உந்துதல் ஏற்பட்டது என மோகனதாஸ் குறிப்பிட்டிருந்தார்.

சமகால சமூக மற்றும் கலையிலக்கியக் கட்டுரைகள், சமூக மட்ட அமைப்பிலுள்ள பல்வேறு துறைசார் நிபுணர்கள் மற்றும் அரசியலாளர்களின் செவ்விகள், திறனாய்வுகள் மற்றும் செய்திகள் உட்பட பலவிடய தானங்களை 2011ஆம் ஆண்டு முதல் தினகரன், சுடர்ஒளி, தினக்குரல், வீரகேசரி, ஆகிய செய்தித்தாள்களுக்கு எழுதி வந்த நிலையிலேயே எழுத்திலக்கியப் படைப்பாளர்களின் பகிர்வுகளை நேர்காணல் வடிவில் கொண்டுவர பிரயத்தனம் மேற்கொண்டார்.

இதன் விழைவாக பத்திரிகைகளின் வாரவெளியீடுகளில் எழுத்திலக்கிய ஆளுமையாளர்களின் நேர்காணல்கள் பிரசுரமாகி மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. ஆளுமையாளர்களின் இல்லம்தேடி அவர்களுடன் உறவாடி கேள்விக்கணைகளை தொடுத்து குரல் பதிவுகளை செய்வது முதல் வீடு வந்து ஒலிப்பதிவினை செவிமடுத்து ஒவ்வொரு வசனமாக கேட்டுக் கேட்டு அவற்றை தாள்களில் கையெழுத்தில் எழுதி தபாலில் அனுப்பியது முதல், காலப்போக்கில் தட்டச்சு செய்து மின்னஞ்சல் ஊடாக பத்திரிகை நிறுவனத்திற்கு அனுப்பும் காலமான இன்றுவரை எனது எழுத்துக்கள் தொடர்கின்றன. எழுத்துகளுக்கு பின்னால் சென்றதை விட எழுத்துகளே என்னை அழைத்துச் சென்று பாராட்டு கௌரவிப்பு விருதுகளை பெற்றுத்தந்தன எனவும் அவர் பதிவு செய்திருந்தார்.

பத்திரிகை நிறுவனத்தினர் தனது எழுத்தாக்கங்களை தொடர்ச்சியாக பிரசுரங்கள் செய்ததனாலேயே, எழுதவேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டதாகவும் வாராந்தம் தொடர்ச்சியாக செய்தித்தாள்களில் பிரசுரமாக வேண்டும் என்ற சிந்தையுமே இரவு பகல் பாராது பல்வேறு விடயங்களை எழுத தூண்டியது என்று சொல்லியிருக்கிறார் மோகனதாஸ், க.பொ.த உயர்தர கலைப் பிரிவு பாட பரீட்சைகளில் கட்டுரை வினாக்களுக்கு மிக ஆழமாக விரிவாக விடை எழுதிய காலங்களே எழுத்துத் துறைக்குள் காலடி பதிக்க உதவியாக இருந்தது.

ஈழத்து நவீன கலை இலக்கியப் வளர்ச்சிப் போக்கினை அறிந்து கொள்ளக்கூடிய வகையில் படைப்பாக்க ஆளுமைகள் எனும் நூல் தொகுப்பிலுள்ள நேர்காணல்கள் அவ்வாளுமைகளின் பிறந்த வருட அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளதனால் வரலாற்று ஆவணப் பதிவாக இந்நூல் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது.

படைப்பாக்க ஆளுமைகள் எனும் பெருந்தொகுதியில், கலையிலக்கியம் தொடர்பான கருத்தியல், அழகியல், படைப்பாக்க முறைமைகள், ஆளுமைகளின் வாழ்வியல், ஈழத்து கலையிலக்கிய வளர்ச்சிக்கு ஆளுமைகளின் பங்களிப்பு போன்ற இன்னோரன்ன விடயங்களில் தொடர்ச்சியான உரையாடல் வெளிக்கு அழைத்து செல்கிறது.

இந்நூலிலுள்ள நேர்காணல்கள் அனைத்தும் அறிவார்ந்த பெரியோர் பலரின் அனுபவத்திரட்டுகள் மட்டுமின்றி, இளையத் தலைமுறையின் அறிவுத் தேடல்களாகவும் இருப்பது கூடுதல் சிறப்பு.

எதிர்கால சந்ததிக்கு கேள்விச் சிக்கல்களை அவிழ்க்குமொரு இலக்கிய அமிர்தம்போல் இப்படைப்பும், மோகனதாஸின் நாமமும் நிலைத்திருக்கும் என்பதோடு, மறைந்த ஊடகவியலாளர் மோகனதாஸ் விட்டுச் சென்ற அழியாச் செல்வமும் இது எனலாம்.




தென்னிந்திய இசை ஜாம்பவான்களுக்கு சமர்ப்பணமாகும்

# சங்கீத மேகம் இன்னிசை நிகழ்வு

நீங்கள் தமிழ் சினிமாவின் இனிய பாடல்களை கேட்க ஆவலுடன் காத்திருக்கும் இசை பிரியரா இதோ தேனாக மனதை வருடும் பாடல்களுடன் இந்த நெருக்கடியான காலகட்டத்தைக் கடக்க, மே மாதம் 13 ஆம் திகதி அந்தி வேளையை எல்ஃபினிங்ஸ் டன் அரங்கிற்கு வருகைத் தந்து சங்கீத மேகமெனும் இன்னிசை நிகழ்வுடன் இணைந்துகொள்ளுங்கள். இவ்விசை நிகழ்வானது டோக்கியோ சிமெண்ட், அமிகா உணவகம் மற்றும் டெல்மேஜ் அனுசரணையுடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



சங்கீத மேகம் எனும் இசை நிகழ்வானது சௌந்தரி டேவிட்டின் ஏற்பாட்டில் தென்னிந்திய சினிமாவின் உன்னத இசை ஜாம்பாவான்களான இசைஞானி இளையராஜா, ஏ.ஆர்.ரகுமான், ஹரிஸ் ஜெயராஜ் மற்றும் ஏனைய இசையமைப்பாளர்களை கௌரவிக்கும் நோக்கில் இலங்கையின் இளம் திறமையாளர்களின் இனிய குரலிலும் இசை வித்திகர்களின் இன்னிசை நாதங்களிலும் ஓர் வித்தியாசமான முயற்சியாக நடைபெறவுள்ளது.

80 மற்றும் 90 ஆம் ஆண்டுகளில் தமிழ் இசை பிரியர்களின் நெஞ்சங்களை கவர்ந்த இளையராஜா மற்றும் ஏ.ஆர். ரகுமான் மற்றும் தமிழ் இசையமைப்பாளர்களின் இனிய வெற்றிப்பாடல்களை இசைக்க தயாராக உள்ளதுடன் சௌந்தரி டேவிட் அவர்களின் காதலில் எனும் மெல்லிசை பாடல்கள் மற்றும் தனித்துவமான இசை சங்கமத்துடன் சில உன்னத நினைவலைகளை மீட்டெடுக்கும் ஓர் நிகழ்வாகவும் அமையவுள்ளது குறிப்பிடத்தக்கது.

நம் நாட்டு திறமைகளை வரவேற்கும் ரசிகர்களுக்கு Vocie புகழ் பிரகாஷ் கேயின் உன்னத குரலில் புகழ்பெற்ற பாடல்களை இசையரங்கில் அரங்கேற்ற இருப்பதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் சௌந்தரி டேவிட்டால் இலங்கை இசைத்துறைக்கு மேகன் தாக்ஷினி ஷத்ருகன், அபினேஷ் ரவிச்சந்திரன், அமான் ரிஃபாய் மற்றும் தனுஜா ஜோசப் வர்கீஸ் ஆகியோர் அறிமுகப்படுத்தப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும். சங்கீத மேகம் இசை நிகழ்ச்சி சௌந்தரி டேவிட் ஏற்பாட்டில் கொழும்பு எல்ஃபினிங்ஸ்டன் அரங்கில் மே மாதம் 13 ஆம் திகதி மாலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது. டிக்கெட்டுகளை பெற்றுக்கொள்ள விரும்புவோர் *the Soul Sounds Academy* 57/2 கஸப்பா வீதி, ஜாவத்தை வீதி கொழும்பு 05 இல் பெற்றுக்கொள்ளலாம்.

# ஒரே மாதத்தில் உடல் எடையைக் குறைக்க

இரண்டே வாரத்தில் நீங்கள் விரும்பும் உடல் அமைப்பை பெற ஒரு இயற்கை வழியை தெரிந்து கொள்ளலாம்.

**பானம் தயாரிக்கும் முறை**

முதலில் மிக்ஸி ஜாரில் ஏழு கற்பூரவல்லி இலை, புதினா இலை இவற்றினை சுத்தம் செய்து போடவும்.

பின்பு ஐந்து தேக்கரண்டி தயிர் மற்றும் ஒரு தோல் சீவிய ஒரு அங்குலஅளவு இஞ்சி ஆகியவற்றை சேர்த்து கொள்ளுங்கள்.

இதில் கொஞ்சமாக தண்ணீர் ஊற்றி நுரை பொங்க அரைத்து கொள்ளவும். கடைசியில் அரை தேக்கரண்டி தேன் சேர்த்து பருகவும்.



யாழ். வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் வித்தியாலயத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து அதிக புள்ளிகள் பெற்றுக்கொண்ட மாணவர் ஒருவருக்கு துவிச்சக்கர வண்டி வழங்கப்பட்டது. துவிச்சக்கர வண்டியை யாழ் மாநகரசபை உறுப்பினரும் பூமணியம்மா அறக்கட்டளை தலைவருமான லயன் கலாநிதி நா.தனேந்திரன் தனது மனைவியின் 65ஆவது பிறந்தநாள் நினைவாக வழங்கினார்.

படம் – வேலணை குறூப் நிருபர்

# தகவல் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளுக்கு அங்கீகாரம்

சென்னை டைடல் பார்க்கில் ஜூன் 17 & 18 ஆம் திகதிகளில் பன்னாட்டு தமிழ் தகவல் தொழில்நுட்ப ஆராய்ச்சி கருத்தரங்கம் 'INTERNATIONAL TAMIL INFORMATION TECHNOLOGY RESEARCH CONFERENCE (ITITRC)' நடைபெற உள்ளது. அந்நிகழ்வில் இந்தியாவில் உள்ள பல்வேறு முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் கலந்து கொள்ள உள்ளன. இந்நிகழ்வில் மாணவர்கள் மற்றும் IT பணியாளர்கள், புதியதாக கண்டுபிடிக்கும் தகவல் தொழில்நுட்ப ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட உள்ளது. மேலும் புதிய தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளுக்கு அங்கீகாரம் வழங்கவும், தொழில் முனைவோர் ஆக்கவும் புதிய பதவிகளை பெறவும், கருத்தரங்கம் முன்னெடுக்க உள்ளது.

முன்னணி நிறுவனங்களின் முதன்மை செயல் அதிகாரிகள் 20 தலைப்புகளில் கருத்துரைக்க உள்ளனர். இந்நிகழ்வில் பள்ளி, கல்லூரி மாணவர்கள், மாணவிகள் பெற்றோர்கள் பார்வையாளர்களாக கலந்து கொள்ள உள்ளனர். மேலும் அண்ணா பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் சிறந்த 10 கல்லூரிகள், தன்னாட்சி பல்கலைக்கழகங்கள், வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள், கலந்து கொள்ள உள்ளன.




மேலும், இந்நிகழ்வில் தகவல் தொழில்நுட்பத்தில் உட்பிரிவுகளில் வேலைவாய்ப்பு கருத்தரங்கமும் வேலைவாய்ப்பு முகாம் போன்ற நிகழ்வுகளும் நடைபெற உள்ளன. இந்நிகழ்வில் தமிழக தகவல் தொழில்நுட்பத் துறை மற்றும் டிஜிட்டல் அமைச்சகத்தின் ஆலோசனையின்படி 'தகவல் தொழில்நுட்பத்தில்வளரும்தமிழகம்' என்ற தலைப்பில் கண்காட்சியும் நடைபெற உள்ளது, என உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் தலைவர் மற்றும் நிகழ்ச்சி ஏற்பாட்டுக் குழு தலைவர் செல்வகுமார் தெரிவித்தார்

இந்நிகழ்வில் பார்வையாளராக ஆராய்ச்சி கட்டுரைகளை பதிவேற்றம் செய்யவும் வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ளவும் www.ititrc.com என்ற வலைதளத்தில் பதிவு செய்யலாம்.

பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

# மத்தியவங்கி முறைமைக்கு மாற்றாக நாணயசபை முறையை கொண்டு வரலாம்

**இலங்கை ரூபாவின் உள்நாட்டுப் பெறுமதியும் வெளிநாட்டுப் பெறுமதியும் மிகக் குறுகியகால இடைவெளியில் மிகப்பெரிய சரிவைச் சந்தித்துள்ளன. நாட்டில் உள்நாட்டுப் பண வீக்கம் 50 சதவீதத்தை விட அதிகம் என்று வெளிநாட்டு நாணயவியல் அறிஞர் ஒருவர் கூறுகிறார்.**

அண்மைக்காலம் வரை 203 ரூபாவுக்கு கட்டுப்படுத்தி வைக்கப்பட்டிருந்த டொலரின் உத்தியோகபூர்வ பெறுமதி வார இறுதியில் 370 ரூபாவை எட்டியிருந்தது. இவ்வாறு முன்னொருபோதும் இலங்கை ரூபாவின் பெறுமதி தேய்வடைந்து சென்றதில்லை. நாட்டில் கையாளப்பட்ட விவேகபூர்வமற்ற பணக் கொள்கையும் அரசிறைக் கொள்கையும் ஒருங்கிணைந்து இவ்வாறானதொரு மோசமான நிலைக்குத் தள்ளிவிட்டிருக்கின்றன.

அரசாங்கத்தின் பிரபலமான பாதீட்டுக் கொள்கைகளும் பாதீட்டு இடைவெளியை நிரப்பீடு செய்வதற்காக அரச பிணையங்களைப் பயன்படுத்தி ரூபாவை கட்டுப்பாடற்ற விதத்தில் அச்சிட்டு வெளியிட்டமையும் நாட்டின் வெளிநாட்டுச் ஒதுக்குகளில் கணிசமான வெளியேற்றத்தை ஏற்படுத்தின.

இன்றைய சூழலில் ஒதுக்குகள் இல்லை என்னும் நிலைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது. இந்தியா மட்டும் கைகொடுக்காமல் விட்டிருக்குமாயின் நாட்டின் நாளாந்த மக்கள் வாழ்க்கை இதைவிட மோசமானதாக இருந்திருக்கும். இன்றும் கூட தமிழ் நாட்டு அரசு இலங்கை மக்களின் அவலத்தை தணிக்கும் விதத்தில் பண உதவிகளையும் பொருளுதவிகளையும் செய்ய முன்வந்துள்ளமை தமிழ்நாட்டை கேவலமாக சித்தரித்த தென்னிலங்கை மக்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் ஒரு பாடமாக இருக்கும்.

ரூபாவின் பெறுமதி தொடர்ந்தும் அழுத்தங்களுக்கு உட்பட்டுவரும் நிலையில் அதன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பெறுமதிகளை நிலைப்படுத்துவதற்கு மத்தியவங்கி நாணயசபை (currency board) என்ற முறைமையினைக் கொண்டுவர வேண்டும் என ஜோன் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கைதேர்ந்த நாணயவியல் நிபுணரான ஸ்டீவ் ஹென்கி (Steve Hanke) கூறுகிறார். இலங்கைவிட மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த நாடுகளில் கூட இந்த முறைமை சிறப்பாகச் செயற்பட்டு நெருக்கடியிலிருந்து மீட்சி பெற உதவியதாக அவர் கூறுகிறார்.

இதே கருத்தையே இலங்கை மத்திய வங்கியின் முன்னைநாள் பிரதி ஆளுநராக இருந்த விஜயவர்தனவும் வழிமொழிகிறார். உண்மையில் 1950இல் இலங்கை மத்திய வங்கி ஆரம்பிக்கப்பட முன்பு 1884 தொடக்கம் 1950 வரை இலங்கையில் நாணய சபை முறைமையே நடைமுறையில் இருந்ததாகவும் சிறப்பாகச் செயற்பட்டதாகவும் அவர் குறிப்பிடுகிறார்.

இந்த முறைமையின் கீழ் மத்திய வங்கியால் தான் விரும்பியபடி அல்லது அரசாங்கம் விரும்புகின்றபடி கையை வீசி உள்நாட்டு நாணயத்தை அச்சிட்டு வெளியிட முடியாது. நூறு சதவீதம் சொத்து ஒதுக்குகளை அடிப்படையாகக் கொண்டே நாணயத்தை அச்சிட்டு வெளியிட முடியும்.

உதாரணமாக, முதலில் உள்நாட்டு நாணயத்தை வெளிநாட்டு கடினநாணயம் ஒன்றுடன் நிலையான விதத்தில் இணைக்க வேண்டும். பின்னர் அந்த நாணயத்தில் மத்திய வங்கியில் உள்ள ஒதுக்குகளின் பெறுமதிக்கு ஏற்ப உள்நாட்டு நாணயத்தை அச்சிட்டு வெளியிட வேண்டும். குறித்த வெளிநாட்டு நாணயம் நாட்டுக்கு உள்வரும் போதும் வெளிச் செல்லும் போதும் ஏற்படும் தேறிய மாற்றங்களுக்கேற்ப நாணய ஒதுக்குகளில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப உள்நாட்டு நாணயத்தின் அச்சடிப்பு இடம்பெறும்.

நாட்டின் வெளிநாட்டு சொத்து ஒதுக்குகள் என்பதற்குள் வேறுநாடுகளின் அரசாங்கங்கள் வெளியிடும் பிணையங்கள் இருக்கலாம். ஆனால் உள்நாட்டு அரசாங்கத்தின் பிணைமுறிகளை இதில் உள்ளடக்க முடியாது. அதாவது இலங்கை அரசாங்கம் இப்போது செய்வதைப்போல பிணைமுறிகளை மத்திய வங்கிக்கு வழங்கி பணத்தை அச்சிட்டு வெளியிட முடியாது.

இலங்கை வெளிநாடுகளுடன் மேற்கொள்ளும் கொடுக்கல் வாங்கல்களில் மிகைநிலையொன்று ஏற்பட்டால் உள்நாட்டுப் பணத்தை அச்சிட முடியும். ஏற்றுமதிகளை அதிகரித்தல் வெளிநாட்டு நேரடி முதலீடுகளைப் பெற்றுக்கொள்ளல் வெளிநாட்டில் இருந்து வரும் மானியங்கள் உள்ளிட்ட ஏனைய பண உள்வருகைகள் அதிகரித்தாலேயன்றி நாட்டின் பண அச்சடிப்பின் மூலம் மத்திய வங்கியிடமிருந்து கடனைப்பெற்று தங்களின் கனவுத் திட்டங்களையும் வெள்ளை யானைகளையும் வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக நிதிப்படுத்த முடியாது.



சுருக்கமாகச் சொன்னால், அரசாங்கத்திற்கு அரசிறை நிதி ஒழுக்கம் (fiscal discipline) பற்றிக் கற்பிப்பதற்கு இதைவிட சிறந்த கருவி இருக்க முடியாதென மேலே குறித்த நிபுணர்கள் கூறுகின்றனர். நாட்டின் நாணயமாற்று வீதம் அமெரிக்க டொலர் போன்ற ஒரு கடின நாணயத்துடன் இணைக்கப்பட்டிருப்பதால் அதன் பெறுமதியில் நிலைபேறுடைய தன்மை உருவாகும். வணிகர்களும் நிச்சயத்தன்மையுடன் தமது வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். பணநிரம்பல் கட்டுப்படுத்தப்படுவதால் பணவீக்கம் ஏற்படுவதும் தடுக்கப்படும்.

பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்றதன் பின்னர் சிங்கப்பூர் போன்ற நாடுகள் நாணயசபை முறைமையினையே பின்பற்றின. இதன் மூலம் நாட்டின் நிதித்துறையில் ஏற்படும் தளம்பல்களைக் கட்டுப்படத்தக் கூடியதாக இருந்தது. ஆனால் இலங்கையில் வெளிநாட்டு நாணயங்களின் அழுத்தங்கள் இன்றி சுயமாக நாட்டின் பொருளாதாரத்தை நிர்வகிக்க மத்தியவங்கி முறைமையே சிறப்பானது என அப்போதிருந்த அரசியல்வாதிகள் நினைத்தபடியினாலேயே புகழ்பெற்ற மத்திய வங்கியாளரான ஜோன் எக்ஸ்டரின் (John Exter) வழிகாட்டலுடன் 1950இல் இலங்கை மத்திய வங்கி தாபிக்கப்பட்டது. ஆனால் இலங்கை ரூபாவின் உள்நாட்டுப் பெறுமதியும் வெளிநாட்டுப் பெறுமதியும் தொடர்ந்தும் தளம்பல்களை எதிர்நோக்கியது.

> “மத்திய வங்கியின் சுதந்திரம் (central bank independence) மிக மோசமாக மீறப்பட்டிருக்கிறது. குறித்த காலத்தில் பதவியில் இருக்கும் அரசாங்கம் தமது அரசியல் பிரபலம் கருதி அதிக செலவினங்களை மேற்கொள்ளும்போது மத்திய வங்கியே அதற்கான நிதி வசதிகளையும் ஏற்படுத்தித்தர வேண்டியுள்ளது.”

குறிப்பாக 1977இன் பின்னர் இந்தத் தளம்பல்கள் மிகத் தீவிரமானதாக அமைந்ததுடன் மத்திய வங்கி ஒரு சுயாதீனமான நிறுவனமான தனது நாணயக்கொள்கை தொடர்பான தீர்மானங்களை எடுக்க முடியாமல் போனது. அரசியல் தலையீடுகள் காரணமாக பதவியில் இருக்கும் அரசாங்கத்தின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப செயற்படவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதிலும் மத்திய வங்கியின் ஆளுநர் அரசியல் நியமனமாக இருக்கிறபடியினால் தாளத்திற்கு ஆடும் ஒருவரே தலைமைப்பொறுப்பிற்கு நியமிக்கப்படுவதை காண முடிகிறது.

மத்திய வங்கியின் சுதந்திரம் (central bank independence) மிக மோசமாக மீறப்பட்டிருக்கிறது. குறித்த காலத்தில் பதவியில் இருக்கும் அரசாங்கம் தமது அரசியல் பிரபலம் கருதி அதிக செலவினங்களை மேற்கொள்ளும் போது மத்திய வங்கியே அதற்கான நிதி வசதிகளையும் ஏற்படுத்தித்தர வேண்டியுள்ளது. பிழையெனத் தெரிந்து அதிகாரிகள் குரலெழுப்பினாலும் அது செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருந்திருக்கிறது. கடந்த காலத்தில் அச்சட்டு வெளியிடப்பட்ட நாணயத்தின் அளவு இதற்கு நல்லதோர் உதாரணம்.

இன்றைய நிலையில் ரூபாவின் பெறுமதி இதைவிட மிக மோசமாக தேய்ந்து செல்லும் அபாயநிலையில் ரூபாவின் பெறுமதியை நிலைப்படுத்தி பொருளாதார சரிவை தடுத்து நிறுத்த வேண்டுமானால் நாணய சபை முறைமைக்கு மாறுவது புத்திசாலித்தனமானது. நாட்டின் சுதந்திரம் பாதிக்கப்படுகிறது இறைமை பாதிக்கப்படுகிறது என்று வழமையான புலம்பல்கள் எழும். ஆனால் உள்நாட்டுத் தீர்வுகள் (home grown solutions) ஒவ்வொன்றாகத் தோல்வியடைந்துவரும் கையறுநிலையில் நடைமுறைச் சாத்திய மான தீர்வுகளை நோக்கி நகர்வது நல்லது.

---




கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

# நரேந்திர மோடியின் ஐரோப்பிய விஜயம் ரஷ்ய–உக்ரைன் போரை நிறுத்துமா?

**இந்தியப் பிரதமரது ஐரோப்பிய விஜயம் அதிக அரசியல் முக்கியத்துவத்தை சமகாலத்தில் ஏற்படுத்தியுள்ளது. ரஷ்ய உக்ரைன் போர் முடிவுறாத சூழலில் ரஷ்யாவினதும் அதே நேரம் மேற்கினதும் நட்பு நாடான இந்தியாவின் பிரதமர் ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டமை அதிக அரசியல் முக்கியத்துவத்தை தந்துள்ளது. மூன்று நாள் ஜேர்மனி பிரான்ஸ் மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு இந்தியப் பிரதமர் பயணம் செய்துள்ளார். இந்தியாவின் அரசியல் பொருளாதார மற்றும் இராணுவம் சார்ந்து ஐரோப்பிய இந்திய உறவைப் பலப்படுத்தும் நோக்கிலானதாக அமைந்தாலும் ரஷ்யா உக்ரைன் போர் தொடர்பிலான செய்தியையும் அவரது விஜயம் ஐரோப்பியருக்கு உணர்த்துவதாக அமைந்திருந்தது. இக்கட்டுரையும் இந்தியப் பிரதமரது ஐரோப்பிய நாடுகளுக்கான பயணம் ஏற்படுத்தியுள்ள அரசியல் தாக்கங்களைத் தேடுவதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.**

ஜேர்மனி க்கு இந்தியப் பிரதமரது விஜயத்தின் போது பெரும் உலகத் தலைவரை வரவேற்றது போன்று அமைந்திருந்தது. இராணுவ அணிவகுப்பு மரியாதையும் இந்தியப் பிரதமருக்கு ஜேர்மனிய ஆட்சியாளர்களால் வழங்கப்பட்டது. அவ்வாறே டென்மார்க் பிரான்ஸ் நாட்டுத் தலைவர்களால் இந்தியப் பிரதமர் உலக முதல்தலைவராக கருதப்படுமளவுக்கு வரவேற்பளித்தனர். இந்நாடுகளில் தலைவர்களுடன் உரையாடியதுடன் பொருளாதார ரீதியிலும் வர்த்தக அடிப்படைகளிலும் அதிக முக்கியத்துவம் கொடுத்ததோடு பாதுகாப்பு ஒத்துழைப்பினை அதிகரிக்கும் நோக்கிலும் இந்தியப் பிரதமரது உரையாடல் அமைந்திருந்தது. அது மட்டுமன்றி டென்மார்க் பிரதமருடனான சந்திப்பின் போது 'உக்ரைன் போர் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். பிரச்சினைக்கு பேச்சு மூலம் தீர்வு காணப்பட வேண்டும். உக்ரைனில் நிலவும் மனிதாபிமானப் பிரச்சினை கவலையளிகிறது. ஐ.நா. விதிகள் மற்றும் சர்வதேச விதிகளுக்கும் மற்றைய நாடுகளின் இறையாண்மைக்கும் மதிப்பளிக்க வேண்டும்' என்று குறிப்பிட்டார். அதேபோன்று ஜேர்மன் பிரதமரான ஓலப் ஸ்கால்சை உடனான சந்திப்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது 'உக்ரைன்-ரஷ்யாவுக்கும் இடையிலான போரில் யாரும் வெற்றியடையப் போவதில்லை. இந்தப் போரில் அனைவரும் கடுமையான பாதிப்புகளை சந்திக்க நேரிடும் அதனால் தான் அமைதியின் பக்கம் இந்தியா நிற்கிறது' என்று தெரிவித்தார். இவ்வாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் உரையாடல்கள் வெளிப்படுத்தும் அரசியல் புரிந்து கொள்ளப்பட வேண்டியது.



முதலாவது, இந்தியப் பிரதமரது ஐரோப்பிய விஜயத்திற்கு பின்னால் வலுவான அம்சம் ஒன்று காணப்படுகிறது. இந்தியாவின் ரஷ்யா பற்றிய அணுகுமுறையிலுள்ள அடிப்படையான விடயமே அதுவாகும். அதாவது ரஷ்யாவுடனான உறவு இந்தியாவுக்கு முதன்மையானது என்பதை உக்ரைன் ரஷ்யப் போரில் இந்தியா தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது. இந்தோ பசுபிக் தந்திரோபாயம் மற்றும் குவாட் அமைப்பு போன்றவற்றில் இந்தியாவை மேற்கு முதன்மைப்படுத்தினாலும் இந்தியா தெளிவான வெளியுறவுக் கொள்கையாக ரஷ்யவை நோக்கியதென்பதை மேற்குலகத்தின் எச்சரிக்கைகளுக்கப்பால் நிலைநிறுத்தியுள்ளது. அதனால் இந்தியாவை மேற்குலகம் வளைத்துப் போடும் உபாயத்தை அதிகம் ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது. குறிப்பாக இந்தியா நோக்கிய ஜப்பான் அவுஸ்ரேலியா பிரித்தானியா மற்றும் அமெரிக்க போன்ற நாடுகளின் தலைவர்கள் இராஜதந்திரிகள் பயணங்கள் தொடராக இந்தியா நோக்கி முதன்மைப்படுத்தப்பட்டன. அவ்வாறே முதலீடுகளும் வர்த்தக நடவடிக்கைகளும் அதிகரிக்கும் உபாயங்களாக இந்தியாவுடன் மேற்கொள்ள முயன்றன.

இரண்டாவது, இத்தகைய மேற்குலகத்தின் நகர்வுக்கு பதிலளிக்கும் விதத்திலேயே இந்தியப் பிரதமரது ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயம் அமைந்துள்ளது. ஆனால் இந்தியப் பிரதமர் குவாட் நாடுகளை தவிர்த்தே இந்த விஜயத்தை திட்டமிட்டுள்ளார் என்பது கவனத்திற்குரியதாகும். இது இரு தரப்பினது இராஜதந்திர அணுகுமுறையாகவே தெரிகிறது. அதாவது இந்தியா குவாட் நாடுகளைத் தவிர்த்துள்ளது எனக் குறிப்பிட்டாலும் அதே அணுகுமுறையுடைய நாடுகளை நோக்கியே நரேந்திர மோடி நகர்ந்துள்ளார். அப்படியாயின் அமெரிக்கா தலைமையிலான குவாட் அணி ஐரோப்பாவுக்குள்ளால் இந்தியாவை கையாள முனைகிறதாகவே விளங்கிக் கொள்ள வேண்டியுள்ளது. ஆனாலும் ஐரோப்பாவுக்குள் அதிக முக்கியத்துவம் உடைய அதேநேரம் அமெரிக்காவுடன் அவ்வப்போது முரண்பாட்டைக் கொண்டுள்ள மறுபக்கத்தில் ரஷ்யாவுடன் பொருளாதார உறவை பேணவிரும்புகின்ற நாடுகளான ஜேர்மனி டென்மார்க் பிரான்ஸ் போன்ற தேசங்களுக்கு இந்தியப் பிரதமர் பயணம் செய்துள்ளார் என்ற புரிதலும் தவிர்க்க முடியாதது.

மூன்றாவது, இந்தியப் பிரதமர் ஐரோப்பாவில் நின்று கொண்டு ரஷ்ய-உக்ரைன் போரில் இரு நாடுகளுமே வெற்றி கொள்ள முடியாது எனவும் தெரிவித்ததுடன் இந்தியாவின் நடுநிலைத் தன்மைக்கான காரணங்களை ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தியுள்ளார். இன்னோர் வகையில் பார்த்தால் இந்தியாவை நடுநிலையுடைய நாடாக்குவதில் மேற்குலகம் அதிக வெற்றியை எட்டியுள்ளமை தெரிகிறது. ஆனால் இந்தியா எப்போதும் நடுநிலையை ஒரு கொள்கையாகக் கொண்டது என்பது யதார்த்தமானதே. இந்தியாவின் நடுநிலையானது ரஷ்யாவுக்கு உக்ரைனுடனான போரில் எதிர்கொண்டதை விட அதிக தோல்வியாகவே தெரிகிறது. ரஷ்யா சீனா மற்றும் இந்தியா ஓரணியில் அமையுமாயின் மேற்குலகத்திற்கு அதிக நெருக்கடியாக அமைந்திருக்கும். அதனைக் கடந்து இந்தியா நடுநிலமை வகிப்பதென்பது இந்தியாவுக்கும் மேற்குலகத்திற்கும் இலாபகரமானதே..


நான்காவது, இவ்வகை விஜயம் இந்தியாவை வலுவான தேசமாக்குவதன் பெயரில் மேற்குலகிடம் முழுமையாக தங்கியிருக்கச் செய்வதாக அமைந்துவிட வாய்ப்பு அதிகம். அதாவது இந்தியாவை கௌரவப்படுத்துவதன் மூலம் மேற்குலகத்தின் சந்தை வாய்ப்புக்களை தக்கவைப்பதுடன் ரஷ்யாவுக்கும் இந்தியாவுக்குமான பொருளாதார உறவை தகர்க்க முடியும் என்பதே மேற்கின் பிரதான உபாயமாகும். அவ்வாறே இந்தியப் பிரதமரும் ஐரோப்பாவுடனான வர்த்தக நடவடிக்கையை இறுதி செய்ய வேண்டும் எனவும் இந்தியப் பொருட்களுக்கான சந்தைக்காக ஐரோப்பா திறந்துவிட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். அதுமட்டுமல்லாது பாதுகாப்புத் துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்த வேண்டும் எனவும் இந்தியப் பிரதமர் வலியுறுத்தியிருந்தார். இது இந்தியாவின் உபாயமாகவே தெரிகிறது. தற்போதைய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு ஐரோப்பாவுடன் பொருளாதார மற்றும் பாதுகாப்பு விடயங்களில் நெருக்கமான உறவை நிலைப்படுத்துவதே நரேந்திர மோடியின் தந்திரோபாயமாக தெரிகிறது. ஏற்கனவே பிரான்ஸிடமிருந்து ரம்போல் போர் விமானங்களை இந்திய எல்லையோரப் பாதுகாப்புக்காக கொள்வனவு செய்துள்ளது. தொடர்ந்தும் ஐரோப்பாவுடன் நெருக்கமான பாதுகாப்பு ஒத்துழைப்பை உருவாக்க முயலுகிறது.

ஐந்தாவது, இந்தியப் பிரதமர் பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பில் ஐரோப்பாவுக்கு அழைப்பு விட்டதன் நோக்கம் தனித்துவமானதாகவே தெரிகிறது. குறிப்பாக அமெரிக்கா வெளிப்படையாக பாதுகாப்பு ஒத்துழைப்பை இந்தியாவுடன் மேற்கொள்ள தயாராக இருப்பதாக அறிவித்துள்ளது. ரஷ்யாவின் ஆயுத தளபாடங்களை கொள்வனவு செய்வதை கைவிட்டு அமெரிக்காவிடம் ஆயுதங்களை கொள்வனவு செய்யுமாறும் அமெரிக்கா வெளிப்படையாக இந்தியாவைக் கேட்டிருந்தமை கவனத்திற்குரியதாகும். ஆனால் இந்தியா அமெரிக்காவை விட ஐரோப்பாவை நோக்கி நகர்ந்திருப்பது ரஷ்யா சார்ந்ததாக அமையும் என்றே கருதப்படுகிறது. இந்தியப் பிரதமர் ரஷ்ய உக்ரைன் போர் தொடர்பில் புலம்பெயர்ந்த இந்தியர் மத்தியலும் மேற்படி மூன்று நாட்டுத் தலைவர்கள் மத்தியிலும் போரை தவிர்க்குமாறு கேட்டிருந்தமை கவனத்திற்குரியதாகும். குறிப்பாக ரஷ்ய உக்ரைன் போரில் அனைவரும் கடுமையான பாதிப்பை சந்திக்க நேரும் என எச்சரிக்கைப் பாணியில் செய்தி வெளியிட்டார்.

எனவே இந்தியப் பிரதமரது மூன்று நாடுகளுக்கான ஐரோப்பிய விஜயம் அதிக முக்கியத்துவத்தை ஏற்படுத்தியுள்ளது. உலகளாவிய ரீதியல் இந்தியாவினதும் ஐரோப்பியத் தலைவர்களதும் உபாயத்தை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்ததுடன் ரஷ்யாவுடனான இந்திய உறவை நியாயப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது. அதேநேரம் ஆபத்தான ஐரோப்பாவை எதிர் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உக்ரைன் மீதான போரால் ஏற்படும் என்பதை மறைமுகமாக மோடி ஐரோப்பியத் தலைவர்களுக்கு தெரிவித்துள்ளார். அதனால் போரை தவிர்க்க முயலுவது அவசியம் என்பதை கோடிகாட்டியுள்ளதையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். வர்த்தகம் சந்தை பாதுகாப்பு என்ற விடயங்களை மோடி முதன்மைப்படுத்தினாலும் ரஷ்ய உக்ரைன் போரே முதன்மையானது என்பதை தெளிவாக ஐரோப்பியத் தலைவர்களுக்கு இந்தியப் பிரதமர் உணர்த்தியுள்ளார்.



# மஞ்சரி தினகரன் வாரமஞ்சரி களஞ்சியம்



## வாழ்வாதாரமா சேதாரமா 222



தமிழ்க் கவி பேசுகின்றார்

# கடைகளில் நிலவும் தட்டுப்பாடு வலிந்து உருவாக்கப்படுவதே



மனிதர்கள் கற்காலத்தை நோக்கிப் போக வேண்டிய தேவை ஏற்பட்டது, ஒரு காலம். ஆயிரத்து தொளாயிரத்து தொன்னூற்று ஒன்று ஆரம்பித்த போது வடமாகாணத்தின் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு மண்ணெய் சவர்க்காரம் மின்கலன்கள் பெற்றோல் ஓயில் யூரியா அமோனியா பசளை வகைகள் போன்ற பொருட்களும் அத்தோடு சேர்த்து மிதிவண்டிகள் அதன் உதிரிப்பாகங்கள் ஏதும் வரவில்லை. சும்மாவே மக்களுக்கு இவை வெடிகுண்டுகள் செய்யப் பயன்படும் பொருட்கள் என்பது தெரிந்து போயிற்று.

அப்போது இலங்கை ராணுவத்திலும் போர்க்கலங்கள் என பெரிதாக எதுவும் இல்லை. ஏன் போர் விமானங்களே இல்லை. பயணிகள் விமானம் உலங்குவானூர்திகள் என்பனவே இருந்தன என நினைக்கிறேன். இவர்களிடம் உலங்கு வானூர்தியிலிருந்து சுட முடியும். அல்லது பெற்றோல் அடைத்த ஜாம் போத்தல்களை வீச முடியும். ஆனால் விமானத்திலிருந்து பீப்பாக்குண்டுகளை உருட்டித்தள்ள முடியும். கீழே விழுந்து வெடித்த பீப்பாக்களிலிருந்து கழிவுப்பொருட்கள் மனிதமலம் உட்பட சிதறுவதும் தீப்பிடித்து எரிவதும் உண்டு.

நேராக தலையில் விழுந்தால் ஒழிய உயிர்ச்சேதம் குறைவாகவே இருக்கும். சொத்தழிவுகள் இருந்தன. கதை இப்படி இருக்க, குண்டு விழுந்த இடங்களுக்கு வேடிக்கை பார்க்க மக்கள் விரைந்து செல்வர். நானும் போயிருக்கிறேன். வாயைப்பிளந்து கொண்டிருந்த பீப்பாவில் சன்லைட் சோப்போல ஏராளமான சோப்வகைகள் இருக்கும் . சைக்கிள் போல்ஸ் இரும்புத்துருவல்கள் என அன்றாடம் நாம் ஏங்கிக் கொண்டிருந்த பொருட்கள் இருக்கும். ஆனால் அச்சத்தில் நாம் அருகில் போவதில்லை.

இந்த சவர்க்காரம் மக்களுக்கு ஒரு திரவியப் பொருளாகத்தான் இருந்தது. வடபகுதிக்கும் தென்பகுதிக்குமான கடவைப்பகுதியில்.... அது மாறி மாறி வரும். முதல் தாண்டிக்குளம் பின்னர் பறன்நாட்டகுளம் பிறகு மணியந்தோட்டம் பிறகு ஓமந்தை என மாறி மாறி வந்திருக்கிறது. இந்தப்பகுதி ராணுவ சோதனைச் சாவடியில் நின்றவர்கள் வடபகுதி மக்களிடம் பிடுங்கிப் போட்ட சவர்க்காரங்களை அவர்களது ஆதரவாளர்கள் அள்ளிச் செல்வர்.

சவர்காரமில்லாத வாழ்க்கை எப்படி இருந்தது குளங்களில் பெரும்பாலும் குளிப்பதும் துவைப்பதும் மக்கள் வழக்கம். அடிக்குளத்து களிமண் தலைக்கு வைத்து கசக்கி முழுகினால் தலை அழுக்கு நீங்கி பஞ்சு போல இருக்கும். உடலுக்கு பாசிப்பயறுமா அது முடியதவர்கள் சாம்பூ போட்டும் குளிப்பர். தோல் நாராகிவிடும்.

ஒரு தடவை செட்டிகுளம் எல்லை வழியாக ராணுவம் முன்னேறியது. மடுப்பகுதியை கைப்பற்றும் நடவடிக்கை அது போராளிகள் தரப்பில் போதியளவு பதுங்குகுழிகள் அமைக்க மனிதவளம் இல்லை. எனவே போராளிகள் மக்களை அந்தப்பணிக்காக முதல் நாள் கஷ்டப்பட்டுத் திரட்டி கொண்டு சென்றனர். மாலை நான்கு மணிக்கெல்லாம் வேலை முடித்து அவர்களை உழவு ஊர்திகளில் ஏற்றி வந்து தட்சணாமருத மடுக்குளத்தில் குளிக்க விடுவார்கள். சும்மாவல்ல ஓவ்வொருவருக்கும் ஒரு சவர்க்காரக்கட்டி வழங்கப்படும். இந்த சவர்க்கார விவகாரம் மக்களிடையே தீ போலப்பரவியது. மறுநாள் எந்த நிர்ப்பந்தமுமின்றி நான் நீயென்று போட்டி போட்டுக்கொண்டு பங்கர் வெட்டப் புறப்பட்டனர் மக்கள். பங்கர் வெட்டிக்கொண்டிருக்கும் போது எறிகணைகள் வரலாம் என்ற பயத்தை சவர்க்காரம் கரைத்துப் போட்டது.

மீண்டும் இந்த சவர்க்காரத்தடை எமக்கு புதிய அல்ல பாரம்பரிய காலத்து வழமைகளை மீட்டும் தந்தது. வெடுக்குநாறி மரத்தின் படுகிளைகளை எரித்து அதன் சாம்பலை கரைத்து அதில் துணிகளை ஊறவைத்து துவைத்து பளிச்சிட வைப்போம். தேங்காய் உரித்த மட்டைகளை எரித்து அதன் சாம்பலை நீரில் கரைத்து உடைகளை துவைத்திருக்கிறோம் இவற்றை பெருமளவாக செய்து தன் சலவைத் தொழிலை செய்த ஒருவரே எமக்கு இந்த ஆலோசனையை தந்தவர். ஆயிற்றா? பனம்பழங்கள் பழுக்க ஆரம்பித்ததும் பனம்பழத்தின் தோலை நீரில் ஊறவைத்து அலசி அந்த நீரில் துணிகளை ஊறவைத்து துவைத்திருக்கிறோம். இது தவிர சவர்க்காரக்காய் என அழைக்கப்படும் இரணைக் காய்ப்பழங்களை கொண்டுவந்து அவற்றை உரலில் இடித்து நீரில் கரைத்தால் சலவைப் பவுடர் போல நுரை பொங்கிவரும். அது உடைகளையும் பாத்திரங்களை கழுவவும் சேகரிப்போம். இந்தக்காய்களே நகைகளை சுத்தம் செய்ய பத்தர்களும் உபயோகித்தார்கள். இப்போது இந்த மரம் எங்காவது தென்படுகிறதா என தேடிப்பார்க்கிறேன். கண்ணில் படவேயில்லை.

இப்போது என்ன நடந்து விட்டது. சவர்க்காரம் விலை உயரப்போகிறது என்றொரு செய்தி. செய்தி கிடைத்த மறுநாளே எந்தக்கடையிலும் சவர்க்காரம் இல்லாமல் போய்விட்டது. பெட்டி பெட்டியாக சவர்க்காரக் கொள்ளையர்கள் அள்ளிச் செல்ல கடைக்கரார்கள் தேமேயென்று கொடுத்தும் அனுப்பியிருக்கிறார்கள் தட்டுப்பாட்டை உணர்ந்த யாழ் வர்த்தகர்கள் ஒருவருக்கு ஒன்று என்ற வகையில் விற்றதான செய்தியும் கிடைத்திருக்கிறது.

நறுமணம் கமழ வாசனை சுகந்த வகைகளையும் பூசிக்கொண்டு நான் பவனிவர, அன்றாடம் உழைத்து அந்தப்பணத்தில் அன்றைய தேவைக்கு பொருட்களை வாங்கும் ஏழை தான் வேலை செய்து வேர்வை வடிந்த அந்த களைப்பை கறையை போக்க சவர்க்காரம் வாங்கக் கூடாது. நான் இந்த வருடம் முழுதும் குளிக்க இப்பவே வாங்கிக் குவித்து விடும் அந்த ஆசைக்குப் பெயர் கெட்டித்தனமல்ல திருட்டு. மற்றவர் வாழக்கூடாது என்ற கெடுபுத்தி அல்லாமல் வேறென்ன. ஒருவன் பசிகிடக்க நேருமே என்ற பயத்தில் உணவுப் பொருளை சேகரிக்கலாம் அதில் தவறில்லை. ஏனெனில் முள்ளிவாய்க்கால் எமக்கு அந்தப்பயத்தை எச்சரிக்கையை தந்திருக்கிறது. இந்தப் பொருட்களைக்கூட..?! மேல் நாடுகளை கொரோனா ஆக்கிரமிக்க தொடங்கிய நேரம் அங்கும் இதேபோல பெரிய இடர்ப்பாடுகளை எதிர் நோக்கிய மக்கள் உணவுப் பண்டங்களை விட மலசலகூடத்துக்கான பேப்பரை அதிக அளவில் கொள்வனவு சேர்த்தார்களாம். கடைகளில் தட்டுப்பாடு நிலவிய பொருள் அதுதான். நல்ல வேளையாக நமக்கு அந்த நிலை இல்லை. நாம் இன்னும் நீரைத்தான் பயன்படுத்துகிறோம்.

அநேகமாக பணம் படைத்தோர் தாம் மட்டும் வாழ்ந்தால் போதும் என்ற மன நிலையில் இருப்பது இயல்பு. ஆனால் இவர்களுக்கு தொண்டு செய்யவும் வேறு மனிதர்கள் தேவை என்பதை இவர்கள் நினைப்பதில்லை.கடைகளில் பொருட்கள் தட்டுப்பாடு நிலவுவது உண்மைதான் ஆனால் அந்த தட்டுப்பாடு வலிந்து உருவாக்கப்படுவதுதான். முடிந்த அளவுக்கு பொருட்களை வாங்கி சேர்க்கும் மனோநிலையில் புதிய பொருட்களை இழக்கும் அபாயமும் உள்ளது. எனக்கு தெரிந்து கொரோனா காலத்தில் ஒருவர் களஞ்சியப்படுத்திய வெங்காயம் பூடு என்பன முளைகட்டியதால் அவற்றை அவர் நட்டு நீர்பாச்சிக் கொண்டிருந்தார் உற்பத்தி என்னவாயிற்றோ தெரியவில்லை. இதெல்லாம் தேவையா?

கடைகளில் சகல நோய் நிவாரணியாக கருதப்படும் நோவு நிவாரணிகள் இல்லை. வராத நோய்க்கும் வந்தால் என்ன செய்வது என்ற பயத்தில் மருந்துகளை வாங்கி சேகரித்துள்ளனர். எனக்கு தெரிந்தவர் ஒருவர் என்னை சந்தையில் கண்டபோது சொன்னார். தான் பெரியளவில் தேவையான மருந்தெல்லாம் சேகரித்துவிட்டதாகவும் இனிப்பயமில்லை என்றார். இனித்தான் பயமே உள்ளது என்றேன் நான்.

ஏன்?;. இனி முணுக்கென்றவுடன் நீயே டொக்டராகி தேவையில்லாத குளிசைகளையும் போடப்போகிறாய் வேறென்ன ? என்றேன். மனிதர் அசந்து போனார். அட நானானாலும் பரவாயில்லை பிள்ளைகள் கையில் அகப்பட்டால்... என யோசித்தார். நாம் ஒன்றை மறக்கக் கூடாது 'தீதும் நன்றும் பிறர்தரவாரா'

## அன்னையின் அன்பு தனித்துவமானதே

அன்னையர் தம் பிள்ளைகளின் மீது வைத்திருக்கும் அன்பை அளவிட முடியாது. அந்த அன்பு மிகவும் தூய்மையானது. அவர்கள் எப்போதுமே தமது குழந்தைகள் மீது நிபந்தனையற்ற அன்பை வைத்திருப்பர்.

அன்னையர் அவர்தம் பிள்ளைகளுக்கு மற்றும் குடும்பங்களுக்கு அள்ளித் தரும் அளவிட முடியாத அன்பை, அவர்களின் ஒப்பற்ற பங்களிப்பை மற்றும் அவர்களின் தன்னலமற்றத் தியாகத்தை கொண்டாடுவதே அன்னையர் தினம் ஆகும். அம்மா என்ற சொல்லை உச்சரிக்கும் போது நம் அனைவருடைய உள்ளங்களும் உணர்ச்சி மிகுதியால் தழுதழுக்கின்றன. அன்னையின் அன்பு தனித்துவமானது. மற்ற எவரோடும் அன்னையின் அன்பை ஒப்பிட முடியாது.



தாயின் அன்பைப் பற்றி பிரபல எழுத்தாளரான அகதா கிறிஸ்டி கூறும் போது இவ்வாறு கூறுவார். "ஒரு குழந்தைக்கு அதனுடைய தாயின் அன்பைவிட சிறந்த ஒன்று இந்த உலகில் கிடையாது. தாயின் அன்பு சட்டத்தை அறியாது, பரிதாபத்தை அறியாது. அந்த தாயின் அன்பு பாதையில் எத்தனை தடைகள் வந்தாலும் அவற்றை அடித்து நொறுக்கி அதன் அன்பு வழியில் தொடர்ந்து செல்லும்" என்று கூறுவார்' ஒவ்வொரு ஆண்டும் அன்னையர் தினம் வெவ்வேறு திகதிகளில் வருகிறது. அதாவது ஒவ்வொரு ஆண்டும் மே மாதத்தின் இரண்டாவது ஞாயிற்றுக் கிழமை அன்று அன்னையர் தினம் கொண்டாடப்படுகிறது. அந்த வகையில் இந்த வருடம் மே மாதம் 8 அன்று அன்னையர் தினம் கொண்டாடப்படுகிறது.

முதன் முதலாக அன்னையர் தினம் அமெரிக்காவில் கொண்டாடப்பட்டது. அமெரிக்காவைச் சேர்ந்த அன்னா ஜார்விவிஸ் என்ற பெண்மணி அன்னையர் தின கொண்டாட்டத்தைத் தொடங்கி வைத்தார். அவருடைய அன்னை தான் இறப்பதற்கு முன்பாக அன்னையர் தினத்தைக் கொண்டாட வேண்டும் என்று விரும்பினார். ஆனால் அவருடைய அன்னை உயிரோடு இருக்கும் போது அன்னையர் தினத்தைக் கொண்டாட முடியவில்லை. ஆனால் ஜார்விஸ் எடுத்த முயற்சிகளின் விளைவாக, அவருடைய அன்னை இறந்து 3 ஆண்டுகள் கழித்து, அதாவது 1908 ஆம் ஆண்டு மேற்கு வெர்ஜீனியாவில் உள்ள தூய ஆண்ட்ரூ மெத்தடிஸ்ட் ஆலயத்தில் முதன் முதலாக அன்னையர் தினம் கொண்டாடப்பட்டது.

முதல் அன்னையர் தினக் கொண்டாடத்தில் ஜார்விஸ் கலந்து கொள்ள முடியவில்லை. கொண்டாட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்து ஒரு தந்தி அனுப்பினார். ஒரு தாய் என்பவர், இந்த உலகில் எவராலும் தரமுடியாததை நமக்குத் தரக்கூடியவர் ஆவார் என்று ஜார்வீஸ் நம்பினார்.

அன்னையர் தினம் அன்று பொது விடுமுறையாக அறிவிக்க வேண்டும் என்று அன்னா ஜார்விஸ் வேண்டுகோள் விடுத்தார். ஆனால் தொடக்கத்தில் அதாவது 1911 ஆம் ஆண்டு அவருடைய வேண்டுகோள் மறுக்கப்பட்டது. ஆனால் அன்னையர்களுக்கு நன்றி சொல்லும் விதமாக அமெரிக்கா முழுவதும் அன்னையர் தினம் அனுசரிக்கப்பட்டது.

காலப்போக்கில் அதாவது 1941ல் அன்னையர் தினத்தைக் கொண்டாடும் வகையில் உட்ரோ வில்சன் ஒவ்வொரு ஆண்டும் மே மாதத்தில் வரும் 2வது ஞாயிற்றுக் கிழமையை அமெரிக்காவின் தேசிய விடுமுறையாக அறிவித்து அதற்கான ஆவணத்தில் கையெழுத்திட்டார்.

அ. கனகசூரியர் ...

### மெழுகுதிரி உற்பத்தி இலகுவானது:

# மின்வெட்டுக் காலத்தில் உற்பத்தியை பெருக்குவோம்

## மெழுகுதிரி உற்பத்தியாளர் கெ.வித்தியகலா



தற்போது நாடளாவிய ரீதியில் அவ்வப்போது மின்வெட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் இக்காலகட்டத்தில், மெழுகுதிரி விற்பனை அதிகரித்துக் காணப்படுகின்றது. ஆனாலும், எமது பிரதேசத்தில் மெழுகுக் கட்டிக்கு தட்டுப்பாடு நிலவுவதால், உரிய முறையிலோ, உரிய வேளையிலோ மெழுகுதிரி உற்பத்தியில் ஈடுபட முடியாதுள்ளதாக, பெண் சுயதொழில் முயற்சியாளரான மெழுகுதிரி உற்பத்தியில் ஈடுபடும் திருமதி கெங்கேஸ்வரன் வித்தியகலா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மெழுகுதிரி உற்பத்தியில் ஈடுபடுவோர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவாகவுள்ளது. ஆகையால், இம்மாவட்டத்தில் மெழுகுக்கட்டியை பெற்றுக்கொள்வதில் சிரமம் காணப்படுகின்றது.

இந்நிலையில், மெழுகுக்கட்டிக்காக கடையில் நாம் முற்கூட்டி ஓடர் செய்யும் பட்சத்திலேயே, மெழுகுக்கட்டியை பெற்றுக்கொள்ள முடிகின்றது.

நான் காத்தான்குடியிலுள்ள கடையொன்றிலேயே மெழுகுக்கட்டியை பெற்று வருகின்றேன். அக்கடையில் நான் முற்கூட்டி ஓடர் செய்தே, மெழுகுக்கட்டியை பெற்று வருகின்றேன். இதனால் எமது தேவைக்கேற்ப உடனடியாக மெழுகுக்கட்டியை பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை இங்கு காணப்படுகின்றது என்கின்றார் அவர்.

கடந்த டிசம்பர் மாதத்திலிருந்து மெழுகுக் கட்டிக்கான விலையும் அதிகரித்துக் காணப்படுகின்றது. முன்னர் 300 ரூபாய்க்கு கொள்வனவு செய்திருந்த ஒரு கிலோ மெழுகுக்கட்டி, தற்போது 500 ரூபாய் முதல் 600 ரூபாய் வரை விலை அதிகரித்துக் காணப்படுகின்றது.

மெழுகுக்கட்டிக்கான தட்டுப்பாடு மற்றும் அதன் விலை அதிகரிப்புக் காரணமாக எனது மெழுகுதிரி உற்பத்தியில் சற்று பின்னடைவு காணப்படுகின்றது எனவும், அவர் தெரிவித்துள்ளார். அல்லாவிடின், மின்வெட்டு மேற்கொள்ளப்படும் இக்காலகட்டத்தில், மெழுகுக்கட்டியை நினைத்த மாத்திரத்தில் எனக்கு பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் கிடைக்குமேயானால், மெழுகுதிரி உற்பத்தியை அதிகரிக்க முடியும் என்கின்றார் அவர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலம்பாவெளி, விபுலானந்தபுரம் கிராமத்தைச் சேர்ந்த 45 வயதுடைய திருமதி கெங்கேஸ்வரன் வித்தியகலா, தனது சுயதொழில் முயற்சியாக சுமார் 12 வருட காலமாக மெழுகுதிரி உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்.

தனது வீட்டிலிருந்தவாறே அவர் இத்தொழிலைச் செய்து வருவதோடு, அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் தனது குடும்பச் செலவையும் அவர்; கவனித்து வருகின்றார்.

தனது குடும்பத்தின் ஏழ்மை நிலை பற்றியும், அவ் ஏழ்மையிலிருந்து மீண்டெழுவதற்காக தான் ஈடுபட்டுள்ள அயராத உழைப்பு பற்றியும், தினகரன் வாரமஞ்சரி வாசகர்களுடன் அவர் பகிர்ந்து கொள்கின்றார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனது கணவர் ஒரு கூலித் தொழிலாளியாக உள்ளதோடு, எமக்கு ஒரு பெண் பிள்ளையும் ஓர் ஆண் பிள்ளையும் இருக்கிருக்கின்றார்கள்.

கூலித் தொழிலாளியான எனது கணவரின் வருமானத்தின் மூலம் எமது குடும்பச் செலவை உரிய முறையில் கவனிக்க முடிவதில்லை. போதியளவான வருமானமின்றி நாம் கஷ்டப்பட்டதோடு மாத்திரமின்றி, நிரந்தர வருமானமின்றியும் தவித்தோம்.

மேலும், எனது கணவர் கூலித் தொழில் மூலம் சம்பாதித்துக்கொண்டு வரும் பணம், அன்றைய நாள் செலவுடனையே தீர்ந்து விடும். அத்தோடு, கணவர் நோய் வாய்ப்பட்டு தொழிலுக்குச் செல்ல முடியாது போகும் சந்தர்ப்பங்களிலும், எமது அன்றைய நாள் செலவை சமாளிப்பதற்கு பண வசதியின்றி இல்லாது திண்டாடினோம்.

எமது குடும்பக் கஷ்டம் மற்றும் எமது பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிச் சிந்தித்த நான், எனது கணவரின் வருமானத்தில் மாத்திரம் குடும்பச் செலவைக் கொண்டு செல்ல முடியாது என்பதை உணர்ந்தேன். இந்நிலையிலேயே, நான்; வீட்டில் இருந்தவாறு, எனது கணவர் மற்றும் பிள்ளைகளையும் பராமரித்துக்கொண்டு ஏதாவதொரு சுயதொழிலில் ஈடுபட்டு வருமானம் ஈட்ட வேண்டுமென்று உத்தேசித்தேன்.



அவ்வேளையில் எனக்கு மெழுகுதிரி தயாரிக்கும் பயிற்சிநெறியில் பங்குபற்றுவதற்கான ஒரு வாய்ப்புக் கிடைத்தது. கடந்த 2010ஆம் ஆண்டு செங்கலடி பிரதேச சபையால் பெண்களுக்காக மாத்திரம் நடத்தப்பட்ட மெழுகுதிரி உற்பத்தி தொடர்பான மூன்று நாள் பயிற்சிநெறியில் நான் பங்குபற்றினேன். அப்பயிற்சிநெறியை பயின்று விட்டு நான் சுயமாக மெழுகுதிரி உற்பத்தி செய்யும் தொழிலை தொடங்கினேன்.

இத்தொழிலை தொடங்கும்போது ஆரம்பத்தில் என்னிடம் போதியளவு பணம் இல்லாமையினால், உரிய முறையில் முதலீடு செய்து தொழிலை தொடங்க முடியவில்லை. இருந்தபோதிலும், 'வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்' எனும் பழமொழிக்கு அமைய, சிறிதளவு பணத்தின் உதவியுடன் மெழுகுதிரி உற்பத்தி செய்யும் தொழிலை எனது வீட்டில் வைத்து தொடங்கினேன்.

அப்போது மெழுகுக்கட்டி, அதற்குரிய திரி மற்றும் இரசாயனப் பதார்த்தம், நிறச்சாயம் ஆகியவற்றை மாத்திரம் நான் கடையில் வாங்கினேன். ஆனால்; மெழுகுதிரி உற்பத்தி செய்யும் இயந்திரத்தை வாங்குவதற்கு என்னிடம் பணம் இல்லை. ஆகையால், அயலவர் ஒருவரிடமிருந்து மெழுகுதிரி உற்பத்தி செய்யும் இயந்திரத்தை நான் இரவலாக பெற்று, மெழுகுதிரி உற்பத்தியில் ஈடுபட்டேன்.

அவ்வாறு உற்பத்தி செய்த மெழுகுதிரிகளை விற்பனை செய்து, அதன் மூலம் கிடைத்த வருமானத்தின் மூலம் மெழுகுதிரி தயாரிக்கும் இயந்திரமொன்றையும் நான் கொள்வனவு செய்தேன்.

இதனைத் தொடர்ந்து எனது மெழுகுதிரி உற்பத்தித் தொழிலை நான் பெருகிக்கொண்டு சென்றேன். இந்நிலையில், எமது கிராமத்தைச் சேர்ந்தவர்கள் தங்களது தேவைகளுக்கேற்ப என்னிடம் வந்து மெழுகுதிரிகளைக் கொள்வனவு செய்வதோடு, கடைகளுக்கும் நான் மெழுகுதிரிகளை விற்பனை செய்து வருகின்றேன்.

(22 பக்கம் பார்க்க)



ஆர். சுகந்தினி ...






## நான் கண்ட இலக்கிய தேசம்

வாழையூர் கவிநிலா
நுஸ்ஹா அஸீம்

கவிதை வானில்
கலை கட்டிப்பறந்த
வானம் பாடி அவர்

கட்டுக்கடங்காத
கற்பனையின்
கலையரசன்

"அந்தி" என்ற
அறிய வகை கவிதையால்
அந்தியை பலருக்கு
அறிமுகப்படுத்திய
அறிஞன்

"காதலித்துப்பார்" என்னும்
காலத்தின் கண்ணாடியால்
கற்பனையை மிஞ்சிய
காதலன்

சுமந்தவளை பற்றி
சுருக்கச்சொல்லி
எல்லோர் மனதிலும்
தாயின் தவிப்பை
உணர்த்திய உத்தமன்

வைரமுத்துக்கான
வார்த்தைகள் அல்ல
அவை..
அவர் கற்பனை கண்டு
என்னை அறியாமல்
உதிர்த்த முத்துக்கள்
இவை...

எழுத்தாளனின் இலக்கிய
முகத்தை கண்டேன்..
மெய் மறந்து
வியப்பு கொண்டேன்...



## உன்னிலை மாற்று..

வரக்காமுறையூர் ராசிக்

குடித்து குடித்து அழிகிறாய்
குழியில் நிதம் விழுகிறாய்
குடியும் கெட் டழியுது – உன்
குலமே உன்னில் உமிழுது
மது மதுவென அலைகிறாய்
மண்ணில் நிதம் புதைகிறாய்
மதியும் உன்னை வெறுக்குது
மடமை வந்து எரிக்குது
கள்ளு குடித்து கறைகிறாய்
காசை யள்ளி இறைக்கிறாய்
சொல்லி யுனக்கு புரியல
சிறந்து வாழ தெரியல
மாடு போல் உழைக்கிறாய்
மதுவுக் கதை இரைக்கிறாய்
வீட்டில் விளக் கெரியல – உன்
விழிகளுக் கது தெரியல
சாயும் பொழுதில் போகிறாய்
சாராய மருந்தி சாகுறாய்
தாயுள்ள மங்கு பதறுதே
தடியனே உனக்கது புரியலே
நாலு காலில் நடக்கிறாய்
நாயைப் போல் குரைக்கிறாய்
நாளு பேர் மதிக்கல
உனக்கது உரைக்கல
மதுவினில் தொடர்ந்து போனால்
முதுமையில் வீழ்ந்து சாவாய்
மதுவில் மாண்டவர் பார்த்து
மனிதனே உன்னிலை மாற்று



## அம்மா

இணுவில் வாகீசன்

இல்லத்தின் அட்சயபாத்திரம்
உலகின் நிலைத்திருக்கும் அதிசயம்
குடும்ப நலன் பேணிடும்
கடமைகள் வகுத்திடாத சேவகி

பொருளற்ற உலகிலும் பொறுப்பாய்
பெற்றவர் பசியாற்றிடும் தெய்வம்
பெற்றவர் நலனிற்காய் என்றும்
தன் இன்பம் துறந்து மகிழ்ந்திடுவர்

பிள்ளைகள் வளமாய் வாழ
இறைவனிடம் வரங்கள் கேட்டு
இறைஞ்சியே நாளும் வாழ்வார்
வேறொன்றும் தமக்கு வேண்டிலார்

ஓய்வில்லா உலக இயக்கத்தின்சேய்
சேயினை காக்கும் தடுப்பூசி
நோயினை போக்கும் மாத்திரைகள்
தாயெனும் வீட்டுக் கருவறை

## யாசகனே நான்

அகீலா ஜவுபர்
ஏத்தாளை புத்தளம்

காற்றை கொண்டு சுவாசம் தந்தேன்
நீரைக்காத்து உன் தாகம் தனித்தேன்
உணவை தந்து பசியை போக்கினேன்
பூக்கள் பரப்பி மனதை மகிழ்வித்தேன்

உயர்ந்து வளர்ந்து மழையை தந்தேன்
உன் நோயை விரட்ட மூலிகையானேன்
இளைப்பார உனக்கு நிழலை தந்தேன்
வேரால் இயற்கை இடரையும் தடுத்தேன்

கூட்டாய் வளர்ந்து வாழிடம் தந்தேன்
வனமாய் பெறுத்து வெப்பம் குறைத்தேன்
என்னுறுப்பை இழந்து உழைப்பை தந்தேன்
என்னையே தியாகித்து சூழல்சமநிலை காத்தேன்

என்னாயுள் முழுதும் உன்னை வளர்த்தேன்
ஏர்ரெடுத்து பார்க்காது செல்கிறாயே மனிதா
சொட்டு நீரையேனும் யாசகம் தருவாயோ
என்னிருப்பே உன்னிருப்பை தீர்மானிக்கும் மறவாதே



## நாணும் பெண்ணல்ல அவள்

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்

பேரிடர் களைந்திடப்
பாரினில் விதைப்போம்
பல்துறைச் சாதனைப்
படைத்திடும் பெண்கல்வி

பெண்ணின் கல்வியால்
பெருகிவருகிறது முன்னேற்றம்
பேதமை ஒழிந்து
வளர்கிறது பாலின சமத்துவம்

இயல்பிலே இனியவராம்
துணிவிலே தளராதவராம்
உலகத்தில் உயிர்களைச்
சிருஷ்டிக்கும் பெண்டிர்

குடும்பத்தின் குத்துவிளக்கு
குதூகலத்தின் மொத்தக்கணக்கு
போடுவாள் கிழிந்தவைக்குத் தையல்
அவளே குற்றமில்லாத்தையல்

சார்ந்தவருக்குதவியே
சந்ததியை வளர்க்கின்றது
சமூகச் சமர்ப்பணமாகுது
பெண் கற்கும் கல்வி

தலைகுனிந்து நாணும்
நளின நங்கையல்ல அவள்
தலைகுனிந்து கற்று
சமூகத்தின் தலைநிமிர்த்தப் பிறந்தவள்

மென்மையான மனதினிலே
மகாவலிமை மிக்கவள்
மூடநம்பிக்கை தகர்த்து
முன்னணியில் இருப்பவள்

கனவுகள் வளர்ந்து
காசினியில் வென்றது
அறிவுத் திறமையில்
அணையாத விளக்காய் நம்மாதர்

மூடநம்பிக்கையால்
முடங்கியது ஒரு காலம்
கல்விச் சாட்டையால்
சாடுகிறாள் பெண் இக்காலம்

மனைக்குள் பூட்டி வைத்தாலும்
மணக்கின்றார் பூமியிலே
மாலையின் பூஞ்சராமாய்
கல்வியிலே பெண்கள்

ஒழுக்கம் நெறி தவறாது
ஒழுங்காய்க் கட்டமைக்கிறார்
சமூகவிருத்திக்குத் தனியளாய்
அர்ப்பணிக்கும் மகளிர்

திணித்தாலும்
தணிந்து விரும்புகிறாள்
துணிந்து நின்று
குடும்பம் சுமக்கின்றாள் பெண்

பாரினில் இப்போது
பாந்தமாய் வலம் வருகின்றாள்
பாரதி கனவை உயிர்ப்பித்து
தடைகளையுடைத்த புதுமைப்பெண்

கல்வி கற்றிடப்
படிகள் தாண்டுகிறாள்
கண்ணியம் காத்திடும்
பெண்ணியம் வாழ்கவே

நானிலம் போற்றிட
நல்லுறவுகளாய் மிளிர்கிறாய்
நீடூழி வாழ்கவே
நம் நங்கையர் திலகங்கள்



## ஆயிரம் அலைகள்

ரதிதேவி, மானிப்பாய்

கண்ணீர்த்துளிகளின் ஈரம்
அவள் இமைகள் உணர்ந்து திறக்கும்
கால் பற்றி அழும் ஒரு தாயும்
ரீங்காரமிட்டுலவும் சேயும்
அறையின் ஒளியொடுருகி நிற்பர்

"அம்மா, என்னோட இரண்டு குழந்தைங்க
ஏழுவயசு வரும் போது செத்திடுச்சு
இவளுக்கு ஐஞ்சு வயசிப்ப,
பயமா இருக்கும்மா"

மௌனம் மரணம்
இரண்டும் அறிந்தவள்
அழுவதெதற்கு
அவள் அழுவதெதற்கு

வீசும் காற்றோடு
விளையாடும் முகம் பார்த்தாள்
மூன்று இதயத்துள்ளும்
நிறையும் மூச்சை இரைத்தாள்

விடை பெற்றுக்கொண்டாள் மாது
அணைத்து முத்தம் ஒன்றை
நெற்றிப் பொட்டின் நடு
விதை போல இட்டு
மூடி மறைத்து விட்டு

தீரும் எண்ணை
சுடர் நூரும் உண்மை
நிழல் சூழும் மண்ணை
கதிர் பாயும் விண்ணை

ஆயிரம் அலைகள்
மூழ்கி முடிந்த பின்
நாட்கள் ஓடிக்
களைத்து விழுந்த பின்
ஒரு நாள் வந்தாள்
உடல் தந்த தாய்
உயிரை மீண்டும்
எடுத்துச் செல்ல



## கவலையில்லை

பசறையூர்
மல்லிகா பத்மநாதன்

புன்னகையை பொன்னகை
ஆக்கிக் கொண்டாய் பெண்ணே
விலையேற்றம் பற்றி கவலையில்லை
முழுமதி முகமாகிப் போனதுவே
முகத்தின் ஒப்பனைப்பற்றிக்
கவலையில்லை!
அன்னத்தை நடையாக்கிக்
கொண்டாய் பெண்ணே
அதுபற்றியும் எனக்கு
கவலையில்லை!
சல சல நீரூற்று உன் மனத்தெளிவு
என்று தக்கபடி காட்டுவதால்
அது பற்றியும் எனக்கு
கவலையில்லை உன்னை
என் மண வாழ்க்கைக்கு
துணையாக்கப் போகிறேன்
இனிமேலும் எனக்கு
கவலையில்லை!



## மாண்புறு மங்கையே!

கலாபூஷணம் கீழ்ரவை குலசேகரன்
அப்புத்தளை



மண்ணுலகில் மாண்புறு
மங்கையாய்ப் பிறந்தவளே!
மனைக்கு என்றுமே
மகராசி ஆனவளே!
பண்பின் அன்பின்
உருவாய்த் திகழ்பவளே!
பாரையும் ஆளும்
வல்லமை கொண்டாயே!

நீதிக்காய்ப் போரிடும்
நெஞ்சம் படைத்தவளே!
நிறைந்த அறிவோடு
நிர்வாகம் செய்வாயே!
சாதித்தே பலவற்றை
சரித்திரங்கள் படைப்பாயே!
சக்தி மிக்க
வீராங்கனையாய்த் திகழ்வாயே!

வீட்டின் விளக்காக
விளங்குபவள் நீயே!
விடுதலை போரிலும்
வீறுகொண்டு எழுவாயே!
ஏட்டிலும் உன்
புகழை ஏத்திடுவாரே!
எல்லோர்க்கும் தாயாக
விளங்கியும் நிற்பாயே!

எங்கள் குலப்
பண்பாட்டைக் காத்திடுவாயே!
எல்லோர்க்கும் உதவிடும்
எண்ணம் கொள்வாயே!
எங்கும் புகழ்
பூக்க வாழ்ந்திடுவாயே!
எழில் நங்கையாக
ஏற்றங்கள் காண்பாயே!

## விரக்தி...

ஷப்ரா இல்முத்தீன்
அட்டாளைச்சேனை



நடுநடுங்கும் குளிரில்
அவள் என்னை
அணைத்துக் கொண்டு
விம்மியழுத போது

விரக்தியின் உச்சத்தில்
உறைந்திருந்தாள்

அழும் வரை
மௌனம் தொடர
அமைதியாக செவிமடுத்தேன்
அத்தனை இலகுவில் திறக்கவில்லை
அவளது மூடிய உதடுகள்

அழுகைப் போராட்டம்
அடங்கிய நொடி
குறை கூறிக்
குத்திக் காட்டுகிறார்கள் என்றாள்
குத்திக் கிழித்து விடு
உன் செயல்களைக் கொண்டு

கயவர்களின் ஆட்டத்தை என்றேன்

தப்பாகப் பேசுகின்றார்கள் என்றாள்
தப்பித்து விட்டாய்
கெட்டோரை விட்டுமென்றேன்

உருகிப் பேசியோரின்
உறவையே காணோம் என்றாள்
உயிர் வாழ இலகுவென்றேன்

மொத்தத்தில் என்ன தான்

சொல்ல வருகிறாய் என்றாள்

மெத்தச் சரியாக யோசித்து நட
இனிமேலிந்த
வேண்டாத அழுகை
அறவே வேண்டாமே என்றேன்

உன் போல் நட்புக் கிடைக்க
தவமிருப்பேனடி என்றாள்
என்னையும் நம்பாதே

மனித இயல்புகளுக்கு
நான் மட்டும்
விதிவிலக்கில்லை என்றேன்

குறுநகை கொஞ்சமாய்
வெளிப்பட்டது
கலங்கிய அவள் விழிகளிலிருந்து

## இடம்பெயர்ந்து முப்பத்தொரு வருடங்கள்!!!

கவிக் குஞ்சு சர்வேஸ்..

மூன்று பத்துடன்
இன்னும் ஒரு வருடம்
முன்னாலே...
ஏப்ரல் மாதத்து
இருபத்தைந்தாம் நாளிலே...
துயில் கொண்ட கிராமம்
எழுந்தது...
இனிவரும் நாட்கள்
விடியாத இரவுகள்
என்று அறியாது!

செய்திகள் வந்த
சில மணி நேரங்களில்...
சேர்த்து வைத்ததெல்லாம்
விட்டு விட்டு
உயிர் விடாது இருப்பதற்காக...
இறுதி இடம் பெயர்வு
என்று ஆனது!

சில நூறு பேர்கள்
எஞ்சி நின்றார்கள்...
அங்கும் இங்கும் கோயில்களே
அகதி முகாம்கள் ஆகின...
ஏதும் அறியாத அப்பாவிகள்
சில பத்து பேர்கள்
செத்து மடிந்தும் போனார்கள்!

இடம் பெயர்வு என்பது
பெயர்ந்து வந்த தடங்களில்
மீள வந்து சேருவது
என்றிருந்தோம்....
வாழ்ந்து சென்ற இடங்களில்
மீள வந்து வாழ்வது
என்றிருந்தோம்...
எமது இடம் பெயர்வு
முடிவிலா பயணம் என்று

அறியாது இருந்தோம்!

பொன்னாலை சந்தி வந்து
எட்டி எட்டி பார்த்து நின்றோம்...
ஏது வழி பிறக்கும் என்று
எந்த வழியும் திறக்கவில்லை...
நாட்கள் வாரங்கள் மாதங்கள்
காத்திருந்து காத்திருந்து
காலங்கள் கரைந்தன...
நம்பிக்கைகளும் மறைந்தன!

உலகெங்கும் சென்றாலும்
ஊர் வந்து சேர்ந்தோம்...
ஒன்றாக வாழ்ந்த நாம்
ஒரு நாளில்
சிதறிப் போனோம்...
மாளிகைகளில் வாழ்ந்த நாம்
மாற்றான் வீட்டு கோடியிலே

குடிசைகள் அமைத்தோம்!

உலகெலாம் வாழ்கிறோம்...
வருடத்தில் ஒரு நாளேனும்
பஞ்ச இரதங்களின்
வடம் பிடிக்கும்
திண்ணை புரத்தான் திருநாளேனும்...
ஒன்றாக சேர்வோம்
ஊரோடு வந்து
உறவோடு கலந்து!

எமது காரை மண்
இல்லை என்று சொல்ல
எதுவும் இல்லை என்ற மண்!
இயன்ற வரை செல்வோம்
இயன்ற வரை வாழ்வோம்!
மனம் மகிழ மண் மகிழ
அடையாளம் என்றும் நிலைக்க!

# “அவளுக்கும் ஒரு லெஹெங்கா”

கலாபூஷணம்
சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ்...



தலைநகரில் தலைநிமிர்ந்து நிற்கும் பெரிய ஆடைகள் விற்பனை நிலையம் அது. நோன்புப் பெருநாள் விற்பனை கலகலப்பாக நடந்துகொண்டிருந்தது. புத்தம் புதிய டிசைன்களில் கண்ணைக் கவரும் கலர்களில் விதம் விதமான ஆடையணிகள் நிரப்பப் பட்டிருந்தன. வாடிக்கையாளர்கள் உற்சாகத்தோடு தமக்குப் பிடித்தமான ஆடைகளை தேர்வு செய்து கொண்டிருந்தனர்.

இவர்களுக்கு மத்தியில் ரினாஸ், அவரது மனைவி, மகள் அம்ரா மூவரும் கூட மும்முரமாக ஆடைத் தெரிவில் ஈடுபட்டிருந்தனர். பல புதிய டிசைன் ஆடைகளை புரட்டிப் புரட்டிப் பார்த்த பின் அம்ரா இறுதியாக ஒன்றைத் தெரிவு செய்தாள்.

“உம்மா! இந்த லெஹெங்கா நல்லாருக்கும்மா! இத வாங்கிடுவோம்மா.” உம்மாவிடம் ஒரு லெஹெங்காவை நீட்டினாள் அம்ரா.

“சரி மக! அத கையில வச்சிக் கோங்கோ. நா இத பாத்து முடிக்கிறன்”. சொல்லிவிட்டு தனது தெரிவுகளைத் தொடர்ந்தாள் அம்ராவின் உம்மா.

தனது கையில் வைத்திருந்த லெஹெங்காவின் அழகை இரசித்துக்கொண்டிருந்த அம்ராவின் நினைவில் கடந்த வாரம் தனது பாடசாலையில் நடைபெற்ற தமிழ்சிங்கள புத்தாண்டு ஒன்று கூடல் நிகழ்ச்சி நிழலாடியது.

X X X X X

அம்ரா கொழும்பின் பிரபலமான மகளிர் கல்லூரியில் பதினோராம் வகுப்பில் கல்வி கற்றுக்கொண்டிருக்கிறாள். அவளது கல்லூரியின் வருடாந்த தமிழ் சிங்கள புத்தாண்டு நிகழ்ச்சி கடந்த வாரம் நடைபெற்றது. அது ஒரு கொண்டாட்ட நிகழ்ச்சி என்பதால் மாணவிகள் பாடசாலை சீருடையையோ அல்லது விரும்பிய எந்தவித ஆடைகளையோ அணிந்து வருவதற்கான சுதந்திரத்தை அக்கல்லூரி வழங்கியிருந்தது.

பெண்கள் கல்லூரியல்லவா! கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விடுவார்களா மாணவிகள்? ஒவ்வொரு மாணவியும் தத்தமது விருப்பபடி விதவிதமான புத்தம்புதிய டிசைன்களில், கண்ணைக்கவரும் நிறங்களில் அலங்கரித்து வந்திருந்தனர்.

ஒவ்வொரு மாணவிக்கும் தனது ஆடை மீது ஒருவித பெருமிதம். ஆனாலும், தன்னைவிட சிறப்பாக அணிந்திருந்தவர்கள் மீது ஒருவித இலேசான பொறாமையும் வரத்தான் செய்தது. இவர்களுக்கு மத்தியில் ஒரேயொரு மாணவி கரீமா மட்டும் பாடசாலை சீருடை அணிந்து, வெள்ளை ஆடையுடன் தனித்துத் தெரிந்தாள்.

“என்ன கரீமா நீ மட்டும் யுனி போர்ம்ல. வேறேதாவது சல்வாராவது உடுத்திட்டு வந்திருக்கலாம் தானே!”

அம்ரா உட்பட அவரது தோழிகள் கரீமாவை குடைந்து எடுத்தனர்.

எல்லோருக்கும் ஏதோ ஒரு பதிலை சொல்லி சமாளித்துக் கொண்டிருந்தாள் கரீமா. அவளது பதிலில் உண்மை இருப்பதாகத் தெரியவில்லை. ஆனாலும் அவளது மனதில் வெளியில் சொல்ல முடியாத ஆழ்ந்த கவலையும் நிறைந்திருந்தது. புத்தாண்டு ஒன்று கூடல் முடிந்து மாணவிகள் கல்லூரியிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்தனர். கரீமா வர்ண உடை அணியாமல் பாடசாலை சீருடையில் வந்திருந்தது அம்ராவை உறுத்திக் கொண்டேயிருந்தது. அம்ரா கரீமாவை அழைத்தாள்

“கரீமா! இங்க வாடி!”

“என்ன அம்ரா?” கேட்டுக்கொண்டே அவளருகில் வந்தாள் கரீமா.

“உண்மையை சொல்லுடி! ஏன் நீ ஸ்கூல் யுனிபோர்ம்ல வந்த. ஏதாவது ஒரு சல்வார போட்டுட்டு வந்திருக்கலாம்தானே!” அம்ரா ஆதங்கத்தோடு கேட்டாள்.

“இல்ல அம்ரா! அது வந்து....” கரீமா தயங்கினாள்.

“என்ன வந்து... போயி... உண்மைய சொல்லுடி” அம்ரா விடாப்பிடியாகக் கேட்டாள்.

வேறு வழியில்லாமல் கரீமா பேசத் தொடங்கினாள்.

“இல்ல அம்ரா! எங்கட வாப்பா மௌத்தான பொறவு உம்மா தனியா கஷ்டப்பட்டு சம்பாதிக்கிறாங்க. இது உனக்கு தெரியும்தானே. அவங்களே எல்லா செலவுகளையும் செய்றாங்க, என்னயும் தம்பியையும் படிக்க வைக்கிறதுக்கே ரொம்ப கஷ்டபடுறாங்க. கொலேஜுக்கு அனுப்புறதே பெரிய பாடு. இதுல நல்ல உடுப்பு வாங்குறது எப்புடிடீ...? அதான் உள்ளத உடுத்து சமாளிக்கிரம். என்னட்ட இப்ப இருக்கிற உடுப்ப உடுத்துட்டு வந்து உங்கட உடுப்போட பாத்தா ரொம்ப கேவலமா இருக்கும் டீ. அதாலதான் ஸ்கூல் யுனி போர்ம்லேயே வந்து சமாளிச்சிட்டேன்.”

கரீமா தன்னிலை விளக்கமளித்த போது அம்ராவுக்கு அவளது நிலைமை நன்றாகவே புரிந்தது. அவள் கரீமாவைப் பற்றி கொஞ்சம் நினைத்துப் பார்த்தாள்.

★★★

கரீமாவின் வாப்பா சிறு வியாபாரம் செய்து வரவுக்கேற்ப சிறப்பாக வாழ்ந்தவர். தனது பிள்ளைகளை சிறப்பாக படிப்பிக்க வேண்டுமென்று செலவைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் கரீமாவை இந்தக் நல்ல கல்லூரியிலும் அவளது தம்பியை இன்னுமொரு சிறந்த ஆண்கள் பாடசாலையிலும் சேர்த்திருந்தார்.

தாய், தந்தை, மகள், மகன் எனச் சேர்ந்து அவர்களது சிறிய குடும்பம் சீராக சென்று கொண்டிருந்தபோது திடீரென ‘கொரோனா’ எனும் கொடும் நோய் அவளது தந்தையின் உயிரைப் பறித்து, அந்த குடும்பத்தையே சீர்குலைத்தது.

எல்லா குடும்பச் சுமைகளும் அவளது தாயின் தலையிலேயே விழுந்தது. வேறு யாருமே துணைக்கு வராத போது அவள் கற்ற கல்வி மட்டுமே அவளுக்குத் தோள் கொடுத்தது.

தனியார் பாடசாலையொன்றில் ஆசிரியையாக சேர்ந்து உழைக்கத் தொடங்கினாள். கூடவே டியுசன் வகுப்புகளையும் நடாத்தினாள்.

வாடகை வீடாயினும் கொழும்பில் வசதியாக வாழ்ந்து வந்த வீட்டை அதன் உரிமையாளரிடம் திருப்பி ஒப்படைத்து விட்டு வெல்லம்பிட்டியில் சிறியதொரு வீட்டை வாடகைக்கு எடுத்து வாழத் தொடங்கினாள். அவளது ஒரே நோக்கம் இரு பிள்ளைகளையும் நன்றாக படிக்க வைக்க வேண்டும் என்பதாகவே இருந்தது. இதனால் எல்லா செலவுகளையும் குறைத்து பிள்ளைகளின் கல்வி செலவுகளுக்கே முன்னுரிமை கொடுத்தாள்.

கரீமாவும், தம்பியும் தம் குடும்ப நிலையை புரிந்து, தாயின் சிரமம் அறிந்து சிக்கனமாக வாழப் பழகிக் கொண்டார்கள். உள்ளதைக் கொண்டு சமாளித்துக் கொண்டார்கள்.

கரீமாவும் கல்லூரியில் மேலதிக செலவு வரும் விடயங்களை எப்போதும் தவிர்த்துக் கொள்வாள். அதன் மற்றுமொரு பிரதிபலிப்பே இந்த பாடசாலை சீருடை விடயம். நினைத்துப் பார்த்த போது அம்ராவின் கண்கள் இலேசாகக் கலங்கின.

“சொறி கரீமா! டோன்ட் வொரி. எல்லாம் சரியாயிடும். இன்ஷா அல்லாஹ்!”

ஆறுதல் கூறி விடை பெற்றாள் அம்ரா. ஆனாலும் அவளது மனம் மிகவும் கனத்தது.

‘கரீமாவுக்கு ஏதாவது செய்யணுமே!’ உலேன்ர எண்ணம் அம்ராவின் மனதில் ஒலித்தது.

★★★

“என்னடி யோசிக்கிறே!” தாயின் குரல் கேட்டுத் தெளிந்த அம்ரா உடனடியாகவே தாயிடம் கேட்டாள்

“உம்மா இதே லெஹெங்காவுல அந்த கலர்ல உள்ளதையும் வாங்கித் தாங்களே!”

“ஒன்று போதும் அம்ரா! வேறேதாவது கொறஞ்ச வெலயில வாங்குங்களே!”

“இல்லம்மா இதயே வாங்கித் தாங்க” அவள் வாங்கிய அதே லெஹெங்காவில் இன்னுமொரு நிறத்துல உள்ளத எடுத்து அதனையே வாங்கித்தருமாறு வற்புறுத்தினாள் அம்ரா.

அம்ராவின் வற்புறுத்தலை மறுக்க முடியாத ரினாஸ் அந்த லெஹெங்காவையும் வாங்கிக் கொடுத்தார்.

நோன்புப் பெருநாள் ‘ஷொப்பிங்’ முடிந்து காரில் ஏறிய போது அம்ரா கேட்டாள், “வாப்பா’ நோன்பு திறக்க நெறய நேரம் இருக்குதானே! கொஞ்சம் வெல்லம்பிட்டிக்கு போயிட்டு வருவமா?”

“ஏம்மா! இந்த நேரத்தில வெல்லம் பிட்டிக்கு போகணும்?”

ரினாஸ் கேட்ட போது அம்ரா தனது தோழி கரீமா பற்றிய அனைத்தையும் விளக்கமாகக் கூறினாள். இரண்டாவது லெஹெங்காவை கரீமாவுக்குத்தான் வாங்கியதாகவும் அதனை கொடுத்து விட்டு வரவே வெல்லம்பிட்டியவில் உள்ள கரீமாவீன் வீட்டுக்குப் போக வேண்டுமென்றும் விளக்கினாள்.

“போயிட்டு வருவமே வாப்பா!” கெஞ்சினாள் அமரா. அம்ரா சொன்ன கரீமாவின் கதையை கேட்டபின் அம்ராவின் கெஞ்சலை ரினாஸால் மறுக்க முடியவில்லை.

“சரிம்மா! எட்ரஸ் இருக்கா? இல்லாட்டி கோல்பண்ணி கேட்டுப்பார்” என்றார். தந்தையின் பதிலால் உற்சாகமடைந்த அம்ரா உடனே கரீமாவுக்கு ‘போன்’ செய்தாள்.

‘நல்ல காலம் ‘சூம்’ வகுப்புகளுக்காக கரீமாவுக்கு அவளது உம்மா ஸ்மார்ட் போன் வாங்கிக் கொடுத்தது. இல்லாட்டி எப்படித்தான் அவளோட பேசுறது?’ தன் மனதுக்குள் நினைத்துக் கொண்டாள் அம்ரா.

தொலைபேசியில் கரீமாவின் முகவரியைப் பெற்று ‘கூகூள்’ துணையோடு கரீமாவின் வீட்டை நெருங்கினாலும் அவளது வீட்டின் அருகே காரைக் கொண்டு செல்ல முடியவில்லை. கரீமாவின் வாடகை வீடு அமைந்திருந்தது ஒரு சிறிய ஒழுங்கையில். கார் அதில் செல்ல முடியாததால் பிரதான வீதியில் ஓரமாக காரை நிறுத்தினார் ரினாஸ்.

“வாப்பா! நீங்களும் வாங்கலேன்! இத குடுத்திட்டு வந்திடுவோம்.” அம்ரா தந்தையையும் தன்னோடு அழைத்தாள். தாயாரை காரில் இருக்கச் சொல்லி விட்டு அம்ராவும், தந்தையும் கரீமாவின் வீட்டுக்குச் சென்றனர்.

சிறிய ஒழுங்கையில் இருந்த சிறிய வீடு அது. உள்ளே சென்ற அவர்களை கரீமா ஒருவித தயக்கத்தோடுதான் வரவேற்றாள். அம்ராவும் தந்தையும் ஒரே பார்வையில் அவ்வீட்டை அளந்து கொண்டனர்.

ஒரு பிரதான சாலை, ஒரு அறை, சமையலறை, குளியலறை அடங்கிய சிறிய வீட்டில் அத்தியாவசியப் பொருட்களை தவிர வேறெதனையும் அவர்களால் காண முடியவில்லை. தனது வீட்டில் உள்ள பொருட்களோடு அதனை ஒப்பிட்ட அம்ராவால் தன் கண்களில் துளிர்ந்த கண்ணீரைத் தடுக்க முடியவில்லை. அம்ராவின் தந்தையின் மனமும் கலங்கியது.

அம்ரா தன் வாங்கி வந்த ‘லெஹெங்கா’ பார்சலை கரீமாவின் கையில் கொடுத்து, “திஸ் இஸ் போர் யூ கரீமா! மை பெருநாள் கிப்ட்.” என்றாள்.

“என்ன அம்ரா! இதெல்லாம் எதுக்குடீ” என்றவள், தயக்கத்தோடு அதனை வாங்கிக் கொண்டாள்.

கொஞ்சம் நேரம் சம்பிரதாயபூர்வமாக பேசிக்கொண்டிருந்த போது அவர்கள் படுகின்ற கஷ்டங்களும், துன்பங்களும் ரினாசுக்கு நன்றாகப் புரிந்தது. விடைபெறும் போது தனது பேர்ஸை எடுத்த அவர் அதிலிருந்த ஐயாயிரம் ரூபாய் நோட்டுகள் சிலதை அம்ராவின் கைகளில் திணித்தார்.

“அம்ராம்மா இத கரீமாட்ட குடுங்க!”

உற்சாகமாக அதனைப் பெற்ற அம்ரா கரீமாவிடம் அதனைக் கொடுத்தாள். அவள் அதனைப் பெற மறுத்த போதும் கட்டாயமாக கரீமாவின் கைகளில் திணித்து விட்டு விடைபெற்றனர்.

அம்ராவும் தந்தையும் தமது காரை நோக்கி திரும்பி நடந்த போது. அவர்களது உள்ளங்களில் ஒரு இனம்புரியாத திருப்தி நிறைந்தது. அது உதவி தேவைப்படுவோருக்கு உதவும் போது இறைவன் வழங்கும் மகிழ்ச்சி போலும்.

தேவையோடு காத்திருந்த குடும்பமொன்றுக்கு துணை செய்து. அவர்களும் நோன்புப் பெருநாளை மகிழ்வோடு கொண்டாட துணை புரிந்த அல்லாஹ்வைத் துதித்து. அவர்களது உதடுகள் முணுமுணுத்தன.

“அல்ஹம்துலில்லாஹ்! அல்ஹம்துலில்லாஹ்!” ‘கரீமாவின் குடும்பத்த போல இன்னும் எத்தனை குடும்பங்கள் இந்தப் பெருநாளை கொண்டாட முடியாமல் தவிக்கிறார்களோ?’

இந்தக் கேள்வி அம்ரா, ரினாஸ் இருவரது உள்ளங்களிலும் ஒரே நேரத்தில் ஒன்றாகவே விஸ்வரூபமெடுத்தது.

**தேவையோடு காத்திருந்த குடும்பமொன்றுக்கு துணை செய்து. அவர்களும் நோன்புப் பெருநாளை மகிழ்வோடு கொண்டாட துணை புரிந்த அல்லாஹ்வைத் துதித்து. அவர்களது உதடுகள் முணுமுணுத்தன.**

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 22

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | | 02 | 03 | 04 | ■ | 05 | 06 |
| | ■ | 07 | | | | ■ | |
| ■ | 08 | | | | ■ | 09 | |
| 10 | | | | ■ | 11 | | |
| 12 | | ■ | ■ | 13 | | | ■ |
| 14 | | 15 | ■ | 16 | | | 17 |
| | ■ | 18 | 19 | | | 22 | |
| ■ | 20 | | | ■ | 21 | | ■ |

திரு/திருமதி.செல்வி ..............................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி ..............................................
..............................................
..............................................

.............................. ..............................
திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 22
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல :22

**இடமிருந்து வலம்**

(01) இப்போது இது பேசுபொருளாகிவிட்டது.
(05) இரவு.
(07) தங்குமிடம் அல்லது ஸ்தாபனம்.
(08) வழமை நிலையிலிருந்து வேறுபடுவது. (குழம்பியுள்ளது)
(09) போதை தரும் பானம். (திரும்பியுள்ளது)
(10) பருவ வயதிற்கு குறைந்த ஆண்பிள்ளை குழம்பிவிட்டான்.
(11) உடம்பு.
(12) சிசு அல்லது படைப்பின் உற்பத்தி.
(13) சாதனை நிகழ்வு அல்லது செயற்பாடுகளில் பங்குகொண்டு வெற்றியீட்டிக் கொடுப்பவர். (குழம்பியுள்ளது)
(14) சேலை முதலான துணி வகைகள்.
(16) தினந்தோறும் குழம்பிக் காணப்படுகிறது.
(18) நீர்த்தன்மையான பொருளை இப்படிச் சொல்வர். (குழம்பியுள்ளது)
(20) தொல்லை, வருந்துதல்.
(21) சந்தேகத்தின் பேரில் காவல் நிலையம் அழைத்துச் செல்வது.

**மேலிருந்து கீழ்**

(01) இதுவும் பறவையினத்தைச் சேர்ந்தது.
(02) ஊக்கம், இடைவிடாத உழைப்பு.
(03) இதுவும் ஒரு விலங்கு.
(04) வண்ணம். (குழம்பியுள்ளது)
(06) சாத்தியமற்ற தன்மை, கஷ்ட நிலை.
(08) ஆண்டு. (குழம்பியுள்ளது)
(09) கவலை, துக்கம்.
(10) இது ஒரு நிறம். (குழம்பியுள்ளது)
(11) ஒரு தமிழ் மாதம்.
(13) அளவு முறை, பங்கு.
(15) பெறுமதியான இரத்தினம்.
(17) பணம்.
(19) பழிப்பு, இகழ்ந்து பேசுதல்.

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 21

### விடைகள்

**இடமிருந்து வலம்**

(01) தூதுவளை (04) வைகாசி (06) சகாரா
(08) மைதிலி (10) குசலம் (13) குன்று
(14) ஆதவன் (17) தம்புரா (18) நாகு
(19) பூம்புகார் (21) வானம் (22) கவிதை

**மேலிருந்து கீழ்**

(01) தூய்மை (02) வசதி (03) காளை
(05) காவலன் (07) ராகு (09) லிகிதம்
(11) சகுனி (12) குறும்பு (14) ஆதனம்
(15) புவனம் (16) பூரான் (18) நாகர்
(20) காவி

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 20

### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**
**திருமதி அனுராதா பாக்கியராஜா,**
இல. 88/1/1, பசல்ஸ் லேன்,
வெள்ளவத்தை,
கொழும்பு 06.

**இரண்டாம் பரிசு**
**சா. தமிழ்மலர்,**
127 புதிய சோமநாதர் வீதி,
பாண்டிருப்பு 01B,
கல்முனை.

**மூன்றாம் பரிசு**
**எம்.பி.எம். அஸுஹதி,**
இல. 34/2A, முதலாம் ஒழுங்கை, தனிப் பொல்கஹ சந்தி,
காலி.

### பாராட்டு பெறுவோர்

**1. மொஹமட் பிலால்,**
மதார் சதுக்கம்,
பழநகர், மூதூர் 02.

**2. அ. சந்தியாகு,**
34/12, செமனரிவத்த வீதி,
தென்னக்கும்புர, கண்டி.

**3. மு.ச. முகம்மது லியாவுடீன்,**
12/6, சென் பீற்றர்ஸ் லேன்,
நிந்தனி.

**4. எஸ் சந்திரிகா,**
344, சித்திரகூடம்,
களுவாஞ்சிக்குடி.

**5. ஏ.ஆர்.எம். அபூபக்கர்,**
411, புதிய வீதி,
வெலிகம.

**6. எம்.ஏ.எச்.எம். வபா,**
517, காலி வீதி,
பம்பலப்பிட்டி.

**7. எஸ். நாகராஜா,**
சாரதா வீதி,
காரைதீவு 02.

**8. எஸ்.எச்.எம். ஜிப்ரி,**
155/32,
மொஹிதீன் மஸ்ஜித் வீதி,
மருதானை,
கொழும்பு 10.

★ ★ ★

# ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான அழைப்பு

## இந்திய உயர் ஸ்தானிகராலயம், கொழும்பு

இந்திய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் இலங்கையின் பெருந்தோட்டப் பிரதேசங்களில் 10,000 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்கு ஆலோசகராக ஈடுபடுவதற்கு தகுதி வாய்ந்த ஆர்வமுள்ள தரப்பினரிடமிருந்து ‘‘ஆர்வத்தின் வெளிப்பாடுகள் (EOI)’’ அழைக்கப்படுகின்றன.

EOI ஆவணங்களை 2022 மே 09ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாட்களிலும் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரையில் (இலங்கை) கொழும்பு-03, இல. 36-38, காலி வீதி, இந்திய உயர் ஸ்தானிகராலயம், அபிவிருத்தி கூட்டுத்தாபன கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொடர்பிலக்கம்: 0777906494 / 0764861875 அல்லது 011-2472684 நீடிப்பு 631/635). இந்த ஆவணங்களை www.hcicolombo.gov.in எனும் இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் இணையதளத்தில் தரவிறக்கம் செய்து கொள்வதற்கு கிடைக்கத்தக்கதாகவுள்ளன.

பரிந்துரைக்கப்பட்ட சகல EOI ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் 2022 மே 23ஆம் திகதி பி.ப. 3.00 மணியாகும்.

BE BETTER INFORMED!
News you can trust now free on your mobile phone.
VISIT
apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
LAKE HOUSE

කෘෂි නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK
IBRD • IDA | WORLD BANK GROUP

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**

விவசாயத்துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டம் - கமத்தொழில் அமைச்சு

IDA Credit No.: 5873 LK

# பெறுகை அறிவித்தல்

**வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களுக்கு குறைந்த அழுத்தமுடைய மினி தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகள் (Mini Sprinkler Irrigation Systems) மற்றும் சொட்டு நீர் நீர்ப்பாசன முறைமைகளை (Drip Tape Irrigation Systems) வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல்**

1. கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட (ASMP) கிரயச் செலவிற்காக 58.63 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு நிகரான தொகையை பலவிதமான பணத்தொகைகளில் கடனொன்றை சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடனின் பெறுகைகளின் பகுதியொன்றை வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களுக்கு குறைந்த அழுத்தமுடைய மினி தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகள் (Mini Sprinkler Irrigation Systems) மற்றும் சொட்டு நீர் நீர்ப்பாசன முறைமைகளை (Drip Tape Irrigation Systems) வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் என்பவற்றிற்கு ஒப்பந்தத்தின் கீழுள்ள தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிடுவதற்கு உத்தேசித்துள்ளது.

2. வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களுக்கு குறைந்த அழுத்தமுடைய மினி தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகள் (Mini Sprinkler Irrigation Systems) மற்றும் சொட்டு நீர் நீர்ப்பாசன முறைமைகளை (Drip Tape Irrigation Systems) வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் எனும் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின், செயற்றிட்ட பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கிறார்.

| விபரங்கள் | ஒப்பந்த இலக்கம் | விலைமனுப் பிணை முறியின் பெறுமதி (ரூபா) | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|
| வடக்கு மாகாணம், முல்லைத்தீவு மாவட்டத்தில் இடைக்கால மிளகாய் பயிர்ச்செய்கைக்கு Drip Tape நீர்ப்பாசன முறைமை மற்றும் கோழிகுட்டு வாழைச் செய்கைக்கு 50 எண்ணிக்கையான குறைந்த அழுத்தமுடைய மினி தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகள் | LK-MOA-PMU-260929-GO-RFB | 240,000.00 | 5,000.00 |
| மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டத்தில் இடைக்கால மிளகாய் பயிர்ச்செய்கைக்கு Drip Tape நீர்ப்பாசன முறைமை மற்றும் மாம்பழச் செய்கைக்கு 200 எண்ணிக்கையான குறைந்த அழுத்தமுடைய மினி தெளிக்கும் நீர் முறைமைகள் | LK-MOA-PMU-260967-GO-RFB | 960,000.00 | 15,000.00 |
| வடக்கு மாகாணம், முத்தையன்கட்டுவயில் மிளகாய் செய்கைக்கு 50 எண்ணிக்கையான Drip Tape நீர்ப்பாசன முறைமைகள் | LK-MOA-PMU-247012-GO-RFB | 140,000.00 | 5,000.00 |
| மொனராகலை மாவட்டத்தில் இடைக்கால மிளகாய் பயிர்ச்செய்கைக்கு Drip Tape நீர்ப்பாசன முறைமை மற்றும் Cavendish வாழைச் செய்கைக்கு 200 எண்ணிக்கையான குறைந்த அழுத்தமுடைய மினி தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகள் | LK-MOA-PMU-260938-GO-RFB | 480,000.00 | 7,500.00 |
| வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் மாதுளம் செய்கைக்கு 150 எண்ணிக்கையான Drip Tape நீர்ப்பாசன முறைமைகள் | LK-MOA- PMU-260835-GO-RFB | 720,000.00 | 10,000.00 |
| ஊவா மாகாணத்தின் மொனராகலை மாவட்டத்தில் இடைக்கால மிளகாய் பயிர்ச்செய்கைக்கு Drip Tape நீர்ப்பாசன முறைமை மற்றும் மாம்பழச் செய்கைக்கு 200 எண்ணிக்கையான குறைந்த அழுத்தமுடைய மினி தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகள் | LK-MOA- PMU-260958-GO-RFB | 960,000.00 | 15,000.00 |
| வடக்கு மாகாணம், யாழ்ப்பாணத்தில் இயற்கை வாழைச் செய்கைக்கு 50 எண்ணிக்கையான குறைந்த அழுத்தமுடைய மினி தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகள் | LK-MOA- PMU-260918-GO-RFB | 180,000.00 | 5,000.00 |
| கிழக்கு மாகாணத்தின் இடைக்கால மிளகாய் பயிர்ச்செய்கைக்கு Drip Tape நீர்ப்பாசன முறைமை மற்றும் Cavendish வாழைச் செய்கைக்கு குறைந்த அழுத்தமுடைய மினி தெளிக்கும் நீர் முறைமைகள் 200 எண்ணிக்கைகள் | LK-MOA-PMU-260845-GO-RFB | 480,000.00 | 7,500.00 |
| அம்பாறை மாவட்டத்தில் மிளகாய்ச் செய்கைக்கு 300 எண்ணிக்கையான Drip Tape நீர்ப்பாசன முறைமைகள் | LK-MOA-PMU-260838-GO-RFB | 900,000.00 | 15,000.00 |

3. விலைமனுக்கோரலானது உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கமத்தொழில் அமைச்சு, விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, பெறுகை திணைக்களத்தின் பெறுகைப் பிரிவிலிருந்து 0777419521 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக்கொள்ளலாம் மற்றும் 2022-05-09ஆம் திகதியிலிருந்து 2022-05-30ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், பின்வரும் முகவரிக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவானது செயற்றிட்டத்தின் நிதியிடல் முகாமையாளருக்கு ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
6. 2022-05-30ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கள் அனுமதிக்கப்படமாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. 2022-05-30ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியில் தாமாக வருகை தந்துள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி என்பன தனித்தனியான உறைகளில் இடப்பட்டு ‘மூலப்பிரதி’ மற்றும் ‘நகல்பிரதி’ என தபாலுறைகளில் குறிக்கப்படல் வேண்டும். அதன் பின்னர் இவ்விரண்டு தபாலுறைகளும் வேறொரு தபாலுறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கம் மற்றும் ‘‘வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களுக்கு குறைந்த அழுத்தமுடைய மினி தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகள் (Mini Sprinkler Irrigation Systems) மற்றும் சொட்டு நீர் நீர்ப்பாசன முறைமைகளை (Drip Tape Irrigation Systems) வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல்’’ எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
8. மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**இல. 123/2, பன்னிபிட்டிய வீதி, பத்தரமுல்ல.**

**தொலைபேசி: 0112696086 அல்லது 0777419521**
**திகதி: 08.05.2022**

# 2022/23 ம் ஆண்டிற்கான அப்புறப்படுத்தப்பட்ட பொருட் கொள்வனவாளர்களை பதிவுசெய்தல்

**எயிட்கென் ஸ்பென்ஸ் பீஎல்சி**

நிறுவனத்தினால் கீழ் குறித்த பிரிவின் கீழ் கொள்வனவாளர்களைப் பதிவுசெய்திட அழைப்புவிடுக்கப்படுகின்றது

| பிரிவு | விபரங்கள் |
|---|---|
| மட்பாண்டம் | பாவித்த மட்பாண்டப்பொருட்கள்/ சுகாதார பொருட்கள் |
| இரசாயன பொருட்கள் | நிறப்பூச்சு மற்றும் இரசாயன பொருட்கள் |
| பட்டரி | வாகன பட்டரிகள் / UPS பட்டரிகள் |
| இலத்திரனியற் பொருட்கள் | இலத்திரனியற் கழிவு / பாவிக்க முடியாத இலத்திரனியற் பொருட்கள் / வயர்கள் / லைட் ஃபிற்றிங்ஸ் |
| தளபாடங்கள் | மேசைகள் / கதிரைகைள் / அலுமாரிகள் / சோஃபா / அலுவலக தளபாடங்கள் / மெத்தைகள் |
| கண்ணாடி | வெப்ப கண்ணாடி / கண்ணாடி பார்டிஷன் / கண்ணாடி பொருட்கள்/ போத்தல்கள் / முகம் பார்க்கும் கண்ணாடிகள் |
| லினன் | படுக்கை விரிப்புகள் / திரைச்சீலைகள் / தலையணை உறைகள் / மேசை விரிப்புகள் / சீருடைகள் / மென்மையான விரிப்புகள் |
| இயந்திர பகுதிகள் | பயன்படுத்திய இயந்திர பாகங்கள் / பயன்படுத்த முடியாத உபகரணங்கள் |
| உலோகம் | புறந்தள்ளப்பட்ட இரும்பு / உலோக டிரம்ஸ் / உலோக பாகங்கள் / அலுமினியம் / வெட்டுக்கருவிகள் |
| எண்ணெய் | இயந்திரங்கள், வாகனங்கள் ஆகியவற்றிலிருந்து அகற்றப்பட்ட பயன்படுத்திய எண்ணெய் / சமையலறை எண்ணெய் |
| வாகன உதிரிப்பாகங்கள் | பயன்படுத்திய வாகன உதிரி பாகங்கள் |
| கருவிகள் | சேதமடைந்த / பயன்படுத்த முடியாத உலோகக் கருவிகள் |
| கடதாசி | பழைய செய்தித்தாள்கள் / அட்டைகள் / இதழ்கள் / புத்தகங்கள் |
| பிளாஸ்டிக் | கேன்கள் / வாளிகள் / கழிவு பொலிதீன் / ஹேங்கர்கள் / நூல் கூம்புகள் |
| டயர் | பயன்படுத்திய டயர்கள் / டியூப்கள் / ஃபிளப்கள் |
| பலகை | பயன்படுத்திய மரத் தட்டுகள் / ஒட்டு பலகை / பேனல்கள் |
| மற்றைய பொருட்கள் | தேங்காய் சிரட்டைகள் மற்றும் பிற பொருட்கள் |

கொள்வனவாளராக பதிவுசெய்ய விரும்புவோர், கீழே குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு, பெயர், முகவரி, தொடர்பு எண், தே.அ.அ.இல மற்றும் நிறுவனத்தின் பதிவு எண் உள்ளிட்ட விபரங்களுடனான விண்ணப்பத்தை 23 மே 2022 அன்று அல்லது அதற்கு முன் சமர்ப்பிக்க வேண்டும். மின்னஞ்சலாயின் பதிவு செய்ய விரும்பும் பிரிவினைத் தலைப்பாகக் குறிப்பிடவும்.

**மின்னஞ்சல் : d il@aitkenspence.lk**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்**
**கல்வி அமைச்சு**

| | |
|---|---|
| கடனிலக்கம் மற்றும் தலைப்பு | 3698/3699- SRI: விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வளம் அபிவிருத்தி செயற்றிட்டம். |
| ஒப்பந்த இலக்கம் மற்றும் தலைப்பு | STHRD/SB-V1: இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் பீடத்திற்கு மாணவர் ஆராய்ச்சி வேலை மற்றும் பொருட்கள் சேகரிப்பதற்காக வாகனங்களின் பெறுகை |
| விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி | 2022.06.07 ஆம் திகதியன்று உள்ளூர் நேரம் பி.ப. 1.30 மணிக்கு |

1. இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது நிதியமொன்றை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 145 மில்லியன் அ.ஐ.டொ. இற்கு சமமான நிதியமொன்றை கல்வி அமைச்சின் கீழ் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனிதவள அபிவிருத்தி செயற்றிட்டத்திற்காக (STHRD செயற்றிட்டம்) அமுல் நடாத்துவதற்கான ஆகுசெலவிற்காக செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் இந்த நிதியத்தின் பெறுகைகளின் பகுதியொன்றை மேலேயுள்ள ஒப்பந்தத்திற்காக செலவிட உத்தேசித்துள்ளது. இந்த விலைமனுக்கோரலில் தகுதியுள்ள வளநாடுகளின் விலைமனுதாரர்கள் பங்கு பெற்றலாம்.
2. இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் பீடத்திற்காக மாணவர் ஆராய்ச்சி வேலை மற்றும் பொருட்கள் சேகரிப்பதற்காக வாகனங்களை (‘‘பண்டங்கள்’’) கொள்வனவு செய்வதற்காக - **STHRD-V1** – தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து சப்ரகமுவ பல்கலைக்கழக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனிதவள அபிவிருத்தி செயற்றிட்ட, செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளரின் (‘‘கொள்வனவுக்காரர்’’) சார்பாக பல்கலைக்கழக பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். பூர்த்தி செய்யும் காலப்பகுதியானது உடன்படிக்கையில் கையொப்பமிடும் திகதியிலிருந்து 12 வாரங்களாகும்.
3. விலைமனுதாரரானவர் இந்த விலைமனுக்கோரலில் பங்கு பெறுவதற்கு பின்வரும் முக்கிய தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.
   - கடந்த மூன்று வருடங்களில் பிரதான வழங்குநராக சித்திகரமாக ஆகக் குறைந்தது இரு ஒப்பந்தங்களை பூர்த்திசெய்திருந்ததுடன் ஒவ்வொன்றின் பெறுமதியானது பின்வரும் அட்டவணையின் 2 ஆம் நிரலில் குறிப்பிட்டுள்ளவாறு தன்மை மற்றும் சிக்கல்தன்மையுடன் 6 ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டவாறு வழங்கலின் நோக்கம் இருத்தல் வேண்டும்.
   - கடந்த மூன்று வருடங்களில் பூர்த்தி செய்யப்பட்ட அல்லது நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஒப்பந்தங்களுக்காக பெற்றுக் கொண்ட மொத்த பணக்கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட பின்வரும் அட்டவணையின் 3 ஆம் நிரலின் ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிதிப்புரள்வாகவிருத்தல்.

**இந்த விலைமனுக்கோரலில் பங்கு பெறுவதற்கான முக்கிய தகைமைகள்:**

| பிரிவு இல. | விளக்கம் | எண்ணிக்கை | • நிரல் 2 | • நிரல் 3 |
|---|---|---|---|---|
| 01 | லேலண்ட் பஸ்கள் | 02 | 28 மில்லியன் | 70 மில்லியன் |

4. பகிரங்க போட்டிரீதியிலான விலைமனுக் கோரலானது ADB இன் பண்டங்களின் பெறுகை தனிக்கட்ட - ஒரு உறை நடைமுறையில் நடாத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு அனைத்து விலைமனுதாரர்களும் தகுதியுள்ள நாடுகளிலிருந்து பங்கு பெற்றலாம்.
5. மேலதிக தகவலைப் பெறவும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கவும் விலைமனுதாரர்கள் பின்வருபவருடன் தொடர்புகொள்ளல் வேண்டும்.

**சிரேஷ்ட பெறுகை அலுவலர்**
**செயற்றிட்ட அமுல்நடாத்தல் பணிமனை**
**விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனிதவள அபிவிருத்தி செயற்றிட்டம்**
**தொழில்நுட்பவியல் பீடம்**
**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், பெலிஹுல்ஓய, இலங்கை.**
**ZIP code: 70140**
**தொலைபேசி: 045-2280081**
**மின்னஞ்சல்: sposb-strhd@mohe.gov.lk**

6. இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் பீடத்தின் சபை அறையில் விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறவுள்ளதுடன் திகதி மற்றும் நேரம் ஆகியன 3 நாட்களுக்கு முன்னராக அறிவிக்கப்படும்.
7. ஆங்கிலத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பெறுவதற்காக, தகுதியுள்ள விலைமனுதாரர்கள் மேலேயுள்ள முகவரிக்கு **“STHRD/SB-V1 – Procurement of Vehicles for student research work and materials collection for the Faculty of Technology, Sabaragamuwa University of Sri Lanka”** இற்காக விலைமனுக்கோரல் ஆவணங்கள் தேவையென விண்ணப்பமொன்றை அனுப்பிய பின்னர், மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000 இலங்கை ரூபாவை (ஐயாயிரம் இலங்கை ரூபாவை) பெலிஹுல்ஓய இலங்கை வங்கியிலுள்ள 0083695474 என்ற கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கப்படல் வேண்டும். ஆவணங்கள் 2022 மே 9 ஆம் திகதியிலிருந்து வழங்கப்படும். இழப்பு அல்லது தாமதமான விநியோகத்திற்கு பொறுப்பு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
8. விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு விலைமனுப்பிணையொன்றுடன் 2022.06.07 ஆம் திகதியன்று பி.ப. 1.30 இற்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் உங்கள் விலைமனுக்களை அனுப்பிவையுங்கள்.

**செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளர்,**
**செயற்றிட்ட அமுல்நடாத்தல் பணிமனை,**
**STHRD செயற்றிட்டம்,**
**தொழில்நுட்பவியல் பீடம்,**
**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், பெலிஹுல் ஓய, இலங்கை.**

- பூர்த்திசெய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென அனுப்பப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியானது தனித்தனியாக அடக்கப்பட்டு முறையே‘‘மூலப்பிரதி’’ மற்றும் ‘‘நகல்பிரதியென’’ அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்பட்ட உறைகளில் சேர்க்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவையிரண்டும், இன்னொரு தனியுறையொன்றில் சேர்க்கப்பட்டு உரித்தான ஒப்பந்த ID ஐ உறையின் இடதுபக்கமேல் மூலையில் அடையாளமிடப்படல் வேண்டும்.

9. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதி நேரத்தின் பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் சமுகத்தில் உடனடியாகவே திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்களபெறுகைக் குழு,**
**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,**
**பெலிஹுல்ஓய, இலங்கை.**
**ZIP code: 70140** **திகதி: 08.05.2022**

* Trusted Marketplace of Classified Advertisers...
Green Light for Online Transfer
Lake House Branch Acc. No. 0000000377
SUNDAY OBSERVER
Classified
Inquiries :- Ramani - 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 342/ 343 | Gayani - 011 2 429 383 | E-mail - classified@lakehouse.lk
077 7 270 067

Best way to fulfil your Future Dreams
SUNDAY OBSERVER
Marriage Proposals
E-mail your advertisements to, classified@lakehouse.lk
Piyumi - 0112 429 383 Ramani - 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342

# DFCC வங்கியின் 25வது வெளியக ATM அறிமுகம்

தனது பிரசன்னத்தை மேம்படுத்துவது, நிதி உள்ளடக்கத்தை விரிவாக்கம் செய்வது மற்றும் டிஜிட்டல் கொடுக்கல் வாங்கல்களை ஊக்குவிக்கும் தந்திரோபாயத்துக்கமைய, அனைவருக்குமான வங்கிச் சேவைகளைப் பெற்றுக் கொடுக்கும் DFCC வங்கி, தனது 25 ஆவது வெளியக ATM/CRM ஐ பனாகொட, டெம்பிள்பேர்க் தொழிற்பேட்டை வளாகத்தில் அறிமுகம் செய்துள்ளது. இந்த அறிமுக நிகழ்வில் வங்கியின் சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டதுடன், டெம்பிள்பேர்க் தொழிற்பேட்டையைச் சேர்ந்த அதிகாரிகளும், தெரிவு செய்யப்பட்ட வாடிக்கையாளர்களும் அடங்கியிருந்தனர். இந்த வலயத்தில் 34 நிறுவனங்கள் மற்றும் 5000 க்கும் அதிகமான ஊழியர்கள் காணப்படும் நிலையில், இந்த அமைவிடத்திலிருந்து 3 கிலோமீற்றர் சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த வாடிக்கையாளர்களுக்கும் அனுபவிக்கக்கூடிய வகையில் இந்த ATM/CRM சேவை அமைந்துள்ளது. நீண்ட தூரம் பயணிக்க வேண்டிய தேவை இல்லாமல் செய்யப்பட்டுள்ளதுடன், சௌகரியமான முறையில் தமது டிஜிட்டல் நிதிச் சேவைகளை பொது மக்களுக்கு பெற்றுக் கொள்ளக்கூடிய வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.




DFCC வங்கியின் புதிய வெளியக வசதிகளில், நவீன வசதிகள் படைத்த CRM இயந்திரமும் அடங்கியுள்ளது. இதனூடாக வாடிக்கையாளர்களுக்கும் பொது மக்களுக்கும் எந்தவொரு வங்கிக் கணக்கிலிருந்தும் பணத்தை மீளப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன், DFCC வங்கிக் கணக்குகளுக்கு பண வைப்புகளை மேற்கொள்ளவும் முடியும். மேலும், DFCC வாடிக்கையாளர்களுக்கு கார்ட் மற்றும் கார்ட் இல்லாத கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் வசதியும், DFCC கடனட்டைகளுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

CRM இயந்திரத்துக்கு மேலதிகமாக, DFCC வங்கியினால் Pay and Go இயந்திரமொன்றும் நிறுவப்பட்டுள்ளதுடன், அதனூடாக பொது மக்களுக்கு இலகுவான முறையில் டிஜிட்டல் மொபைல் ரீலோட்கள், கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகள் மற்றும் காப்புறுதி, லீசிங் போன்ற நிறுவனசார் கொடுப்பனவுகளை மேற்கொள்ளவும் முடியும். மொபைல் ரீலோட் வசதியினூடாக, சகல வலையமைப்பு சேவை வழங்குநர்களின் இணைப்புகளுக்கும் ரீலோட் செய்து கொள்ள முடியும் என்பதால், பணியாளர்களுக்கு பெரும் சௌகரியமானதாக அமைந்துள்ளது.

## WhatsApp மற்றும் Viber ஊடாக வங்கிச் சேவைகளை வழங்கும் கொமர்ஷல் வங்கி



சமூக வலையமைப்புக்கள் ஊடாக வங்கிச் சேவைகளை வழங்கும் இலங்கையின் முதலாவது வங்கியான கொமர்ஷல் வங்கி வட்ஸ்எப் மற்றும் வைபர் செயலிகள் ஊடாக மும்மொழிகளிலும் வங்கிச் சேவைகளை அறிமுகம் செய்துள்ளதாக அறிவித்துள்ளது. நாட்டில் முதல் தடவையாக இவ்வாறான சேவை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. கொமர்ஷல் வங்கி நாட்டில் முதன்முதலாக அறிமுகம் செய்த சேவைகள் பட்டியலில் தற்போது இதுவும் இடம் பிடித்துள்ளது.

இதன் விளைவாக மேற்படி செயலிகளைப் பயன்படுத்தும் கொமர்ஷல் வங்கி வாடிக்கையாளர்கள் கணக்கு மீதி விசாரணைகள், கணக்கு விபர மேலாய்வுகள், காசோலை புத்தகத்துக்கான வேண்டுகோள், கொம்பேங்க் டிஜிட்டலுடனான பதிவுகள், புதிதாக பிளாஷ் டிஜிட்டல் கணக்குகளை திறத்தல் போன்ற சேவைகளை தமக்கு தேவையான மொழிகளில் தெரிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு முறையும் இந்த சேவைகளைப் பெறுவதற்கான தொடர்பு கொள்ளலின் போது சிங்களம், தமிழ், ஆங்கிலம் என தமக்கு விருப்பமான மொழியைத் தெரிவு செய்து கொள்ளலாம் என வங்கி அறிவித்துள்ளது.

கொமர்ஷல் வங்கி ஏற்கனவே மும்மொழிகள் மூலமான இணையத்தள சேவையைக் கொண்டுள்ளது. வாடிக்கையாளர் சேவை நலன் அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளக் கூடிய ஒருங்கிணைக்கப்பட்ட ஓரிட மும்மொழி தொடர்பாடல் மையத்தையும் அது கொண்டுள்ளது. இதன் மூலம் எழுத்து மூலமான தொடர்பாடல், வாடிக்கையாளர் தேவைகள், வாடிக்கையாளர் கருத்துக்கள் என்பனவும் சமூக ஊடகங்கள் வாயிலாக குறிப்பிட்ட குழுத் தலைவர்கள் மற்றும் பயிலுனர்கள் ஊடாகப் பெறப்படுகின்றன.

இலங்கையின் முதல் 100% கார்பன் பாவனையினை குறைத்த வங்கி, உலகின் தலைசிறந்த 1000 வங்கிகளில் தொடா்ந்தும் 11 வருடங்களாக பட்டியலிடப்பட்ட ஒரேயொரு இலங்கை வங்கி, கொமர்ஷல் வங்கியாகும்.



கனடா ஸ்காபுறோவில் அமைந்துள்ள MAJESTIC CITY தமிழர் அங்காடியின் உள்ளே திறந்து வைக்கப்பெற்ற EXPRESS AIR 'எக்ஸ்பிரஸ் ஏயர்' பிரயாண முகவர் நிலையத்தின் திறப்பு விழாவில் எடுக்கப்பெற்ற சில புகைப்படங்கள்.

உரிமையாளர் ரஜீவன் மற்றும் அவரது துணைவியார் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்வில் கனடா உதயன் பத்திரிகை ஆசிரியர் நாகமணி லோகேந்திரலிங்கம் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

## மருந்தாளர்களின் திறனை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ள ஹேமாஸ் பார்மசியுட்டிகல்ஸ்

ஏழு தசாப்த காலப்பகுதிக்கு மேலாக, இலங்கையில் முதல் தர மருந்துப் பொருட்கள் இறக்குமதியாளரும் விநியோகத்தருமாக திகழும் ஹேமாஸ் பார்மசியுட்டிகல்ஸ், மருந்தாளுநர்களின் பிரத்தியேக திறன்கள் விருத்தி நிகழ்ச்சியை பூர்த்தி செய்த இரண்டாவது தொகுதியினருக்கு சான்றளிப்பு வைபவத்தை ஹில்டன் ரெசிடென்சிஸ் இல் அண்மையில் முன்னெடுத்திருந்தது. 35 மாணவர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்று தமது திறன்களை விருத்தி செய்திருந்தனர். இலங்கை மருந்தாக்கல் சங்கத்துடன் இணைந்து இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், தேசிய ரீதியில் பதிவு செய்யப்பட்ட மருந்தாளுநர்களுக்கு அவசியமான திறன்கள் மற்றும் அறிவைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இந்த நிகழ்வு 2019 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது.

மருந்தாளுநர்களாக திகழ எதிர்பார்ப்பைக் கொண்ட மாணவர்களுக்கு பரிபூரண அறிவைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இந்த மருந்தாளுநர்களின் பிரத்தியேக திறன்கள் விருத்தி நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பதிவு பரீட்சைக்கு தோற்ற எதிர்பார்க்கும் விண்ணப்பதாரிகளுக்கு வாய்ப்பளிக்கும் வகையிலும், இலங்கை மருந்தாக்கல் நிறுவனத்திடமிருந்து மருந்தாளுநர்கள் பதிவை பெற்றுக் கொள்வதற்கும் உதவும் வகையில் 6 மாத காலப்பகுதிக்கு இலவசமாக அவர்களை தயார்ப்படுத்தும் வகையில் இந்த நிகழ்வு அமைந்திருந்தது. இதனூடாக, தொழிற்துறைக்கும் சமூகத்துக்கும் தகைமை வாய்ந்த மருந்தாளுநர்கள் தயார்ப்படுத்தப்பட்டு சேவைக்கு அமர்த்தப்படுவது உறுதி செய்யப்படுகின்றது. இந்த கற்கையின் பாட விதானத்தில் சமூக மருந்துப் பொருட்கள் செயன்முறை, Pharmaceutics, Pharmacology மற்றும் Therapeutics, Pharmacy Management, Regulatory requirements, Pharmacognosy, Cold Chain Management மற்றும் வாடிக்கையாளர் பராமரிப்பு சேவை திறன்கள் போன்றன அடங்கியுள்ளன.



இந்தத் திட்டம் தொடர்பாக ஹேமாஸ் பார்மசியுட்டிகல்ஸ் மற்றும் ஹேமாஸ் சேர்ஜிகல்ஸ் மற்றும் டயக்னோஸ்டிக்ஸ் முகாமைத்துவ பணிப்பாளர் ஜுட் பெர்னான்டோ கருத்துத் தெரிவிக்கையில், “மருந்தாளுநர்களின் பிரத்தியேக திறன்கள் விருத்தி நிகழ்ச்சியின் இரண்டாம் தொகுதியை பூர்த்தி செய்துள்ளதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். ஆர்வமுள்ள மாணவர்களின் நலனுக்காகவும், நாம் சேவையாற்றும் சமூகத்துக்கு பயனைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கிலும் இந்த நிகழ்ச்சியை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல எதிர்பார்க்கின்றேன். பொது மக்களுக்கு உயர் தரம் வாய்ந்த மருந்துப் பொருட்கள் விநியோக சேவையை மேற்கொள்வதில் மருந்தாளுநர்களை விருத்தி செய்ய வேண்டியது மிகவும் முக்கியமானதாக அமைந்துள்ளது. உயர் தரம் வாய்ந்த மருத்துவ சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதில் ஹேமாஸ் பார்மசியுட்டிகல்ஸ் எப்போதும் முன்னணியில் திகழ்வதுடன், தொழிற்துறையின் முன்னிலையாளர்களை பயிற்றுவிப்பது எமது பொறுப்பாக அமைந்துள்ளது என நாம் கருதுகின்றோம்.” என்றார்.

## பவர் Toastmasters கழகம் ஸ்தாபிப்பு




தனது ஊழியர்கள் மத்தியில் சிறந்த தொடர்பாடல் திறன் மற்றும் தலைமைத்துவ ஆற்றல்களை கட்டியெழுப்பும் நோக்கில், முன்னணி பன்முகப்படுத்தப்பட்ட வியாபாரக் குழுமமான ஏ. பவர் அன்ட் கம்பனி (பிரைவட்) லிமிடெட், Baurs Toastmasters Club (BTC) எனும் கழகத்தை நிறுவியிருந்ததுடன், அதன் நிறைவேற்றுக் குழுவின் ஸ்தாபிப்பு வைபவத்தையும் முன்னெடுத்திருந்தது.

கிங்ஸ்பரி ஹோட்டலில் ஏப்ரல் 29 ஆம் திகதி, மங்கல விளக்கேற்றலுடன் இந்நிகழ்வு ஆரம்பமானது. இந்நிகழ்வின் பிரதம அதிதியாக பவர் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ரொல்ஃவ் ப்லாசர் கலந்து கொண்டதுடன், மாவட்ட பணிப்பாளர் DTM ஸ்ரீயந்தி சல்காடோ சிறப்பு அதிதியாக கலந்து கொண்டார். இந்நிகழ்வில் பவர் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள், The Colombo Toastmasters Club இன் தலைவர் DTMசியாமலி ஜயசேகர அடங்கலாக District 82 Toastmasters International அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் ரொல்ஃப் ப்லாசர் கருத்துத் தெரிவிக்கையில், “Baurs Toastmasters Club ஸ்தாபிப்பில் கலந்து கொள்ள முடிந்தமை உண்மையில் மிகவும் முக்கியமான தருணமாக அமைந்துள்ளது. எமது பல நிறுவன அங்கத்தவர்களுக்கு வினைத்திறன் வாய்ந்த தொடர்பாடல் மற்றும் தலைமைத்துவம் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்வதற்கு இது உதவியாக அமைந்திருக்கும் என்பதுடன், முக்கியமாக தாம் சேவையாற்றும் சமூகங்களுக்கு தொடர்ந்தும் பங்களிப்பு வழங்கக்கூடியதாக இருக்கும்.” என்றார்.

Toastmasters Internationalஐப் பொறுத்தமட்டில் பவர் நிறுவனத்துக்கு புதிய விடயமல்ல. கடந்த காலங்களில் பல பிரிவுகளில் பல்வேறு பேச்சுத்திறன் விருத்தி நிகழ்வுகளை முன்னெடுத்திருந்ததுடன், இதற்கு Colombo Toastmasters Clubஇன் வழிகாட்டல்களையும் பெற்றிருந்தது.

## JDC பிரிண்டிங் டெக்னொலொஜிஸ் அனுசரணையில் 2022 அச்சு மற்றும் வர்த்தக கண்காட்சி



இலங்கை அச்சு நிறுவனமும் அச்சீட்டாளர்களின் சங்கமும் இணைந்து ஏற்பாடு செய்த இலங்கை அச்சு மற்றும் வர்த்தக கண்காட்சி அண்மையில் பி.எம்.ஐ.சி.எச் இல் நடைபெற்றது. JDC பிரிண்டிங் டெக்னொலொஜிஸ் நிறுவனம் வர்த்தக கண்காட்சியின் பிரதம அனுசரணை வழங்கியிருந்தது. 150 இற்கும் மேற்பட்ட கண்காட்சிக் கூடங்களுடன் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், பாவனையிலுள்ள சகலவகையான நவீன உற்பத்திகள், பொறித் தொகுதிகள் மற்றும் சாதனங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

1979 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட JDC பிரிண்டிங் டெக்னொலொஜிஸ் இலங்கையின் அச்சுமற்றும் பொதியிடல் கைத்தொழிலுக்கு தேவையான பொறித்தொகுதிகளையும் கருவிகளையும் வழங்கும் முன்னணி வழங்குநராகும். அதிநவீன Konica Minolta Accorio Label AL 230 டிஜிட்டல் லேபல் அச்சு இயந்திரங்கள் வர்த்தக அச்சுத் துறைக்கு பெரும் உந்துசக்தியாகும்.

Konica Minolta Accorio Label AL 230 லேபல் அச்சு இயந்திரத்தின் முதலாவது இயந்திரம் மீரிகம Sanmik பிரிண்டிங் அன்ட் பக்கேஜிங் நிறுவனத்தினால் இந்த கண்காட்சியின் போது கொள்வனவு செய்யப்பட்டது. ஒரு நிமிடத்துக்கு 76 அடி அச்சு வேகத்துடன் அச்சு வேலைகளுக்கிடையே குறைந்தபட்ச நேரத்தில், அச்சு ஊடகங்களான நொன் டெக்ஃடெக், டெக் கோடட் போன்ற பல்வேறு அச்சு கடதாசிகளின் மேல் இந்த டிஜிட்டல் அச்சு இயந்திரத்தின் மூலம் அச்சிட்டுக் கொள்ளமுடியும்.

தொழிற்பாட்டுவேகம், நெகிழ்வுப்போக்கு, முன் பதிப்பு அச்சு ஆற்றல், விரயத்தை தடுத்து செலவைக் குறைக்கும் ஆற்றல் ஆகிய திறன்கள் இதற்கு உண்டு.

## சுற்றுலாத்துறை சிறு வணிகங்களுக்கு மானியமாக ஐரோப்பிய ஒன்றியம் ரூபா 60 மில்லியன் நிதியுதவி




சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு மீண்டும் வருவதற்கு ஆரம்பித்துள்ள நிலையில், சுற்றுலாத்துறையிலுள்ள சிறு வணிகங்கள் கொவிட் தொற்றுநோய்க்குப் பின்னரான மீட்சி மற்றும் வளர்ச்சிக்கான வலுவாக அத்திவாரத்தைக் கட்டியெழுப்புவதை விரைவுபடுத்த உதவும் வகையில், இலங்கையில் உள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் குழுவும், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையும் தலா ரூபா 1 மில்லியன் பெறுமதியான முதல் மூன்று மானியங்களை வழங்கியுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் கூடிய ‘சுற்றுலாத்துறை மீள் எழுச்சித்திட்டம்’ என்பதன்கீழ் அடுத்த இரண்டு மாதங்களில் 60 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் நிறுவனங்களுக்கு மானியங்கள் வழங்கப்படவுள்ளன.

நிதிப் பற்றாக்குறையால் பல சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் தங்கள் வணிகத்தை மீண்டும் ஆரம்பிப்பதில் தாமதம் காட்டுகின்றன. இந்த மானியங்கள் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் தங்கள் செயல்பாடுகளை மீண்டும் ஆரம்பிக்கவும், சுற்றுலாத்துறையில் ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சியை சிறப்பாகப் பயன்படுத்திக்கொள்வதற்கும், எதிர்காலத்தில் மேலும் மீள்எழுச்சியுடன் செயல்படுவதற்கும் சிறந்த ஸ்தானத்தில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவின் இலங்கைக்கான தூதுவர் டெனிஸ் சாய்பி முதல் மானியங்களை வழங்கும் இந்நிகழ்வில் உரையாற்றுகையில், “சுற்றுலாத்துறையில் உள்ள சிறு வணிக நிறுவனங்கள் தொற்றுநோயால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், மானிய நிதி உட்பட பல முனைகளில் அவற்றுக்கு ஆதரவு தேவைப்படுகிறது.

நாட்டின் தற்போதைய சூழ்நிலை காரணமாக உள்ளூர் சுற்றுலாத்துறையை மற்றொரு நிச்சயமற்ற நிலைமைக்கு தள்ளுகிறது. எனவே, குறுகிய காலத்தில் வணிகங்கள் தங்கள் செயல்பாடுகளை மீண்டும் நிலைநிறுத்தவும் எதிர்கால வளர்ச்சிக்கான வலுவான அத்திவாரத்தை இடவும் இலங்கை சுற்



## ஈழத்து நவீன இலக்கிய முன்னோடிகள் 4

மூத்த எழுத்தாளர் தி. ஞானசேகரன்

# இதழியல் வாழ்நாள் சாதனையாளர் மல்லிகை ஜீவா

ஈழத்து இலக்கிய வரலாற்றில் அதிகூடிய காலம் வெளிவந்த சிற்றிதழ் என்ற பெருமை மல்லிகைக்குரியது. டொமினிக் ஜீவா, 1966ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதி மல்லிகையை வெளியிடத் தொடங்கினார். ஈழத்து நவீன இலக்கிய வரலாற்றில் மல்லிகை ஏறத்தாழ 48 வருடங்கள் இலக்கிய உலகில் பவனிவந்து சாதனை படைத்தது. முதலில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த மல்லிகை, முப்பது ஆண்டுகளின் பின்னர் கொழும்பிலிருந்து வெளிவரத் தொடங்கியது. யாழ்ப்பாணத்துப் போர்ச்சூழல் காரணமாக இடம்பெயர்ந்து கொழும்புக்கு வந்த டொமினிக் ஜீவா, 05021997 அன்று மல்லிகைக் காரியாலத்தை கொழும்பில் புதிதாக ஆரம்பித்தார். அதன்பின்னர் மீண்டும் மல்லிகை வெளிவரத்தொடங்கி டிசம்பர் 2012வரை வெளிவந்தது. கொழும்பில் மல்லிகைப் பந்தல் என்ற பதிப்பகத்தினூடாகப் பல தரமான நூல்களை வெளிக் கொணர்ந்தார் ஜீவா.

மல்லிகை வெளியானதும் அந்த இதழ்களைச் சுமந்து சென்று நேரடியாக வாசகர்களிடம் கொடுத்து அடுத்த இதழ் வெளியிடுவதற்கான பணத்தைச் சேகரித்து விடுவார் ஜீவா. 'பிரதிகளைத் தோளில் சுமந்து வீதி வீதியாக விற்கத் தொடங்கினேன் என்பதைவிட திணிக்கத் தொடங்கினேன் என்பதே சரியாகும்' எனக் குறிப்பிடும் ஜீவா, ஒரு முழுநேர இலக்கிய உழைப்பாளியாக இருந்து மல்லிகையை வெளியிட்டார்.

ஆய்வுக்கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள், இலக்கிய சர்ச்சைகள் பலவற்றுக்கு களம் வழங்கியது மல்லிகை. பல பிரதேசச் சிறப்பு மலர்களை வெளியிட்டதன்மூலம் பல புதிய எழுத்தாளர்கள் இனங்காணப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்டார்கள். முஸ்லிம் பிரதேச எழுத்தாளர்கள், மலையக எழுத்தாளர்கள் எனப் பலர் வெளிச்சத்துக்கு வந்தார்கள். மல்லிகை பல இலக்கிய கர்த்தாக்களின் படங்களை அட்டையில் பொறித்து அவர்கள் பற்றிய விபரங்களையும் வெளியிட்டு அவர்களைக் கௌரவித்தது. சிங்கள எழுத்தாளர் சிலரையும் அட்டையில் பொறித்துக் கௌரவித்தார் ஜீவா. சிங்கள இலக்கிய வட்டாரத்தில் அதிகம் அறியப்பட்ட தமிழ் எழுத்தாளர் டொமினிக் ஜீவாதான்.

மல்லிகையில் வெளிவந்த தூண்டில் என்ற கேள்வி பதில் பகுதி ஜீவாவின் அபிப்பிராயங்கள், சிந்தனைகள், அனுபவக்குறிப்புகளை ஒளிவு மறைவின்றி வெளியிடுகின்ற அரங்கமாக விளங்கியது.

மல்லிகை இதழ் மார்க்சியக் கோட்பாட்டை ஈழத்து நவீன இலக்கியத்தில் அறிமுகப்படுத்தி கருத்தியல் ரீதியல் கூர்மைப்படுத்தி நுண்மைப்படுத்தியது. மல்லிகையின் வெற்றிக்கு மற்றுமொரு முக்கிய காரணம் இலங்கையின் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் குரலாக அது ஒலித்ததுதான் எனக்குறிப்பிட்டுள்ளார் சிறுசஞ்சிகைகளின் செவிலித்தாய் என்று போற்றப்பட்ட வல்லிக்கண்ணன்.

முதுமை காரணமாக ஜீவாவால் மக்களிடம் சென்று அடுத்துவரும் மல்லிகைக்கான பொருள் தேட்டத்தைப் பெற முடியாத நிலையில் மல்லிகை நின்று போனது.

வெள்ளை வேட்டி, வெள்ளை நஷனல் உடையுடன் காணப்படும் ஜீவா, அதே உடையுடன் இந்தியப் பயணங்கள், சோவியத் யூனியன், ஐரோப்பிய நாடுகள் எனப் பல நாடுகளுக்கும் சென்று வந்ததோடு தனது பயண அனுபவங்களையும் மல்லிகையில் பதிவு செய்துள்ளார்.

எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம் டொமினிக் ஜீவாவின் சுயசரிதை நூல். இதன் இரண்டாவது பாகம் அச்சுத் தாளின் ஊடாக ஓர் அனுபவப் பயணம் என்பதாகும். டொமினிக் ஜீவாவின் சுயசரிதை நூல் UNDRAWN PORTRAIT FOR UNWRITTEN POETRY என்ற பெயரில் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் ஓர் ஏழைக் குடும்பத்தில் 27061927இல் பிறந்தவர் டொமினிக் ஜீவா. இவர் ஐந்தாம் வகுப்புவரை யாழ். சென்ற் மேரிஸ் பாடசாலையில் படித்தவர். ஆரம்ப காலத்தில் பொதுவுடமைச் சித்தாந்த நூல்களை வாசிப்பதற்கு ஜீவாவுக்கு உதவியவர் புத்தகசாலை அதிபர் ஆர்.ஆர். பூபாலசிங்கம். பொன். கந்தையா, கார்த்திகேசன், லிங்கன் ஆகியோரின் வழிகாட்டலில் ஜீவா கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து கொண்டார்.

இருபது வயதில் ஜீவா எழுதிய முதற் கதை எழுத்தாளன்| சுதந்திரனில் பிரசுரமாகியது. 1948இல் தமிழகத்திலிருந்து இலங்கை வந்து தலைமறைவு வாழ்க்கை மேற்கொண்ட தோழர் ப. ஜீவானந்தத்தை சந்திக்கும் வாய்ப்பு டொமினிக் ஜீவாவுக்கு ஏற்பட்டது. அச்சந்திப்பு ஜீவாவின் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது. மார்க்சியக் கொள்கையை ஆதாரமாகக் கொண்டு ஜீவாவின் எழுத்துப்பணி பரிணமிக்க வழிகாட்டியவர் ப. ஜீவானந்தம். அவர் மீது கொண்ட பக்தியினால், டொமினிக் என்ற தனது பெயருடன் ஜீவா என்ற பெயரையும் இணைத்துக்கொண்டு டொமினிக்ஜீவா என எழுத்துலகில் இயங்கத் தொடங்கினார்.


தமிழக சரஸ்வதி இதழ் ஜீவாவின் நிழற்படத்தை 1958இல் அட்டையில் பதித்துப் பெருமைப்படுத்தியது. 1968 ஜுலையில் வெளிவந்த தாமரை சிறுகதைச் சிறப்புமலர் ஜீவாவின் உருவத்தை அட்டையில் தாங்கி வெளிவந்து ஈழத்து எழுத்தாளர்களுக்குக் கௌரவத்தை ஏற்படுத்தியது.

இலங்கையில் 1956இல் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தைத் தொடர்ந்து சமூக பொருளாதார நிலைகளால் இலங்கைத் தமிழரிடையே தேசிய உணர்ச்சி பிறந்தது. அதன்விளைவாக வர்க்க உணர்வுகள் தீவிரமடைந்தன. தேசிய விழிப்பும் வர்க்கப் போராட்டங்களும் மக்களிடையே பெரியதொரு சிந்தனை மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது. அதன் தாக்கம் இலக்கியத்திலும் பிரதிபலித்தது.


1957இல் இலங்கையில் தேசிய சாஹித்திய மண்டலம் உருவாக்கப்பட்டது. இக்காலகட்டத்திலேதான் டொமினிக் ஜீவாவின் தண்ணீரும் கண்ணீரும் என்ற முதலாவது சிறுகதைத் தொகுதியை சரஸ்வதி ஆசிரியர் வெளியிட்டார்.

1960இல் இச்சிறுகதைத் தொகுதி அவ்வாண்டின் சாஹித்திய மண்டலப் பரிசினைப் பெற்றது. அதுவே இலங்கையில் முதன்முதலில் நவீன புனைகதை இலக்கியத்திற்கான சாஹித்திய விருதுபெற்ற நூலாகும். பரிசு பெற்றுவந்த ஜீவாவை, யாழ். புகையிரத நிலையத்தில் 13101961 அன்று மலர்மாலை அணிந்து வரவேற்றார் யாழ்நகர சபை முதல்வர் ரி. எஸ். துரைராசா .

டொமினிக் ஜீவா பெற்ற இந்தப்பரிசு ஈழத்து மரபுவழி இலக்கியகர்த்தாக்களை சீற்றம் கொள்ள வைத்தது.









பண்டித வர்க்கத்தினர் ஒன்றுசேர்ந்து பேராசிரியர் ஆ.சதாசிவம் தலைமையில் மரபுப்போராட்ட அணியொன்றை உருவாக்கினர். 'சிறுகதையும் வசன கவிதையும் இலக்கியமாகா. இன்றைய சிறுகதைப் படைப்பில் இழிசினர் வழக்கு அதிகரித்துவிட்டது. பேச்சுத் தமிழுக்கு இடமளிக்கும் பொதுவுடமைவாதிகள் தமிழைக் கொலை செய்கிறார்கள்' என மரபுவாதிகள் வாதிட்டனர். ஈழத்து இலக்கிய வரலாற்றில் மிக உச்சமான தர்க்கமாக இந்த மரபுப் போராட்டம் அமைந்தது. இந்தத் தர்க்கம் டொமினிக் ஜீவாவின் நூலுக்குப் பரிசு கிடைத்ததன் பின்னணியில் எழுந்தது. யாழ்ப்பாணத்தில் 1963இல் நடந்த சாஹித்திய விழாவில், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் முட்டை எறிந்து கூட்டத்தைக் குழப்பிய நிகழ்வுடன் இந்தப் போராட்டம் முடிவுற்றது.

இத்தகையதொரு பின்புலம், டொமினிக் ஜீவாவுக்குக் கிடைத்த சாஹித்திய விருது, மக்களை இலகுவில் சென்றடையும் நவீன உரைநடைப் புனைவு இலக்கியத்தை ஆக்க இலக்கியமாக ஈழத்தில் அங்கீகரிக்க வைத்தது.

'தண்ணீரும் கண்ணீரும்' சிறுகதைத் தொகுதியை மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் எம்.ஏ. பாடத்திட்டத்தில் சேர்த்துக் கொண்டது. ருஷ்ய, செக்கோசிலவக்கிய, ஆங்கில, சிங்கள மொழிகளில் இவரது சிறுகதைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம் டொமினிக் ஜீவாவின் சுயசரிதை நூல். இதன் இரண்டாவது பாகம் அச்சுத் தாளின் ஊடாக ஓர் அனுபவப் பயணம் என்பதாகும். டொமினிக் ஜீவாவின் சுயசரிதை நூல் UNDRAWN PORTRAIT FOR UNWRITTEN POETRY என்ற பெயரில் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளது.

டொமினிக் ஜீவாவின் நூல்களாக தண்ணீரும் கண்ணீரும் (1960), பாதுகை (1962), சாலையின் திருப்பம் (1967), வாழ்வின் தரிசனங்கள், டொமினிக் ஜீவா சிறுகதைகள், அனுபவ முத்திரைகள், முப்பெரும் தலைநகரில் முப்பது நாட்கள் ஆகியவை வெளிவந்துள்ளன.

இலக்கியப் பணிக்காக டொமினிக் ஜீவா பல பரிசில்களைப் பெற்றுள்ளார். யாழ்.பல்கலைக்கழகம் டொமினிக் ஜீவாவுக்கு எம்.லிட். என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவிக்க முன்வந்தது. அந்தப் பட்டம் கல்வித்தகைமைசார் பட்டம் என்பதனால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என ஜீவா மறுத்துவிட்டார்.

2005ஆம் ஆண்டில் பிரதமரால் வழங்கப்படும் தேசநேத்துரு (தேசத்தின் கண்) என்ற விருது டொமினிக் ஜீவாவுக்கு வழங்கப்பட்டது. அதே ஆண்டில அரச சாஹித்தியரத்னா உயர்விருதும் வழங்கப்பட்டது. கனடியத் தமிழ் இலக்கியத் தோட்டத்தின் வாழ்நாள் சாதனையாளர் விருது 2013இல் வழங்கப்பட்டது.

ஈழத்து இதழியல் வரலாற்றில் சாதனை படைத்த முன்னோடி டொமினிக் ஜீவா 28.01.2021அன்று அமரரானார்.




## கொலைகாரனைக் கண்டுபிடித்தால் பரிசு!

**கொல்லுவதோ இளமை தொடர்கதையை வாசித்துக் கொண்டு வரும் வாசகர்களுக்கு ஓர் இன்ப அதிர்ச்சி.**
**ஆமாம்,**
**இந்த துப்பறியும் கதையில் கொலைகாரன் யார் என்று கண்டு பிடித்து எழுதும் வாசகர்களில் மூன்று பேருக்கு நம் நாட்டு எழுத்தாளர்களின் விலை மதிப்புள்ள நூல்கள் பரிசாக வழங்கப்படும்.**

**நீங்கள் செய்ய வேண்டியது கொலைகாரன் யார் என்று கண்டுபிடித்து எழுதி அனுப்புவது மட்டும்தான். ஒருவர் ஒரு பதிலை மட்டும்தான் எழுதமுடியும்.**

**கொலைகாரனை கண்டுபிடியுங்கள் நூல்களை பரிசாக வெல்லுங்கள்**

அனுப்பவேண்டிய முகவரி:
**கொல்லுவதோ இளமை**
தினகரன் வாரமஞ்சரி லேக்ஹவுஸ்
கொழும்பு10.

## 26 மனதுக்குள் வந்து விட்டாலோ காதல் அடுத்து வரத் தயாராகுமே மோதல்!

சிறிது நேரம் பிரசன்னாவையே பார்த்துக் கொண்டிருந்து விட்டு,

மதுமிதா மெல்ல பேசினாள்.

"என்னைவிட மிகவும் அழகானவள் என் தங்கை. அவள் அப்படி அழகாக இருந்ததினாலேயே அவளுக்கு 22 வயதிலேயே திருமணமாகிவிட்டது. அவளைத் திருமணம் செய்து கொண்ட அந்த தம்பியின் பெயர் பிரபு. கொம்பியூட்டர் படிப்பில் அதி உச்சம் தொட்டவன்... அவன் அப்பாவும் ஒரு தொழில் அதிபர். தேயிலை வியாபாரம் அவருடையது. எங்கள அப்பாவைப் போல் இல்லாமல் நேர்மையாக சம்பாதிப்பவர். அதேபோல் தான் பிரபு தம்பியும் மிகவும் நேர்மையானவன்!"

"சரி இப்படி இருந்தும், உங்கள் தங்கை இறந்து போனது எப்படி!

"அந்தக் கதையைக் கேட்டால் நீங்களே வியப்படைவீர்கள் பிரசன்னா! பிரபு தம்பி. என் தங்கை பூமிகாவை மணந்து, கொண்ட ஒரு வருடத்தில் எங்கள் அப்பாவைப் பற்றி விஷயம் பிரபு தம்பிக்கு தெரிந்து விட்டது. உடனே அதை நிறுத்த வேண்டுமென்று அப்பாவிடம் நேரடியாகவே சொன்னான் பிரபு. ஆனால் என் அப்பா எங்கே அதைக் கேட்டார். இன்னமும் அவர் அதைத்தான் செய்து கொண்டிருக்கிறார்.

"சரி....அப்புறம் என்ன நடந்தது... பிரபு உங்கள் தங்கை பூமிகாவை விட்டு விட்டுச் சென்று விட்டானா?"

"பைத்தியமா பிரசன்னா உங்களுக்கு... பிரபு அந்த மாதிரி ஆள் கிடையாது. தங்கக் கம்பி அவன். அப்பாவின் இந்த சட்ட விரோத வியாபாரத்தை பார்த்துக் கொண்டிருக்க முடியாமல்... வெளிநாட்டில் போய் செட்டில் ஆவதற்கு அவன் பூமிகாவைக் கூப்பிட்டான். ஆனாலும் பூமிகா அதற்கு மறுத்து விட்டாள். என்னையும் அம்மாவையும் அப்பாவையும் விட்டுப் போக அவள் விரும்பவில்லை. இதன்பிறகு நிலமை மிகவும் மோசமாக ஆரம்பித்தது!"

"சரி அதன் பிறகு, என்னதான் நடந்தது?" ஆவலை அடக்க முடியாமல் கேட்டான் பிரசன்னா.

"ஒரு நாள் அப்பாவை சந்தித்த பிரபு, அவரிடம், இந்த வியாபாரத்தை இன்றே நிறுத்தா விட்டால் இது சம்பந்தமாக பொலிஸாருக்கு அறிவிக்கப் போவதாகக் கூறினான். இதற்கு அப்பா பயந்து விட்டார். இதனால் ஆத்திரம் கொண்ட அப்பா மறுநாளே தனது அடியாட்களை வைத்து பிரபுவைக் கடத்திச் சென்று காட்டுக்குள் வைத்து கொலை செய்து விட்டார்!"

"எ...ஏ... என்னது... உங்கள் அப்பா அவ்வளவு மோசமானவரா பொலிஸார் விசாரிக்கவில்லையா?"

"பிரபு தம்பி காணாமல்போய் விட்டார் என்றுதான் பொலிஸார் தேடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் இதுவரையில் பிரபுவின் பொடி கூட கிடைக்கவில்லை பிரசன்னா!"

இந்தத் தகவல்கள் எல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும் அது?"

"இந்த விபரங்களை எல்லாம் ஒருநாள் அம்மாவிடம் அப்பா சொல்லிக் கொண்டிருந்ததை நான் கேட்டேன்"

"சரி... உங்கள் தங்கை எப்படி இறந்து போனாள்?"

"அவளுக்கு இதைப்பற்றியெல்லாம் எதுவும் தெரியாது. பிரபுவை அப்பாதான் கொலைசெய்து விட்டார் என்பதும் அவளுக்குத் தெரியாது! பிரபுவை பூமிகா ரொம்பவும் நேசித்தாள். இதனால் அவன் வரும்வரை அவள் காத்திருந்தாள். இதற்கிடையில் பிரபு இறந்து போனது பற்றி அவளிடம் அம்மா சொல்லாமல் சொல்லியிருக்கிறாள். இதைக் கேட்டது அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. மறுநாளே நஞ்சைக் குடித்து இறந்து விட்டாள்!"

"சோகமான கதையாகத்தான் இருக்கிறது உங்கள் கதை...! நீங்க எதுக்கும் பயப்படாதீங்க மது... நான் உங்களுக்கு உதவி செய்கிறேன்!"

"இந்த துர்பாக்கியம் பிடித்தவளுக்கு நீங்க எப்படி பிரசன்னா உதவி செய்யப்போறீங்க...?"

"அதற்கு முன்பு இன்னும் ஒரு தகவலை உங்களிடமிருந்து தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது. ஆனாலும் அதற்கு இப்போது நேரமில்லை. இப்போதே மணி பன்னிரெண்டைத் தாண்டி விட்டது. எனக்கு மூன்று மணிக்கு மீட்டிங் இருக்கிறது. அதனால் நாளைக்கு லீவு போட்டுட்டு வந்தாவது மேலும் உங்கள் கதையைக் கேட்கிறேன். அதில் எனக்கு இந்த பிரச்சினையும் இல்லை!"

"எனக்கும் இப்போது எந்தப் பிரச்சினையும் இல்லை. அதே போல் எந்தப்பயமும் இல்லை. அதுக்குக் காரணம் என்ன தெரியுமா பிரசன்னா" கேட்டு விட்டு,



விழிகளைத் தாழ்த்தி, பிரசன்னாவைப் பார்த்தாள் மதுமிதா.

"என்னவாம்?" என்று கேட்டுவிட்டு, விழிகளை நடமாட விட்டான் பிரசன்னா,

"என்ன பாதுகாக்கக் கூடிய ஒரு நல்ல இதயம் இப்போது எனக்குக் கிடைத்திருக்கிறது!" சொல்லிவிட்டு, பிரசன்னாவின் வலது கையைப் பிடித்து தன்பக்கம் இழுத்துக் கொண்டாள் மதுமிதா!

"ஓ... அப்படியா... சரிமது அப்போது நான் கிளம்புறேன். நீங்களும் கவனமாகப் போங்க...இரவைக்கு கோல் ஒன்று தருகிறேன். மீண்டும் சந்திப்போம். கடவுள் துணை!"

"உங்களுக்கும் கடவுள் துணை பிரசன்னா... நீங்களும் கவனமாகப் போங்க!"

அடுத்து,

இருவரும் தங்கள் தங்கள் வாகனங்களில் புறப்பட்டார்கள்.

ஆனாலும்,

மதுமிதாவின் மனதில் மட்டும் நிம்மதியே இருக்கவில்லை.

கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு சென்ற ரகசிய பொலிஸின் பெண் பொலிஸ் அதிகாரிகள் மூவரும். துப்பறியும் இன்ஸ்பெக்டர் இன்பராஜின் கட்டளைப்படி,

தீபனின் நண்பர்களான

பிரதீப்,

சஞ்சீவன்,

ஜீவகன் மூவரிடமும் மீண்டும் தங்கள் விசாரணைகளை ஆரம்பித்தார்கள்.

"தீபனும் தீபிகாவும் பள்ளி காலத்தில் இருந்தே அன்பாக இருந்திருக்கிறார்கள். இதற்கிடையில் கெம்பஸில் வேறு எவராவது தீபனை காதலித்தார்களா?"

பெண் பொலிஸ் அதிகாரி இப்படிக் கேட்டதும்,

நண்பர்கள் மூவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்!

பிறகு,


ஜீவகன் தான் மெதுவாக பதில் சொன்னான்.

"ஆமாம்... ஆமாம்... அப்படி ஒரு பெண் இருந்தாள் மிஸ்!"

**(இளமை வரும்)**



# படித்ததும் பகர்வதும் 94





சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்


### சர்வதேச அன்னையர் தினம்

ஒவ்வொரு வருடமும் மே மாதம் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை, 'சர்வதேச அன்னையர் தினம்' எனக் கொண்டாடப்படுகிறது. ஏனைய சர்வதேச தினங்களைப் போலன்றி, வருடத்தின் ஒரு குறித்த தினத்தில் அல்லாமல் மே மாதத்தின் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமையன்று சர்வதேச அன்னையர் தினம் கொண்டாடப்படுவதால் ஒவ்வொரு வருடமும் மே மாதத்தின் வெவ்வேறு தினங்களில் அன்னையர் தினம் கொண்டாடப்படுவதைக் காணலாம்.

அன்னை, மாதா, தாய், அம்மா என பல்வேறு பெயர்களை கொண்டு அழைத்தாலும் அன்னை என்பவள் ஒவ்வொருவரினது வாழ்விலும் போற்றிப் புகழப்படும் ஓர் உயர் அங்கம் என்றால் மிகையல்ல. அன்னையரின் பெருமை பற்றி எழுதாத எழுத்தாளர்கள் இல்லை, பாடாத கவிஞர்கள் இல்லை, பேசாத பேச்சாளர்கள் இல்லை எனும் அளவுக்கு அன்னையரின் புகழ் போற்றப்படுகிறது. எனினும் நடைமுறையில் அன்னையர்கள் எந்த அளவில் கௌரவிக்கப்படுகிறார்கள்? அவர்களுக்கு குடும்பங்களில் உரிய இடம் வழங்கப்படுகிறதா? என்பதில் நூறுவீத திருப்தியான பதிலை காண முடியாதுள்ளது.

இன்றைய நவநாகரீக உலகில், பெரும்பாலான குடும்பங்களில் இளைஞர்கள் தமது திருமணங்களின் பின்னர் குறிப்பாக இளம் பெண்கள் கணவரின் கட்டுப்பாட்டுக்கு வந்த பின்னரும், வாலிபர்கள் தமது மனைவிகளின் வார்த்தைகளுக்கு அடங்கி நடக்கின்ற சந்தர்ப்பங்களிலும் தமது அன்னையருக்கு உரிய இடமளிப்பதில் தவறிழைத்து விடுக்கின்றனர். இதனால் அன்னையரது தேவைகளை உரிய முறையில் நிறைவேற்றுவதிலும், அவர்களது அபிலாஷைகளை பூர்த்தி செய்து கொடுப்பதிலும் தமது கடமைகளை செய்திட தவறுகின்றனர்.

குறிப்பாக தனி குடித்தனம் நடத்தும் பிள்ளைகள் தமது அன்னையரை தமது வீடுகளில் சேர்த்து பராமரிப்பதைத் தவிர்க்கவே முயற்சிக்கின்றனர். இதனால் தமது முதிய வயதில் கவனிப்பாரற்று அல்லல்படும் அன்னையர்கள் ஆயிரம் ஆயிரம். இந்த இழி நிலையை மாற்றியமைக்க ஒவ்வொருவரும் உள உறுதி கொள்வோமாயின் அதுவே சர்வதேச அன்னையர் தினத்தின் நோக்கத்தை அர்த்தமுள்ளதாக ஆக்கும். குறைந்தபட்சம் இந்த ஒரு விடயத்தையாவது இவ்வருட அன்னையர் தினத்தில் தவறாது செய்திட உறுதி கொள்வோம்.




அன்னையர் தினத்தில் மட்டுமின்றி எல்லாத் தினங்களிலும் அன்பளிப்புகள் வழங்கியும், வேறு விதத்திலும் தமது தாய்மார்களை மகிழ்ச்சியோடு வைத்துக்கொள்ள வேண்டியது பிள்ளைகளின் தலையாய பொறுப்பாகும்.

இப்பூவுலகில் இறைவனின் அதியுயர் படைப்பான அன்னையர்கள் அனைவருக்கும் சர்வதேச அன்னையர் தின நல் வாழ்த்துக்கள்!

## நெஞ்சுக்கு நீதி

இறைவனது படைப்பினில் உயர்ந்தவளே அன்னை
குறையற்ற தியாகங்களால் வளர்த்தாளே என்னை
நிறைந்துயாம் செய்திடனும் மகிழ்வுறவே அன்னை
இறையாசி கேட்டிடனும் தொட்டிடவே விண்ணை

## பிரிந்தார் பெருமை

### புவனலோஜினி நடராஜசிவம்

இலங்கையின் மூத்த பெண் ஒலிபரப்பாளரும், ஐந்து தசாப்தங்களுக்கும் மேலாக அறிவிப்பாளராக நேயர் நெஞ்சங்களை வென்றவருமான திருமதி புவனலோஜினி நடராஜசிவம் அவர்கள் கடந்த 03ம் திகதியன்று (2022.05.03) தனது 70வது வயதில், யாழ்ப்பாணத்தில் காலமானார். இலங்கை வானொலியில் 1966ல் இணைந்த இவர், தமிழ் வர்த்தக சேவையின் மக்கள் அபிமானம் வென்ற சிரேஸ்ட அறிவிப்பாளராகத் திகழ்ந்தார். 'பூவும் பொட்டும்' எனும் மங்கையர் மஞ்சரி நிகழ்ச்சியை 25ஆண்டுகளுக்கும் மேல் நடாத்திய இவர், இல்லறத் தோழி, பெண் உலகம், வனிதா மண்டலம், செவ்வந்தி, மணிமலர், வளரும் பயிர், அரங்கேற்றம் போன்ற பல்வேறு ஜனரஞ்சக நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கி, இரசிகர்கள் மத்தியில் தனக்கென தனியிடம் பிடித்தார்.



வானொலி நாடகங்களில் மட்டுமல்லாமல் மேடை நாடகங்களிலும் தனது நடிப்புத்திறனை வெளிக்காட்டிய சிறந்த நடிகை புவனலோஜினி நடராஜசிவம். அறிவிப்பு, நடிப்பு என்பவற்றுக்கு அப்பால் சிறந்த எழுத்தாளராகவும் இருந்த இவரது கதைகள், கவிதைகள், கட்டுரைகள் என பல ஆக்கங்கள் இலங்கையின் தேசியப் பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளன.

ஊடகத்துறையில் ஒலிபரப்புக்காகவே தனது வாழ்நாளில் பெரும் பகுதியை செலவிட்ட இவருக்கு, அரசாங்க கலாசார அலுவல்கள் திணைக்களம் 2021ம் வருட வானொலி அரச விருதுவிழாவில் "பிரதிபா பிரணாம" எனும் வாழ்நாள் சாதனையாளர் உயர் விருதினை வழங்கி கௌரவித்தது!


நான் வானொலி நிகழ்ச்சிகளில் பங்குபற்ற ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு செல்லும்போது இவரைச் சந்தித்துப் பேசிய சந்தர்ப்பங்களில் இவரது அமைதியான, ஆர்ப்பாட்டமில்லாத பண்பினை நன்கு அவதானித்து மகிழ்ந்திருக்கிறேன். அந்த நினைவுகள் இன்றும் என் மனதில் பசுமையானவை.

வல்வெட்டித்துறையில் பிறந்து, கொழும்பில் நீண்ட காலம் வாழ்ந்த புவனலோஜினி, புகழ்பூத்த மூத்த ஊடகவியலாளர், காலஞ்சென்ற நடராஜசிவம் அவர்களின் மனைவி என்பதும் குறிப்பிடத்தக்கது.

## புது வரவு

### '2022 மீடியா டிரெக்டரி'

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் '2022 மீடியா டிரெக்டரி' (Media Directory) எனும் பல்வேறு தகவல்கள் அடங்கிய புத்தகத்தை அண்மையில் வெளியிட்டுள்ளது. மீடியா டிரெக்டரிதொடரில் போரம் வெளியிட்டுள்ள ஆறாவது மீடியா டிரெக்டரி இதுவாகும். ஒவ்வொருவருக்கும் அன்றாடம் தேவைப்படக்கூடிய பல்வேறு நிறுவனங்களின் முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள், மின்னஞ்சல் முகவரிகள், இணையத்தள விபரங்கள் போன்றன இதில் இடம்பெற்றுள்ளன.




ஜனாதிபதி, பிரதமர், பாராளுமன்றம், அமைச்சுக்கள், பாராளுமன்ற அங்கத்தவர்கள், மாகாண சபைகள், அவற்றின் ஆளுனர்கள், செயலாளர்கள், வெளிநாட்டு தூதுவராலயங்கள், அரசியல் கட்சிகள், பல்கலைக்கழகங்கள், ஊடக நிறுவனங்கள், தினசரி, வாரப்பத்திரிகைகள், வானொலி தொலைகாட்சி நிறுவனங்கள் என்பவற்றின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள், மின்னஞ்சல் முகவரிகள் போன்ற இன்னோரன்ன விபரங்கள் இந்த மீடியா டிரெக்டரியில் தொகுக்கப்பட்டுள்ளன.

சில முஸ்லிம் அமைப்புக்கள், சர்வதேச அமைப்புக்கள், கலாசார சமய அமைப்புகள் போன்றன பற்றிய விபரங்களும் இதில் உள்ளடங்கியுள்ளன. ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் நிர்வாகக்குழு மற்றும் சுமார் முன்னூற்றி நாற்பது உறுப்பினர்களின் முகவரி, தொலைபேசி இலக்கங்கள், மின்னஞ்சல் முகவரி போன்ற விடயங்கள் படங்களுடன் இடம் பெற்றுள்ளன. போரத்தின் உறுப்பினர்களுக்கு மட்டுமன்றி பொதுவாக எல்லோருக்கும் பயனளிக்கும் புத்தகமிது.

நூல்: **2022 மீடியா டிரெக்டரி,** வெளியீடு: **ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம்,** பக்கங்கள்: **368,** விலை: **900.00,** தொடர்புகளுக்கு: **0772612288**

## கொஞ்சம் சிரிங்க!

### கணவனும் மனைவியும்

மனைவி: என் முடியை வெட்டி குட்டையாக்கலாமா?
கணவன்: வெட்டிக்கொள்.
மனைவி: நான் நீண்ட காலமாக இதை வளர்க்க நிறைய முயற்சிகள் எடுத்தேனே.
கணவன்: அப்படியானா அதை வெட்ட வேண்டாம்
மனைவி: குட்டை முடி தான் இன்றைய ஃபேஷன் என்று சொல்கிறார்கள்.



கணவன்: அப்படியானால் அதை வெட்டிக்கொள்.
மனைவி: நான் வெட்டிய பிறகு ஃபேஷன் மாறினால் என்ன செய்வது?
கணவன்: அப்படியானால் அதை வெட்ட வேண்டாம்
மனைவி: குட்டையான கூந்தலுடன் நான் அழகாக இருப்பேன் என்று என் நண்பர்கள் அனைவரும் கூறுகிறார்களே.
கணவன்: அப்படியானால் அதை வெட்டிக்கொள்.
மனைவி: ஆனால் குட்டை முடி என் சிறிய முகத்திற்கு பொருந்துமா என்பது எனக்கு சந்தேகம்.
கணவன்: அப்படியானால் அதை வெட்ட வேண்டாம்.
மனைவி: ஆனால் குட்டையான முடியை நிர்வகிப்பது மிகவும் இலேசானதே..
கணவன்: அப்படியானால் அதை வெட்டிக்கொள்.
மனைவி: ஆனால் நான் எப்படி என் தலைமுடியில் பூக்களை அணிய முடியும். எனக்கு பூக்கள் அணிவது பிடிக்குமே.
கணவன்: அப்படியானால் அதை வெட்ட வேண்டாம்
மனைவி: ஆனா ஒருமுறை முயற்சி செய்வதில் தவறில்லை என்று நினைக்கிறேன்...
கணவன்: அப்படியானால் அதை வெட்டிக்கொள்.
மனைவி: ஆனால் மீண்டும் முடி வளர நீண்ட காலம்ஆகுமே.
கணவன்: அப்படியானால் அதை வெட்ட வேண்டாம்
மனைவி: இன்னும் ஒருமுறை முயற்சி செய்து பார்க்க வேண்டும் என்று நினைக்கிறேன்
கணவன்: அப்படியானால் அதை நீ வெட்டிக்கொள்ளலாம்
மனைவி: என் தலைமுடியை வெட்டிய பிறகு நான் அசிங்கமாக இருந்தால் என்ன செய்வது?
கணவன்: அப்படியானால் அதை வெட்ட வேண்டாம்....!

இந்த உரையாடல் இப்படியே தொடர்ந்தது. தற்போதுகணவர் மனநல மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறாராம். அங்கு அவர் இரண்டு வாக்கியங்களைத் தவிர வேறெதனையும் பேசவில்லையாம். அவர் பேசிய இரு வார்த்தைகள் 'அதை வெட்டிக்கொள்', 'அதை வெட்ட வேண்டாம்' என்பனதாம். 'எதை வெட்டுவது?' என்று மருத்துவர்கள் தலையை பிய்த்துக்கொள்கிறார்களாம்.

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207

# எச்செயலையும் எவ்வாறு முகாமைத்துவம் செய்யவேண்டும் என்பதை சொல்லும் திருக்குறள்



## திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர்



கே. பத்மானந்தன் 06

**ஒரு நிறுவனமொன்றின் நோக்கினை வெற்றிகரமாக அடையும் பொருட்டு முகாமைத்துவம் சில முக்கியமான கருமங்களை (Functions) ஆற்றவேண் டியுள்ளது. இத்தகைய கருமங்கள் முகாமைத்துவ கருமங்கள் ஆகும். ஹென்றி பயோலின் (Henri Fayol 1841 1925) கருத்துப்படி திட்டமிடல் (Planning), ஒழுங்கமைத்தல் (Organizing), ஆணையிடுதல் அல்லது இயக்குதல் (Comm anding), ஒருங்கிணைத்தல் (Coordinating ) கட்டுப்படுத்தல் ( Controlling) என்பனவே இம் முகாமைத்துவ கருமங்களாகும்.**

### திட்டமிடல் (Planning)

எந்த ஒரு செயலையும் செய்யத் தொடங்குவதற்கு முன்பாகவே அதனை ஏன் செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும், அதனை எங்கு செய்ய வேண்டும், அதனை எப்போது செய்ய வேண்டும், அதற்கான வளங்களை எவை அவற்றை எங்கிருந்து எவ்வாறு பெறுவது, அது தொடர்பான பணிகளை யார் எவ்வாறு நிறைவேற்றுவது என்பன பற்றியெல்லாம் முன்பே முகாமைத்துவம் தீர்மானித்து திட்டமிடும்.

### ஒழுங்கமைத்தல் (Organizing)

திட்டமிட்டுள்ள பணியை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதி வளம், மனித வளம், பொருட்கள், இயந்திரங்கள், அறிவு, அனுபவம், இடம் ஆகிய அனைத்து வளங்களையும் முகாமைத்துவம் திரட்டுதல் ஒழுங்கமைத்தல் ஆகும்.

### ஆணையிடுதல் அல்லது இயக்குதல் (Commanding / Directing)

நிறுவனத்தில் பணி புரியும் ஊழியர்களுக்கு பணி தொடர்பான தேவையான அறிவுறுத்தல்களை கட்டளைகளை அதாவது வேலைக்கான பணிப்புரைகளை சரியான நேரத்தில் சரியான முறையில் முகாமைத்துவம் வழங்கல் ஆணையிடுதல் அல்லது இயக்குதல் ஆகும் .



### ஒருங்கிணைத்தல் (Coordinating)

எந்த எந்தப் பணிகளை யார் யாரிடம் எப்பொழுது ஒப்படைக்கலாம் எவ்வாறு ஒப்படைக்கலாம் என்பது பற்றி முகாமைத்துவம் முடிவு செய்து அதன்படி பணிகளை ஒப்படைத்தல் ஒருங்கிணைத்தல் ஆகும். இதனால் ஒரே பணியை இருவர் செய்வது அல்லது ஒரு பணியை யாருமே செய்யாமல் விட்டு விடுவது போன்றவை தவிர்க்கப்படுகின்றன.

### கட்டுப்படுத்தல் (Controlling)

திட்டமிட்ட பணிகளை ஒரு குறிப்பிட்ட பாதையில் அல்லது இலக்கை நோக்கிச் செலுத்த வேண் டும்.அவ்வாறு செலுத்துகையில் அப்பாதையில் இருந்து யாரேனும் ஊழியரோ அல்லது ஒரு சில பணிகளோ விலகுவதாகத் தோன்றினால் முகாமைத்துவம் அவர்களை அல்லது அவற்றை மீண்டும் சரியான பாதையில் கொண்டு செலுத்துவது கட்டுப்ப டுத்துதல் எனப்படும்.

இக்கருமங்களை ஹென்றி பயோல் POCCC என்ற குறியீடாக சுருக்கி விளக்குகிறார். இவை தவிர ஊக்கப்படுத்தல் (Motivation), அலுவலக முகாமைத்துவம் (Off ice Administration), மனிதவள முகாமைத்துவம் ( Human Resource Management), நிதி முகாமைத்து வம் (Finance Management) , நெருக்கீடு முகாமைத்துவம் (Stress Management), நேர முகாமைத்துவம் (Time management), தந்திரோபாய முகாமைத்துவம் (Strategy Management), மாற்ற முகாமைத்துவம் (Change Management), திட்ட முகாமைத்துவம் (Project Manag ement), சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் (MarketingManagement), பேரிடர் முகாமைத்துவம் (Disaster Management ) தொடர்பாடல் (Commu nication) மாற்ற முகாமைத்துவம் ( Change Management), ஆபத்து முகாமைத்துவம்( Risk Management), உற்பத்தி முகாமைத்துவம் ( Prod uction Management), அறிவுசார் தகவல்கள் முகாமைத்துவம் ( Kno wledge and informa tion Management) போன்றவையும் முகாமைத்துவ கருமங்களாகக் கொள்ளப்படும்.

### முகாமையாளரின் கடமைகள்

ஒரு நிறுவனத்தை வெற்றிகரமாக தலைமைதாங்கி இயக்கி அதனை முன்னோக்கி கொண்டு செல்பவரை முகாமையாளர் எனலாம். ஹென்றி பயொல் ஒரு முகாமையாளர் ஆற்றவேண்டிய மிகமுக்கியமான கடமைகளாக பின்வரும் ஆறுகடமைகளை வரையறை செய்துள்ளார்.

1. தொழில்நுட்ப நடவடிக்கைகள்: கால தேச வர்த்தமா னங்களிற்கு ஏற்ப புதியநுட்பங்களை உள்வாங்கி அவற்றை தான் சார்ந்த நிறுவனத்தின் உற்பத்திக்கு அல்லது தொழிலுக்குப் பயன்படுத்தல் தொழில்நுட்ப நடவடிக்கைகளில் உள்ளடங்கும்.

2. வியாபார நடவடிக்கைகள்: சந்தைப்படுத்தல், விளம்பரம், களஞ்சிய சாலை, காப்புறுதி நடவடிக்கைகள், நிர்வா கம் மற்றும் பணப் பரிவர்த்தனை மேற்கொள்ளல் என்பன வியாபார நடவடிக்கைகளில் உள்ளடங்கும் .

3. நிதி நடவடிக்கைகள்: நிறுவனத்திற்குத் தேவையான நிதிமூலங்களை இனம்காணலும் அவற்றை வினைத்திறனுடன் கையாளலும் நிதி நடவடிக்கைகளில் உள்ளடங்கும்.

4. பாதுகாப்பு நடவடிக்கைகள்: நிறுவனத்தின் ஆளணி, இரகசியம், தகவல்கள், அறிவு, ஞானம் மற்றும் சொத்துக்களை பாதுகாத்தல் என்பன பாதுகாப்பு நடவடிக்கைகளில் உள்ளடங்கும்.

5. கணக்கீடு நடவடிக்கைகள்: இருப்பெடுத்தல், புள்ளிவிபரம் மற்றும் கணக்குப் பதிவுகளை மேற்கொள்ளல் என்பன கணக்கீடு நடவடிக்கைகளில் உள்ளடங்கும்.

6. முகாமைத்துவ நடவடிக்கைகள்: திட்டமிடல், ஒழுங்குபடுத்த, இயக்குதல், ஒருங்கிணைத்தல் மற்றும்கட்டுப்படுத்தல் ஆகிய பொதுவான முக்கிய நடவடிக் கைகைகள்முகாமைத்துவநடவ டிக்கைகளில் உள்ளடங்கும்.

இந்தக் குறிப்பிடப்பட்ட ஆறு நடவடிக்கைகளுள் முகாமைத்துவ நடவடிக்கையே மிகமுக்கியமானதும் கடினமானதும் ஏனைய நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதுமான பணியாகும். இம்முகாமைத்துவ நடவடிக்கைகளில் மனிதவளங்களை கையாளுவது தனியாள் வேறுபாடு காரணமாகவும் நடத்தை வேறுபாடுகள் காரணமாகவும் மிகவும் கடினமான ஒரு செயற்பாடாக ஒரு முகாமையாளருக்கு அமைகிறது.

லூதர் ஹெல்சி குலிக் (Luther Halsey Gulick 1892–1993) என்பவர் POSDCORB என்னும் சுருக்கம் மூலம் முகாமையாளரின் பணிகளை அறிமுகப்படுத்தி யுள்ளார். இங்கு PPlanning / திட்டமிடல், OOrganizing / ஒழுங்கமைத்தல், SStaffing /ஆட்சேர்த்தல்,DDirecting /இயக்குதல், CCoordinating / ஒருங்கிணைத்தல், RReporting / அறிக்கையிடல், BBudgeting/ வரவு செலவுத்திட்ட அறிக்கையிடல் ஆகிய கடமைகளைக் குறிக்கும் .

முகாமைத்துவம் அல்லது முகாமையாளர் தொடர்பான பல்வேறு வரைவிலக்கணங்களும் அல்லது கருத்துக்களும் மேற் கூறப்பட்ட செயற்பாடுகளுள் ஏதோ ஒரு செயற்பாட்டில் ஈடுபட்டதன் அனுபவத்தின் அடிப்படையில் பல்வேறு அறிஞர்களாலும் வழங்கப்பட்டன.

( தொடரும்)

# தினகரன் வாரமஞ்சரி BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845

**STUDENT VISA**
**VISIT VISA/**
**TOURIST VISA**
ALL KIND OF VISA CONSULTANCY
Financial Documentation Assistance
CALL US SOON
WIN WIN CONSULTANTS
0777-283385
44/1D, Highlevel Road, Delkanda Junction, Nugegoda.
Email : winwinconsultants.lk

**SOLAR COBRA STREET LIGHT**
100W & 200W
Powerful and durable, High brightness,
Can work full night, No sensor
Solar X
96, New Moor Street, Colombo 12
0777 806 542

வாரமஞ்சரி BUDGET adz



**போட்டோ குறும் விளம்பரம்**



KIA Cerato 2014 model, Metal steam exterior, 02nd Owner, 65000Km genuine mileage (KIA motors service records available), New Battery, Cruise control, AC, power mirrors, multi functional steering wheel, Available at Katunayake
Price Rs. 7,850,000.00
Contact - 076 0 550 845






**NIGHTINGALE HOSPITAL**
24 HOUR
No. 129, Thelagapatha, WATTALA
OPD SERVICE
DOCTOR WITH NURSE
HOME VISIT
* NG tube insertion
* Catheter change
* Saline and I.V. Drips
* Paying ward
* Blood, Urine sample collection
* Baby care
* Wound dressing
* Home nursing
* All other treatments
40% DISCOUNT
Special Offer
0710 554 571 / 0117 871 507 / 0117 871 508

WHEN YOU ARE WITH YOUR POWER PARTNER, MEGA POWER
**NO MORE POWER-CUTS**
MEGA POWER Your Partner for Power ...
A.C. Generators 5kVA to 6500kVA
LIMITED STOCKS ARRIVED ! RESERVE YOUR GENERATOR TODAY



Spare Parts | After Sales Service
Maintenance and Repairs
Your Reliable Alternative Power Solutions Provider
**Vincy Engineering (Pvt) Ltd.**
No. 312, Galle Road, Mt. Lavinia, Sri Lanka.
TEL. : 0112 626 159, 0114 481 307/ FAX. : 0112 626 173, 0114 481 898
HOTLINE : 0777 219 940, 0777 888 387
E-Mail : vincypowersolutions@gmail.com
Vincy POWER SOLUTIONS

**ARTIFICIAL GREEN WALL & ARTIFICIAL TURF**
Sky Plants
No. 1 Supplier in Sri Lanka
Tel : 0115 219 596
169, Nawala Road, Narahenpita
E.mail: contactskyplants@gmail.com | Web : www.skyplants.lk

**Largest Pipeline Company In Sri Lanka**




**ALLIED TRADING INTERNATIONAL (PVT) LTD**
301 Old Moor Street, Colombo 12, Sri Lanka 011- 739 7777 011- 2435180 alliedint@eureka.lk www.allied.lk

தினகரன் வாரமஞ்சரி

# திருமண சேவைகள்

உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும

**classified@lakehouse.lk**

உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.

உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.

முதல் 15 சொற்களுக்கு
**100/-** ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் 000000377
(லேக்ஹவுஸ் கிளை)
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

- ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
- ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்

அனுஷா - 077 7 278 948
ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383
கயனி - 011 2 429 342

Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want
**Classified**
Green Light for Online Transfer
BANK OF CEYLON BOC
Lake House Branch
Acc. No. 000000377
Inquiries :- Ramani - 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067
E-mail - classified@lakehouse.lk

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

# சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வர்த்தகம்

### 226 அலுவலக உபகரணங்கள் விற்பனைக்கு

கொழும்பு08 இல் உள்ள நிறுவனத்திற்குச் சொந்தமான அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் உடன் விற்பனைக்கு. அனைத்தும் நல்ல நிலையில் உள்ளன. தொலைக்காட்சிப் பெட்டி (சிங்கர் 32", 49", 55"), (பிலிப்ஸ் 55" ஸ்மார்ட்). வளிச்சீராக்கிகள் (பெனசோனிக் 18 000BTU, Damro 9000BTU). கணனிகள், புகைப்படப் பிரதி இயந்திரங்கள் (HP, Samsung), வைட் போர்ட்கள் (4' x 4') தம்ரோ பைலிங் கெபினெட்டுகள், Work-station 6 Cubicles, மரக் கப்போர்டுகள். உருக்கு அலுமாரிகள், L வடிவிலான தலைவர் மேசை (மஹோகனி), கட்டில் (கிங் சைஸ் தேக்கு). மரக்கட்டில்கள் (ஒற்றை) தொடர்புகள். 0705993113, 0704323558 030155

## வேலைவாய்ப்பு

### 308 வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்

தெல்கொட முன்னணி சிறப்பு விற்பனை நிலையத்திற்கு விற்பனை உதவியாளர்கள் தேவை. உணவு. தங்குமிட வசதிகள் சகிதம். 0712906222, 0112402405 030108

### 318 வெற்றிடங்கள் டிரைவர்கள்

நெஸ்கோ என்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு கனரக வாகன சாரதியர் தேவை. சம்பளம் ரூபா 45,000/ இற்கு மேல் இரத்மலான, களுத்துறை, நீர்கொழும்பு பிரதேச சாரதியர்களிற்கு முன்னுரிமை முகவரி. இல. 29/5, 4ஆம் ஒழுங்கை, இரத்மலான. அழைக்கவும். 0777263954, 0767639155 026229

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

கொழும்பு 7 இலுள்ள வீடொன்றிற்கு வெளியிலிருந்து வந்து வேலை செய்யும் பணிப்பெண் தேவை. 0770872542 029724

### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

பாதுக்க ஹோட்டலொன்றிற்கு சமையலறையில் வேலை செய்வதற்கு அனுபவமுள்ள பெண்ணொன்று தேவை. 0773211246 என்ற எண்ணை அழைக்கவும். 029943

### 323 வெற்றிடங்கள் தொழிலாளர்கள்

புளொக் கல் செய்வதற்கு அனுபவமுள்ள ஆள் தேவை. (வெலிவிற்ற) 0716113309 029685

### 325 தொழில்துறை பொது

அதிக வருமான நிலைக்கான தொழில்சார் வாய்ப்பு. உயர்தரம் சித்தியடைந்த பிலியந்தலைக்கு அருகாமையிலுள்ள ஆண், பெண். 28 வயதிற்கும் 45 வயதிற்குமிடையில். வருமானம் 60,000.00 ரூபாவுக்கு மேல். SMS செய்யும் 0725445931 030128

நீர்கொழும்பில் ஆட்டுப் பண்ணையில் ஆடுகளை பராமரிப்பதற்காக ஊழியர் தேவை. இருப்பிடம் மற்றும் உணவு வழங்கப்படும். சம்பளம் பேசித்தீர்க்கலாம். 0773067074, 029686

0718653781 பாதுகாப்பு ஊழியர் வெற்றிடங்கள் இரத்மலானை. பிலியந்தலை, பெபிலியான பொரலெஸ்கமுவ, கொஹுவல, நுகேகொட. மொரட்டுவ. கல்கிஸ்ஸ, பாணந்துறை, தொட்டலங்க, ஒருகொடவத்த, கட்டுநாயக்க, சீதுவ, வத்தளை, பேலியகொட, கொழும்பு, தொம்பே, ரணால, கடுவளை, ராஜகிரிய, நாவல, ஹொரண, கோணபொல, தெரணியகல, தெஹியோவிட்ட, இரத்மலானை 0718379981, பாணந்துறை 070 4545 051, வத்தளை 071 8653779, கொழும்பு 071 86 537 80, தொம்பே 07 1 2125238, ஹொரண 07025 134 18, அலுவலகம் 07 6 09891 29, 0 76 31553 31, 0 70 66553315 030082

## காணி/தோட்டம்

### 617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

ராகம வல்பொல 04 அறையுடன் கூடிய முழுமையான வீடு மற்றும் 03 அறை அனெக்ஸ் சகிதம் 62 பேர்ச் முழுமையாக மதிலினால் சூழப்பட்ட காணி விற்பனைக்கு. 38 மில்லியன். 0703880243, 0762800093 030127

### 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

தெஹிவளை மூன்று படுக்கையறைகளுடன் வீடு, மண்டபம், பென்றி, , டெராசோ, வாகன நிறுத்துமிடம் காலி வீதிக்கு அருகில். தொடர்பு 077 9502080. 028198

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும்
classified@lakehouse.lk
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383 கயனி - 011 2 429 342/343

---

பண்ணை விலங்கு, பண்ணை மேம்பாடுகள் மற்றும் பாலுற்பத்தி மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில் இராஜாங்க அமைச்சு

NLDB

# தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை

## பதவி வெற்றிடம்

இலங்கையின் தகுதியுள்ள பிரஜைகளிடமிருந்து பின்வரும் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### பதவி - உதவிப் பொது முகாமையாளர் (நிதி) - HM 1-1 – 2016

**தகைமைகள்** : அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட கணக்கியல் / வர்த்தகம் / வியாபார முகாமைத்துவம் அல்லது ICASL/ ACCA/CIMA இடைநிலையத் தகைமை சகிதம் பட்டப் பின்படிப்புத் தகைமை (Masters) அல்லது ICASL/ ACCA/CIMA என்பவற்றில் சக / இணை (Associate / Fellow) அங்கத்துவம் அத்துடன் கீர்த்தி வாய்ந்த தனியார் / பொது அமைப்புகளில் தகைமைக்குப் பின்னரான 15 வருடகால அனுபவம்

**வயது** : 35 வயதிற்குக் குறையாமலும் 50 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பளம்** : **HM 1-1-2016**: ரூபா. **80,295/-, 15x2,270/-** ரூபா **114,345/-**

மேலேயுள்ள சம்பளத்திற்கு மேலாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**மேலதிக நன்மைகள்** :

i. உள்ளக மற்றும் வெளிப்புற மருத்துவ நன்மைகள்
ii. ஒரு மாதத்திற்கு 960 கி.மீ. பிரத்தியேக ஓட்டம் சகிதம் வாகனம் ஒன்று வழங்கப்படும்.

**ஒவ்வொரு விண்ணப்பதாரியும்**

i. இலங்கைப் பிரஜையாகவிருத்தல் வேண்டும்.
ii. பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கான உடல் உள ஆரோக்கியத்தையும் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கான தகுதியையுடையவராகவிருத்தல் வேண்டும்.
iii. சிறந்த குணநலன்களையுடையவராகவிருத்தல் வேண்டும்.
iv. ஆங்கிலத்தில் வேலை செய்யும் அறிவு மேலதிகத் தகைமையாகும்.

2022 மே 24ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனைத்து சுயதரவு மற்றும் உறவினரல்லாத இருவரின் பெயர்கள், அவர்களின் முகவரிகள் மற்றும் தொலைபேசி எண்கள் ஆகியவற்றை அடக்கிய சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் அத்துடன் சான்றிதழ்களின் பிரதிகள் என்பவற்றை பதிவுத் தபாலில் தலைவர், தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை, இல. 40, நாவல வீதி, நாராஹேன்பிட்ட, கொழும்பு-05 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தயவு செய்து குறிப்பிடவும். அரசாங்க நிறுவனங்களில் சேவையாற்றும் ஊழியர்கள் தமது விண்ணப்பங்களை நிறுவனத்தின் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும்.

**குறிப்பு:** உயர் தகைமைகள் மற்றும் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு குறும்பட்டியலிடப்பட்டு நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர் மற்றும் நேர்முகத் தேர்வில் காட்டும் செயல்திறனுக்கமைய தெரிவு செய்யப்படுவர். கால்நடை மற்றும் பெருந்தோட்டத் துறையில் கணக்கியலில் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**தலைவர்,**
**தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை,**
**இல. 40, நாவல வீதி,**
**நாராஹேன்பிட்ட,**
**கொழும்பு-05.**

---

# இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை
## (கைத்தொழில் அமைச்சு)

**உணவு பதப்படுத்துவோரும் அத்துடன் /அல்லது வர்த்தகர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு சேதன (கரிம) நற்சான்றிதழை பெற்றுக்கொள்வதற்கு நிதியுதவி அளிக்கும் திட்டம்**

(Financial Assistance Scheme for the Food Processers and/or Traders and Exporters to obtain Organic Certification)

சேதன உணவு உற்பத்தியானது பிரதேச, உள்நாட்டு, வெளிநாட்டு என்றவாறு எப்பொழுதும் விருத்தியடையும் ஒரு சந்தையைக் கொண்ட ஆதாயமளிக்கின்ற ஒரு வியாபாரமாகும். உள்நாட்டு உணவு உற்பத்தியாளர்களின் சர்வதேச வர்த்தகப் போட்டிநிலையை முன்னேற்றுவதானது நாட்டின் சேதன விவசாய விஸ்தரிப்புக்கான ஒரு முக்கிய அபிவிருத்தி மூலோபாயமாக இனங்காணப்பட்டுள்ளது. சேதன நற்சான்றுப்படுத்தலானது (Organic Certification) உணவு உற்பத்தியின் கூறுபடாத சேதன முழுநிறைவை (Organic Integrity) சேவையை நாடுவோருக்கு உறுதிசெய்வதோடு, உயர்ந்த விலையொன்றையும் கொடுக்கிறது. சேதன உற்பத்தி நடைமுறையைப் பின்பற்றுவதற்கு ஆர்வமுள்ள உள்நாட்டு உணவு பதனஞ்செய்வோர், அத்துடன்/அல்லது வர்த்தகர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு நிதியுதவி அளிக்கும் நோக்குடன் இத்திட்டத்தின் கீழ் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை விண்ணப்பங்களை கோருகின்றது.

### யாருக்காக

சேதன நற்சான்றுப்படுத்தலைப் பெற்றுக்கொள்வதற்கு பின்வரும் உற்பத்தி பிரிவுகளின் கீழ் (புத்தம் புதிய், பதனஞ்செய்யப்பட்ட அல்லது பெறுமதிசேர்க்கப்பட்ட) உற்பத்திகளுக்கு சேதன பதனஞ்செய்யும் நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கு விரும்பும் உணவு பதனஞ்செய்வதிலும் அத்துடன்/அல்லது வர்த்தகத்திலும் ஏற்றுமதியிலும் ஈடுபட்டுள்ள கைத்தொழில் நிறுவனங்கள் இதற்கு விண்ணப்பிக்கத் தகுதி உடையவர்கள் ஆவர்.

பெறுமதிசேர்க்கப்பட்ட மற்றும் பதனஞ்செய்யப்பட்ட தேயிலை, தெங்கு சார்ந்த உற்பத்திகள், பலசரக்குகள், நறுமண எண்ணெய்கள் மற்றும் பிரித்தெடுக்கபட்ட நறுமணந்தரும் திரவியங்கள் மற்றும் பூண்டுகளிலிருந்து பெறப்படும் மருந்துகள், உள்வலய பழங்கள், மரக்கறிகள் மற்றும் கிழங்கு வகைகள், மரமுந்திரிகை, எண்ணெய் விதைகள், பயறு வகைகள், அரிசி, கோப்பி, கொக்கோ, இயற்கையிலிருந்து அறுவடை செய்யும் உற்பத்திகள், கித்துள் பாணி, கருப்பட்டி, தூய பால் மற்றும் பால் உற்பத்திகள், மீன்/கடலுணவுகள் முதலியன.

### வழங்கப்படுவன

சேதன நற்சான்றுப்படுத்தலுக்காக தெரிவுசெய்யப்படும் இருபத்தைந்து (25) உணவு உற்பத்திகள் அத்துடன்/அல்லது வர்த்தக மற்றும் ஏற்றுமதிக் கைத்தொழில்கள் நிதி மீள்நிரப்பலுக்குத் தகுதி பெறுகின்றன. இங்கு வெளிக்கள மேற்பார்வை, மாதிரிகளின் ஆய்வுகூடப் பரிசோதனை அடங்கலான ஆரம்ப கட்ட செலவு உயர்ந்தபட்சம் ரூ.250,000/- வரை மீள்நிரப்பல் செய்யத் தகுதி பெறும். மதியுரைக் கட்டணம், மூலப்பொருள்கள், தொழிற்சாலை நவீனமயப்படுத்துகை, இயந்திர உபகரண செலவு, பிரயாணக் கட்டணம் என்பன செலுத்தப்பட மாட்டாது. பெற்றுக்கொள்ளப்படும் சேதன நற்சான்றுப்படுத்தலுடன் கட்டணங்களுக்குரிய பற்றுச்சீட்டுக்களை சமர்ப்பிக்க வேண்டும்.

### தகுதி அளவுகோல்கள்

01) இத்திட்டத்தின் கீழ் "இலங்கை சேதன நற்சான்றுப்படுத்தல்" ("Sri Lanka Organic Certification") அல்லது "சர்வதேச சேதன தராதர நியமங்களுக்கு" ("International Organic Standards") (EU/NOP/JAS முதலியன) பெற்றுக்கொள்ள கைத்தொழில் நிறுவனங்கள் விண்ணப்பிக்கலாம். இலங்கை அங்கீகார சபையினால் (SLAB) முன்மொழியப்பட்ட ஒரு நிறுவனத்திடமிருந்து சேதன நற்சான்றுப்படுத்தலைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
02) விண்ணப்பிக்கும்போது கைத்தொழிலில் குறைந்தபட்சம் 02 ஆண்டுகளாக வெற்றிகரமாக சேதன உற்பத்தியில் / வர்த்தகத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்க வேண்டும்.
03) ஆண்டு வருமானம் 750 மில்லியன் ரூபாவுக்குக் குறைந்த அல்லது 300க்குக் குறைந்த ஊழியர்களைக் கொண்ட கைத்தொழில் நிறுவனங்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம். (சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழில்கள்: கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் அபிவிருத்திக்கான தேசிய கொள்கைப் பணிச்சட்டம்).
04) வெளிக்கள மேற்பார்வை, ஆய்வுகூடப் பரிசோதனை அடங்கலான ஆரம்ப கட்ட செலவுக்காக நிதிக் கொடையளிக்கப்படும். (உபகரணக் கட்டணம், தொழிற்சாலை நவீனமயப்படுத்தல், மூலப்பொருள், இயந்திர உபகரணச் செலவு, பிரயாணச் செலவு மீள்நிரப்பல் செய்யப்பட மாட்டாது).
05) விண்ணப்பிக்கும்போது இதனையொத்த உதவியைப் பெற்றுக்கொள்வதற்கு வேறு அரச நிறுவனமொன்றில் பதிவுசெய்து கொண்டிருத்தலாகாது.

### விண்ணப்பச் செயன்முறை

இத்திட்டத்திற்கான விண்ணப்பப்படிவத்தை www.idb.gov.lk என்ற உத்தியோகபூர்வ இணையத் தளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ளலாம். சம்பந்தப்பட்ட எல்லா ஆவணங்களுடன் (முலப்பிரதி) உரிய முறையில் பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவங்களை அருகிலுள்ள கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் உரிய மாவட்ட அலுவலகங்களுக்கு **2022 மே மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர்** சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதோடு, அதன் மென் பிரதிகளை tsdidb@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

### தெரிவுசெய்வதற்கான அளவுகோல்கள்

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தலைவரினால் நியமிக்கப்படும் தெரிவுக் குழுவொன்றினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் இருபத்தைந்து (25) கைத்தொழில் நிறுவனங்கள் தெரிவுசெய்யப்படும். அக்குழுவின் முடிவே இறுதியானதாகும்.

தெரிவுசெய்யப்பட்ட கைத்தொழில் நிறுவனங்கள் 2022 நவம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் நற்சான்றுப்படுத்தல் செயன்முறையைப் பூர்த்திசெய்வதென இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையுடன் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ளவேண்டும்.

ஒழுங்காகப் பூர்த்திசெய்யப்படாத, உரிய திகதிக்கு முன்னர் எம்மை வந்தடையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு, தெரிவு செய்யப்படும் கைத்தொழில் நிறுவனங்களுக்கு மாத்திரம் அது பற்றி அறிவிக்கப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு:**
பணிப்பாளர்,
தொழில்நுட்ப சேவைகள் பிரிவு,
இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை,
இல.615, காலி வீதி, கட்டுபெத்த, மொரட்டுவை
தொலைபேசி இல: 011-2605278 / 011-2605326-27 நீடிப்பு இல: 150 / 197 / 167
தொலைநகல் இல: 011-2623846 / 2607002
மின்னஞ்சல் முகவரி: tsdidb@gmail.com
இணையத்தளம்: www.idb.gov.lk

**தலைவர்**
**இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை**

---

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

---

# சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகாரசபை
## விலைமனுக்களுக்கான அழைப்பு

| தொ. இல. | பெறுகை கோவை இல. | விபரம் | விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இறுதி நாள் மற்றும் திகதி | விலைமனுக்கள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் | மீளளிக்கப் படாத விலைமனு ஆவணக் கட்டணம் | விலைமனுப் பிணை |
|---|---|---|---|---|---|---|
| 01 | QTN 353/2019 | சுகததாச அதிகார சபைக்கு உரித்தான போகம்பர விளையாட்டரங்கின் சிற்றுண்டிச்சாலையை குத்தகைக்கு வழங்குதல் | 2022-05-27 மு.ப. 10.00 மணி வரை | 2022-05-30 பி.ப. 2.00 மணிக்கு | ரூபா 3,000.00 | ரூபா 50,000.00 |

- மேற்குறிப்பிடப்பட்ட சேவைகளுக்கு இயைபுடைய துறையில் அனுபவம் வாய்ந்த மற்றும் மேற்படி சேவைகளை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு கடிதத் தலைப்பில் (Letter Head) எழுத்து மூலமான வேண்டுகோள் விடுத்தல் வேண்டும். விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ள அறிவுரைகளுக்கமைய தயாரிக்கப்பட்ட விலைமனுக்களை பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பின்வரும் முகவரியிலுள்ள விலைமனுப் பெட்டியில் நேரில் கொண்டு வந்து உள்ளிடலாம்.
- மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கான விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ள வகையில் மீளளிக்கப்படும் கட்டணத்தை ரொக்கப் பணமாக சுகததாச தேசிய விளையாட்டுகள் கட்டிடத்தொகுதிக்கு செலுத்தி விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் தேவையானவர்களுக்கு அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும்.
- விலைமனு ஆவணங்கள் 2022-05-10ஆம் திகதி முதல் 2022-05-27ஆம் திகதி மு.ப. 10.30 மணி வரை வழங்கப்படும்.
- விலைமனுப் படிவத்துடன் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு வர்த்தக வங்கியினாலும் வழங்கப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட பெறுமதிக்கான 119 நாட்கள் (2022-09-23ஆம் திகதி வரை) செல்லுபடியாகும் விலைமனுப் பிணைமுறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
- இது தொடர்பான மேலதிக விபரங்களை சுகததாச தேசிய விளையாட்டுக்கள் கட்டிடத்தொகுதி அதிகார சபையின் கொள்வனவுக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் தேவையானவர்கள் அவ்விலைமனுக்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

தொலைபேசி இல. 0112384385 நீடிப்பு 120
தொலைநகல் இல. 2445675

**தலைவர்,**
**சுகததாச தேசிய விளையாட்டுகள் கட்டிடத்தொகுதி அதிகாரசபை,**
**த.பெ. இல. 2211, ஆர்தர் த சில்வா மாவத்தை,**
**கொழும்பு-13.**

Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to, classified@lakehouse.lk
Piyumi- 0112 429 383 Ramani - 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342
SUNDAY OBSERVER Marriage Proposals
Decades of Trusted Service

## மின்வெட்டுக் காலத்தில் உற்பத்தியை...

(13 பக்கத் தொடர்)

எனது கணவரின் சம்பாத்தியத்திலும் எனது மெழுகுதிரி உற்பத்தித் தொழில் மூலம் கிடைக்கும் வருமானத்திலும் எமது குடும்பத்தைக் கவனித்துக்கொண்டு வருகின்றோம். இந்நிலையில் எமது இரண்டு பிள்ளைகளில், மூத்த பெண் பிள்ளையானவள், க.பொ.த. உயர்தரத்தில் உயிர்முறைகள் தொழில்நுட்பப் பிரிவில் கல்வி கற்று பல்கலைக் கழத்திற்கு தெரிவாகியுள்ளதோடு, எமது இளைய மகன்; தற்போது க.பொ.த. சாதாரணதரத்தில் கல்வி பயின்று வருகின்றார்.

எனது வீட்டுக் கடமைகளை காலை வேளையில் முடித்துவிட்டு, அதன் பின்னர் நான் மெழுகுதிரி உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றேன். இம்மெழுகுதிரி உற்பத்தித் தொழிலை, எமது இரண்டு பிள்ளைகளுக்கும் நான் பழக்கிக் கொடுத்துள்ளேன். அவர்களும் பாடசாலைக் கடமைகளை முடித்துவிட்டு, ஓய்வு வேளையில் என்னுடன் சேர்ந்து மெழுகுதிரி உற்பத்தியில் ஈடுபடுவார்கள்.

எமது இரண்டு பிள்ளைகளையும் கல்வியில் நல்லதொரு நிலைக்கு கொண்டு வந்துள்ளேன். இந்நிலையில், நாம் வசிக்கும் வீடானது, உரிய முறையில் கட்டி முடிக்கப்படவில்லை. தற்போது ஒரு வரவேற்பு மண்டபம் மற்றும் ஓர் அறை மாத்திரமே கொண்ட வீட்டில் நாம் வசித்து வருகின்றோம். சமையலறை கூட இல்லை. சமயலறையை தற்காலிகமாக தகரத்தில் அடைத்து, அதில் வைத்தே சமையல் வேலைகளை செய்து வருகின்றேன். ஆகையால், அரைகுறையாகவுள்ள எமது வீட்டை கட்டி முடிக்க வேண்டிய சவால் என் கண் முன்னால் உள்ளது என்கின்றார் அவர்.

இளம் பெண்களே கேளுங்கள்! குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக எமது கணவன்மார்கள் கஷ்டப்பட்டுவரும் நிலையில், நாமும் அவர்களுக்கு ஒத்தாசையாக இருக்க வேண்டும்.

தற்போது பொருட்களின் விலைவாசி அதிகரித்துக் காணப்படும் நிலையில் கணவரின் வருமானத்தில் மாத்திரம் குடும்பத்தைக் காப்பாற்ற முடியாது. ஆகையால் கணவன், மனைவி ஆகிய இருவருமே வருமானம் ஈட்டும் தொழிலில் ஈடுபட வேண்டும். இவ்வாறானதொரு நிலையிலேயே குடும்பச் செலவை நிர்வகிக்க முடியும் என்பதோடு, குடும்பத்தையும் முன்னேற்றகரமானதொரு நிலைக்கு கொண்டு செல்ல முடியும் என்கின்றார்; அவர்.

மெழுகுதிரி உற்பத்தித் தொழில் கூட, மிகவும் இலகுவானது என்பதோடு, அத்தொழிலில் எவ்வித சிரமமும் இல்லை. அத்தோடு, பெண்களாகிய நாம், எமது வீட்டு வேலைகளையும் கவனித்துக்கொண்டு, மெழுகுதிரி உற்பத்தித் தொழிலிலும் ஈடுபட முடியும் என்பதே எனது நிலைப்பாடாகும். ஆகையால், பெண்களாகிய நாம் எமது நேரத்தை பயனுடையதாக்கும் வகையில், வீண்பொழுது போக்கைத் தவிர்த்து, மெழுகுதிரி உற்பத்தித் தொழிலில் ஈடுபடுவதன் மூலம் வருமானம் ஈட்ட முடியும் என்கின்றார் அவர். எனது மெழுகுதிரி உற்பத்திக் தொழிலை, மேலும் முன்னேற்றகரமான நிலைக்கு கொண்டு செல்ல வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும் என்பதோடு, இத்தொழில் மூலம் சமூகத்தில் நலிவுற்ற பெண்களுக்கு என்னாலான உதவியைச் செய்ய வேண்டும் என்பதும் எனது விருப்பமாகும். இருந்தபோதிலும், தற்போதைய பொருட்களின் விலைவாசி அதிகரிப்பினால், எனது மெழுகுதிரி உற்பத்தித் தொழிலை மேலும் முன்னேற்றகரமான நிலைக்கு கொண்டு செல்வதற்கு என்னிடம் தற்போது போதியளவான முதலீடு இல்லை. இத்தொழிலுக்காக போதியளவான முதலீடு கிடைத்து, தொழில் தொடங்கும் பட்சத்தில், இத்தொழிலில்; நலிவுற்ற பல பெண்களை இணைத்துக்கொண்டு, அவர்களுக்கு இத்தொழிலை பழக்கிக் கொடுக்க வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும். சமூகத்தில் நலிவுற்ற அப்பெண்களின் வாழ்க்கையை முன்னேற்றகரமானதொரு நிலைக்கு கொண்டு வருவதற்கு, நான் அவர்களுக்கு ஒத்தாசையாக இருப்பேன். இதுவே எனது எதிர்பார்ப்பாகும் என்கின்றார் அவர்.


வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு

# இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

## வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2022/2023

01. 1985ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்திற்கு 2022/2023ஆம் வருடங்களுக்கான வழங்குநர்களைப் பதிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
02. இதன்பொருட்டு இயைபுடைய நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் விண்ணப்பங்களை / விண்ணப்பத்தை வழங்குமாறு வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் பணியகத்தின் பெறுகைப் பிரிவிலிருந்து விண்ணப்பத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் பணியகத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்திலிருந்து (www.slbfe.lk) தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.
03. 2022-05-09ஆம் திகதி முதல் 2022-05-30ஆம் திகதி வரையான கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பெறுகைப் பிரிவினால் விண்ணப்பங்கள் வழங்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 2022-05-30ஆம் திகதி பி.ப. 1.00 மணி வரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.
04. ஒரு உருப்படி அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உருப்படிகளுக்கு விண்ணப்பிக்கலாம் என்பதுடன், அதற்காக வெவ்வேறாக விண்ணப்பித்தல் வேண்டும்.
05. ஒவ்வொரு உருப்படிக்கும் மீளளிக்கப்படாத 1000.00 ரூபா (ரொக்கப் பணமாக மட்டும் செலுத்தலாம்) அறவிடப்படும் என்பதுடன், இதன்பொருட்டு பணியகத்தின் தலைமை அலுவலகத்தில் அல்லது எந்தவொரு கிளை அலுவலகங்களிலும் வங்கி வரவுச்சீட்டைப் (Bank slips) பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. அந்தப் பணத் தொகையை நாட்டின் எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் செலுத்தி அந்த 2 வங்கி வரவுச்சீட்டையும் (பணியகப் பிரதி மற்றும் நிதிப் பிரிவின் பிரதி) விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். (அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு விண்ணப்ப இலக்கத்திற்கு ஒரு வங்கி வரவுச்சீட்டை (Bank slips) பயன்படுத்துதல் வேண்டும் என்பதுடன் ஒன்றுக்கு மேற்பட்ட சேவை உருப்படிகளுக்கு விண்ணப்பிப்பதாயின் ஒவ்வொரு உருப்படிக்காகவும் வெவ்வேறான வங்கி வரவுச்சீட்டை (Bank slips) இயைபுடைய விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.)
06. பதிவு செய்துகொள்வதற்குத் தேவையான தகைமைகள் மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவனங்கள் என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.
    - 6.1 வியாபாரப் பதிவுச் சான்றிதழின் சான்றுபடுத்தப்பட்ட பிரதி கட்டாயமாகும். (Business Registration Certificate)
    - 6.2 திருத்தகமொன்றுக்காக (கராஜ்) பதிவு செய்யும் போது, அது தலைமை அலுவலகம் அல்லது இயைபுடைய கிளை அலுவலகத்திலிருந்து 15 கி.மீற்றர் தூரத்தில் அமைந்திருத்தல் வேண்டும் என்பதுடன் BRC இல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் திருத்தகம் அமைந்திருத்தல் வேண்டும். (பணியகத்தில் பதிவு செய்து முன் இயைபுடைய திருத்தகத்தை நிறுவனம் பரீட்சித்துப் பார்க்கும் என்பதுடன் பணியகத்தின் கிளை அலுவலகங்களின் முகவரிகள் பணியகத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன)
    - 6.3 அட்டவணையில் உள்ள 37ஆம் இலக்க நிர்மாண வேலைக்காக விண்ணப்பதாரர் நிர்மாணத்துறை அபிவிருத்தி அதிகார சபை (CIDA) உடனான பதிவு ஆவணத்தின் புகைப்படப் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
    - 6.4 இயைபுடைய வங்கி வரவுச் சீட்டின் பணியகத்தின் பிரதி மற்றும் நிதிப் பிரிவின் பிரதி (Bank slips) எனும் பிரதிகளை விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். (பணியகத்தின் பிரதி மற்றும் நிதிப் பிரிவின் பிரதி)
07. ஒன்றுக்கு மேற்பட்ட உருப்படிகளுக்கு விண்ணப்பிக்கும்போது இயைபுடைய ஆவணங்கள் மற்றும் வங்கி வரவுச்சீட்டை வெவ்வேறாகச் சமர்ப்பித்தல் கட்டாயமாகும். (முழுமையற்ற ஆவணங்கள் சகிதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.)
08. சகல விண்ணப்பங்களையும் ஒரு உறையில் இட்டுச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் 2022-05-30ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம். விண்ணப்பத்தைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2022/2023'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
09. பதிவு செய்து கொள்ளும் இந்த வழங்குநர்களுக்குப் புறம்பாக பணியகத்திற்குத் தேவையான பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் வேறு வழிமுறைகளைத் தெரிவு செய்வதற்கு பணியகத்திற்கு இயலுமை உண்டு.
10. விலைகளைக் கோரி அழைப்பு விடுக்கப்பட்டதன் பின் மூன்று முறை (3 முறை) பதிலளிக்காதிருத்தல், வேண்டப்படும் வழங்கல் மற்றும் சேவைகளை உரிய நேரத்தில் வழங்குவதற்குத் தவறும் மற்றும் ஒப்புதல் அளிக்கப்பட்ட மாதிரிகளுக்கு அமைவாக வழங்காமை போன்ற காரணங்களினால் முன்னறிவித்தலின்றி வழங்குநரை, வழங்கல் பதிவேட்டிலிருந்து அகற்றும் அதிகாரத்தை பணியகத்தின் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் விலைகளைச் சமர்ப்பிக்க முடியவில்லையானால் அதுபற்றி எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.
11. காரணம் காட்டாமல் 2022ஆம் வருடத்தில் வழங்குநராகப் பதிவு செய்து கொள்வதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்தவொரு விண்ணப்பப் படிவத்தையும் நிராகரிக்கும் அதிகாரத்தை இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

**தலைவர்,**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்,**
**இலக்கம், 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்ல.**
**இணைதளம்- www.slbfe.lk தொலைபேசி - 0112880550/ 0112887585**

**அக்கரையில் மான்புற இக்கரையில் கைகோர்ப்போம்**

**அட்டவணை**

**பகுதி I**

### பொருட்கள்

01. வளிச் சீராக்கிகள் மற்றும் உதிரிப்பாகங்கள்
02. பாடசாலைப் பைகள், அலுவலகப் பைகள், கைப் பைகள், சப்பாத்துக்கள் (பெண்கள் மற்றும் ஆண்கள்) மற்றும் ஆண்களுக்கான இடைவார்கள்
03. அலுவலகத்திற்கான திரைச்சீலை, மேலணை உறைகள் மற்றும் துணிவகைகள்
04. விரல் ரேகை பதிவு இயந்திரம்
05. நிலையான தொலைபேசிகள் மற்றும் உதிரிப்பாகங்கள்
06. இடிதாங்கி
07. மருந்துப் பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள்
08. செரமிக் பொருட்கள், மட்பாண்டப் பொருட்கள் மற்றும் கண்ணாடிப் பொருட்கள்
09. Water Dispenser, தண்ணீர் போத்தல்கள்
10. பல்வேறு வகையான கனரகப் (Hardware) பொருட்கள்
11. கையடக்கத் தொலைபேசிகள்
12. அலுவலக மற்றும் வீட்டுத் தளபாடங்கள் (மர, உருக்கு, நாரிழை, பிளாஸ்திக்).
13. அலுவலக உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் (புகைப்படப் பிரதி இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள், முத்திரை இயந்திரங்கள், பணத்தாள்களை எண்ணும் இயந்திரங்கள் உட்பட)
14. அலுவலக பகுதி பிரிப்புப் பொருட்கள்.
15. உத்தியோகபூர்வ அடையாள அட்டைகள் மற்றும் வருகை தருபவர்களுக்கான அனுமதிப் பத்திரம் தயாரித்தல்
16. திகதி முத்திரை/ உத்தியோகபூர்வ முத்திரை தயாரித்தல்.
17. துப்புரவேற்பாட்டுப் பொருட்கள்
18. விளையாட்டுப் பொருட்கள் / விளையாட்டு உடைகள்
19. பணியாட்தொகுதி சீருடைகள்
20. காகிதாதிகள்
21. விருதுகள் / பதக்கங்கள்
22. கட்புல செவிப்புல உபகரணம் மற்றும் துணையுறுப்புகள் (பல்லூடக ஒளி உருப்படிவக் கருவிகள், வீடியோகமராக்கள் மற்றும் துணையுறுப்புக்கள், BETACAM, DV cam, Mini DV, Cassettes, CD மற்றும் DVD, ஸ்டில் கமராக்கள் மற்றும் துணையுறுப்புக்கள், Display units மற்றும் Display Solutions)
23. கைப்பணிப் பொருட்கள் மற்றும் ஊக்குவிப்புப் பொருட்கள் (டீ சேர்ட், தொப்பிகள், பைகள், தட்டுகள், குடைகள், சாவிக் கோர்ப்புகள், பேனைகள், தேநீர் குவளைகள் போன்றன)
24. சில்லறைப் பொருட்கள் / குறோசரிப் பொருட்கள்
25. பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் பொருட்கள் (உதா - வாய்க் கவசங்கள், முகக் கவசங்கள், கையுறைகள், தலைக் கவசங்கள், பாதுகாப்பு உடைகள்)
26. கிருமிநாசினித் திரவங்கள் மற்றும் அது சார்ந்த ஏனைய துப்புரவேற்பாட்டுத் திரவங்கள்

**பகுதி II**

### சேவைகள்

27. விளம்பர பிரசார வேலை (பதாகைகள், ஆக்க வேலைகள் (Art Work) மற்றும் காட்சிப் பலகைகள், கண்காட்சிக் கூடம், செட் டிசைனிங், Digital Printing)
28. அலுமினிய சட்ட வடிவமைத்தல் (கதவுகள், யன்னல்கள், அலுவலக பகுதி பிரிப்புக்கள், மற்றும் சீலிங் மற்றும் அது சார்ந்த தொழில்நுட்ப சேவைகளுடன்)
29. உணவு, பான, உபசார சேவை ஏற்பாடுகள் செய்தல்
30. சுத்திகரிப்புச் சேவைகள் வழங்குதல்
31. பாதுகாப்புச் சேவைகள் வழங்குதல்
32. தூதஞ்சல் (Courier) சேவைகள் வழங்குதல்
33. சுங்க போக்குவரத்துச் (Cargo) சேவைகள் வழங்குதல்
34. புத்தகங்கள் வெளியிடும் நிறுவனம்
35. போக்குவரத்து வசதிகள் (கார், வேன், டபள் கெப், பஸ், லொறி போன்றவைகளை வாடகை அடிப்படையில் வழங்கும் சேவைகள்)
36. ஆலோசனைச் சேவைகள் (கட்டிட நிர்மாணம் மற்றும் திருத்தவேலைகள்)
37. நிர்மாண (கட்டிடங்கள்) ஒப்பந்த நிறுவனங்கள் (ICTAD நிறுவனத்தில் பதிவுசெய்த நிறுவனங்கள்)
38. தொழில்வளர் சேவைகள்
    - 38.1 மேசன் வேலைகள் / குழாய் வேலைகள்
    - 38.2 தச்சு வேலை / தளபாடங்கள் மினுக்குவோர்
    - 38.3 உருக்கியொட்டுவோர், கடைசல் பட்டறை / இரும்பு வேலைகள்
    - 38.4 கட்டிட நிறப்பூச்சு வேலைகள் / சிறிய திருத்தவேலைகள் / மின்சார முறைமை
    - 38.5 இயந்திர உபகரணங்கள் மற்றும் அது சார்ந்த சேவைகள் / மின் மற்றும நீர்ப் பம்பி மோட்டர் சுற்றுவோர்
39. கழிவுகளை அப்புறப்படுத்தும் முறைமை நிர்மாணித்தல் மற்றும் கழிவு நீரை வெளியேற்றல் சார்ந்த சேவைகளை வழங்குதல்
40. அலுவலக கதிரைகளுக்கு மேலணை இடுதல், அலுவலக தளபாட திருத்தவேலைகள்
41. சுங்கப் பொருட்களை அகற்றும் சேவைகள்
42. விழா நிகழ்வுகளுக்களுக்கான நாட்டியக் குழுக்களை வழங்குதல்
43. கலிகளை சுத்திகரிகும் சேவைகள் / கழிவுகளை அப்புறப்படுத்தும் மற்றும் துப்புரவேற்பாட்டுச் சேவைகள்
44. மின்சாரம் மற்றும் வளிச்சீராக்கி வேலைகள் தொடர்பான சேவை
45. கணக்காய்வு சேவைகள் மற்றும் தொழில்சார் ஆலோசனை சேவைகள் வழங்குதல்
46. நிலச் சீராக்கம் / வீட்டு மலர் கன்றுகளை வழங்கும் சேவைகள்
47. கேபள் தொலைக்காட்சி சேவை மற்றும் செயற்கைக்கோல் (Satellite) தொலைக்காட்சி வசதிகள்
48. பீடை / நுளம்பு மற்றும் எலிகள் கட்டுப்பாட்டுச் சேவைகள்
49. புகைப்படக் கலை, ஓடியோ, வீடியோ பதிவு செய்தல், படம் அச்சிடல், படம் பிரேம் போடல் மற்றும் மெல்லுறையிடல், அல்பம் தயாரித்தல், Box Mount செய்தல்
50. மின் உயர்த்திகளின் திருத்தவேலை சேவைகள்
51. பணியாட்தொகுதியினருக்கான பயிற்சிச் சேவைகள் (தகவல் தொழில்நுட்பம், நிர்வாகம் மற்றும் மனித வளங்கள், நிதி, தொழில்நுட்பம், சட்டம், பெறுகைகள், கணக்காய்வு, மொழி போன்றன)
52. தொலைத்தொடர்பு முறைமைகள் மற்றும் பொதுமக்கள் தொடர்பு முறைமை.
53. தொழிலாளர்களை வழங்கும் சேவைகள்
54. ஹோட்டல் மற்றும் ரெஸ்ட்டூரண்ட் (இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபை அல்லது நகர அபிவிருத்தி அதிகார சபையின் பதிவு சகிதம்)
55. காப்புறுதி நிறுவனங்கள் (அலுவலக உத்தியோகத்தர்கள், வெளிநாட்டுப் பிரதிநிதிகள், வாகனங்கள், கட்டிடங்கள், அலுவலக உபகரணங்கள் போன்றன)

**பகுதி III**

### வாகன திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு சேவைகள்

56. வாகனங்களுக்கான **Audio Players, Video Players மற்றும் Reverse Camera** வழங்குதல் மற்றும் பொருத்துதல்
57. வாகன உதிரிப்பாகங்கள்
58. வாகன வளிச்சீராக்க வேலைகள்
59. வாகன மின்னியல் முறைமை திருத்தவேலைகள் மற்றும் அது தொடர்பான சேவைகள்
60. வாகன சுத்திகரிப்பு சேவைகள் (உள்ளக சுத்திகரிப்புகள் மற்றும் வெளிப்புற சுத்திகரிப்பு வேலைகள்)
61. வாகன திருத்தவேலைகள் (தகர வேலை, நிறப்பூச்சு வேலை, மின்னியல் மற்றும் இயந்திர திருத்தவேலைகள்)
62. மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகளுக்கான திருத்தவேலைகள்
63. மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகளுக்கான சேர்விஸ்கள்
64. வாகனங்களுக்கு குஷனிடுதல்
65. சக்கரச் சமச்சீராக்கம் மற்றும் சக்கர சமநிலை சேவைகள்
66. வாகனங்களுக்கான டயர், டியூப் மற்றும் பெட்டறிகள்

**பகுதி IV**

### தகவல் தொழில்நுட்பம் தொடர்பான உபகரணங்கள் மற்றும் சேவைகள், மின்சார உபகரணங்கள் மற்றும் சேவைகள்

67. மென்பொருள் பொதிகள் மற்றும் (System Software and Application Software) கொள்வனவு செய்தல் மற்றும் இயைபுடைய சேவைகளை வழங்குதல்
68. கணனிகள், மடிக் கணனிகள் மற்றும் கணனி அச்சுப் பொறிகள், கணனி சார்ந்த சகல துணைப்பாகங்கள், கடவுச் சீட்டுகளை வாசிக்கும் கருவிகள் (Passport scanners) பணியக பாதுகாப்பு குறியீடு வாசிக்கும் கருவிகள் (Barcode Reader) மற்றும் அது சார்ந்த துணைப்பாகங்களைக் கொள்வனவு செய்தல், பராமரித்தல், திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
69. Toners, Cartridges, Ink, Ribbons, (கணனி அச்சுப் பொறிகள், தொலைநகல் இயந்திரங்கள் மற்றும் புகைப்படப் பிரதி இயந்திரங்கள் மற்றும் றோணியோ இயந்திரங்களுக்கானவை)
70. UPS கொள்வனவு செய்தல், பட்டறிகள் கொள்வனவு செய்தல், UPS முறைமை மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல், UPS இயந்திர திருத்தவேலைகள் மற்றும் உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்தல்
71. பிரதான கணனி சேமிப்பகம் (Server) மற்றும் தொடர்பான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல், ஆலோசனை சேவைகள், பராமரிப்பு சேவைகள், திருத்தவேலைகள் மற்றும் அது சார்ந்த சேவைகள் மற்றும் பிரதான கணனி மென்பொருட்களைக் கொள்வனவு செய்தல்
72. டொங்கல்கள் (Dongle) மற்றும் கம்பியில்லா இணைய இணைப்புச் சேவைகளைக் கொள்வனவு செய்தல்
73. கணனி வலையமைப்புக்கான கம்பி இணைப்பு சார்ந்த சேவைகள், வலையமைப்புச் சேவைகளுக்கான துணைப்பாகங்கள் வழங்குதல் (தொலைத்தொடர்பு முகாமைத்துவ முறைமை (PABX) வலையமைப்பு வேலைகள் IP/VPN ரவுட்டர், சுவிட்ச், கணனி சேர்வர் தொடர்பான வேலைகள், நிறுவல்கள், கணனி சேர்வர் தரையமைப்பு (Floor) கம்பியில்லா இணைப்பு, கம்பி சகிதமான இணைப்பு சேவைகள் வழங்கல்
74. தகவல் தொழில்நுட்ப ஆலோசனை சேவைகள் வழங்குதல்
75. மென்பொருள் அனுமதிப்பத்திரம் மற்றும் பாதுகாப்புச் சான்றிதழ்களைக் (SSL Certificate) கொள்வனவு செய்தல்
76. கணனி மென்பொருள் வடிவமைப்பு அபிவிருத்தி, நிறுவுதல் மற்றும் அது தொடர்பான சேவைகள்
77. CCTV முறைமைகளைக் கொள்வனவு செய்தல், பராமரிப்பு சேவைகள் மற்றும் அது சார்ந்த சேவைகள் வழங்குதல்

**பகுதி V**

### மின்சார உபகரணங்கள் மற்றும் அது சார்ந்த சேவைகள்

78. மின்சார சாதனங்கள் (மின்விசிறிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் DVD வீட்டுப் பாவனைப் பொருட்கள் மற்றும் சமையலறை சாதனங்கள் உட்பட)
79. மின்சார சாதனங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்
80. மின்னுயர்த்தி மற்றும் உதிரிப்பாகங்கள்
81. மின்பிறப்பாக்கிகளைக் கொள்வனவு செய்தல் மற்றும் வாடகைக்கமர்த்துதல், திருத்தவேலைகள் மற்றும் சேவைகள் வழங்குதல்
82. மின்சார / இயந்திர / சிவில் ஆலோசனை சேவைகள் மற்றும் தொழில்நுட்ப (Technical) சேவைகளை வழங்குதல்

**பகுதி VI**

### ஏனைய சேவைகள்

83. கொண்டாட்டங்களுக்கான முகாமைத்துவ வேலைகள்
84. கொண்டாட்டங்களுக்கான ஒளியமைப்பு மற்றும் அலங்கார வேலைகள்/ ஒலிபெருக்கி வேலைகள்
85. அலுவலக அலங்கார வேலைகள்
86. ஊடக சாதனங்கள் மற்றும் தொகுப்புச் சாதனங்கள்
87. அச்சு வேலைகள் (Off-set, Letter Press, Digital, Fabric, Design Printing, கோவை மேலட்டைகள், நாட்காட்டிகள், தினக் குறிப்புகள், சஞ்சிகைகள், செய்திப்பத்திரிகைகள், பற்றுச்சீட்டு புத்தகங்கள்)
88. இறுவட்டுக்களை பிரதி பண்ணல்.
89. தட்டச்சு இயந்திரத் திருத்தவேலைகள்
90. மொழிபெயர்ப்புச் சேவைகள் (சிங்களம், ஆங்கிலம், தமிழ், அரபு, கொரியா, ஜப்பான் மற்றும் இத்தாலி)
91. விசேட நிகழ்ச்சிகளுக்கான பொருட்கள் வழங்குதல். (தற்காலிக குடில்கள், கூடாரங்கள், கதிரைகள், மேசைகள், ஒலியமைப்புகள், தரை விரிப்புகள், ஒலியமைப்புகள் Podium (போடியம்) கொடிக் கம்பங்கள்)
92. தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பு, தொலைக்காட்சி விளம்பரங்கள் தயாரித்தல், ஊடக பிரசார வேலைகள், வீடியோ தயாரிப்புகள், வீடியோ வசன பதங்களைத் தொகுத்தல் மற்றும் பதிவு செய்தல், விவரணச் சித்திரம் மற்றும் தொலைக்காட்சி நாடகங்களைத் தயாரித்தல்
93. உடைந்த பொருட்களைக் கொள்வனவு செய்தல் (கணனி மற்றும் அது சார்ந்தவை, காகிதங்கள் / அலுவலக உடைந்த பொருட்கள் உட்பட)
94. விமான சேவை நிறுவனங்கள் / விமானப் பயணச் சீட்டு முகவர் நிறுவனங்கள்
95. முன் கட்டமைக்கப்பட்ட கட்டிடங்கள் (கொள்கலன் வழங்குநர்கள்)
96. கொள்கலன் வழங்குநர்கள் (கன்டெய்னர் போன்றவை)
97. சூரிய சக்தி நிறுவுதல், உதிரிப்பாகங்கள் மற்றும் சேர்விஸ் செய்தல்.

**மாதிரி விண்ணப்பம் (ஒவ்வொரு பொருள் மற்றும் சேவைக்காகவும் வெவ்வேறான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்)**

### வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2022/ 2023

01. விண்ணப்பதாரரின்/ நிறுவனத்தின் பெயர்:..................................................
(வியாபாரப் பதிவுச் சான்றிதழின் சான்றுபடுத்திய புகைப்படப் பிரதியை இணைத்தல் வேண்டும்)
02. விண்ணப்பதாரரின் / நிறுவனத்தின் முகவரி: ..........................................
(வழங்கிய முகவரி, வியாபாரப் பதிவின் பிரகாரம் மாற்றமடைந்தால் அதுபற்றி எழுத்துருவில் பதிவுத் தபால் மூலம் பெறுகைப் பிரிவிற்கு அறிவித்தல் வேண்டும்.)
03. வழங்கல் / சேவைகளின் தன்மை: ..................................................
உருப்படி இலக்கம்:.......................................... தொடரிலக்கம்:.............
04. தொலைபேசி, தொலைநகல் இல. மற்றும் மின்னஞ்சல் முகவரி:
தொலைபேசி: ..................................................................................
தொலைநகல்:...................................................................................
மின்னஞ்சல் முகவரி: ......................................................................
05. தொடர்புகொள்ள வேண்டியவரின் பெயர், பதவிப் பெயர் மற்றும் கையடக்கத் தொலைபேசிகள்
பெயர்: ..........................................................................................
பதவிப் பெயர்: ...............................................................................
கையடக்க தொலைபேசி இல: .........................................................
06. வங்கியாளரின் பெயர்: ..................................................................
07. பிரதான வியாபார அலுவல்கள் மற்றும் வியாபாரத்தின் தன்மை: (நிறுவனம், தனி நபர் வியாபாரம் போன்றவை) ..................................................
08. தற்போது பொருட்கள்/ சேவைகள் வழங்கப்படும் அரச மற்றும் தனியார் துறை அமைப்புக்களின் பட்டியல் (விசாரித்தறிவதற்கான தொலைபேசி இலக்கத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்)..............................................
09. கொள்வனவுச் செயற்பாடுகளின் போது தேவைப்படும் சந்தர்ப்பங்களில் கேள்விப் பிணை முறி / செயலாற்றுகைப் பிணையை வழங்க சம்மதமா என்பது பற்றி :.................................................................
10. வழங்க முடியுமான கடன் வசதிகள் (கால அளவு/ தொகை): .................
(கடன் அடிப்படையில் பொருட்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய கால எல்லையைக் காட்டத் தேவையில்லை என்பதுடன் தேவையான வேளைகளில் கேள்விப் பிணை முறி (Bid Security) மற்றும் செயலாற்றுகைப் பிணையை (Performance bond) வழங்க இணங்குதல் வேண்டும்)
11. பெறுமதி சேர்வரி (VAT) பதிவெண் (இருப்பின்): ....................................
12. பதிவுக் கட்டண விபரங்கள் - பணப் பற்றுச்சீட்டு இல: (பணியகப் பிரதி மற்றும் நிதிப் பிரிவு பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும்)

நான்/ எம்மால் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் விபரக்குறிப்புகளுக்கமைய பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு, அந்த விலைகளை இலங்கையில் செல்லுபடியாகும் ரூபா அலகில் விலைகளைச் சமர்ப்பிப்பதற்கு இத்தால் இணங்குகிறேன்/றோம். அவ்வாறு வழங்கப்படும் பொருள் மற்றும் சேவை என்பவற்றை விபரக்குறிப்புகளுக்கமைய வழங்கத் தவறும் பட்சத்தில் 2022/2023ஆம் வருடங்களுக்கான வழங்குநர்கள் பெயர்ப்பட்டியலில் எமது நிறுவத்தின் பெயர் அபகீர்த்தியாளர் பட்டியலில் சேர்க்கப்படும் என்பதை அறிவேன்/வோம்.

**கையொப்பம்** :
**பதவிப் பெயர்** :
**இறப்பர் முத்திரை** :
**திகதி** :

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 10

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | | 04 | 05 |
| 06 | | 07 | 08 | | 09 |
| 10 | 11 | 12 | | 13 | |
| 14 | 15 | | 16 | 17 | 18 |
| | 19 | | | 20 | |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 |

பெயர் ....................

வகுப்பு ....................

தொலைபேசி இல ....................

பாடசாலை பெயர் ....................

வதிவிட முகவரி ....................

....................

.................... ....................

மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(01) இது ஒரு கனி. உள்ளே மணிமணியாக இனிப்புச் சுவை மிகுந்த முத்துகள்.

(04) நமது வீடுகளில் உள்ள தளபாடங்களில் ஒன்று இது. மாணவர்களாகிய நீங்கள் கற்பதற்கு இத்தளபாடம் அவசியம்.

(07) இது அக்கால போர் ஆயுதம். பண்டைக் காலத்தில் மன்னர்கள் இந்த கூர்மையான ஆயுதம் கொண்டும் போர் புரிந்தார்கள். (தலைகீழான சொல்)

(10) இவன் இளைய சகோதரன்

(14) எமது பயிர்களுக்குள் தானாகவே வளருகின்ற தேவையற்ற செடிகள் இப்பெயர் பெறும். இவற்றைப் பிடுங்கி அழிப்பது எமது பயிர்களுக்கு நல்லது. (தலைகீழான சொல்)

(16) தலைமயிரை வாரிக் கொள்வதற்குத் தேவை.

(21) சீகிரியவை தனது பாதுகாப்புக் கோட்டையாக, சுவரோவியங்கள் வரைந்து, அழகாக வடிவமைத்த மன்னன்.

**மேலிருந்து கீழ்**

(01) மத்திய மாகாணத்திலுள்ள மாவட்டங்களில் ஒன்று இது

(03) தென்னை, கமுகு போன்றவற்றின் இளமைப் பருவ மரபுப் பெயர். (தலைகீழான சொல்)

(05) இடியப்பம், இட்லி போன்று இதுவும் ஒரு ஆகாரம். உழுந்துமாவில் தயாராவது. (தலைகீழான சொல்)

(11) காட்டுக்கு அரசனாகக் குறிப்பிடப்படும் கொடிய மிருகம். (தலைகீழான சொல்)

(13) கறி சமைப்பதற்குப் பயன்படுவது. மஞ்சள் நிறம் கொண்ட சிறிய தானியவகை.(தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 09

### விடைகள்

**இடமிருந்து வலம்**

(01) மின்சாரம் (11) தேனீ (13)தும்மல் (18) அக்கா (21) மகுடி

**மேலிருந்து கீழ்**

(01) மின்னல் (03) சாந்தம் (05) தேகம் (14) குடம் (16) காது (20) அரை

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 08

### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**

**ஜே.எப். சஹ்ரானி,**
தரம் 08 F, கொ/ முஸ்லிம் மகளிர் கல்லூரி,
30/2, கம்மெத வீதி,
சரிக்காமுல்லை, பாணந்துறை.

**இரண்டாம் பரிசு**

**ச. கபிதூரிகா,**
தரம் 08, மட்/வின்சன் தேசிய பாடசாலை
435/36, 2ம் குறுக்கு,
பூம்புகார், மட்டக்களப்பு.

**மூன்றாம் பரிசு**

**கனகசிங்கம் வினோபா,**
தரம் 06, கமு/கார்மேல் பற்றிமா தே.பா,
69C, வட்டைவிதானை வீதி, கல்முனை 02.

### பாராட்டு பெறுவோர்

1. **ஸீனத் தஹ்ரானி சாட்,**
தரம் 09, பதியுதீன் மகளிர் கல்லூரி,
டி.எஸ். சேனநாயக்க கல்லூரி, கண்டி.

2. **நி. இலக்கியா,**
தரம் 06, கொ/சைவ மங்கையர் கழக பாடசாலை,
கொழும்பு 06.

3. **எம்.ஐ. ஜனா,**
தரம் 05, ப/பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி,
45/15, தயாகுணசேகர வீதி, பதுளை.

4. **என். நிவேதிதா,**
தரம் 04,
கிங்ஸ்டன் சர்வதேச பாடசாலை,
கண்டி.

5. **ஜே. லிவிங்ஸ்ரன்,**
தரம் 03, பாமஸ்ரன் தமிழ் வித்தியாலயம்,
லிந்துலை.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 10
சிறுவர் உலகம்
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



குறளமுதம் :

பகைஎன்னும் பண்பு இலதனை ஒருவன்
நகையேயும் வேற்டற்பாற்று அன்று.

**தெளிவுரை :**
*பகை என்று சொல்லப்படும் பண்பு இல்லாத தீமையை ஒருவன் சிரித்துப் பொழுதுபோக்கும் விளையாட்டாகவும் விரும்புதலாகாது.*

# சாரணியர் இயக்கம்

உலகத்தில் எத்தனையோ விதமான சங்கங்களும், இயக்கங்களும் இயங்கி வருகின்றன. ஆனால், ஆறு வயது குழந்தைப் பருவத்திலுள்ள மாணவ மாணவியருக்குக் கூட ஒழுக்கத்துடன் விளையாட்டு முறையில் கீழ்படிதல், பெற்றோரை மதித்தல், கட்டளைகளுக்கு கீழ்படிதல், பெரியோரை மதித்து நடத்தல் போன்ற நற்புண்புகளை வளர்க்கும் ஒரே இயக்கம் 'சாரண இயக்கம்' என்றால் மிகையாகாது.

சாரணியம் முதன் முதலில் 1907 ஆம் ஆண்டில் இங்கிலாந்து நாட்டில் தோற்றுவிக்கப்பட்டது. இந்த இயக்கத்தை இங்கிலாந்தைச் சேர்ந்தவரான ராபர்ட் ஸ்டீபன்சன் ஸ்மித் பேடன் பவுல் என்பவர் தோற்றுவித்தார்.



இவ்வியக்கம் தோன்றிய சில ஆண்டுகளுக்குள் உலகம் முழுவதும் பரவியது. இவ்வியக்கத்தின் முக்கியக் குறிக்கோள் நாட்டுப்பற்று, இறைப்பற்று, அன்பு, கருணை, பணிவு, பிரதி பலன் கருதாமல் பிறருக்கு உதவி செய்தல், தன்னம்பிக்கை முதலான பண்புகளை மாணவர்களிடத்தில் உருவாக்குதலாகும். மேலும், இது உற்று நோக்குதல், வேட்டையாடுதல் அறிவுத் திறனை வளர்த்தல், கைவினைப் பொருட்கள் செய்தல் போன்ற திறமைகளையும் வளர்க்கிறது.



சாரண இயக்கத்தில் பயிற்சி பெற்ற சாரண சாரணியர்கள் நம்பிக்கைக்கு உரியவர்களாகவும், மாறாப் பற்றுடையவர்களாகவும், மரியாதை உடையவர்களாகவும், பிறரைச் சகோதரர்களாக நேசிக்கும் பண்புடையவர்களாகவும், இயற்கையை நேசிக்கிற வர்களாகவும், விலங்குகளிடத்தே அன்பு காட்டுபவர்களாகவும், கட்டுப்பாடு உடையவர்களாகவும், பொதுவுடமைகளைப் பாதுகாப்பவராகவும், சிக்கனமானவர்களாகவும் எண்ணம், வாக்கு, செயல்களில் தூய்மை உடையவர்களாகவும் விளங்குவர்.

சாரணியம் மூன்று பிரிவுகளை உடையது. குருளையர், சாரணர், திரிசாரணர் ஆகியவை மாணவர்களுக்கும் நீலப்பறவை, சாரணியர், திரி சாரணியர் என்ற மூன்று பிரிவுகள் மாணவியருக்கும் பொருத்தமான முறையில் அமைக்கப்பட்டுள்ளன.

சாரண இயக்கத்தின் குறிக்கோள்!

சாரணர்களைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் ஸ்கவுட் மாஸ்டர்கள் எனவும், சாரணியர்களைப் பயிற்றுவிக்கும் ஆசிரியைகள் 'பெண் சாரணிய தலைவிகள்' எனவும் அழைக்கப்படுகின்றனர்.

சாரண இயக்கத்தில் மாணவர்களைப் பள்ளி சூழலில் இருந்து விடுவித்து இயற்கைச் சூழலுக்கு அழைத்துச் சென்று அங்கு பயற்சிகள் கொடுக்கப்படுகின்றன. இதில் பலவகையான முடிச்சுகளிடுதல் அவற்றின் பயன்கள், எளிய உடற்பயிற்சிகள், சமிக்ஞைகள் மேப் மற்றும் முதலுதவி போன்ற பல்வேறு செயல்முறைத் திட்டங்களும் மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுகின்றன.

சாரண மாணவர்கள் மற்ற மாணவர்களில் இருந்து வேறுபட்டு தனித்துக் காணப்படுவர். அவர்களுடைய சாரண வணக்கமும், சாரண கைக்குலுக்கலும், கைதட்டுதலும் சிறப்பான முறையில் பிறரைக்கவரும் வண்ணம் இருக்கும்.

ஆர். ராஹினி,
வெளிமடை.

# வெற்றி மனதில் இருக்கிறது !

அமெரிக்காவில் தங்கியிருந்த போது ஒரு நாள், நீரோடை அருகே நடந்து கொண்டிருந்தார் சுவாமி விவேகானந்தர். இளைஞர்கள் சிலர், துப்பாக்கியால் சுடுவதற்கு பயிற்சி செய்து கொண்டிருந்தனர்.

அதற்காக, முட்டை ஓடுகளை நூலில் கட்டி, நீரோடையில் மிதக்க விட்டிருந்தனர். நூலின் ஒரு முனை, கரையிலிருந்த கல்லில் கட்டப்பட்டிருந்தது.



நீரோட்டத்துக்கு ஏற்ப, முட்டையோடுகள் அசைந்து கொண்டிருந்தன. பாலத்தில் நின்றபடி, முட்டை ஓடுகளை சுட முயற்சித்தனர் இளைஞர்கள். குறி தவறிக்கொண்டிருந்தது. ஒன்றைக்கூட சுட முடியவில்லை.

இச்செயலை புன்னகையுடன் பார்த்தபடி நின்றார் விவேகானந்தர். இதை கவனித்த இளைஞர்கள், "முட்டை ஓடுகளை சுடுவது சுலபமான செயல் போல் தெரியும். ஆனால் எளிதானதல்ல, முயற்சி செய்து பாருங்கள் அப்போது தெரியும் சிரமம்..." என்றனர்.

துப்பாக்கியை எடுத்து சுட ஆரம்பித்தார் விவேகானந்தர். வைத்த குறி ஒன்றுகூட தவறாமல் அத்தனை முட்டை ஓடுகளும் சிதறின! வியப்புடன், "துப்பாக்கி சுடுவதில் ஏற்கெனவே நீங்கள் நல்ல பயிற்சி பெற்றிருக்க வேண்டும் அதனால் தான், தவறாமல் சுட்டீர்கள்...' என்றனர்.

புன்னகையுடன், "வாழ்நாளில் இன்றுதான் முதன் முறையாக துப்பாக்கியை தொட்டிருக்கிறேன்.." என்றார் விவேகானந்தர். இளைஞர்கள் நம்ப முடியாமல், "அப்படியானால், குறி தவறாமல் எப்படி சுட முடிந்தது..." என்றனர்.

"வெற்றியின் ரகசியம், மனதை ஒருமுகப் படுத்துவதில் தான் இருக்கிறது. உயர்ந்த மனிதனையும், தாழ்ந்த மனிதனையும் ஒப்பிட்டுப் பாருங்கள். இருவருக்கும் உள்ள வேறுபாடு மனதை ஒருமுகப்படுத்துவதில் தான் இருக்கும். மனதை ஒருமுகப்படுத்தும் ஆற்றல் வளரும்போது கூர்மையான அறிவை பெறலாம்..."

"செருப்புக்கு மெருகு ஏற்றுபவர் மனதை ஒருமுகப்படுத்தினால் சிறப்பாக செயல்பட முடியும். மனதை ஒருமுகப்படுத்தினால் தான் சிறந்த முறையில் சமைக்க முடியும். பணம் சேர்ப்பதோ, கடவுள் வழிபாடோ. எந்த ஒன்றையும், மனதை ஒருமுகப்படுத்தும் ஆற்றலை வளர்ப்பதன் மூலம் சிறப்பாக செய்து முடிக்கலாம்" என்று போதித்தார் விவேகானந்தர்.

## தெரிந்துகொள்வோம்!

### மண் வாசனை



*பட்டுஸ் மழை பெய்தவுடன் ஒரு விதமான வாசனை வரும். அதை மண் வாசனை என்று சொல்வோம். இந்த மண் வாசனையை பிடிக்காதவர்களே இருக்க மாட்டார்கள். இந்த வாசனை எப்படி வருகிறது தெரியுமா?*

*நிலத்தில் ஸ்ட்ராப்டோமைசிஸ், ஆக்டினோமைசிஸ் போன்ற பாக்டீரியாக்கள், நுண்ணுயிர்கள் நிறைய உள்ளன. இவை மழை பெய்தவுடன் ஜியோஸ்மின் மற்றும் டைமிதைல் ப்ரோமியால் போன்ற எளிதாக ஆவியாகக் கூடிய வேதியல் பொருட்களை உற்பத்தி செய்யும். இந்த வேதியல் பொருட்கள்தான் வாசனைக்கு காரணமாகும்.*







மத்துகம கலைமகள் தேசிய பாடசாலையில் அண்மையில் இடம்பெற்ற மாணவத் தலைவர்களுக்கான பயிற்சிப் பட்டறையின்போது ..

## இவ்வார மழலை





அருள் / எம். லீலா,
இல. 35, ஜலாச வீதி, பண்டாரவளை.







**பி. சதுர்ஷன்,**
தரம் 06, ஸ்ரீ சண்முகா தமிழ் மகா வித்தியாலயம்,
மொனறாகலை.



**எஸ். டிலானிகுமாரி,**
தரம் 07, ஸ்ரீ சண்முகா தமிழ் மகா வித்தியாலயம்,
மொனறாகலை.



**ஜே. கிஷானி,**
தரம் 10, கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,
மாத்தளை.



**க. கிஷாலன்,**
தரம் 06, லசாலி ஆங்கில பாடசாலை,
கொட்டாஞ்சேனை.

# விளையாட்டு



19 வயதின் கீழ் டிவிஷன் 3 கிரிக்கெட்

## இறுதிப்போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி

பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதின் கீழ் டிவிஷன் 3 ஐம்பது ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி தகுதிபெற்றுள்ளது.

அரையிறுதிப்போட்டியில், மதுகம சென்.மேரிஸ் கல்லூரியை எதிர்த்தாடிய மத்திய கல்லூரி அணி ஆனந்தன் கஜனின் மற்றும் ரஞ்சித்குமார் நியூட்டன் ஆகியோரின் பிரகாசிப்புகளின் உதவியுடன் 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றியினை பதிவுசெய்தது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்.மேரிஸ் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. அதன் அடிப்படையில் களமிறங்கிய சென்.மேரிஸ் கல்லூரி அணி, அணித் தலைவர் ஹிமேஷ மதுபஷனாவின் அரைச்சதம் மற்றும் யசித சத்சரவின் நிதானமான ஆட்டத்துடன் 50 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 178 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

சென். மேரிஸ் அணியை பொறுத்தவரை ஒவ்வொரு துடுப்பாட்ட வீரர்களுக்கும் இடையில் சிறந்த இணைப்பாட்டங்கள் பெறப்பட்டிருந்த போதும், வேகமாக ஓட்டங்களை குவிக்க தவறியதால் அவர்களால் பாரிய ஓட்ட எண்ணிக்கையை அடையமுடியவில்லை. இதில் யசித மற்றும் ஹிமேஷ ஆகியோர் 5வது விக்கெட்டுக்காக 45 ஓட்டங்களை அதிகபட்சமாக பகிர்ந்திருந்தனர்.

யாழ். மத்திய கல்லூரியின் பந்துவீச்சை பொறுத்தவரை, ரஞ்சித்குமார் நியூட்டன் 4 விக்கெட்டுகளையும், சுதர்ஷன் அனுசாந்த் மற்றும் ஜெயதீஷ்வரன் விதுசன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இறுதிப்போட்டிக்கான வாய்ப்பை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மத்தியக் கல்லூரி அணிக்கு நியூட்டன் சிறந்த ஆரம்பத்தை கொடுத்தாலும் விதுசன், சன்சயன், அஜய் மற்றும் சாரங்கன் ஆகியோர் குறைந்த ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர்.

நியூட்டன் 45 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்து ஆட்டமிழக்க, 74 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்திருந்த மத்திய கல்லூரி அணி, 5வது விக்கெட்டை 95 ஓட்டங்களுக்கு இழந்தது. எனினும் ஆனந்தன் கஜன் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி, விநாயக செல்வம் கவிதர்ஷன் மற்றும் சகாதேவன் சயந்தன் ஆகியோருடன் மிகச்சிறந்த இணைப்பாட்டத்தை கடந்து அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச்சென்றார்.

கவிதர்ஷன் மற்றும் கஜன் ஆகியோர் 6வது விக்கெட்டுக்காக 50 ஓட்டங்களை பகிர்ந்ததுடன், சயந்தன் மற்றும் கஜன் 7வது விக்கெட்டுக்காக 38 ஓட்டங்களை பகிர்ந்து அணியின் வெற்றியை உறுதி செய்தனர். கஜன் இறுதிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் நின்று துடுப்பெடுத்தாடி 87 பந்துகளில் 2 சிக்ஸர்கள் மற்றும் 9 பௌண்டரிகள் அடங்கலாக 74 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார். இதில், கவிதர்ஷன் 9 ஓட்டங்களையும், சயந்தன் 7 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். இவ்வாறான துடுப்பாட்ட பிரகாசிப்புகளின் உதவியுடன் மத்திய கல்லூரி அணி 41 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 183 ஓட்டங்களை பெற்று வெற்றியை பதிவுசெய்தது. சென்.மேரிஸ் அணியின் பந்துவீச்சில் இசுரு தேஷான் 2 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

அரையிறுதிப்போட்டியில் வெற்றிபெற்றுள்ள யாழ். மத்திய கல்லூரி அணி இறுதிப்போட்டியில் மொறட்டுவ மெதடிஸ்ட் உயர் கல்லூரியை எதிர்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## டொலர் செலுத்த வழியில்லை; பயிற்சியாளர்கள் விலகல்!



நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை யாவரும் அறிந்ததே. சுகாதாரத்துறை, கல்வித்துறை, போக்குவரத்துத்துறை அனைத்துமே முடங்கிய நிலையிலேயே உள்ளது. இவை எல்லாவற்றுக்கும் டொலர் நெருக்கடி மற்றும் பொருளாதார சிக்கல்களே காரணமாகும். இலங்கையின் விளையாட்டுப் பயிற்சியாளர்களாக அதிகமாக வெளிநாட்டுப் பயிற்சியாளர்களே நியமிக்கப்படுகின்றனர். கடந்த மாதம் கூட இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக இங்கிலாந்துநாட்டைச் சேர்ந்த சில்வர் வூட்டை நியமித்துள்ளனர். வெளிநாட்டுப் பயிற்சியாளர்கள் நியமிக்கப்படும் போது அவர்களுக்கான கொடுப்பனவுகளை டொலர்களிலேயே செலுத்த வேண்டியுள்ளதால் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் பிரச்சினை காரணமாக விளையாட்டுத்துறையிலும் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கை உதைபந்தாட்டம், கடற்கரை கரப்பந்தாட்டம் மற்றும் கபடி அணிகளுக்கு வெளிநாட்டு பயிற்சியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தற்போது அவர்களுக்கு சம்பளம் வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதன் காரணமாக அவர்கள் பதவிகளைச் விட்டுச்செல்ல தீர்மானித்துள்ளனர்.

இலங்கை கால்பந்தாட்ட அணியின் பயிற்சியாளரும், தொழில்நுட்ப இயன்குனருமான பொஸ்னியாவைச் சேர்ந்த அமீர் அலஜிக் டொலரில் சம்பளம் பெறுவது கடினமான விடயம் என்பதால் புட்போல் ஸ்ரீ லங்கா, மற்றும் அதன் தலைவர் ஜஸ்வர் உமருடன் நடந்த பேச்சுவார்த்தையின் பின் அவர் சேவையை முடித்துக்கொள்ள இணங்கியுள்ளார். இவர் 2020ம் ஆண்டு இலங்கை உதைபந்தாட்ட அணியின் பயிற்சியாளராக இணைந்தார். இவரின் பயிற்சியின் கீழ் இலங்கை அணி நம்பிக்கை அளிக்கக் கூடிய விதத்தில் விளையாடி வருகிறது. குறிப்பாக கடந்தாண்டு நடைபெற்ற நான்கு நாடுகளுக்கிடையிலான போட்டித் தொடரில் இலங்கை கால்பந்தாட்ட அணி சிறப்பாகச் செயற்பட்டிருந்தது. பிரதமர் சவால் கிண்ணத்துக்காக நடைபெற்ற இத் தொடரில் இலங்கை இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது. இது இலங்கை கால்பந்தாட்ட அணி 18 வருடங்களுக்குப் பின்னர் சர்வதேச போட்டித் தொடரில் இறுதிப்போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்த முதல் சந்தர்ப்பமாகும். அண்மையில் முடிவுற்ற மாகாணங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டித் தொடரும் சிறப்பாக நடைபெற்று பல கிராமங்களிலிருந்தும் இளம் வீரர்கள் உருவாவதற்கும் இவரின் பங்களிப்பும் ஒரு காரணமாகும்.





இதேவேளை இதுவரை யூரோக்களில் ஊதியத்தைப் பெற்றுவந்த இலங்கை கடற்கரை கரப்பந்தாட்ட பயிற்சியாளர் பின்லாந்தைச் சேர்ந்த ஒய்லண்ட் ராம்டோவின் சேவவையை நிறுத்துவதற்கு இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனம் தீர்மானித்துள்ளது. இவர் 2021ம் ஆண்டு இலங்கை அணிக்கு பயிற்சி வழங்க நியமிக்கப்பட்டார். சர்வதேச கடற்கரை கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் அங்கீகரிக்கப்பட்ட முதல்தர பயிற்சியாளரான இவரின் பயிற்சியின் கீழ் இலங்கை ஆண்கள், பெண்கள் கடற்கரை கரப்பந்தாட்ட அணிகள் ஆசிய விளையாட்டுப் போட்டிக்குத் தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது. இவர் ஜூலை மாதம் இங்கிலாந்து பர்மிங்ஹாமில் ஆரம்பமாகவிருக்கும் கொதன்வெல்த் விளையாட்டுப் போட்டி வரை இலங்கை கரப்பந்தாட்ட அணிக்கு நியமிக்கப்பட்டிருந்தார், நெருக்கடி காரணமாக முன்கூடிய தனது சேவையை முடிக்கவிருக்கிறார்.

மேலும் இலங்கை கபடி அணியின் பயிற்சியாளராகச் செயற்பட்டு வரும் தமிழ்நாட்டைச் சேர்ந்த கே. எஸ். பாஸ்கரனுக்கு டொலர்களில் சம்பளம் கொடுப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதால் அதற்குப் பதிலாக ரூபாவில் சம்பளம் வாங்க அவர் தயக்கம் காட்டியுள்ளார். இதனால் இம்மாதத்துக்கான சம்பளத்தை மாத்திரம் தங்கத்தில் வழங்கினோம். அதாவது அவரின் சம்பளத்துக்குப் பெறுமதியான தொகையை இலங்கை ரூபாயில் தங்கம் வாங்கிக்கொள்வதற்காக செலுத்தப்பட்டதாக கபடி சம்மேளகத்தின் தலைவர் அனுர பத்திரன தெரிவித்தார்.

பயிற்சியாளர்களின் விலகலினால் இலங்கை விளையாட்டுத்துறை இவ்வாறு பாதிக்கும் நிலையில் எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள சர்வதேச விளையாட்டு விழாக்களிலும் இந்த டொலர் பிரச்சினை விஸ்வரூமெடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் இங்கிலாந்து பர்மிங்ஹாம் பொதுநலவாய விளையாட்டு விழா நடைபெறவுள்ளது. இதில் பங்கு கொள்ள இலங்கை வீர, வீராங்கனைகள் ஏற்கனவே தமது பயிற்சிகளை ஆரம்பித்துள்ளனர். இதில் பங்குகொள்ளும் வீரர்களுக்கான இருப்பிட வசதிகளை போட்டி ஏற்பாட்டுக்குழு ஏற்பாடு செய்து கொடுத்தாலும் அவர்களுடன் செல்லும் அதிகாரிகள் அடங்கிய குழுவுக்கான தங்குமிட வசதிகளை இலங்கை ஒலிம்பிக் சங்கம்தான் ஏற்பாடு செய்ய வேண்டும். தற்போதைய நெருக்கடி நிலையில் அதிகாரிகளுக்கும், மேலதிக வீரர்களுக்குமான தங்குமிட வசதிகளைச் செய்து கொடுப்பதில் மிகப்பெரிய நெருக்கடி நிலையை இலங்கை ஒலிம்பிக் சங்கம் சந்தித்துள்ளது.

மேலும் அதைத் தொடர்ந்து சீனாவில் நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டு விழாவில் பங்கு கொள்ளும் பொருட்டு இலங்கையிலிருந்து அதிகளவான வீரர்களைக் கொண்ட அணியைத் தயார் செய்து வருகிறது. டொலர் பிரச்சினையால் தொடர்ந்து வெளிநாட்டுப் பயிற்சியாளர்கள் வெளியேறி வருவதால் இந்த விளையாட்டு விழாவுக்காக தயாராகும் வீர, வீராங்கனைகளும் பெரும் சிரமத்தை எதிர்கொள்ளவேண்டியுள்ளது. மேலும் நீச்சலில் பங்குகொள்ளும் வீரர்களுக்கு தங்களது விமான டிக்கெட்டுகளை அவர்களது செலவிலேயே பெற்றுக்கொள்ள முடியுமானால் பொதுநலவாய விளையாட்டுவிழாவுக்கு அனுமதிக்கப்படுவார்கள் என்ற தகவல்களும் தற்போது வெளியாகியுள்ளது.

**எம்.எஸ்.எம்.ஹில்மி...**

## உலகம் முழுவதும் சிங்கக் கொடியை ஏற்றுவது அனைவரின் பொறுப்பாகும்



எதிர்வரும் போட்டிகளில் இலங்கை கிரிக்கட் அணியை வெற்றிப்பாதையில் இட்டுச் செல்வதும், தேசியக் கொடியை உலகம் முழுவதும் ஏற்றுவதற்கான கௌரவமான சூழலை உருவாக்குவதும் அனைவரினதும் பொறுப்பு என இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளர் கிறிஸ் சில்வர்வுட் தெரிவித்துள்ளார்.

மிக்கி ஆர்தருக்குப் பின்னர் இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக இரு வாரங்களுக்கு முன்னர் பொறுப்பேற்ற கிறிஸ் சில்வர்வுட் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருக்காக தனது அணியுடன் எதிர்வரும் 8ஆம் திகதி பங்களாதேஷ் செல்லவுள்ளார்.அந்த விஜயத்திற்கு முன்னதாக சில்வர்வுட் முதன்முறையாக கொழும்புக்கு விஜயம் செய்தார். பிரேமதாச விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர், எதிர்கால சவால்கள் மற்றும் தமது திட்டங்கள் தொடர்பில் கருத்து வெளியிட்டார். எதிர்வரும் காலங்களில் சர்வதேச கிரிக்கெட் தரவரிசையில் இலங்கை அணியை மேலும் முன்னெடுத்துச் செல்வதே தனது முதன்மையான நம்பிக்கை என கிறிஸ் சில்வர்வுட் தெரிவித்தார்."சில காலத்திற்கு முன்பு, சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் தரவரிசையில் முதல் அணிகளில் இலங்கை இருந்தது. நல்ல முடிவுகளின் மூலம் அந்த டாப் லிஸ்டில் மீண்டும் இடம் பெற முடியும். நமது அணி முன்னேற வேண்டும். அதிலிருந்து நாங்கள் தரவரிசையில் நிச்சயம் முன்னேற வாய்ப்பு உள்ளது. அதேபோல், சிறந்த வீரர்களை வெளிக்கொணர விரும்புகிறேன். சரியாக தொடர்புகொள்வது எனது சவால்களில் ஒன்று.நான் செயல்படுத்த விரும்பும் திட்டங்கள் எங்கள் வீரர்களுக்கு சரியாகத் தெரிவிக்கப்பட்டன என்பதை நான் அறிய விரும்புகிறேன். இதற்கு நவீத் நவாஸின் சிறப்பான பங்களிப்பைப் பெற்றதில் நான் மகிழ்ச்சியடைகிறேன், "என்று சில்வர்வுட் கூறினார்.இலங்கை கிரிக்கெட் அணியின் புதிய உதவிப் பயிற்றுவிப்பாளராக முன்னாள் டெஸ்ட் கிரிக்கட் வீரர் நவீத் நவாஸ் நியமிக்கப்படவுள்ளதாகவும், இது அடுத்த இரண்டு வருடங்களுக்கு நடைமுறையில் இருக்கும் எனவும் இலங்கை கிரிக்கெட் தெரிவித்துள்ளது.கிறிஸ் சில்வர்வுட்டின் உதவியாளராகப் பொறுப்பேற்பதற்கு முன்பு, நவீத் நவாஸ் பங்களாதேஷ் 19 அணியின் தலைமைப் பயிற்சியாளராக இருந்தார், அங்கு பங்காளதேசம் 2020 இளைஞர் உலகக் கோப்பையை வென்றது.உதவிப் பயிற்சியாளராக நவாஸின் முதல் பணி இலங்கை கிரிக்கெட் அணிக்காக பங்களாதேஷ் சுற்றுப்பயணம் ஆகும்.

"எங்கள் வீரர்களுக்கு நம்பிக்கையையும் ஒழுக்கத்தையும் ஏற்படுத்துவதே எனது முதன்மையான குறிக்கோள் என்று நான் சொல்ல வேண்டும். கடந்த இரண்டு வாரங்களாக வீரர்களின் புள்ளிவிவரங்களில் அதிக கவனம் செலுத்தி வருகிறேன்.அதன் மூலம் எப்படி மேம்படுத்துவது என்று ஆய்வு செய்தேன். துடுப்பாட்ட வீரர்கள் பதற்றமின்றி ஓட்டங்க குவிக்க நல்ல நம்பிக்கையை கொடுக்க வேண்டும். நீங்கள் கவனக்குறைவாக விளையாட வேண்டும் என்று இது அர்த்தப்படுத்துவதில்லை.மதிப்பெண்களை கவனமாகவும் சரியான நேரத்திலும் செய்ய வேண்டும். வீரர்கள் நேர்மறையாகவும் தைரியமாகவும் விளையாடுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். அந்த மனப்பான்மையுடன் ஆட்டத்தில் இறங்கினால், அடித்த ஓட்டங்களின் எண்ணிக்கையைக் குறைத்து, ஸ்கோரை அடிக்கும் வேகத்தை அதிகரிக்கலாம்," என்றார் சில்வர்வுட்.

"இலங்கை கிரிக்கெட்டின் பயிற்சியாளராகப் பொறுப்பேற்பதற்கு முன்பு, அணியில் மாற்றத்தை ஏற்படுத்த முடியுமா என்று யோசித்துக் கொண்டிருந்தேன். என்னால்அந்தமாற்றத்தைஏற்படுத்த முடியும், "என்று சில்வர்வுட் கூறினார். உதவிப் பயிற்சியாளர் நவீத் நவாஸ் கூறுகையில், வீரர்களின் மனநிலையை மேம்படுத்துவது பயிற்சியாளர்களின் பொறுப்பாகும். "பல நாடுகளில், விளையாட்டு வீரர்களின் மனநிலையை மேம்படுத்துவதில் நிபுணத்துவம் பெற்ற நிபுணர்கள் உள்ளனர்.பயிற்சியாளர்கள் வீரர்களுடன் நன்றாகப் பேசவும், அனுபவத்தின் மூலம் அவர்களின் மன வலிமையை வளர்க்கவும் முடியும், "என்று உதவி பயிற்சியாளர் கூறினார்.சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐசிசி) உலகக் கோப்பையில் இரண்டு டெஸ்ட் போட்டிகளுக்காக இலங்கை அணி பங்களாதேசில் சுற்றுப்பயணம் செய்து விளையாடுகிறது.

## இலங்கை கோல்ப் வீரர்கள் கியர்ஸ் அப் எம்.எச்.சலிதா, புஷ்பிகா சிறப்பாக பிரகாசிப்பு



கடந்த மாதம் இலங்கை கோல்ஃப் தரவரிசைப் போட்டி ரோயல் கொழும்பு கோல்ஃப் மைதானத்தில் 31 கோல்ப் வீரர்கள் களமிறங்கியது. M.H.சலிதா, புஷ்பிகா அணிக்கு முன்னால் வந்தவுடன், ஒரு ஆர்வமுள்ள கோல்ப் வீரர்கள் உயர் போட்டிகளுக்காக போராடினர்.

2022 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் சீனாவில் நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்கான தயார்நிலையில் உச்சநிலையை எட்டுவதற்கு, இலங்கை கோல்ஃப், தேசிய தரத்தின் உயர்மட்ட லீக் முதல் வளர்ந்து வரும் தரம் வரை தேர்ந்தெடுக்கப்பட்ட கோல்ப் வீரர்களுக்கு சவாலான திட்டத்தை அமைத்துள்ளது.கோல்ஃப் ப்ரோஸ் மற்றும் அமெச்சூர்கள், ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் உச்ச நிலையை அடைய விரிவான பயிற்சி மற்றும் மனதை வலுப்படுத்தும் அட்டவணை கொடுக்கப்படுகின்றன.





இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மே மாதம் 8ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
செந்தூரம்
2022 மே 08 ஞாயிற்றுக்கிழமை



# உலகின் மிகப்பெரிய வைரக்கல்லின் கதை




உலகில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய வைரக்கல்லின் பெயர் கல்லினன் வைரம். இதன் எடை 621.35 கிராம். 1905 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் இருக்கும் வைரச் சுரங்கத்தில் தான் இது கண்டுபிடிக்கப்பட்டது. உண்மையில் இதன் பெறுமதி விலைமதிப்பற்றது.

உலகெங்கும் அவதானத்தை பெற்ற இந்த வைரம் திருடுபோகலாம் என்ற அச்சம் எல்லாவற்றையும் விட பெரிதாக இருந்தது. இந்த வைரத்தை பிரிட்டனுக்கு அனுப்ப வேண்டி இருந்தது தான் அப்போதைய பெரிய சிக்கல். கப்பலில் கடும் காவலுக்கு மத்தியில் பூட்டுப்போட்ட பெட்டியில் அந்த வைரக் கல் பிரிட்டனுக்கு அனுப்பப்பட்டதாகச் செய்தி. அப்படி ஒரு கப்பல் உண்மையிலேயே தென்னாபிரிக்காவில் இருந்து பிரிட்டனை நோக்கி புறப்பட்டது.

ஆனால் அந்தப் பாதுகாப்பான பூட்டுப்போட்ட பெட்டிக்குள் வைரம் இருக்கவில்லை. ஏனென்றால் அந்தப் பயணத்திலும் வைரம் திருடுபோகலாம் என்ற அச்சம் இருந்ததால் அந்தக் கப்பலில் வைரம் அனுப்பப் படவே இல்லை. இது ஒரு திசைதிருப்பும் வேலை.

சொன்னால் நம்பமாட்டீர்கள் அத்தனை பெறுமதியான அந்த வைரக்கல், சாதாரண பெட்டி ஒன்றில் வைக்கப்பட்டு பதிவுத் தபாலில் தென்னாபிரிக்காவில் இருந்து பிரிட்டனுக்கு பாதுகாப்பாக அனுப்பப்பட்டது.

பிரிட்டனுக்கு கொண்டு செல்லப்பட்ட அந்த வைரக்கல்லை யாரும் வாங்காத நிலையில் இரண்டு ஆண்டுகளின் பின் சுரங்க முதலாளியால் எட்வர்ட் மன்னருக்கு பரிசாக வழங்கப்பட்டது.

காலப்போக்கில் அது ஒன்பது பெரிய கற்களாகவும், 100 சிறியதாகவும் உடைக்கப்பட்டது. அதில் பெரிய மூன்று கற்கள் லண்டனில் காட்சிக்காக வைக்கப்பட்டிருக்கிறது.

# 918 பேர் கூட்டாக தற்கொலை!



ஒருவர் இருவர் இல்லை 918 பேர் கூட்டாகத் தற்கொலை செய்த சம்பவத்தை எப்படி கிரகிப்பது என்பது புரியவில்லை. அதனை பொத்தாம் பொதுவாக தற்கொலை என்று சொல்லிவிடவும் முடியாது. எனென்றால் உயிரிழந்தவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் சிறுவர்கள்.

அமெரிக்காவைச் சேர்ந்த ஜிம் ஜோன்ஸ் என்ற மதப் போதகரை குருட்டுத் தனமாக பின்பற்றியதன் காரணமாகத் தான் ஒரு கிராமமே இப்படி கூட்டாக தற்கொலை செய்து கொண்டது.

ஜிம் ஜோன்ஸ் கம்யூனிச சித்தாந்தம் கொண்டவர். அமெரிக்க அரசுடன் முரண்பட்ட அவர் தமது சீடர்களை அழைத்துக் கொண்டு கயான காடுகளுக்குச் சென்று கிராமம் ஒன்றை அமைத்தார். அவரை கடவுளாக நம்பிய பக்தர்கள் அவர் கூறுவதையெல்லாம் செய்தார்கள்.

அந்த குருட்டு நம்பிக்கையின் உச்ச சம்பவம் 1978 நவம்பர் 18 ஆம் திகதி இடம்பெற்றது.

ஒரு பெரிய தொட்டியில் குளிர்பானத்தை தயாரித்து அதில் விசத்தை கலந்து பக்தர்களை அழைத்தார். கூட்டாக தற்கொலை செய்துகொள்ளும் அறிவிப்பை விடுத்து அனைவருக்கும் அந்த பானத்தை குடிக்கக் கொடுத்தார். அதனை வேதவாக்காக நம்பியவர்கள் மறு பேச்சு இல்லாமல் குடித்தார்கள். சிலரோ எதிர்க்க அவர்கள் வலுக்கட்டாயமாகக் குடிக்க வைக்கப்பட்டது.

ஒட்டுமொத்த கிராமமே உயிரை மாய்த்துக் கொண்டது. 2001 செப்டெம்பர் தாக்குதல் வரை அமெரிக்க வரலாற்றில் அதிகம் பேர் உயிரிழந்த சம்பவமாக இது இருந்தது.

பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

## அர்த்தம் தெரியாத கடைசி வார்த்தை

STENDEC என்பதற்கு பொருள் தெரியுமா? தெரிந்தால் உண்மையிலேயே நீங்கள் நாலும் தெரிந்தவர் தான். ஆங்கிலத்தினால் எழுதப்பட்ட இந்த சொல் அல்லது எழுத்துகளுக்கு பொருள் தொரியாது கடந்த 73 ஆண்டுகளாக தலையை பீய்த்துக் கொண்டவர்கள் பலர்.




இதற்குக் காரணம் 1947 ஒகஸ்ட் 2 ஆம் திகதி இடம்பெற்ற விமான விபத்துத் தான். பிரிட்டிஷ் சவுத் அமெரிக்கா ஏயார்வெயிஸ் நிறுவனத்தின் லங்காஸ்ட்ரியன் விமானம் சிலி நாட்டின் டுபுன்காடோ மலைப்பகுதியில் விபத்துக்கு உள்ளானது. விமானத்தில் இருந்த 11 பேரும் உயிரிழந்தனர். இந்த விமானத்தின் பாகங்கள் 1990களின் பிற்பகுதியிலே கண்டுபிடிக்கப்பட்டன.

விமானம் விபத்துக்கு உள்ளாவதற்கு முன்னர் கடைசியாக அனுப்பப்பட்ட செய்தியில், STENDEC என்று கூறப்பட்டிருக்கிறது. இவ்வாறு ஒரு முறை அனுப்பப்பட்டிருந்தால் தப்பாக அனுப்பப்பட்டதாக கூறலாம். மூன்று தடவைகள் இந்த வார்த்தை அனுப்பப்பட்டிருக்கிறது. என்ன மர்மம் என்றால் இந்த வார்த்தைக்கு எந்த அகராதியிலும் தெளிவான பொருள் இல்லை.

# கொடுத்துவைக்காத ககாரி




யூரி ககாரி முதல் முறை விண்வெளிக்குச் சென்றவர். சோவியட் ஒன்றிய விமானியான ககாரி 1961 எப்ரல் 12 ஆம் திகதி வொஸ்டொக் 1 விண்கலத்தில் பூமியை சுற்றிவந்தார். அப்போது மனிதனை நிலவுக்கு அனுப்புவதில் அமெரிக்காவுக்கு சோவியட் ஒன்றியத்திற்கும் போட்டா போட்டி இருந்தது. ஆனால் மனிதன் நிலவில் கால்வைப்பதை பார்ப்பதற்கு யூரி ககாரி கொடுத்துவைக்கவில்லை. 1969 ஜுலை 21 ஆம் திகதி நீர் ஆம்ஸ்ட்ரோங் முதல் முறை நிலவில் கால் வைக்கும்போது ககாரி உயிரோடு இல்லை. ஓர் ஆண்டுக்கு முன்னர் ஏற்பட்ட விமான விபத்தில் ககாரி தனது 34 ஆவது வயதில் உயிரிழந்தார்.

# மோட்டார் பந்தயத்திற்கு பயப்படும் சுவிட்சர்லாந்து

சுவிட்சர்லாந்தில் 1955 ஆம் ஆண்டு இடம்பெற்ற மோட்டார் ஓட்டப் பந்தயத்தின்போதும் மோட்டார் வாகனத்தின் பெரிய துண்டு ஒன்று பார்வையாளர்கள் இருக்கும் பக்கம் விழுந்ததில் 83 பேர் கொல்லப்பட்டார்கள். சுமார் 180 பேர் காயமடைந்தார்கள். மோட்டார் பந்தய வரலாற்றில் இடம்பெற்ற மிகப் பயங்கர விபத்தாக இது இன்றும் வரலாற்றில் இடம்பெற்றிருக்கிறது.

அன்று தொடக்கம் சுவிட்சர்லாந்தில் மோட்டார் பந்தயங்களுக்கு தடை விதிக்கப்பட்டது. 2007 ஆம் ஆண்டு தடைகளை தளர்த்த பாராளுமன்ற கீழவையில் தீர்மானம் கொண்டுவந்தபோதும் அதனை மேலவை ஏற்கவில்லை. இந்த முயற்சி இரு தடவைகள் நிராகரிக்கப்பட்டதால் அந்த தீர்மானம் 2009 ஆம் ஆண்டு கைவிடப்பட்டது. என்றாலும் 2015 ஆம் ஆண்டு இந்தத் தடையில் சற்று தளர்வை கொண்டுவந்த சுவிட்சர்லாந்து நிர்வாகம் மின்சார வாகனங்களின் பந்தயத்திற்கு மாத்திரம் அனுமதி அளித்தது.



# கலைத் துறையின் அடையாளமாக திகழும் சபீனா சோமசுந்தரம்







நான் சபீனா சோமசுந்தரம். நான் ஒரு சிறுகதை எழுத்தாளர். கடந்த ஐந்து வருடங்களாக இணையத்தள செய்தி ஆசிரியராக பணியாற்றி வருகின்றேன். சோமசுந்தரம் - திருமதி சுசீலாதேவி ஆகியோரின் மூத்த புதல்வி நான். எனக்கு இரண்டு சகோதரிகள் மற்றும் ஒரு சகோதரன் இருக்கிறார்கள்

நான் தற்போது திருமணம் முடித்து கிழங்கிலங்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வசித்து வருகின்றேன். எனது கணவர் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் அழகையா கிங்ஸ்லி பத்மநாதன் - திருமதி லலித்தாம்பிகை ஆகியோரின் மகனாவார். எனக்கு இரண்டு பெண் குழந்தைகள் இருக்கிறார்கள். டேனா டனீஷா,லியா அடோனியா.

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்ட நான் போர் சூழ் நிலையில் இடம்பெயர்ந்து மன்னாரில் குடியேறினேன். எனது குடும்பத்தோடு. நான் எனது ஆரம்பக் கல்வியை பதுளை மாவட்டத்தில் உள்ள மடுல்சீமை தமிழ் தேசிய பாடசாலையில் கற்றேன். மிகக் குறைவான வளங்களைக் கொண்டு பல பட்டதாரிகளை உருவாக்கிய அந்த பாடசாலையில் 1998 ஆம் ஆண்டு இடம் பெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை தேடிக் கொடுத்தேன்.

அதுமட்டுமன்றி மடுல்சீமை ஊவாக்கெல எஸ்டேட் என்ற நான் வசித்த பிரதேசத்தின் வரலாற்றில் அவ்வூரில் இருந்து முதன்முறையாக புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவி என்ற பெருமையை பெற்றுக் கொண்டேன். அதற்காக மறைந்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் ஐயாவிடமிருந்து பரிசிலும் பெற்றுக் கொண்டுள்ளேன்.

அதன்பின் உயர் கல்வியை மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரியில் கற்றேன். உயர்தரத்தில் கலைப்பிரிவில் கற்றேன்.

சிறுவயதிலிருந்தே ஓவியம் வரைவதில் எனக்கு அலாதி பிரியம். நிறைய ஓவியப் போட்டிகளில் பங்கு பற்றியுள்ளேன். அதேபோன்று புத்தகம் வாசிப்பது என்றால் எனக்கு மிகவும் பிடித்தமான ஒரு செயல். சிறு வயது முதலே தமிழ் இலக்கியத்திலும் வாசிப்பிலும் அதிகநாட்டம் இருந்தது எனக்கு. நான் முதன் முதலாக கதைகள் வாசிக்கத் தொடங்கியபோது குடும்ப சமூக கதைகளை விட க்ரைம் கதைகள் அதிக விரும்பி வாசித்ததுண்டு. இந்திய நாவலாசியர் க்ரைம் மன்னன் என்று அழைக்கப்படும் ராஜேஸ் குமாரின் மிகப் பெரிய ரசிகை நான்.



நானும் இப்படியெல்லாம் கதைகள் எழுத வேண்டும் என்று ஆர்வம் இளம் வயதிலிருந்தே இருந்தது. எனினும் கதையை எழுதி அதை எவ்வாறு வாசகர்களிடையே கொண்டு சேர்ப்பது என்பது தொடர்பில் எனக்கு மிகப்பெரிய ஐயம் இருந்தது. இருந்தாலும் இணையத்தள செய்தி ஆசிரியராக பணியாற்றிக் கொண்டிருந்த நான் சில இணையத் தளங்களில் கட்டுரை, கதை, கவிதை போன்றவற்றை எழுதி வந்தேன்.

அப்போதுதான் 2019 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் வெளி வந்து கொண்டிருந்த அரங்கம் பத்திரிகையில் எழுத வாய்ப்பு கிடைத்தது. அரங்கம் பத்திரிகையின் ஆசிரியர் சீவகன் பூபாலரட்ணம் ஐயா முதன் முறையாக அச்சு ஊடகத்தில் எனது எழுத்துக்களுக்கு வாய்ப்பளித்தார்.

நான் உளவியலில் டிப்ளோமா கற்கைநெறியைப் பூர்த்தி செய்துள்ளேன். ஆகவே உளவியல் சார்ந்த சிறிய கட்டுரைகளை ஆரம்பத்தில் அரங்கம் பத்திரிகையில் எழுதினேன். அதே நேரம் யாழில் இருந்து வெளியாகும் உதயன் பத்திரிகைக்கும் தற்கொலைகள் பற்றிய ஒரு நீண்ட கட்டுரையை எழுதி இருந்தேன்.

உண்மையில் உதயன் பத்திரிகையில் வெளி வந்த அந்த கட்டுரையை மறக்க முடியாது.

(04 ஆம் பக்கம் பார்க்க)

## கலைஞர் ராதமேத்தா மூலம் இலக்கியத் துறையில் நிறைய அறிமுகங்கள் கிடைத்தன



காரணம் அதை உதயனில் பிரசுரிக்க உதவியவர் மறைந்த நண்பர் அமரர் பிரகாஷ் ஞானப்பிரகாசம். கொவிட்19 தொற்று தந்த இழப்புகளில் பிரகாஸின் மரணம் ஈடுசெய்ய முடியாத ஒன்று.

அதன்பின் அச்சு ஊடகமாக இருந்த அரங்கம் பத்திரிகை அச்சிட்டு வெளிவருவது நிறுத்தப்பட்டது. அதோடு எனது எழுத்தும் தற்காலிகமாக தடைப்பட்டது.

அதன்பின் 2020 ஆம் ஆண்டு மீண்டும் சீவகன் ஐயாவை தொடர்பு கொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்தது. அப்போது நான் அவரிடம் கதை எழுதி அனுப்புகிறேன் உங்களுடைய இணையத்தளத்தில் பதிவிடுகிறீகளா? எனக் கேட்டேன்.

சபீனா தானே? நிச்சயமாக அனுப்புங்கள் பதிவிடுகிறேன் என்றார். முதல் முதலாக வாழைச்சேனையில் நடந்த ஒரு உண்மைச் சம்பவத்தை அடிப்படையாக வைத்து மாட்டுக்கார மனோகரி என்ற கதையை எழுதினேன். சீவகன் ஐயா அதை வாசித்து விட்டு என்னை பாராட்டினார். உங்களுக்குக் கட்டுரையை விட கதை தான் நன்றாக எழுத வருகிறது. தொடர்ந்து கதைகள் எழுதுங்கள் என்றார். குறை நிறைகளை சுட்டிக்காட்டி வழிகாட்டினார்.

அன்று எழுத ஆரம்பித்தேன். இன்றும் எழுதிக் கொண்டிருக்கிறேன்.

எனது இந்த இலக்கிய பயணத்தில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய மற்றொருவர் பத்திரிகை ஆசிரியரும் கலைஞருமான ராதா மேத்தா ஐயா. ஒரு தந்தையை போன்று அன்பான கனிவான பேச்சு அவரிடம் இருக்கும். அவர் மூலம் இந்தத் துறையில் எனக்கு நிறை அறிமுகங்கள் கிடைத்தன.

ராதா மேத்தா ஐயாவின் புதிய அலைகலை வட்டம் அமைப்பினால் நடாத்தப்பட்ட இலக்கிய விழாவில் கடந்த வருடம் சிறந்த நகைச்சுவை எழுத்திற்கான விருதை நான் பெற்றுக் கொண்டேன். தமிழன் பத்திரிகையிலும் எனது நகைச்சுவை துணுக்கு பிரசுரிக்கப்பட்டது.

எனது கதைகளை பொறுத்த வரையில் இணையத்தளங்களில் மாத்திரமே வெளியாகிக் கொண்டிருந்தது. அப்போது தான் முதல் முறையாக எனது கதை ஒன்று அச்சு ஊடகமான சஞ்சிகை ஒன்றில் பிரசுரிக்கப்பட்டது.

இந்தியாவில் வெளியாகும் பெண்களின் குரல் என்ற சஞ்சிகையில் நேர்முகத் தேர்வு என்ற எனது கதை பிரசுரிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தினக்குரல் பத்திரிகையில் சந்தித்தவேளை, மித்திரன் வாரமலர் சஞ்சிகையில் வானம் காணாத வெண்ணிலா, சிரித்திரன் பத்திரிகையில் அரைப் போத்தல் கள்ளு, சுபீட்சம் பத்திரிகையில் சின்னஞ்சிறு ரகசியமே ஆகியவை பிரசுரிக்கப்பட்டன.

கடந்த வருடம் இலங்கை எழுத்தாளர் அமைப்பினால் நடாத்தப்பட்ட இலக்கிய போட்டியில் எனது மாட்டுக்கார மனோகரி சிறுகதை பரிசில் பெற்றுள்ளது. இலக்கிய உலகின் முதல் வெற்றியாக எனது சிறுகதை தொகுப்புப் புத்தகம் கடந்த வருடம் பதிப்பிடப்பட்டது. என்னுடைய சிறுகதைகளை தொகுத்து “கறையில்லாக் குற்றங்கள்” என்ற தலைப்பில் புத்தகமாக வெளியிட்டுள்ளேன். என்னுடைய புத்தகத்திற்கு அணிந்துரை ராதா மேத்தாவும் ஆசிரியரை பற்றி சீவகன் பூபாலரட்ணமும் எழுதியுள்ளார்கள். அதேவேளை என்னுடைய முதல் புத்தகத்தை அச்சிட நிதியுதவி வழங்கிய நண்பர் திருகோணமலை ரஜிதரன் தங்கராஜாவையும் நான் இங்கு குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.





# ஓவியம், சிறுகதை, குறும்படம் என பல்பரிமாண திறன் கொண்ட பெண்மை

நான் சில விழிப்புணர்வு குறும்படங்களுக்கும் விழிப்புணர்வு நாடகங்களுக்கும் கதை எழுதியிருக்கிறேன். அத்துடன் ஆவணப்படங்கள் தயாரிப்பதும் எனது பணிகளில் ஒன்றாக இருக்கிறது.

இலங்கை இலக்கிய துறையில் சபீனா சோமசுந்தரம் என்ற பெயர் ஒரு அடையாளமாக இருக்க வேண்டும் என்பதே எனது இலட்சியம். நிச்சயம் எனது இலட்சியத்தை அடைவேன் என்ற நம்பிக்கை இருக்கிறது.

அத்துடன் நான் எனது பணியிலும் சரி இலக்கிய துறையிலும் சரி ஒவ்வொரு வெற்றிகளையும் பெற தனது நேரத்தை ஒதுக்கி பல விட்டுக் கொடுப்புகளை எனக்காக செய்து கொண்டிருக்கும் எனது சகோதரி ரேகா சோமசுந்தரத்துக்குத்தான் எனது வெற்றிகளை நான் அர்ப்பணிக்கிறேன்.

அத்தோடு டைம்ஸ் வுமன் (*Times Women*) இணைந்து வழங்கும் வுமன் ஐகன்(*Women Icon*) சர்வதேச விருதிற்கு ஒரு எழுத்தாளராக,ஒரு செய்தி ஆசிரியராக,ஒரு சிறந்த தாயாக *Wonder Women* விருதினை நான் வென்றுள்ளேன் என்பதை இங்கு குறிப்பிடுகிறேன்.



**கே. ஈஸ்வரலிங்கம்**
*easwarantkn@gmail.com*
*whatsapp 0773124543*






**ஆண் :** உங்கப்பா காய்கறி வியாபாரியா இருக்கலாம். அதுக்காக இப்படியா பண்றது ?

**பெண் :** ஏன் .. .. ? என்னாச்சு.. .. .. ?

**ஆண் :** முதலிரவு அறையில் போய் பாரு .. .. பூச்சரத்துக்கு பதிலா புடலங்காயை தொங்க விட்டிருக்கார்



**ஜோன்ஸ் :** என் ஜாதகப்படி எனக்கு அறிவு ரொம்ப ஜாஸ்தியாம்.

**ஸ்டெலா :** இப்பவாது தெரியுதா நான் ஏன் ஜாதகத்தை நம்புறதில்லைன்னு.



**வேலு :** மெதுவடை, வடைகறி இரண்டுக்கும் என்ன வித்தியாசம் ?

**ரமனன் :** ஒரு நாள் வித்தியாசம்



**ஒருவர் :** என்னய்யா இது, பனம்பழம் வேணும்னா பனை மரத்துல ஏறிப் பறிக்கணும்... எதுக்கு பனைமரத்துக்குக் கீழேயே நிற்கறே..?

**மற்றவர் :** ஏதாவது குருவி உக்கார்ந்து பனம்பழம் விழாதான்னுதான்...



**காந்தன் :** ஒரு பையன் தன் தலைக்கடியில் டிக்ஸ்னரியை வச்சுகிட்டு தூங்குறான், ஏன்?ஏன்னா...

**லீலா :** அவனுக்கு அர்த்தமில்லாத கனவா வருதாம்..



**நண்பர் 1 :** நாக்கை பிடுங்கிக்கொண்டு சாகலாம் என்று நினைத்தேன்.

**நண்பர் 2 :** செய்வதுதானே

**நண்பர் 1 :** கை எச்சலாகிவிடுமே.



**பெண் டைரக்டர் :** நூறு கெஸ்ட் நடிகர்கள் கிடைப்பாங்களா .. .. .. ?

**உதவியாளர் :** எதுக்கு .. .. ?

**பெண் டைரக்டர் :** மகாபாரதத்துல கௌரவர்களா நடிக்கத்தான்



**டாக்டர் :** எங்க 'ஆ' காட்டுங்க பாக்கலாம்..

**கோபு :** ஏன் டாக்டர் நீங்க 'ஆ' பார்த்ததே இல்லையா..?



**கோபு :** உங்க பையன் கோவிலுக்குப் போனா அதிகமா பொய் பேசறானே, ஏன்?

**பாபு :** கோவிலுக்குள்ளே போனதும் அவன் மெய் மறந்துடுவான்.

# நாடகத்துறையில் கலைஞர் கலைச்செல்வன் தான் என் குரு!

## அறிவிப்பாளர், கவிஞர் பன்னீர்செல்வம் புனிதப்ரியா

**நான் பன்னீர்செல்வம் புனிதப்ரியா. நான் பிறந்து வளர்ந்தது நுவரெலியா மாவட்டத்தின் உடப்புஸல்லாவ பிரதேசத்தில் தான். நான் மிகவும் வறுமைக் கோட்டிற்குட்பட்ட குடும்பத்தில் பிறந்து வளர்ந்த குறைந்த வருமானம் பெறும் தாய் தந்தைக்கு பிறந்த இரண்டாவது மகள். எனக்கு வயது 29. எனக்கு அக்கா, தம்பி, தங்கை என மூன்று சகோதரர்கள். எனக்கு ஒரு மகன் இருக்கின்றார்.**

இழந்து போன சந்தோஷங்களின் வெளிச்சம் என் மகன். என் பலமும், பலவீனமும் என் குடும்பம் தான். யார் என்ன சொன்னாலும் என் குடும்பத்தை தாண்டிய சிந்தனை எனக்கென்று





எதுவும் இருந்ததில்லை. அம்மா, அப்பா, அக்கா, மச்சான், அக்காவின் பிள்ளைகள், தம்பி, தங்கை, மகன் என அழகிய குடும்பத்தின் சொந்தக்காரி நான். தற்போது வலப்பனை பிரதேச சபையின் மொழிபெயர்ப்பாளராக தற்காலிகமாக கடமைபுரிகின்றேன். எனது பாடசாலைக் கல்வியை நான் சாதாரண தரம் வரை வெலிமடை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்திலும், உயர்தரத்தை இராகலை உயர் பாடசாலையிலும் கற்றேன்.

நான் சிறு வயது முதல் ஊடகத்துறையில் அதிகமான ஈடுபாடு கொண்டவர். நான் 2011 ம் ஆண்டு தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடத்தப்பட்ட மாவட்ட மட்ட அறிவிப்பாளர் போட்டியில் நுவரெலியா மாவட்டத்தில் முதலிடத்தை பெற்றேன். நான் இலங்கை மன்றக் கல்லூரியில் எனது ஊடகத்துறை பயிற்சி நெறியையும், தேசிய இளைஞர்கள் சேவை மன்றத்தில் நாடகம் தொடர்பான டிப்ளோமா பயிற்சி நெறியையும், அரச கரும மொழிகள் திணைக்களத்தில் தமிழ், சிங்கள மொழி வளவாளருக்கான பயிற்சியையும், பிரிட்டிஷ் நிறுவனத்தில் மொழிபெயர்ப்பாளருக்கான பயிற்சிநெறியையும் நிறைவு செய்துள்ளேன். இருமுறை சிங்கள மொழி மேடை நாடகங்களில் பங்கேற்று மூன்றாமிடத்தை பெற்றுள்ளேன். நாடகத்துறையில் கலைஞர் கலைச்செல்வன் தான் என் குருவாக விளங்கியவர்.

எனது முதலாவது ஊடகப் பிரவேசம் வெற்றி பண்பலையில் உதவி செய்தி ஆசிரியராகவும், செய்தி சேகரிப்பாளராகவும் பணிபுரிந்தேன். பின்னர் வசந்தம் தொலைக்காட்சியின் தமிழ் செய்தி பிரிவில் செய்தி தட்டச்சாளராக பணிபுரிந்தேன். எனக்கு ஊடகத்துறையில் அறிவிப்பாளர் விஸ்வநாதனும், அறிவிப்பாளர் கஜமுகனும் துறை சார்ந்த பல விடயங்களை எனக்கு கற்றுத் தந்துள்ளனர். மேலும் ஊடகத் துறையின் முதல் பிரவேசத்தில் லெனின்ராஜ் அண்ணா, றொமி ஜோதினி அக்கா, கிறிஸ்டினா ரட்னம் அக்கா ஆகியோர் எனக்கு உறுதுணையாகவும், பல புதிய விடயங்களையும் கற்று தந்துள்ளனர். திருமணத்தின் பின் சில காலம் தமிழ்வின் இணைய செய்தி பக்கத்திலும் செய்தி ஆசிரியராக பணியாற்றியுள்ளேன்.

நான் பாடசாலை காலம் தொடக்கம் கவிதை எழுதுவதில் ஆர்வம் கொண்டவர். பாடசாலை காலங்களில் வாரம் ஒரு கவிதை எழுதி பத்திரிகைகளுக்கு அனுப்புவேன். எனது தமிழ் பாட ஆசிரியர் மஸாஹிரா எனது கவிதையை வாசித்து விட்டு இன்னும் அதிகமாக எழுதுங்கள் என என்னை ஊக்குவித்தார். இன்றும் கவிதைகள் எழுதுவதில் ஏதும் குறையில்லை. ஆனாலும் இதுவரை புத்தகம் வெளியிட்டதில்லை. மலேசியாவில் வெளிவரும் வளரி எனும் கவிதை இதழில் கவிதைகளை வெளியிட்டு வருகின்றேன். விரைவில் எனது கவிதை நூலை வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. வளரி இதழின் ஒருங்கிணைப்பாளர் அருணா சுந்தரராஜன் என்னை கவிதை எழுத இன்னும் அதிகமாய் ஊக்குவித்து வருகின்றார். நான் வளரி இதழின் பிராந்திய ஒருங்கிணைப்பாளர். நான் தற்போது சிங்கள மொழி கவிதைகளை தமிழ் மொழியில், மொழிபெயர்ப்பு செய்து வருகின்றேன். அண்மையில் Our Stories எனும் இணைய பக்கத்தில் என் கவிதைகள் மும்மொழியிலும் பிரசுரமாகின. வெகு சீக்கிரத்தில் என் சொந்த கவிதை புத்தகத்தை தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் வெளியிட காத்திருக்கின்றேன்.









மலையக கவிஞர்களில் விரல்விட்டு எண்ணும் எழுத்தாளர்கள் மத்தியில் நானும் ஒருத்தியாய் மிளிர வேண்டும் என்பதே எனது அவா. எனக்கு எழுத்துத் துறையிலும் ஊடகத்துறையிலும் அலாதிப்பிரியம். மீண்டும் ஊடகத்துறையில் பிரவேசிக்க வாய்ப்புக்கிட்டுகையில் ஊடகத்தின் ஊடாக தமிழ் சமூகத்திற்கு பல சமூக சேவைப் பணிகளை ஆற்றுவதற்கு காத்திருக்கறேன். வாழ்க்கையில் யார் என்ன சொன்னாலும் நாம் துவண்டு போகாமல் எதிர்த்து நின்று போராட வேண்டும். வாழ்க்கை எனக்கு நல்ல பல அநுபவங்களை கற்று கொடுத்துள்ளன.

நான் எதை செய்தாலும் எனது குடும்பத்தினர் எனக்கு பக்கபலமாக இருப்பது போல எனக்கு களுத்துறையைச் சேர்ந்த ஜயரட்னம் நரேன் அப்பா மிகவும் தைரியம், தன் னம்பிக்கை கொடுப்பவர். இன்றைய காலகட்டத்தில் ஊடகம் என்று அணுகுகின்ற போது வானொலி தொலைக் காட்சி உட்பட சமூக வலைத்தளங்களையும் கருத்தில் கொள்ளலாம்.

இவ்வாறு பிணைக்கப்பட்ட ஒரு ஊடக வட்டத்தில் எனக்கு மொழி பேதமின்றி சேவையாற்றக் கிடைத்தது. இலங்கை முழுவதும், இந்தியாவிலும், சுவீடன், சுவிற் சர்லாந்திலும் அன்பான உடன் பிறவா சகோதரர்கள் அநேகர், எனக்கு நண்பர்களாக இருக்கின்றனர். என் வாழ்க்கையில் பல நல்ல உள்ளங்களை சம்பாதித்துள் ளதே என் வாழ்வின் அசைக்க முடியா சாம்ராஜ்யம். என் மீதான சமூக கண் ணோட்டங்களையும் நம்பிக்கைகளை யும் நான் ஒரு போதும் பொருட்படுத் தியதில்லை.

நான் சந்தித்த சவால்களை ஏற் றுக்கொண்டு எனக்கான நகர்தல்கள் மூலமே என் வாழ்வின் நிலைத்திருக் கைகளை நான் நிலைபெறச் செய்து கொண்டு வருகின்றேன். வாழ்வில் இன்னும் அதிகமாய் சாதிக்க வேண்டும்.

மலையகத்தில் மறைந்து இருக்கும் பெண் எழுத்தாளர்களுக்கு சிறந்த முன்னுதாரணமாக திகழ வேண்டும். என்னைப் போல தன்னம்பிக்கை கொண்ட பெண்களை ஊக்குவிக்க என்னால் முடிந்த உதவிகளை வழங்க காத்திருக்கின்றேன். நான் என் வாழ்வில் இதுவரை வந்த பயணத் தில் எனக்கு உதவிபுரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் இதன் ஊடாக நன்றி தெரிவித்து கொள்கின்றேன்.

**நான் சிறு வயது முதல் ஊடகத்துறையில் அதிகமான ஈடுபாடு கொண்டவர். நான் 2011 ம் ஆண்டு தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடத்தப் பட்ட மாவட்ட மட்ட அறிவிப்பாளர் போட்டியில் நுவரெலியா மாவட்டத்தில் முதலிடத்தை பெற்றேன்.**







கே. ஈஸ்வரலிங்கம்
easwarantkn@gmail.com
whatsapp 0773124543



## மாற்று சிந்தை கொண்டு நடப்போம்

உயர்ந்த உலகின்
உணர்வான பண்பு
உழைத்து வாழும்
விருப்பு அன்றோ?

உடல் உழைத்து
வியர்வை சிந்தி;
அயர்வை துறந்து
துயரைப் போக்கி;

பசி விரட்ட நாமக்கு
நல்ல உணவூட்டி;
உடல் வலு பெற
உரமிட்டு பயிர் நாட்டி;

உலகுக்கே உணவிட்ட
அந்த விவசாயி கூட
நல்ல உழைப்பாளி தான்.
புரிந்திட மறுக்குமோ?

அதிகாலை எழுந்து
ஆதவன் எட்ட முன்னே
தன் கடன் முடித்து
ஆலயம் திறந்தவரும்;

ஆலைக்கு அடி வைத்து
விரைந்து இயந்திரம்
இயக்கி ஆங்கே பாரும்
முடிவுகள் பெற்றவரும்;
எழுதுகோல் பிடித்து

நூல்கள் நூர்த்தோரும்;
கருவிகள் கொண்டு
களங்கள் வென்றவரும்;
மறைந்து வாழ்ந்து

நாடு வாழ தம்
உயிர் விட்டோரும்;
உழைப்பாளி அன்றோ?
தினம் வரும்
பிணி நீக்கியவரும்;

ஓடி ஆடி விளையாடும்
பிஞ்சுகளும் இங்கே;
உழைப்பாளிகள் தான்
என்று கொண்டு
மே ஒண்டில் தான்

போற்றிடுவோம் நாம்.
நோக்கிய முறையும்
நடந்த முறையும்
வேறாகி போனது.

உண்மைதான் பாரும்.
தொழிலாளர் தினம்
வந்த போது போற்றும்;
அந்த மகத்தான நாளில்

மாற்றி சிந்திப்போம்.
நாடு வளர உழைத்து
ஏற்றம் தந்து நின்று;
புன்னகை தந்திடும்

அத்தனை பேருக்கும்.
உழைத்து வாழும்
உணர்வுக்கு நன்றி.
உயிர் உள்ளவரை
உழைத்திட வாழ்த்துவோம்.

அன்புடன் நதுநசி ...

# சினி பஜார் கேள்வி பதில்




மொழிவாணன்

**எஸ்.ஜே.பார்வதி.**
**கண்டி.**

**கேள்வி: நடிகர் சிம்பு நடித்து அடுத்து வெளிவர இருக்கும் படம் எது?**

**பதில்:** 'வெந்து தணிந்தது காடு' இந்தப் படத்தை கௌதம் மேனன் இயக்கியுள்ளார்.



**ஜே.எம்.முபாரிஸ்,**
**கல்முனை.**

**கேள்வி: இரட்டை வேடங்களில் அதிகமாக நடித்த நடிகர் யார்..எம்.ஜி.ஆரா... சிவாஜியா...?**

**பதில்:** எம்.ஜி.ஆர்தான்!

**எம்.மாகிரட்,**
**எலபடகம.**

**கேள்வி: மறைந்த நடிகை ஸ்ரீதேவியின் மகள் ஜான்வி கபூர் தமிழ் படத்தில் நடிக்கப் போகிறாராமே.... உண்மையா?**

**பதில்:** தமிழில் அடுத்தடுத்து அஜித்தை வைத்து படங்களைத் தயாரித்து வருபவர் போனி கபூர். இவரது மூத்த மகள் ஜான்வி கபூர், தெலுங்கு, தமிழில் அறிமுகமாவது பற்றி அடிக்கடி செய்திகள் வரும். இது வரை பலமுறை இப்படியான சொய்திகள் வந்து விட்டன. ஆனால் அனைத்துக்கும் அவ்வப்போது மறுப்புகளைத் தெரிவித்தார் ஜான்வி. அந்த விதத்தில் தற்போது மீண்டும் ஒரு மறுப்பு தெரிவித்துள்ளார். விஜய் தேவரகொண்டா அடுத்து நடிக்க உள்ள 'ஜனகனமண' படத்தில் ஜான்வி கதாநாயகியாக நடிக்கப் போவதாக செய்திகள் வந்தன. ஆனால் அவற்றுக்கு மறுப்பு தெரிவித்து ஒரு பேட்டியில் "நான் எந்த ஒரு தமிழ், தெலுங்கு படங்களிலும் ஒப்பந்தமாகவில்லை. அப்படி ஏதாவது ஒன்று நடந்தால் அதை நானோ அல்லது படத்தயாரிப்பு நிறுவனமோ அது பற்றி அறிவிப்பார்கள்."என்று தெரிவித்துள்ளார்.





ஜான்வியின் அம்மாவான மறைந்த நடிகை ஸ்ரீதேவி தமிழ் தெலுங்கில் முன்னணிக்கு வந்த பிறகுதான் ஹிந்தியில் அறிமாகி அங்கும் நம்பர் 1இடத்தில் இருந்தார். என்பது குறிப்பிடத்தக்கது.

**ஆர் .எம்.ராஜா**

**கேள்வி: ரஜினிகாந்தின் அடுத்த படத்தை யார் இயக்கப் போகிறார்கள்?**

**பதில்** :விஜய்யின் 'பீஸ்ட' படத்தை இயக்கிய நெல்சன் தான் அடுத்து ரஜினியை இயக்கப் போகிறார்.



இந்தப் படத்தின் படப்பிடிப்பை ஜுலையில் தொடங்கத் திட்டமிட்டுள்ளனர். இது பற்றி நெல்சன் வட்டாரத்தில் விசாரித்த போது கிடைத்த தகவல்.""நெல்சன் ரஜினி 169 ஸ்கிரிப்ட்வர்க்கில் கவனம் செலுத்தி வருகிறார். 'பீஸ்ட்'படத்தில் ஸ்கிரிப்டில் அவர் கவனம் செலுத்தியிருக்கலாம்"என்ற பேச்சு கிளம்பியது. அவரை அப்செட் ஆக்கியிருக்கிறது. ரஜினி படத்தில் அந்த பேச்சு எழாத வகையில் படு சின்ஸியராக இன்னொரு முறை ஸ்கிரிப்டை ரெடி செய்து வருகிறார். திரைக்கதையை முழுவதும் செதுக்கிய பின்னரே படப் பிடிப்புக்குக் கிளம்புகிறார்.

**கே.ஆர்.மதிவதனி.**
**மன்னார்**

**கேள்வி: சமந்தாவை பிரிந்து விட்ட நடிகர் நாக சைத்தன்யா இரண்டாவது திருமணம் செய்து கொள்ளப் போகிறாராமே...உண்மையா...மொழி..?**

**பதில்:** தெலுங்கு நடிகர் நாக சைத்தான் யாவும் நடிகை சமந்தாவும் 2017 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார்கள். திருமணமாகி நான்கு ஆண்டுகளில் அவர்களுக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு தாங்கள் பிரிவதாக அறிவித்தார்கள். தற்போது இருவரும் அவரவர் படங்களில் பிஸியாக உள்ளனர்.

இந்த நிலையில் நாக சைத்தன்யா இரண்டாவது திருமணத்திற்கு தயாராகி விட்டதாகவும் அவருக்கு பெற்றோர் பெண் பார்த்து வருவதாகவும் சோசியல் மீடியாவில் பரபரப்பாக செய்திகள் வெளியாகி வந்தன. அந்த செய்திக்கு ஒரு விளக்கம் கொடுத்திருக்கிறார் நாக சைத்தன்யா.



இது குறித்து அவர் கூறுகையில்" சமந்தாவும் நானும் இன்னும் சட்டப்படி பிரிய வில்லை. ஆனால், அதற்குள்ளாக நான் இரண்டாவது திருமணத்திற்கு தயாராகி விட்டதாக வதந்திகள் வெளியாகி வருவது வருத்தத்தை அளிக்கிறது.இது போன்ற உண்மைக்கு புறம்பான செய்திகளை வெளியிட வேண்டாமென கேட்டுக் கொள்கிறேன்' என தெரிவித்திருக்கிறார்.

**எஸ்.**



**மாதவன்**
**வவுனியா.**

**கேள்வி: ஜெயலலிதா,சரோஜா தேவி இருவரில் ,எம்.ஜி. ஆருடன் ஜோடி சேர்ந்து அதிக படங்களில் நடடித்தவர் ஜெயலலிதா தானே?**

**பதில்:** இல்லை...சரோஜா தேவிதான் அதிக படங்களில் நடித்திருக்கிறார்.

ஜெயலலிதா 17 படங்களிலும் சரோஜா தேவி 18 படங்களிலும் ஜோடி சேர்ந்து நடித்திருக்கிறார்கள்.

**சினி பஜார் கேள்வி பதில்,**
தினகரன் வார மஞ்சரி,
லேக் ஹவுஸ், கொழும்பு-10.

## விஜய்சேதுபதிக்கு மீண்டும் ஆப்பு



முத்தம் அலை மோதும் நேரம் - காதல் பித்தம் தலைக்கேறி ஆடும்

விஜய் சேதுபதி, காயத்ரி, குரு சோமசுந்தரம் உட்பட பலர் நடித்துள்ள படம், 'மாமனிதன்'. சீனு ராமசாமி இயக்கியுள்ளார். யுவன் சங்கர் ராஜா தயாரித்து, இசை அமைத்துள்ள இந்தப் படத்தை, ஸ்டூடியோ 9 சார்பில் ஆர்.கே.சுரேஷ் வெளியிடுகிறார்.

3 ஆண்டுகளுக்கு முன்பே முடிக்கப்பட்ட இந்தப்படம் கொரோனா உள்ளிட்ட சில பிரச்சினைகள் காரணமாக ரிலீசாகாமல் இருந்தது.மே 6ம் தேதி வெளியாவதாக அறிவிக்கப்பட்டு, பின்னர் மே 20ம் திகதிக்கு மாற்றப்பட்டது. இப்போது, இதன் ரிலீஸ் திகதி மீண்டும் மாற்றப்பட்டுள்ளது.

இதுகுறித்து படத்தை வெளியிடும் ஆர்.கே.சுரேஷ் கூறியிருப்பதாவது: விஜய் சேதுபதி நடித்துள்ள படங்கள் அடுத்தடுத்து வெளியாவதால், 'மாமனிதன்' படத்தின் வெளியீடு மே 20ம் திகதியில் இருந்து ஜூன் 24ம் திகதிக்குத் தள்ளி வைக்கப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் 400 திரையரங்குகளில் வெளியிட 'மாமனிதன்' தகுதியான படம். அனைத்துத் திரையரங்க உரிமையாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்களிடம் மனப்பூர்வமாக மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். என்று கூறியுள்ளார்.

## லண்டன் பாராளுமன்றில் ராதிகாவுக்கு கௌரவம்




**இங்கிலாந்து சென்ற நடிகை ராதிகாவுக்கு அந்த நாட்டின் பாராளுமன்றத்தில் நடந்த நிகழ்ச்சியில் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. தமிழ் ஸ்டடீஸ் யூகே எனும் அமைப்பின் சார்பாக இங்கிலாந்து நாடாளுமன்ற உறுப்பினர் மரியா மில்லர் ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்ச்சியில் உலகெங்கும் பல்வேறு துறைகளில் சாதித்த பெண்கள் கௌரவிக்கப் பட்டனர். விருது பெற்ற இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் ராதிகா பேசும் போது...**

**“இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் விருது பெற்றது மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் நிரம்பிய தருணம். இவ்விருதிற்கு என்னை தேர்ந்தெடுத்த தேர்வுக்குழுவினருக்கும், இத்தனை ஆண்டு காலம் எனக்கு ஆதரவளித்த திரை மற்றும் தொலைக்காட்சித் துறையினருக்கும், குடும்பத்தினருக்கும் மிக்க நன்றி", என்றார்.**

# சாய்பல்லவிக்கு திருமணமா?



மலையாளத்தில் வெளியான பிரேமம் படம் மூலம் திரையுலகிற்கு அறிமுகமான நடிகை சாய் பல்லவிக்கு விரைவில் திருமணம் நடக்க இருப்பதாக இணையத்தில் தகவல்கள் கசிந்து உள்ளது.

முதல் படத்தின் ஹிட் காரணமாக சாய் பல்லவிக்கு தெலுங்கு சினிமாவிலும் நடிக்க வாய்ப்புகள் தேடி வந்தன.

தற்போது சாய்பல்லவி தமிழ், தெலுங்கு , கன்னடம், மலையாளம் என பல மொழிப் படங்களில் நடித்துள்ளார்.

அதன் காரணமாக தற்போது அம்மணி தான் தெலுங்கில் டாப் நடிகை. சமீபத்தில் இவர் நடிப்பில் வெளியான லவ் ஸ்டோரி படம் அடித்த சூப்பர் ஹிட் காரணமாக சாய் பல்லவியின் மார்க்கெட் எங்கோ சென்று விட்டது. சினிமாவில் நுழைந்த குறுகிய காலத்திலேயே உச்ச நடிகைகளை பின்னுக்கு தள்ளி டாப் நடிகையாக உயர்ந்த சாய்பல்லவி நடிப்பில் சமீபத்தில் ஷ்யாம் சிங்காராய் படம் வெளியாக மிகப்பெரிய அளவில் ஹிட்டடித்தது.

இந்நிலையில், தற்போது டோலிவுட் சூப்பர் ஸ்டார் மகேஷ் பாபுவின் அடுத்த படத்தில் சாய் பல்லவி அவரின் தங்கையாக நடிக்க இருப்பதாக கூறப்படுகிறது. இதற்காக இயக்குனர் திரிவிக்ரம் சீனிவாஸ் அவரிடம் பேச்சுவார்த்தை நடத்தி உள்ளார். சாய் பல்லவிக்கு மகேஷ்பாபுவின் தங்கையாக நடிக்க விருப்பம் இல்லை என்றும், இருப்பினும் திரிவிக்ரம் படத்தை தவறவிட விரும்பவில்லை என்று கூறியுள்ளார். அதேபோல, அஜித் நடித்த தமிழ் படமான வேதாளம் தெலுங்கு ரீமேக்கில் மெகாஸ்டார் சிரஞ்சீவியின் தங்கையாக நடிக்க அவரிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அந்த வாய்ப்பையும் வேண்டாம் என்று தட்டிகழித்துவிட்டார். அதுமட்டுமில்லாமல் இதுவரை எந்த புதிய படத்திலும் ஒப்பந்தமாகவில்லை.

இதுகுறித்து சாய் பல்லவியிடம் கேட்டபோது, தெலுங்கில் தனக்கென தனி இமேஜ் இருந்து வருகிறது. சாய்பல்லவி திருப்திகரமான கதாபாத்திரத்தில் தான் நடிப்பார் என்று ரசிகர்கள் நம்புகிறார்கள். அதனால்தான் நல்ல கதைகளுக்காக காத்திருக்கிறேன் என்று கூறியுள்ளார் சாய்பல்லவி. ஆனால், டோலிவுட் வட்டாரமே சாய்பல்லவிக்கு வீட்டில் மாப்பிள்ளை பார்க்க ஆரம்பித்து விட்டார்கள் இதனால்தான் படங்களில் கமிட்டாகாமல் இருப்பதாக தகவல்கள் கிசுகிசுக்கப்பட்டு வருகின்றன. இந்த தகவலை கேள்வி பட்ட இளசுகளின் மனசு நிச்சயம் பஞ்சராகி இருக்கும்.

## ஆண்கள் குறித்து ஓவியா



தமிழ் திரையுலகில் முன்னணி நடிகையாக வலம் வரும் ஓவியா, ஆண் பிள்ளைகளை பெற்றோர் கவனமாக வளர்க்க வேண்டும் என்று கருத்து தெர்வித்துள்ளார்.

நடிகை ஓவியா நடித்த படங்கள் வெளிவந்து பல ஆண்டுகள் ஆகிறது. அவரது முழு கவனமும் தனியார் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதில்தான் இருக்கிறது. இதற்கு தனியாக பெரிய தொகை சம்பளமாக பெறுகிறாராம் ஓவியா. சில மாதங்களுக்கு முன்பு டுவிட்டர் மூலம் தனது மனதில் பட்ட கருத்துக்களை வெளிப்படையாக தெரிவித்து வந்தார். இதனால் அவருக்கு பெரிய ஆதரவு இருந்து வந்தது.

இந்த நிலையில் கல்லூரி விழா ஒன்றில் ஓவியா பேசியது பரபரப்பாகி வருகிறது. அவர் கூறியதாவது: கலாச்சாரம் என்ற பெயரில் எதையும் மறைக்க வேண்டாம். ஓபனாக அனைத்தையும் பேச வேண்டும். அப்போது தான் தீர்வு கிடைக்கும். ஆண் பிள்ளைகளிடம் பெண் குழந்தைகளிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என பெற்றோர்கள் சொல்லிக் கொடுத்து வளர்க்க வேண்டும். சிறுவயதிலேயே அவ்வாறு வளர்த்தால் எந்தவிதமான குற்ற செயல்பாடுகளிலும் ஆண் பிள்ளைகள் ஈடுபட மாட்டார்கள் என்று அவர் பேசினார். ஓவியா பேசிய இந்த பேச்சு பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

# இது வவ்வால்களின் காலம்



உலகக் கவிதை வெளி நிகழ்த்தி வந்திருக்கிற அதிர்வு அற்புதமானது. எதிர்க் குரலில் வீரியத்தைக் கலந்து கவிதை தன் மொழியில் திமிறும் பாங்கு உணர்வு பூரிப்பதால் அமையும். பலஸ்தீன் அரபுக் கவிதை வெளியிலும் இத்தகைய குரலற்றவர்களுக்கான உரத்த குரலை வாசிக்கலாம். அத்தகைய குரல்களில் முக்கியமானவர் சமீஹ் அல் காசிம். தன் முப்பதாவது வயதிலேயே ஆறு கவிதைப் பனுவல்களைத் தந்தவர். அரபுக் கவிதை வெளியை உணர்வுச் சொற்களால் நிரப்பியவர் சமீஹ். அவரது 'வவ்வால்கள்'' பேராசிரியர் எம்.ஏ. நுஃமானின் பலஸ்தீனக் கவிதைகள் திரட்டிலுள்ளது.

என் ஜன்னலில் வவ்வால்கள்
என் வார்த்தைகளை உறிஞ்சுகின்றன
என் வீட்டு வாயிலில் வவ்வால்கள்
பத்திரிகைகளின் பின்னால், மூலைகளில்
என் தலையின் ஒவ்வொரு அசைவையும்
கண்காணித்தவாறு
என் காலடிகளைத் தொடர்கின்றன

கதிரையின் பின்னால் இருந்து
வவ்வால்கள் என்னை கண்காணிக்கின்றன
புத்தகங்களில், இளம் பெண்களின் கால்களில்
என் கண்கள் தரிப்பதை கவனித்தவாறு
பாதைகளில் என்னை பின்தொடர்கின்றன
அவை கண்காணிக்கின்றன
தொடர்ந்தும் கண்காணிக்கின்றன

என் அயலவரின் மாடியில் வவ்வால்கள்
சுவர்களில் இலத்திரன் கருவிகள்
மறைத்து வைக்கப்பட்டுள்ளன
இப்போது வவ்வால்கள்
தற்கொலை செய்யும் நிலையில் உள்ளன
நான் பகல் ஒளியை நோக்கி
ஒரு பாதையை கிண்டுகிறேன்

நான் பகல் ஒளியை நோக்கி ஒரு பாதையைக் கிண்டுகிறேன் என முடியும் சமீஹ் அல் காசிம் இந்;தக் கவிதை எழுப்பும் உணர்வுகளும் உரத்துச் சொல்லும் அரசியலும் கவனிக்கத்தக்கது. அவர் வவ்வால்களை குறியீடாக்கி உள் அரசியலைப் பேசுவதை உணரலாம். என் ஜன்னலில் வவ்வால்கள் என் வார்த்தைகளை உறிஞ்சுகின்றன என்ற தொடக்கச் சொல்லாடலில் ஒடுக்கப்பட்ட அல்லது குரலற்ற ஒரு உயிரியின் உணர்வை அவர் வரைகிறார். எனினும் வவ்வால்களின் காலத்தை உடைத்து ஒளிபொருந்திய பாதையை உருவாக்குகிறது அந்த உயிரி. விடுதலையின் எழுச்சியை இங்கு தரிசிக்கலாம்.

## என் பேனாவில் எரிதழல் இருப்பதாய் கனவு கண்டேன்

ஔவன் கவிதை



என் பேனாமுனையில்
பூக்கள் துளிர்ப்பதாய் கனவு கண்டேன்
அந்தக் கனவுப் பூக்களை
வாழ்வின் மனோரதியங்கள் மீது தூவினேன்
பூக்களை யாரோ அபகரித்து
முட்களைப் பரப்பினர்

எனது பேனாவில் மேகங்கள் படர்வதாகக்
கனவு கண்டேன்
பெருமேகக் கூட்டங்களை
என் குடிசையின் மேல் பொழிய விட்டேன்
மழையையள்ளியெறிந்து விட்டு வரட்சியை
யாரோ பெய்து விட்டனர்

எனது பேனாவில் தென்றல் விரிவதாக
கனவு கண்டேன்
கனவுத் தென்றலை
என் குடியிருப்பின் மீது திருப்பினேன்
தென்றலை திசை திருப்பி
புயற் காலமொன்றை பரிசளித்தனர்

எனது பேனாவின் நுனியில்
காதல் மலரக் கனவு காணுகிறேன்
என் காதல் கனவை
வாழ்வின் மீது பாய்ச்சுகிறேன்
கழுகுகள் என் காதல் கனவுகளைத்
கல்விச் செல்லுகின்றன
காதலற்ற வாழ்வில் உயிர்
துடிக்கிறதென் ஆன்மா

பின்
என் பேனாவின் சிறகுநுனியில்
தழல் துளியொன்றைக்
கனவில் காணுகிறேன்

தழல்
என் மீதான எதிர் முகங்களில் தீய்க்கிறது
அதனூடே வன்சொற்களை

## மனம் ததும்பும் ஹைக்கூ 7



ஜப்பானிய கவிதை மரபு தன்கா, சோக்கா, ரெங்கா, டாங்கா, சென்றியு, ஹைபுன், ஹொக்கு எனப் பலவகைப் பாவடிங்களைத் தன்னுள் பொதிந்து வைத்துள்ளது. அதன் இன்னொரு வடிவமே ஹைக்கூ.

இதனை பரிணாம அடிப்படையில் நோக்கும் போது முதல் தோன்றிய வடிவங்களாக வாகா, ரெங்கா, தன்கா என்பன அமைந்தன. இவற்றுள் தன்காவின் இரண்டு வடிவங்களே ஹொக்கு மற்றும் ஹைக்கூவுமாகும்.

பிற்காலத்தில் ஹைக்கூ ஹைகா, ஹைபுன் எனப் பரிணாமம் கண்டதாக வடிவமைப்பு வகையிடுகிறது.

இவற்றுள் வாகா என்பது குறும்பா/நெடும்பா கட்டமைப்புக் கொண்டது. ரெங்கா தொடர் நிலைப்பா பண்பாடாக அமைவதுஒருவர் தொடங்கப் பலர் தொடரும் சங்கிலி இணைப்புப்பா.

தன்கா என்பது குறும்பா வேடிக்கை, கூர் திறன் கொண்டியங்கும் பாவடிவம். இதன் தொடக்ககால வடிவம் தான் ஹொக்கு. தனித்து நிலை கொண்ட ஹொக்கு வடிவமே ஹைக்கூ.

யாப்பியல் அமைப்பை நோக்கின், இவை அசை அமைப்பில் வேறுபடுபவை. ரெங்கா 5, 7, 5, 7, 7 அசைகள் கொண்டது. தன்கா5,7,5, 7, 7 அசைகள் கொண்டதுதான். ஆனால் ஹொக்கு மற்றும் ஹைக்கூ 5, 7, 5 அசையமைப்புக் கொண்டவை. ஹைக்கூ என்பதன் அர்த்தம் என்ன என்ற கேள்விக்கு சேம்பர்ஸ் அகராதி '5, 7, 5 அசைகள் (syllables) கொண்ட ஜப்பானிய கவிதை'' என்று பதிலுரைக்கிறது.

ஹைக்கூவின் ஒரு வடிவமான, ஹைகா ஓவியக் ஹைக் கூவாகும். இது ஓவியப் பொருண்மை கொண்டிருப்பதோடு வரிகளிலும் ஓவிய வடிவம் கொண்டிருக்கும் மறுவடிவமான ஹைபுன் கவிதை இடையிட்ட உரைநடை வீச்சு எனப்பட்டது. இது ஹைக்கூவின் கிளையியல் அமைப்பாகும்.

தொடக்க காலக் ஹைக்கூ வேடிக்கைப் பாவினால் அமைந்தது. இதில் சொல்லாடல் (Pun), முரண் (Irony), இளிவரல் (Stire), விடுகதை (Riddle) ஆகிய பண்புகள் நிறைந்திருக்கும். தொடர்ந்த காலக் ஹைக்கூ கூர் திறன்பா எனப்பட்டது. இதுவே இதன் பொருளமைவுப் போக்காகும். இதற்கு ஹைக்கூவின் மகாகவி பாஷோவிடம் சான்று காணலாம்.

சற்றே உலையேற்று
சுற்றி முற்றும் விளையாட்டு பார்
மெத்தப் பெரியபனி
Will you start a fire
Poll show you something nice
A huge snow ball
என்பது பாஷோவின் வேடிக்கைப்பா.
சோகத்தின் உச்சக்கட்டமாய் ஒரு பாடல்
உலர்ந்த மரக் கிளையை
களைத்துப் பற்றுது சாக்குருவி
இலையுதிர் நாள் அந்தி
On a barren branch
a raven has perched
autumn dusk என்பது பாஷோவின் கூர் திறன் பா.

ஹைக்கூவை அதன் வடிவமைப்பு ரீதியில் இவ்வாறு நுணிதாக நோக்குகையில் அதன் பரிமாணத்தையும் இனங்காணலாம்.

உண்மையில் ஹைக்கூ என்பது ஒரு அனுபவப் பகிர்வு, வியப்பில் ஆழ்த்தும் வீச்சு, இரசனை மூட்டும் அழகு, சிந்தனையயெழுப்பும் அலை, உணர்ச்சியையேற்றும் தூண்டியதாக அமையும் ஆற்றல் மிக்க வடிவம். ஒரு மின்னல் அல்லது மின்மினி.

# பிறை போல் அழகிய பெருநாள்



எங்களூர் பெருநாளின் வரைபடம் எனக்குள் விரிந்து கொண்டே இருக்கின்றது. நோன்பு பெருநாளைக்கென்று நான் உண்டியல் சேர்ப்பேன். அந்தக் காலத்தில், பிளாஸ்ரிக்கில் இப்போது உள்ளது போல விதவிதமான உருவ உண்டியல்கள் கிடையாது. மண் உண்டியல்களும் தகர உண்டியல்களும் தான்.

ஐந்து சதம், பத்துச் சதம், ஏன் ஒருசதம் கூட எனக்குப் பெரியதுதான். சிறுகச் சிறுகச் சேர்ப்பேன். உம்மா சொல்லுவா, உண்டியலில் காசு சேர்ப்பது போல ரமழானில் நன்மைகளையும் நிறைய நிறையச் சேமிக்க வேண்டுமென்று. அதைக் கேட்டு தஸ்பீஹ் மணி உருட்டுவது போல சுபஹானல்லாஹ் சுபஹானல்லாஹ் ...என்று சொல்லிச் சொல்லி உண்டியலில் சில்லறைகளைச் சேகரித்த வரைபடம் இன்னும் எனக்குள் சேமிக்கப்பட்டேயுள்ளது.

நோன்புப் பெருநாள் தலைப்பிறை பார்க்க வேண்டுமென்று எனக்குமிகவும் ஆசையாக இருக்கும். பெரியவர்கள் நீராவி வித்தனிலும் பள்ளிவாசல் வெளியிலும் பிறை பார்த்துக் கொண்டு நிற்பார்கள். நானும் சேர்ந்து விடுவேன். சின்ன வயசில் தலைப்பிறை பார்த்த ஞாபகத்தின் வரைபடம் என்னிடம் இல்லை. எனினும் இரண்டாம், மூன்றம் பிறைகளை கடையடி வளவு மாமரக் கிளைக்குள்ளாகக் கூட கண் ரசித்த தன் வரைபடம் என்னிடம் உண்டு.

தலைப்பிறை கண்டதும் றேடியோவில் தக்பீர் முழங்கும். பள்ளிவாசலிலும் தக்பீர் ஒலிக்கும். எங்கள் உள்ளமோ மகிழ்ச்சியில் துள்ளும். பெருநாள் இரவிலும் ஸஹருக்கு போல் விடிய வெள்ளனவே உம்மாவும் ராத்தாமாரும் எழும்பி விடுவார்கள். நானும் பெருநாள் கனவுகளோடு விழித்து விடுவேன்.

மா, தேக்கு, சமுளை, வேலிக் கிழுவைகள் எல்லாம் தமது தலைகளைச் சிலுப்பி தாராளமாக சருகுகளை முற்றம் முழுதும் உதிர்த்திருக்கும். ராத்தாமார் கூட்டி துப்பரவு செய்வார்கள்.

எங்களூரில் பெருநாளைக்கென்று மூன்று, நாலுசோடி உடுப்பெடுப்பதில்லை. அனேகம் ஒரு சோடிதான். புதிய உடுப்புடன்தான் கொத்பாவுக்கு போவம். அதிலிருந்துதான் பெருநாள் தொடங்கும்.

இரண்டு நாட்களுக்கு முன்பிருந்தே பலகாரம் சுடும் படலம் தொடங்கிவிடும். துதல் கிண்டுதல், கேக் அடித்தல் என்று தடல்புடலான வேலைகள், அலியாரப் பணியாரம், சிற்றுண்டி, லட்டு, ரவைலட்டு, முறுக்கு, சீனிமாவு போன்ற வகையறாக்கள்தான் பெருநாளைஅலங்கரிக்கும். பனங்காய்ச் சீசனாய் இருந்தால் பனங்காய்ப் பணியாரமும் ஸ்பெசலாக இருக்கும்.

எங்களூரில் பெருநாள் சாப்பாடும் சுவையானது எளிமையானதும்தான். தேங்காய்ச் சோறு, மாட்டிறைச்சிக்கறி, மேலதிகமாக கோழி அல்லது ஆட்டிறைச்சி, மரக்கறி பெரும்பாலும் பருப்பு, கத்தரிக்காய், உருளைக்கிழங்கு, மரவள்ளிக்கிழங்கு இப்படித்தான். பிறைட் றைஸ், பிரியாணி என்றோ ஸஹன் சாப்பாடேன்றோ கிடையாது.

ஆனாலும் தேங்காய்ச்சோறுஎன்றால் பெரும் மவுசு. சுவைச் சரக்கெல்லாம் போட்டு, தேங்காய்ப்பாலூற்றிபுழுங்கல் அரிசியில் காய்ச்சசப்படும். மஞ்சள் நிறத்தில் இருப்பதனால் மஞ்சள் சோறு என்றும் சொல்லுவோம். கமகமக்கும் வாசனை இன்னும் படமாக எனக்குள் சுவைக்கிறது.

**(நன்றி: என் மனசின் வரைபடம்)**

# ஆஸ்துமா நோய் ஏன் ஏற்படுகின்றது?



நீண்டகால ஒவ்வாமையினால் நுரையீரல் மற்றும் சுவாசக் குழாய்களில் ஏற்படும் மாற்றங்களின் விளைவாக ஏற்படும் இளைப்பு நோயே ஆஸ்துமா எனப்படுகிறது.

அதிகப்படியான மூச்சுத் திணறல் அல்லது இளைப்பு, அதிகப்படியான இருமலால் ஏற்படும் தூக்கமின்மை, நெஞ்சில் ஏற்படும் வலி, இறுக்கம் ஆகியவற்றை ஆஸ்துமாவின் அறிகுறிகளாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

உலக சுகாதார அமைப்பின் 2019ஆம் ஆண்டு அறிக்கையின் படி, உலகளவில் சுமார் 262 மில்லியன் ஆஸ்துமா நோயாளிகள் உள்ளனர். அந்த ஆண்டு மட்டும் 4.60 லட்சம் இறப்புகள் ஏற்பட்டதாக கணக்கிடப்பட்டது.

இது 2016ஆம் ஆண்டு ஆய்வை விட அதிகமானதாகும் (235 மில்லியன் ). இதில், சுமார் 1520 மில்லியன் நோயாளிகள் இந்தியாவில் உள்ளனர்.

இந்தியாவில் சுமார் 15 முதல் 49 வயது வரை உள்ள பெண்களில் சுமார் 2 சதவீதம் பேரும் 12 முதல் 19 வயது வரை உள்ள பெண்கள் ஒரு சதவீதத்தினரும் 15 முதல் 49 வயது வரை உள்ள ஆண்களில் ஒரு சதவீதத்தினரும் பாதிக்கபட்டதாகவும் தெரிய வந்துள்ளது.

குழந்தைகளுக்கு 4 % 20 % வரை ஆஸ்துமா தாக்கம் காணப்படுவதாகவும் உலக சுகாதார அமைப்பின் (WHO) ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஆஸ்துமா இறப்புகள் பொருளாதார வளர்ச்சி குறைந்த மற்றும் நடுத்தர பொருளாதார வளர்ச்சி நாடுகளிலேயே அதிகமாக காணப்படுகிறது.உலக ஆஸ்துமா தினம் ஏன் ?

ஆஸ்துமா நோயை தடுத்தல், சிகிச்சை மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஆஸ்துமாவிற்கான உலகளாவிய அமைப்பு (The Global Inititive for Asthma GINA) கடந்த 1993ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.

இது, அமெரிக்காவின் தேசிய இதயம், நுரையீரல் மற்றும் ரத்த நிறுவனம், தேசிய சுகாதார நிறுவனம், மற்றும் உலக சுகாதார அமைப்பு ஆகியவற்றுடன்



இணைந்து செயல்பட்டு வருகிறது.

ஆஸ்துமா பாதிப்பு மற்றும் இறப்பு ஆகியவற்றைக் குறைக்க உலகம் முழுவதும் உள்ள மருத்துவ நிபுணர்கள், பொது சுகாதாரத்துறை அதிகாரிகளை ஒருங்கிணைத்து பணியாற்றி வருகின்றனர்.

ஜினா அமைப்பு தொடங்கி, முதல் சந்திப்பு மே மாதம் முதல் செவ்வாய் கிழமை நடைபெற்றதையடுத்து, ஒவ்வொரு ஆண்டும் மே மாதத்தின் முதல் செவ்வாய்க் கிழமை உலக ஆஸ்துமா தினமாக கடைபிடிக்கப்படுகிறது.

இதன்படி, ஆஸ்துமா ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் ஒரு மையக் கருத்தை அறிவித்து வருகிறார்கள். இதன்படி, உலக ஆஸ்துமா தினம் 2022ம் ஆண்டிற்கு "ஆஸ்துமாவிற்கான சிகிச்சையில் இடைவெளியை நீக்குதல்" என்கிற மையக் கருத்தை வெளியிட்டுள்ளது.

யாருக்கெல்லாம் ஆஸ்துமா ஏற்படும்?

ஆஸ்துமா நோய் யாருக்கெல்லாம் ஏற்படும் வாய்ப்புள்ளது. அதைத் தடுக்கும் வழிமுறைகள் குறித்து ஆஸ்துமா, அலர்ஜி மருத்துவ நிபுணர் டாக்டர் ஜி.கமல் பிபிசி தமிழிடம் பேசினார்.

**இந்த நோய் பாதிக்கப்பட்டவர்கள், தூசியடைந்த சூழலை கட்டாயம் தவிர்க்க வேண்டும். படுக்கை, தலையணை உறைகளை பயன்படுத்த வேண்டும். அவற்றை அடிக்கடி சுத்தம் செய்ய வேண்டும். பஞ்சு தலையணைகளைத் தவிர்க்க வேண்டும்.**

ஆஸ்துமா ஏற்பட ஒவ்வாமை ஒரு காரணமாகிறது. சுற்றுச் சூழலில் ஏற்படும் மாசு, தொழிற்சாலை கழிவுகள் நுரையீரல் மற்றும் சுவாசக் குழாய்களில் அதிக பாதிப்பை ஏற்படுத்துகிறது.

செய்யும் வேலை, அதாவது ஒவ்வாமை காரணிகள் உள்ளடக்கிய சூழலில் நீண்ட நாட்கள் இருப்பது, குறிப்பாக பஞ்சாலை, அதிக புகை வெளியேறும் தொழிற்சாலைகள், சிமெண்ட், கல் உடைக்கும் தொழிற்சாலைகளில் தகுந்த பாதுகாப்பின்றி தொடர்ந்து பணியாற்றுவது ஆகியவற்றால் ஆஸ்துமா ஏற்படும்." என்கிறார். பரம்பரையும் காரணமாகுமா ?

ஆஸ்துமாவிற்கு பரம்பரையும் ஒரு காரணமாகிறது. அதாவது பெற்றோர் அல்லது மூதாதையர் அல்லது குடும்பத்தில் ரத்த உறவினர்களில் யாருக்கேனும் இந்த நோய் தாக்கியிருந்தால், அந்த குடும்பத்தில் உள்ளவர்களுக்கு ஏற்படும் வாய்ப்புள்ளது." என்கிறார் டாக்டர் கமல். தவிர்க்கும் வழிமுறைகள்

தொடர்ந்து அவர் கூறுகையில், இந்த நோய் பாதிக்கப்பட்டவர்கள், தூசியடைந்த சூழலை கட்டாயம் தவிர்க்க வேண்டும். படுக்கை, தலையணை உறைகளை பயன்படுத்த வேண்டும். அவற்றை அடிக்கடி சுத்தம் செய்ய வேண்டும். பஞ்சு தலையணைகளைத் தவிர்க்க வேண்டும்.

தரை விரிப்புகளை சுத்தம் செய்ய வேண்டும். செல்லப்பிராணிகளை படுக்கை, படுக்கையறைகளில் அனுமதிக்க கூடாது. அவற்றை வாரம் ஒருமுறை கட்டாயம் குளிப்பாட்ட வேண்டும்.

ஒவ்வாமை பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். இதன் மூலம் நோய்க்கான ஒவ்வாமை காரணியை கண்டறிந்து, அதற்கேற்ற தடுப்பு மற்றும் சிகிச்சைகளை மேற்கொள்ள முடியும். புகைப்பதைத் தவிர்க்க வேண்டும்

ஆஸ்துமா பாதிக்கப்பட்டவர்கள் புகைப்பிடிப்பதையும் அவர்களுக்கு அருகில் புகைபிடிப்பது மற்றும் புகை சூழலை தவிர்க்க வேண்டும். மகரந்தபாசிகள், பூஞ்சைகள் இருக்கும் இடங்களை தவிர்க்க வேண்டும். சரியான இடைவெளியில் இந்த நோய்க்கான சிறப்பு மருத்துவரை அணுகி, சோதனை மற்றும் சிகிச்சை பெற வேண்டும்.


குறிப்பாக, ஆஸ்துமா சிகிச்சையில் முதன்மையானது இன்ஹேலர் வகை சிகிச்சை. பிரிவண்டார் (தடுப்பு) வகை, மற்றொன்று ரிலீவர் வகை என்று இரண்டு வகை இன்ஹேலர் வகை சிகிச்சை அளிக்கப்படுகிறது. ஆனால், இது அனைவருக்கும் கட்டாமில்லை. நோய் தாக்கத்தின் அடிப்படையில் இந்த சிகிச்சை முறையை மேற்கொள்ள வேண்டும். நுரையீரல் செயல்திறன் பரிசோதனை அடிப்படையில் இதன் தேவையை கண்டறிய முடியும். இம்மினோதெரபி சிகிச்சையில் இன்ஹேலர் தேவைப்படுவதில்லை. கவனத்தில் கொள்ள வேண்டியவை

ஆஸ்துமா பாதித்தவர்களை, குறிப்பாக குழந்தைகளுக்கு பயத்தை ஏற்படுத்தக் கூடாது. குழந்தைகளை அந்தந்த வயதிற்கேற்ற இயல்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும். ஆஸ்துமா பற்றிய சுய விழிப்புணர்வு, குழந்தைகள் மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்துவது அவசியம். நோய் பாதிக்கப்பட்டால் அச்சப்படத் தேவையில்லை. ஆரம்ப நிலையில் கண்டறிந்து, தொடர் சிகிச்சை எடுத்தால், கட்டுப்படுத்தலாம்.

# 05 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்



# தொடர்புபடுத்துங்கள்




# வழிகாட்டுங்கள்




# பொருத்தமான இடத்தில் வெட்டி ஒட்டுங்கள்




# கணிதம்


## கூட்டுக




## கழிக்குக




## பெருக்குக



## சமூக அநீதிகளுக்கெதிராக ஓங்கிக் குரலெழுப்பும்

# கலாபூஷணம் கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ்

**2021 ம் ஆண்டுக்காக கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் தேசிய கலாபூஷண விருதுக்குத் தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் கலைஞர்கள் பதினொரு பேரில் பாணந்துறை தொட்டவத்தையைச் சேர்ந்த கஸ்ஸாலி அஷ்ஷம்ஸும் ஒருவர். கலை இலக்கியத் துறைகளில் ஆற்றியுள்ள பங்களிப்புக்காக இவ்விருது அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.**

**கடந்த மார்ச் மாதம் B.M.I.C.H இல் இடம்பெற்ற பரிசளிப்பு விழாவில் விருது வழங்கி அவர் கௌரவிக்கப்பட்டார்.**

முற்போக்குச் சிந்தனையாளராகிய அவர் சமூக அநீதிகளுக்கெதிராக ஓங்கிக் குரலெழுப்பும் படைப்பாளியாவார்.

### பிறப்பு

பாணந்துறை தொட்டவத்தையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மன்சூர் பைஸல், ஸித்தி முப்லிஹா இருவருக்கும் தலைமகனாக 1961 ம் ஆண்டு தொட்டவத்தையில் கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ் பிறந்தார்.

### கல்வியும் ஆசிரியப் பணியும்

வறுமைக்கு மத்தியிலும் பெற்றாரின் விடாத ஊக்குவிப்பினால் தொட்டவத்தை அல் பஹ்ரியா மகா வித்தியாலயத்தில் (தற்போது தேசியக் கல்லூரி) உயர்தரம் வரை கல்வி கற்றார்.

1983 இல் ஆசிரிய நியமனம் கிடைத்தது.

1989/ 90 களில் மகரகம ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சிங்கள மொழி மூலம் விசேட கல்வி ஆசிரியப் பயிற்சி பெற்று பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியேறினார்.

எந்தப் பிரத்தியேக வகுப்புகளுக்கும் செல்லாது பாடக்குறிப்புகளின் உதவியுடன் 1995 ம் ஆண்டு பேராதனை பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்தார்.



2000ம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழக பட்டப்பின் கல்வி டிப்ளோமா ( உள்வாரி) பாடநெறிக்குத் தெரிவாகி அதனையும் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தார்.

### அதிபராக .........

27 வருடங்கள் ஆசிரிய சேவையைப் பூர்த்தி செய்த நிலையில் , இலங்கை அதிபர் சேவையின் தரம் இரண்டுக்கு போட்டிப் பரீட்சை மூலம் தெரிவாகி 2010 ம் ஆண்டிலிருந்து, நீர்கொழும்பு அல்ஹிலால், பாணந்துறை அல்பஹ்ரியா, பலகத்துறை அல்பலாஹ் என்பவற்றில் அதிபராகக் கடமையாற்றி 2020 இல் ஓய்வு பெற்றார்.



தந்தை

ஆசிரியராகவும் அதிபராகவும் பணியாற்றிய பாடசாலைகளின் கல்வி, இணைப்பாடவிதான/ புறப்பாடவிதான வளர்ச்சியில் மிகுந்த பங்காற்றியுள்ளதோடு கலைத்துறைக்கும் அரும் பணியாற்றியுள்ளார்.



### திருமண பந்தத்தில்

அடுளுகமையைச் சேர்ந்த மர்ஹூமா மீனத் ஹுஸைனா கலாபூஷணத்தின் வாழ்க்கைத் துணைவியாவார். ஆண்கள் இரண்டு பெண்கள் மூன்றென ஐந்து பிள்ளைகள். அவர்களில் இருவர் ஆசிரியப் பணியாற்றுகின்றனர்.

புதல்வர் சிராப் ஆசிரியரும் வளர்ந்து வரும் ஓர் இளம் கவிஞரென்பது கவனிக்கத்தக்கது.

### தந்தையும் தனயனும்

கஸ்ஸாலி அஷ்ஷம்ஸின் தந்தை மன்சூர் பைஸலும் ஒரு கலைஞரே. பல வருட முயற்சியில் பல்வேறு தலைப்புகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஒட்டுப் புத்தகங்களை உருவாக்கிய சாதனைக்காக மறைந்த அமைச்சர் அல்ஹாஜ். ஏ.எச்.எம். அஸ்வர் அவர்களினால் பாராட்டப்பட்டவர். அவரது சேவையைப் பாராட்டி புரவலர் ஹாஸிம் உமர் பொற்கிழி வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவித்ததும் சிறப்பம்சமாகும். ஒட்டுப் புத்தகப் பணிக்காக அவர் 2009 ஆம் ஆண்டு கலாபூஷண விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.கலாபூஷண விருது பெற்ற தகப்பனும் மகனும் என்ற வரலாற்றுச் சாதனையை கஸ்ஸாலி அஷ்ஷம்ஸும் அவரது தகப்பனாரும் பெறுகின்றனர்.

### எழுத்துலகப் பிரவேசம்

1984 ம் ஆண்டு திருமண பந்தத்தின் மூலம் அடுளுகமைக்கு வந்த கஸ்ஸாலி அஷ்ஷம்ஸுக்கு திக்குவல்லை கமாலின் அறிமுகம் கிடைத்தது. அவரது நூலகத்தை உச்ச அளவில் பயன்படுத்திக் கொண்டதோடு, தொடர்ச்சியான இலக்கியக் கலந்துரையாடல்கள் மூலம் தன்னை படிப்படியாக வளர்த்துக் கொண்டார். திக்குவல்லை கமாலை தனது இலக்கிய குருவாக என்றும் நன்றியுடன் நினைவு கூறுகிறார்.

சிறுசிறு கவிதைகள் மூலம் எழுத்துலகில் பிரவேசித்து படிப்படியாக தன் பரப்பை விரிவுபடுத்திக் கொண்டார். சிந்தாமணி 'மணிக்கவிதைகள்' அவரது கன்னி ஆக்கத்துக்கு களமமைத்துக் கொடுத்தது.

### இலக்கியப் பங்களிப்பு

தினகரன் முதலாம் தேசியப் பத்திரிகைகளோடு மல்லிகை போன்ற பிரபல சஞ்சிகைகளும் அவரது ஆக்கங்களை விரும்பிப் பிரசுரித்து வருகின்றன.

மேலும், இளைஞர் இதயம், ஒலிமஞ்சரி, இலக்கிய மஞ்சரி என்பவற்றிலும் அவரது குரல் வழிக் கவிதைகள் ஒலிபரப்பாகியுள்ளன.அத்தோடு, ஒலி/ ஒளி அலைவரிசைகளில் காலத்துக்குக் காலம் ஏற்பாடு செய்யப்படும் விசேட கவியரங்குகளிலும் கலந்து கொண்டுள்ளார்.வகவம் பௌர்ணமிக் கவியரங்குகளில் ஆர்வத்துடன் கலந்து கொண்டு சுவைபடக் கவியுரைக்கும் கவிஞராகவும் விளங்குகின்றார். குடும்பச் சூழ்நிலையினால் சுமார் 15 வருடங்கள் எழுத்துலகிலிருந்து அஞ்ஞானவாசம் சென்றிருந்தவர், நாட்டு நடப்புகளால் மனம்வெந்து 2014 இல் மீண்டும் பேனா பிடிக்கத் தொடங்கினார்.

ஆரம்ப காலத்தில் தாக்கமுள்ள சிறுகதைகள் பல எழுதினாலும் பிற்பட்ட காலத்தில் கவிதையிலேயே அதிக ஈடுபாடு காட்டத் தொடங்கினார். இனிமேல் சிறுகதை எழுதமாட்டாரா எனக் கவலைப்பட்டவர்கள் பலர். 1991இல் தினகரனில் வெளிவந்த " ஒரு பிஞ்சு உள்ளத்தின் சோகம்" என்ற சிறுகதையை சந்தக்கவி கிண்ணியா அமீர் அலி என்றும் சிலாகித்துப் பாராட்டுவது இதற்கு சிறந்த உதாரணமாகும். சமீபகாலத்தில் மீண்டும் அவர் சிறுகதைத் துறையில் நுழைந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது.

### வெற்றிக்கு முன்னோடிகள்

சிறு வயது முதலே கடும் வறுமைக்கு மத்தியிலும் பத்திரிகைகள் சஞ்சிகைகள் வாங்கித் தந்து எழுத்துத் துறையில் தன்னை ஊக்குவித்த தந்தை ( கலாபூஷணம் மன்சூர் )யே தனது வெற்றிகளுக்கெல்லாம் மூலகாரணம் எனக் குறிப்பிடுகிறார் கஸ்ஸாலி.

இலக்கிய முன்னோடி திக்குவல்லை கமாலுடன், அன்பு ஜவஹர்ஷா, கலைவாதி கலீல், எஸ். ஐ. நாகூர் கனி, அல்அஸூமத் ஆகியோரோடு "பாமிஸ் சஞ்சிகை" வாயிலாக சிறுகதை எழுத ஊக்குவித்த எம்.எச்.எம். ஷம்ஸ் அவர்களும் தன்னை வளர்த்து விட்டவர்களென கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ் குறிப்பிடுகிறார்.

### வெளியீடுகள்

2019 ம் ஆண்டு " கையோடு கூட்டி வாங்க" எனும் கவிதைத் தொகுப்பு பாணந்துறை துறையொளி இலக்கிய வட்ட வெளியீடாக வெளிவந்தது.

விரைவில் இரண்டு கவிதைத் தொகுப்புகள் வெளிவர இருப்பதோடு, சிறுகதைத் தொகுப்பொன்றையும் எதிர்பார்க்கலாம்.

### பரிசுகளும் பாராட்டுக்களும்

1989, 1990ம் ஆண்டுகளில் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணி தேசிய ரீதியில் நடாத்திய மீலாத் கவிதைப் போட்டிகளில் முறையே இரண்டாம், முதலாம் இடங்களை கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ் தட்டிக் கொண்டார். நிந்தவூர் எழுத்தாளர் சங்கம் 1987 ம் ஆண்டு நடாத்திய வெள்ளிவிழாப் போட்டிகளில் கவிதைக்கு மூன்றாமிடமும் சிறுகதைக்கு இரண்டாமிடமும் கிடைத்தது. ஆசிரியர் கல்விக் கூட்டுறவுச் சங்கம் 1991 இல் வெளியிட்ட பரிசுக்கதைத் தொகுப்பிலும் அவரது " வட்டார விளையாட்டுப் போட்டி" எனும் ஆறுதல் பரிசுக்குரிய சிறுகதை இடம்பெற்றது.

### துறையொளி இலக்கிய வட்டம்

இல்யாஸ் ஆகியோருடன் இணைந்து 1985 இல் பாணந்துறை துறையொளி இலக்கிய வட்டத்தை உருவாக்கி ஸ்தாபகச் செயலாளராகப் பணியாற்றுகிறார்.

இலக்கிய வட்டத்தின் சார்பில் 1986 ம் ஆண்டு "எதிர்பார்ப்புகளும் ஏமாற்றங்களும்" எனும் ரோனியோ மீலாத் கவிதைத் தொகுப்பு வெளியிடப்படுவதிலும் கவிஞரின் பங்கு அளப்பரியது.

ஓய்வுநிலை அதிபர் ஓய்வுபெறாப் படைப்பாளியாக இன்னும் பல சாதனைகள் படைக்க எமது நல்வாழ்த்துக்கள்.

















shumsfahim@gmail.com

# 35 வயதை கடந்த பெண்களை தாக்கும் எலும்பு தேய்மானம்

35 வயதைக் கடந்த பெண்களுக்குத்தான் இடுப்புவலி, முதுகுவலி, மூட்டுவலி எனப் பல பிரச்சினைகள் ஏற்படுவது வழக்கம். காரணம், எலும்பு தேய்மானம். 35 வயதைத் தாண்டியதும் எலும்பு தேய்மானம் ஏற்படுவதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். எதனால் எலும்பு தேய்மானப் பிரச்சினை வருகிறது... அதற்கு என்ன தீர்வு என்பதை பற்றி விரிவாக பார்க்கலாம்.

எலும்பு தேய்மானத்துக்கு முக்கியக் காரணம், உடல் உழைப்பு இல்லாததே. அந்தக் காலத்துப் பெண்கள் நன்றாக ஓடி, ஆடி வேலை செய்தனர். ஆனால் இப்போது, துணி துவைக்க, சட்னி அரைக்க, மாவு அரைக்க




எல்லாவற்றுக்குமே மெஷின்கள் வந்துவிட்டன. அதோடு, வீட்டு வேலைகள் செய்வதற்கு ஆட்களையும் வைத்துக்கொள்கிறார்கள். மார்க்கெட்டுக்குச் சென்று மளிகைப் பொருட்கள், காய்கறிகளைத் தூக்கி வருவது இல்லை. எல்லாவற்றுக்கும் ஆட்டோ, டூ வீலர் பயன்படுத்துகிறார்கள். இதனால் உடல் இயக்கம் இன்றி இருப்பதால், கல்சியம் (சுண்ணாம்புச்சத்து) கிரகிக்கப்படுவது பாதிக்கப்பட்டு, எலும்பு தேய்மானம் அடைவதற்கு முக்கியக் காரணமாகிவிடுகிறது.

இன்றைக்கு இருக்கும் பரபரப்பான சூழ்நிலையில், மேற்சொன்ன வேலைகளையெல்லாம் செய்ய முடியவில்லை என்றால், தினமும் காலையில் 20 முதல் 40 நிமிடங்கள் வரை ரெஸிடன்ஸ் பயிற்சி (Resistance exercise...) செய்வது நல்லது. அதாவது, நம் உடலை நாமே தாங்கிச் செய்யக்கூடிய உடற்பயிற்சிகளைச் செய்ய வேண்டும்.

தண்ணீர் பாட்டிலைக் கையில் வைத்துக்கொண்டு மேலே, கீழே தூக்கி கைகளை இயக்குவதால், தோள்களுக்கு வலுசேர்க்கும். தோப்புக்கரணம் போடுவது, கால்களுக்கு வலு சேர்க்கும். அதோடு ஏரோபிக் போன்ற உடற்பயிற்சிகளையும் செய்ய வேண்டும் அல்லது குறைந்த பட்சம் 20 நிமிடங்களாவது நடைப்பயிற்சி மேற்கொள்ள வேண்டும். எலும்புகளை உறுதியாக வைத்துக்கொள்ள வைட்டமின் டி உதவுகிறது. அதனால், காலை நேரங்களில், வாரத்தில் மூன்று நாட்கள் மிதமான வெயிலில் 15 நிமிடங்களாவது இருப்பது நல்லது. இதன் மூலம் எலும்பு தேய்மானத்தைத் தடுக்கலாம்.

எலும்புகள் என்றால் உறுதியானதுதானே... அது என்ன செய்யப்போகிறது என்று நினைக்கக் கூடாது. உடலுக்கு ஆக்டிவ் தரக்கூடிய வேலைகளைச் செய்துவந்தால்தான், எலும்புகள் கல்சியத்தை நன்றாக கிரகித்துக்கொள்ள முடியும். `அய்யோ, எனக்கு 50 வயது ஆகிவிட்டதே... இதை எல்லாம் எப்படிச் செய்வது?' என்று வீட்டிலேயே உட்கார்ந்து கொண்டிருந்தால், எலும்புகளுக்கு சரிவர கல்சியம் சத்துக் கிடைக்காமல், எலும்பு தேய்மானம்தான் ஏற்படும். இதனால் பெண்களுக்கு இடுப்பு, தோள், மணிக்கட்டு, மூட்டு, முதுகு, கழுத்துப் பகுதிகளில் வலி ஏற்படும்.



# அழகு சாதனப்பொருட்கள் வாங்கும் போது இந்த தவறை செய்யாதீங்க...

பெண்களுக்கு பிடித்த விஷயங்களில் ஒன்று தங்களை அழகுபடுத்தி கொள்வது. இதற்காக உபயோகிக்கும் அழகு சாதனப்பொருட்களை தேர்ந்தெடுப்பதில் கவனமாக இருக்க வேண்டும். சந்தையில் பலவிதமான ஒப்பனை பொருட்கள் கிடைக்கின்றன. இவற்றில் எதை வாங்குவது என்பதில் குழப்பம் ஏற்படலாம். எதை வாங்குவதாக இருந்தாலும் முக்கியமாக கவனிக்க வேண்டிய சில அம்சங்கள் உள்ளன. அதை பற்றி இங்கே பார்க்கலாம்.

**ஒப்பிடுதல்**

சந்தையில் கிடைக்கும் மற்ற ஒப்பனை பொருட்களுடன் நீங்கள் தேர்ந்தெடுக்கும் பொருள் எந்த வகையில் சிறந்தது என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். எதை வாங்குவதற்கு சிறந்த இடம் எது? அதற்கான தகுந்த விலை என்ன? என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இதனால் குறைந்த விலையில் கூட தரமான பொருட்களை வாங்க முடியும்.

**எளிமையாகவும், நீடித்தும் இருத்தல்**

ஒப்பனை பொருட்கள் எளிமையாக கையாளும் வகையில் இருக்க வேண்டும். வெளியில் செல்லும் சில மணி நேரத்திற்குள்ளாகவே ஒப்பனை கலைந்து விடக்கூடாது. நீண்ட நேரம் நீடித்து இருக்கும் வகையிலான ஒப்பனை பொருட்களை தேர்வு செய்ய வேண்டும். குறிப்பாக ஐலைனர் வாங்கும் போது நீர்த்த வடிவத்தில் இருப்பதை வாங்குவதை தவிர்த்து பென்சில் ஐலைனர் வாங்குவது சிறந்தது.

**சருமத்திற்கு உகந்ததை தேர்ந்தெடுத்தல்**

ஒவ்வொரு ஒப்பனை பொருளிலும் பல வகையான வாசனைப்பொருட்கள் கலக்கப்படுகின்றன. இவை அனைத்தும் உங்கள் சருமத்திற்கு ஏற்றதா என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே சருமத்துக்கும் சரியாக பொருந்தும் வகையிலான



ஒப்பனை பொருட்களை தேர்வு செய்ய வேண்டும், வெயிலில் செல்லும் போது புற ஊதாக்கதிர்களால் சருமம் பாதிக்காமல் இருப்பதற்கு எஸ்.பி.எப் தன்மை கொண்டதை கவனித்து வாங்க வேண்டும்.

**பொருத்தமானதை தேர்வு செய்தல்**


ஒவ்வொருவருக்கும் முகம், கண், உதடு, சருமம் தனித்தன்மை கொண்டதாக இருக்கும். எனவே அதற்கு ஏற்ற வகையான ஒப்பனை பொருட்களை தேர்வு செய்ய வேண்டும். பேக்கேஜ் முறையில் பவுண்டேஷன் முதல் லிப்ஸ்டிக் வரை அனைத்தையும் ஒன்றாக வாங்கலாம்.

**பரிசோதித்தல்**

எந்தவிதமான ஒப்பனை பொருளையும் வாங்கியவுடன் நேரடியாக பயன்படுத்தாமல் முதலில் அதை சிறிது எடுத்து கையில் தடவிப்பார்க்க வேண்டும். அதனால் சருமத்திற்கு எந்த பாதிப்பும் இல்லை என்பதை உறுதி செய்த பின்பு மட்டுமே பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் சருமத்தில் ஏற்படும் பாதிப்புகளை தவிர்க்க முடியும்.

**இயற்கைக்கு முதலிடம்**

இயற்கையான மூலப்பொருட்களை கொண்டு தயாரிக்கப்பட்டது என்று விளம்பரப்படுத்தப்பட்டாலும் அவற்றிலும் ரசாயனப்பொருட்கள் கலந்திருக்கலாம். எனவே நன்கு ஆராய்ந்து ஒப்பனை பொருட்களை தேர்வு செய்து வாங்குவது சிறந்தது.



# காந்தியை மகாத்மா என பிரபலப்படுத்திய பெருமைக்குரியவர் ரவீந்திரநாத் தாகூர்

**இந்தியாவின் தேசிய கீதமான 'ஜன கண மன' பாடலை இயற்றியவரும் பங்களாதேஷின் தேசிய கீதமான 'அமர் சோனா பங்களா' பாடலை இயற்றியவரும் இவரே. உலகிலேயே ஒரு கவிஞரால் இரு வெவ்வேறு நாடுகளின் தேசிய கீதங்கள் இயற்றப்பட்டது என்றால் அது பெருமைக்குரிய விடயமாகும். அப்பெருமைக்குரிய ஒரே ஒரு கவிஞர் இவரே. அவர்தான் ரவீந்திரநாத் தாகூர் ஆவார்.**

ரவீந்திரநாத் தாகூர் கல்கத்தாவில் ஒரு பணக்கார பிராமணக் குடும்பத்தில் ஜோராசாங்கோ மாளிகையில் 0705–1861 இல் தேவேந்திரநாத், சாரதா தேவி தம்பதியினருக்கு பதினான்கு பிள்ளைகளில் கடைசிப் பிள்ளையாக பிறந்தார். ரவீந்திரநாத் தாகூரது இளம் வயதிலேயே தாயார் இறந்து விட்டதாலும் தந்தையார் அடிக்கடி பயணங்களை மேற்கொண்டதாலும் இவரின் வாழ்க்கையிலே அதிக ஆதிக்கம் செலுத்தியவர்கள் அவரது மாளிகையிலிருந்த பணியாட்களும் அவரது பாடசாலை ஆசிரியர்களும்தான். அவர்களிடமிருந்து கதைகளையும் பாடல்களையும் கேட்டு ரசித்து வந்த ரவீந்திரநாத் தாகூர் சிறுவயதிலேயே கவிதைகளைப் புனைவதில் ஆர்வம் காட்டினார். இவருக்கு பதினொரு வயதில் 'உபாநயன்' எனும் பூணூல் சடங்கு நடத்தப்பட்டது. இதன் பின்னர் தகப்பனாருடன் ரவீந்திரநாத் தாகூர் கல்கத்தா விட்டு புறப்பட்டு பலமாதங்கள் இந்தியாவின் இதர மாநிலங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். இவரது தந்தையாரின் 'சாந்தி நிகேதன்' தோட்டத்திற்கும் சென்றார். பின்னர் இமய மலைப்பகுதியான டால்கூசிக்கு செல்வதற்கு முன்னர் அம்ரித்சாரிலும் இவர்கள் தங்கினர். அங்கே அவர் பலருடைய வரலாறுகளை கற்றதுடன் வானியல், அறிவியல், சமஷ்கிருதம் ஆகிய பாடங்களை படித்தார். காளிதாசனின் கவிதைகளையும் கற்றார்.

அவரது பதினான்காவது வயதில் தமது கவிதையை பொதுமேடையொன்றில் அரங்கேற்றும் வாய்ப்புக் கிட்டியது. வங்காளக் கலாசார விழாவொன்றின் போது அவர் வாசித்த அந்தக் கவிதை அனைவரது பாராட்டையும் பெற்றது. அவர் எழுதிய முதல் நூல் 'மாலைப் பாடல்கள்' ஆகும். கங்கை நதியின் வனப்புகளை பற்றி அவர் இயற்றிய அந்தப் பாடல்கள் கற்றறிந்தோர் மத்தியில் அவருக்கு புகழைத் தேடிக் கொடுத்தது.


ரவீந்திரநாத் தாகூர் தான் ஒரு வழக்கறிஞராக வேண்டும் என்ற எண்ணத்தில் பிரைட்டன், லண்டனில் உள்ள ஒரு கல்லூரியில் 1878 ஆம் ஆண்டில் சேர்ந்தார். பின்னர் லண்டன் சர்வ கலாசாலையில் கல்வி கற்றார். ஆனால் ஷேக்ஸ்பியரினதும் அவர் போன்ற பிறரினதும் ஆக்கங்களை ஆராய்வதிலேயே ஆர்வம் காட்டியதால் பட்டம் பெறாமலே 1880 ஆம் ஆண்டில் கல்கத்தாவிற்கு திரும்பி வந்துவிட்டார்.

1883 ஆம் ஆண்டில் டிசம்பர் மாதம் ஒன்பதாம் திகதி பத்து வயது பெண்ணான மிருனாலி தேவியை மணந்தார். அவர்களுக்கு ஐந்து குழந்தைகள் பிறந்தன. ஆனால் இரண்டு குழந்தைகள் வாலிபப் பருவம் அடைய முன்னரே இறந்துவிட்டனர். 1884 இல் 'கோரிஓ கமல்' (ஷார்ப் மற்றும் பிளாட்) என்ற கவிதைத் தொகுப்பை எழுதினார். 1890 ஆம் ஆண்டில் ரவீந்திரநாத் தாகூர் இன்றைய வங்காளதேசத்தின் பகுதியாக உள்ள சிலைடாகா எனும் இடத்திலிருந்த குடும்பத்தின் பெரிய பண்ணையை நிர்வாகம் செய்யத் தொடங்கினார். 1893–1900 வரை ரவீந்திரநாத் தாகூர் ஏழு கவிதைத் தொகுதிகளான 'சொனார் தொரி' (கோல்டன் படகு) மற்றும் 'கனிகா' போன்றவற்றை எழுதியுள்ளார். 1901 இல் சிலைதஹாவில் இருந்து சாந்தி நிகேதனுக்கு குடியேறினார். அங்கு அவர் ஒரு ஆசிரமத்தை நிறுவினார். அங்கு அவர் ஒரு பிரார்த்தனைக் கூடம், ஒரு பாடசாலை, நூலகம் என்பனவற்றை நிறுவி, மரங்கள் பலவற்றையும் நட்டு ஓர் அழகிய பூஞ்சோலையை உருவாக்கினார். அங்கு மாணவர்களுக்கு தாய்மொழியில் கல்வி கற்பிக்கப்பட்டதுடன் தோட்ட வேலை, உடற்பயிற்சி, சமூக சேவை, விளையாட்டு என அத்தனை கலைகளும் கற்பிக்கப்பட்டன. பிற்காலத்தில் இப்பாடசாலை 'விஷ்வ பாரதி' எனும் உலகப் பல்கலைக்கழகமாக உருவெடுத்தது. சாந்தி நிகேதனுக்கு அருகில் உள்ள 'சுருள்' என்ற இடத்தில் 'ஶ்ரீ நிகேதன்' எனும் பெயரில் ஒரு மாதிரிக் கிராமத்தையும் அவர் உருவாக்கினார்.

1910 ஆம் ஆண்டில் ரவீந்திரநாத் தாகூர் வெளியிட்ட 'கீதாஞ்சலி' எனும் கவிதை நூலே அவருக்கு பெரும் புகழை ஈட்டிக் கொடுத்தது. அவரது தாய்மொழியான வங்காள மொழியில் எழுதப்பட்ட அந்நூல், 1912 ஆம் ஆண்டு ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்தது. அதே ஆண்டு ரவீந்திரநாத் தாகூர் லண்டன் சென்ற போது

புகழ் பெற்ற ஆங்கிலக் கவிஞர்களுடன் அவருக்கு தொடர்பு ஏற்பட்டதன் விளைவாக அவரது கவிதைகளின் மொழிபெயர்ப்புகள் ஆங்கில சஞ்சிகைகளில் வெளிவரத் தொடங்கின. ரவீந்திரநாத் தாகூர் எழுதிய கீதாஞ்சலி கவிதை நூலுக்கு 1913 ஆம் ஆண்டு உலகின் மிக உயரிய இலக்கியத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. கல்கத்தாவிற்கு அருகே சாந்தி நிகேதன் கல்விக் கூடத்தில் தங்கியிருந்த கவிஞரை பாராட்டுவதற்காக நாட்டின் பல பாகங்களில் இருந்தும் மக்கள் கூட்டம் கூட்டமாக குவிந்தார்கள். நோபல் பரிசு அவரை உலகப் புகழ் பெற்றவராக ஆக்கியது. இதனால் அவர் சீனா, ஜப்பான், ஐரோப்பா, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு அடிக்கடி விஜயம் செய்ய வேண்டியதாயிற்று. நோபல் பரிசு பெற்ற முதலாவது ஆசிய நாட்டவர் என்ற பெருமைக்குரிய கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் கலை, இலக்கிய துறைகளில் ஆற்றிய பணி இன்றும் நினைவுகூர்ந்து போற்றப்படுகின்றது.

1915 ஆம் ஆண்டு பிரித்தானிய அரசர் ஜோர்ஜ் அவர்கள் ரவீந்திரநாத் தாகூர் அவர்களுக்கு சேர் பட்டம் வழங்கி கௌரவித்தார். 1919 ஆம் ஆண்டில் பஞ்சாப்பில் உள்ள அம்ரித்சரசில் நடந்த கோரச் சம்பவத்தை கேட்டதும் ரவீந்திரநாத் தாகூர் தமக்கு ஆங்கிலேயர் அளித்த சேர் பட்டத்தைத் துறந்ததுடன், உள்ளன்பில்லாத வெளி நடப்பில் தமக்குப் பற்றில்லை என்பதையும் புலப்படுத்தி செவி தைக்கும்படி சுடுசொல் பகர்ந்தார்.



இந்திய அரசியலில் நேரடியாக ரவீந்திரநாத் தாகூர் அதிக ஆர்வம் காட்டவில்லை. இந்திய அரசியலில் மிதவாதம், தீவிரவாதம் என பிரிவினைகள் தோன்றியது மட்டுமின்றி முஸ்லிம், இந்துக்கள் பிரச்சினைகளும் தலைதூக்கவே நேரடி அரசியலில் இருந்து ஒதுங்கி இருந்தார். இந்திய அரசியலில் ரவீந்திரநாத் தாகூர் அதிக ஆர்வம் காட்டாத போதிலும் மகாத்மா காந்தியுடன் நெருங்கிய நட்பு கொண்டிருந்தார். 1916 ஆம் ஆண்டில் காந்தியை 'மகாத்மா' என்று குறிப்பிட்டு, அந்தப் பட்டத்தை பிரபலப்படுத்தியவரும் ரவீந்திரநாத் தாகரே.

ரவீந்திரநாத் தாகூர் தனது எட்டு வயதில் கவிதைகள் எழுத ஆரம்பித்து அவைகளை பானுஷங்கோ என்ற புனைப் பெயரில் 1877 ஆம் ஆண்டில் வெளியிட்டார். பதினாறாவது வயதில் சிறுகதைகளும் இருபதாவது வயதில் தனது முதல் நாடகத்தை (வால்மீகி பிரபிதா ) எழுதினார். அவரது அறுபதாவது வயதில் ஓவியங்களை வரையவும் வண்ணங்களை தீட்டவும் ஆரம்பித்தார். தெற்கு பிரான்சில் சந்தித்த ஒரு கலைஞரின் ஊக்குவிப்பினால் தனது படைப்புகளை வைத்து பொருட்காட்சி நடாத்தினார். ரவீந்திரநாத் தாகூர் மகாகவி மட்டுமல்ல சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரை ஆகியவற்றையும் திறம்பட படைத்துள்ளார். இது தவிர அவர் கைதேர்ந்த வண்ண ஓவியரும் கூட. அவர் தீட்டிய மூவாயிரம் நவீன பாணி ஓவியங்களும் வரைந்த கோட்டுச் சித்திரங்களும் கல்கத்தா 'விஷ்வ பாரதி' அரங்கில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

ரவீந்திரநாத் தாகூரது இலக்கியப் படைப்புக்களின் பெரும்பகுதி இருபத்தாறு பெரும் தொகுப்புக்களாக வெளியிடப்பட்டுள்ளன.


ரவீந்திரநாத் தாகூர் இரண்டாயிரத்துக்கும் அதிகமாக பாடல்கள் எழுதி சில பாடல்களுக்கு அவரே இசையும் அமைத்துள்ளார். அவர் எழுதிய பல பாடல்களில் ஒரு பாடல் இந்தியாவின் தேசிய கீதமாகவும் இன்னொரு பாடல் பங்களாதேஷின் தேசிய கீதமாகவும் உருவெடுத்தன. நோபல் பரிசுடன் கிடைத்த பணம், தந்தையார் மூலமான சொத்து அத்துடன் குடும்ப நகைகள், பூரியில் இருந்த கடற்கரையோர மாளிகை என்பவற்றை விற்றதன் மூலமும் இவர் வருமானம் பெற்றார். இது தவிர இவரது ஆக்கங்களுக்கான உரிமமாகவும் பல ரூபாய்கள் கிடைத்தது. இவை அனைத்தையும் 'விஷ்வ பாரதி' பல்கலைக்கழகத்திற்கு செலவழித்தார்.

சாந்தி நிகேதனின் வளர்ச்சிக்காக பாரத நாடு முழுவதும் சுற்றினார். சீனா, ஜப்பான், இத்தாலி, நோர்வே, அமெரிக்கா முதலிய நாடுகளுக்கு சென்று 'விஷ்வ பாரதி' பல்கலைக்கழகத்திற்கு நன்கொடை திரட்டினார். அவரின் கனவுகள் ஒவ்வொன்றாக பலித்து வந்தன. 'விஷ்வ பாரதி' பல்கலைக்கழகமும் வளர்ந்து வந்தது. 1878 ஆம் ஆண்டு முதல் 1932 ஆம் ஆண்டு முடியும் வரை ரவீந்திரநாத் தாகூர் உலகின் 31 நாடுகளுக்கு சென்று வந்தார்.

1940 ஆம் ஆண்டு இங்கிலாந்து நாட்டின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் சாந்தி நிகேதனுக்கே வந்து ரவீந்திரநாத் தாகூருக்கு 'இலக்கிய முனைவர்' என்ற விருது வழங்கியது.

ரவீந்திரநாத் தாகூரின் 80 ஆவது பிறந்தநாள் விழா 1941 இல் சாந்தி நிகேதனில் கொண்டாடப்பட்டது. அந்த நாட்களில் அவரது உடல் மேலும் பலவீனமடைந்திருந்தது. கல்கத்தாவிலுள்ள ஒரு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை நடைபெற்றும் சிகிச்சை பலனின்றி 1941 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் ஏழாம் திகதி அவரது 80 ஆவது வயதில் இறந்தார்.

ரவீந்திரநாத் தாகூர் மறைந்ததையொட்டி மகாத்மா காந்தி வெளியிட்ட இரங்கல் செய்தியில் 'ரவீந்திரநாத் தாகூரின் மரணத்தில் நாம் இந்த சகாப்தத்தின் மிகச் சிறந்த கவியை மட்டும் இழக்கவில்லை; அபரிமித மனிதாபிமானியையும் ஆர்வமிக்க தேசியவாதியையும் இழந்துவிட்டோம். அவரது சக்திமிக்க தனித்தன்மை, தடம் பதிக்காத பொது நடவடிக்கை எதுவுமில்லை. சாந்தி நிகேதனிலும் ஶ்ரீ நிகேதனிலும் நம் நாடு முழுவதற்கும், ஏன், இவ்வையகம் முழுவதற்கும் ஒரு மரபுரிமை செல்வத்தை அளித்துச் செல்கிறார்' என்று அஞ்சலி செலுத்தினார்.



கலாபூஷணம் பரீட் இக்பால்
யாழ்ப்பாணம்

# 'உலக திருக்குறள் நான்காவது மாநாடு – 2022'



கர்நாடக மாநிலத்தில் உள்ள மைசூரில் அண்மையில் நடந்த 'உலக திருக்குறள் நான்காவது மாநாட்டில் தமிழ் அறிஞர்கள், புலவர்கள், பேராசிரியர்கள், தமிழ் ஆர்வலர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டு ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்து தத்தமது கருத்துக்களை முன்வைத்தார்கள்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மே மாதம் 8ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.